
# நெற்பிட்டிமுனையின்

## வரலாறும் பண்பாட்டியலும்



எம்.எல்.ஏ. கையூம்

# நெற்பிட்டிமுனையின்

## வரலாறும் பண்பாட்டியலும்

எம்.எல்.ஏ. கையூம்

மீராபோடி வெளியீட்டகம்
23ஏ, மதரஸா வீதி,
நெற்பிட்டிமுனை-01
சிறிலங்கா.

| | | |
|---|---|---|
| Title | : | NETPIDDIMUNAIEN VARALARUM PANPAADDIYELUM (Tamil)<br>(History & Culture of NETPIDDIMUNAI) |
| Author | : | **Al-Haj M.L.A. Kaiyoom** B.A., PGDE, SLPS-i |
| Cover Design | : | V. Monujan (Art Teacher) |
| Publisher | : | Meera Po'udi Publisher<br>23A, Mathrasa Road,<br>Netpiddimunai-01, Sri Lanka.<br>Mobile: 0750555479 |
| Printer | : | An-Noor, Kalmunai. Call: 0776167535 |
| First Edition | : | November 2016 |
| Copy Right | : | © Author |
| Pages | : | 288+24= 312 |
| Copies | : | 1000 |
| Price | : | SL Rs: 650.00 |
| ISBN | : | ISBN |

## பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆசிச் செய்திகள் | i-xv |
| ஆசிரியர் கருத்து | xvi-xix |
| அர்ப்பணம் | xx |
| இலங்கை முஸ்லிம்களின் தோற்றமும் வளர்ச்சியும் | 01 |
| வரலாற்றுப் பின்னணி | 03 |
| விவசாயச் செய்கை | 08 |
| மக்கள் குடியேற்றத்திற்கு முன்னர் | 18 |
| மக்கள் குடியேற்றம் | 20 |
| போக்குவரத்தும் நெற்பிட்டிமுனையும் | 24 |
| நெற்பிட்டிமுனை பள்ளிவாயல்களின் வரலாறு | 28 |
| நெற்பிட்டிமுனை பாடசாலைகளின் வரலாறு | 50 |
| கலை, கலாச்சார பண்பாட்டியல் | 78 |
| ஒரு கிராமத்தின் கதை | 156 |
| கிராமிய விளையாட்டுக்கள் | 160 |
| விளையாட்டுக் கழகங்கள் | 168 |
| விளையாட்டு மைதானத்தின் வரலாறு | 181 |
| ஒலி, ஒளிபரப்புத்துறையும் ஊடகத்துறையும் | 188 |
| இலக்கியம் வளர்த்த இவ்வூரவர் | 194 |
| நாட்டு வைத்தியமும் நம்மவர்களும் | 197 |
| ஜம்மியத்துல் உலமா சபை | 198 |
| உறவைத் தேடும் உதிரம் | 200 |
| நெற்பிட்டிமுனை இளைஞர் வள நிலையம் | 203 |

| | |
|---|---|
| நெற்பிட்டிமுனை (கரைவாகு மேற்கு) அரசினர் வைத்தியசாலை | 207 |
| சொந்த மண் மறந்து பந்தமண் தேடியோர் | 208 |
| ஊர் விட்டுச் சென்ற உத்தியோகத்தர்கள் | 213 |
| ஊர் வந்து பெண் எடுத்து உதவியோர் | 227 |
| நெற்பிட்டிமுனை ஆசிரிய முத்துக்கள் | 234 |
| தற்கொலைகளும் கொலைகளும் | 249 |
| இன வன்முறை காலத்தில் படுகொலை செய்யப்பட்டோர் | 251 |
| மையவாடியின் வரலாறு | 254 |
| இயற்கை அனர்த்தமும் எமதூரும் | 256 |
| இந்து சமுத்திரத்திப் பிரதேசத்தில் "சுனாமி" கடற்கோள் புதியவையல்ல | 261 |
| தேர்தலும் நெற்பிட்டிமுனையும் | 265 |
| உசாத்துணை | |

# ஆசிச் செய்தி



நற்பிட்டிமுனையின் பூர்வீக வரலாற்றை ஆவணப்படுத்தும் வகையில் கவிஞர் அதிபர் எம்.எல்.ஏ. கையூம் எழுதியுள்ள நெற்பிட்டிமுனையின் வரலாறும் பண்பாட்டியலும் என்ற நூலுக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் அளவில்லா மகிழ்ச்சி அடைகின்றேன்.

அவரது இந்த முயற்சிக்கு நான் மனமுவந்து பாராட்டுகின்றேன். வெறுமனே இதனை நான் ஒரு நூலாக நோக்கவில்லை. நற்பிட்டிமுனையின் தோற்றம், அதன் பரிமாணம், வளர்ச்சி, பண்பாட்டியல் அம்சங்கள், வரலாற்றுப் பின்னணி, சமூகப்பின்னணி, மக்கள் வாழ்க்கை முறை தொடர்பில் எமது எதிர்கால சந்ததியினருக்கு எழுத்துருவில் உருவாக்கப்பட்ட ஓர் ஆவணமாக நான் இதனைக் கருதுகிறேன்.

இவ்வாறான ஓர் ஆவணப்படுத்தலுக்கான முயற்சி எடுக்கப்பட்டதே ஒரு பெரும் வெற்றியாக நாம் கருத வேண்டும்.

ஒரு சமூகத்தின் வரலாற்றைத் தெரியாதவன் அந்த சமூகத்தின் முழுமையான ஒரு பங்காளியாக இருக்க முடியாது.

வரலாறு மனித குலத்தின் சமூகவியல் பரிமாணத்தை எடுத்தியம்பும் ஓர் அம்சமாகும்.


நூலாசிரியர் அப்துல் கையூமின் பரந்து விரிந்த தேடல் இந்த நூலில் வெளிக்காட்டப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் நற்பிட்டிமுனை ஒரு முத்தாக கருதப்படுகின்றது.

அவ்வாறான கிராமத்தின் வரலாற்றை எழுதிய நூலாசிரியர் இது போன்ற நூல்களை மேலும் ஆக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

**றிஸாட் பதியுதீன்** பா.உ
**கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர்**
**தேசிய தலைவர் – அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்.**

## ஆசிச் செய்தி



நெற்பிட்டிமுனை அல் கரீம் நெசவாளர் மற்றும் கைத்தொழில் சமூக சேவைகள் அமைப்பினால் தேசமானி, கல்வித்தீபம், கவிஞர், அல்ஹாஜ் எம்.எல்.ஏ.கையூம் எழுதிய "நெற்பிட்டிமுனையின் வரலாறும் பண்பாட்டியலும்" நூலுக்கான ஆசிச் செய்தி வழங்குவதில் உவகையடைகின்றேன்.

நெற்பிட்டிமுனை மக்களை மையமாகக் கொண்டு வெளியிடப்படும் இந்நூல் அவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கும் வளர்ந்து வரும் ஏனைய சமுதாயத்திற்கும் முன்மாதிரியாக அமையும் என்பதில் அணுவளவேனும் ஐயமில்லை.

கல்முனை மாநகர சபைக்கு மேற்குப் புறமாக மூன்று பக்கங்களும் ஆற்றுப்பகுதியைக் கொண்டு விளங்கும் இக்கிராமம், கிழக்கு மாகாண முஸ்லீம்களின் தனித்துவமான வாழ்க்கை வரலாற்றை உள்ளடக்கியதாக அமையப் பெற்றுள்ளது.

மொழி, கலை கலாச்சாரம், பாரம்பரிய வழிமுறைகள். விழுமியங்கள் ரீதியாக ஏனைய பிரதேச முஸ்லீம்களை விடவும் சிறப்பாக வாழ்ந்து வருகின்றார்கள் என்பதனை காண முடிகின்றது.

இயற்கை செழுமை நிறைந்த இப்பிரதேச மக்கள் விவசாயம், மீன்பிடி, பண்ணை வளர்ப்பு, நெசவு போன்ற பல தரப்பட்ட கைத்தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். அங்கு வாழும் மக்களின் அன்றாட வாழ்வியல் அம்சங்கள், தொழில், சமய வழிபாட்டு முறைகள் போன்றன மக்களின் அழகான வாழ்க்கை முறைகளை சித்தரிப்பதாக அமைந்துள்ளன.

அதுமட்டுமல்லாது அங்குள்ள மக்களால் கொண்டாடப்படும் விழாக்கள், பண்டிகைகள் என்பன அவர்களுக்கு மட்டுமே உரிய பண்பாட்டினை வெளிப்படுத்துகின்றன.

எம்.எல்.ஏ.கையூம் எழுதிய "நெற்பிட்டிமுனையின் வரலாறும் பண்பாட்டியலும்" எனும் நூலானது சமூகத்தின் தேடலின் ஆழத்தை எண்ணி என்னை பிரமிப்படையச் செய்கின்றது.


இவரது விழுமியம் சார்ந்த மண்வாசனையுடன் கூடிய வெளிப்பாடு என்னை மெய்சிலிர்க்கச் செய்கின்றது. இவர் இது போன்ற பல வரலாற்று ஆக்கங்களைப் படைக்க எல்லாம் வல்ல இறைவன் துணை செய்ய வேண்டும் என வேண்டுவதுடன், இவ்வரலாற்று நூல் பலரை பயன்படச்செய்ய வேண்டும் எனவும் வாழ்த்துவதோடு சாலங்கள் கடந்து சென்றாலும் ஆசான் கையூமின் கவியுலகம் போற்றும் வரலாறுகள் ஒரு போதும் அழிந்துவிடாது.

நெற்பிட்டிமுனை போற்றிப்புகழ வேண்டிய உத்தமர் நூலாசிரியன் என்றும் வளமுடன் வாழ வல்ல இறைவன் என்றென்றும் துணைபுரிய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

வாழ்க!

**வீ.எஸ்.இராதாகிருஷ்ணன்** பா.உ
**இராஜாங்க கல்வி அமைச்சர்**

# வாழ்த்துச் செய்தி



இன்றெல்லாம் ஊர்களினதும் கிராமங்களினதும் வரலாறுகள் ஒன்றுதிரட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவை காலத்தின் தேவையுங்கூட. வரலாறு தெரியாதவன் துடுப்பற்ற ஓடம் போலாவான். ஆகவே, வரலாற்றைத் தேடிப் படித்துக் கொள்ள வேண்டும். இஸ்லாமிய வாழ்க்கை வரலாற்றை முகம்மது நபி (ஸல்) அவர்களின் சுன்னாக்களைக் கொண்டு அறிந்து கொள்கின்றோம். மேலும், பயான்கள் மூலமும் குத்பா பிரசங்கங்கள் மூலமும் அறிந்து தெரிந்து கொள்கிறோம். ஆனால், நமதும் நமது முன்னோர்களினதும் வரலாற்றை படிப்பதன் மூலமும் தேடுவதன் மூலமுமே தெரிந்து கொள்ள முடியும். ஆகவே தேடுவோம்; வாசிப்போம்; பயன் பெறுவோம்!

அல்ஹாஜ் MLA. கையூம் அவர்கள் இக்கிராமத்தின் வரலாற்றை தேடிக்கண்டு எழுத்து மூலமும் நூலாக்கியிருப்பதும் வரவேற்கத்தக்க விடயமாகும். தன்னந்தனிமையில் முயற்சி செய்து பலவருடங்கள் பிரயத்தனம் எடுத்து நூலுருவாக்கியமையை இந்தவூர் மக்கள் மறந்துவிடக் கூடாது. அவரைப் பாராட்ட வேண்டும். உற்சாகப்படுத்த வேண்டும். மேலும், இதுபோன்று பல நூல்களை எழுதி சிறந்து விளங்க இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

என்னைப் பொறுத்த வரையில் நான் நேசிக்கின்ற ஊர்களில் நெற்பிட்டிமுனை முதலிடத்தை வகிக்கின்றது. அரசியல் களத்திற்கு உரமூட்டும் ஊராக இருக்கிறது. அன்று சட்டமன்ற உறுப்பினர் ஜனாப் MC. அகமதுவை வெற்றிவாகை சூடச்செய்ய வழிவகுத்த ஊர். பின்னர், AR. மன்சூர் அவர்களுக்கு கைகொடுத்து உயர்நிலைக்கு கொண்டு சென்றவர்கள் இந்த ஊரவர்கள். அதனைத் தொடர்ந்து சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸை தேசியத் தலைவர் அல்ஹாஜ் MHM. அஷ்ரப் அவர்கள் கொண்டுவந்தபோது ஊர் முழுக்க ஒன்றுபட்டு நின்றவூர் இந்தவூராகும்.

அவரைத் தொடர்ந்து என்னைக் கண்ணியப்படுத்தி வெற்றிபெற உதவுவதும் இந்த ஊரேயாகும். எனவே, இந்த ஊர் என்னால் நேசிக்கப்படுகின்ற ஊராகும். அதனால் இந்தவூர் எழுத்தாளனை நான் மறந்துவிட முடியாது; வாழ்த்துகிறேன்.


அவர் எழுத்துலகில் சிறந்து விளங்க பிரார்த்திக்கின்றேன்.

நன்றி வஸ்ஸலாம்

சட்டத்தரணி HMM. **ஹரீஸ்** பா.உ.

விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர்

# வாழ்த்துச் செய்தி



உலக வரலாற்றில் முஸ்லீம்களின் வரலாறு மிகத் தொண்மையானது. முஸ்லீம்களின் முதல் மனிதன் ஆதம் (அலை) அவர்கள் முதல் ஆரம்பமானது அக்காலமிருந்தே வியாபாரத்தில் பிரசித்தி பெற்றிருந்தார்கள். முஸ்லீம்கள் போர்கள் செய்வது, நாடுகள் பிடிப்பது, ராஜ்ஜியங்கள் உருவாக்குவது போன்ற நோக்கங்களைக் கொண்டவர்களல்ல தாங்களும் தத்தமது வியாபாரமும் பொருளீட்டுவதுமாகவே வாழ்ந்து வந்திருக்கிறார்கள். வரலாற்றிலே நபி (ஸல்) அவர்களும் சஹாபாக்களும் போர் புரிந்திருக்கிறார்கள். நாடுகள் பிடிப்பதற்காக அல்ல. உண்மை மார்க்கத்தை உலகுக்கு அறிமுகம் செய்வதற்காக. ஆனால், சகோதர சமயங்களை பொறுத்த வரையில் மண்ணுக்காகவும், பொண்ணுக்காகவும் போர் செய்து மாண்ட வரலாறுகளை நாம் படித்திருக்கிறோம்.

அந்தவகையில் இலங்கை முஸ்லீம்களின் வரலாறுறை நோக்கும்போது கி.மு. உள்ள காலத்திலிருந்தே வியாபார ரோக்கமாக இலங்கைக்கு (செரந்திப்) வந்து போயிருக்கிறார்கள். உலக அரங்கிலே முஸ்லீம்கள் சிறந்த வர்த்தகர்களாக விளங்கியிருப்பதை நாம் அறிகின்றோம்.

அதிலும் குறிப்பாக கிழக்குமாகாணத்தில் முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற போதிலும் தென்கிழக்கிலே கனிசமான முஸ்லீம்கள் வாழ்ந்து வருகின்றனர். தென்கிழக்கின் தலைநகர் என்று சொல்லக்கூடிய கல்முனை மாநகரத்தின் மேற்கே அமையப்பெற்ற நெற்பிட்டிமுனை என்னும் ஊரின் வரலாறும் பண்பாட்டியலும் என்னும் நூலைத் தொகுப்பதற்கு கமு/அல் அக்ஸா ம.வி. அதிபர் அல்ஹாஜ் MLA. கையும் முன்வந்திருப்பதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நெற்பிட்டிமுனையின் மேற்கே கிட்டங்கி என்னும் வர்த்தகத் துறைமுகம் இருப்பதை நாம் அறிவோம். அத்துறைமுகத்திற்கு இஸ்லாத்தின்

ஆரம்பகாலத்திலிருந்தே முஸ்லீம்கள் வர்த்தக நோக்கமாகவும் பாவா ஆதம் (அலை) அவர்களின் மலையை தரிசிப்பதற்காகவும் வந்து போனார்கள். சிலகாலங்களில் நெற்பிட்டிமுனையிலும் தென்கிழக்கின் பிரதான ஊர்களிலும் தங்கிவாழத் தலைப்பட்டனர். அரபியர்களோடு அன்பு கொண்டிருந்த சகோதர மதத்தலைவர்கள் தத்தமது இனப் பெண்களை திருமணம் முடித்துக் கொடுத்ததோடு இருப்புக்களையும் உறுதிப்படுத்திக் கொடுத்தனர். அன்றுமுதல் இஸ்லாமியர் தளைத்தோங்கி வளர்ந்தனர் என்பதை அறியக்கிடைக்கிறது.

அதன் நோக்கில் தென்கிழக்கின் பிரதான ஊர்கள் தத்தமது வரலாறுகளை தொகுப்பதிலும் எழுதுவதிலும் ஆர்வம் காட்டுகின்றனர். அதேவழித் தோன்றலில் அதிபர் MLA. கையூம் அவர்களின் வரலாற்றுத் தொகுப்பு என்னை கவர்ந்திருக்கிறது. எனவே, அவருடையதும் அவ்வூர் மக்களினதும் அறிவும் நல்ல சிந்தனையும் மேலோங்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அல்ஹாஜ் MTA. **நிஸாம்**
மாகாண கல்விப் பணிப்பாளர்,
கிழக்கு மாகாணம், திருகோணமலை

# ஆசிச் செய்தி



ஈழத்து முஸ்லீம்கள் தமது அடையாளத்தைத் தேடும் பணியில் மிக மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் பிரதேசத்திற்குப் பிரதேசம் தமது வரலாற்றை நிறுவுவதில் கண்ணுங்கருத்துமாக இருந்து வருகின்றனர். இறக்காமம், அக்கரைப்பற்று, நிந்தவூர், சாய்ந்தமருது, மருதமுனை என்று அம்பாறை மாவட்டத்தின் முஸ்லிம் கிராமங்களின் வரலாற்றைப் பதிவு செய்த வரிசையிலே இன்று "நெற்பிட்டிமுனையின் வரலாறும் பண்பாட்டியலும்" என்ற நூல் வெளிவருவது மகிழ்ச்சி தருகிறது. இம்மாவட்டத்தின் இவ் ஒவ்வொரு ஊரினது வரலாற்றையும் ஒருங்குசேரப் பார்க்கிறபோது அம்பாறை மாவட்டம் குறித்த ஒரு தெளிவான அபிப்பிராயம் வரக்கூடும்.


இத்தகைய நூல்களைப் பார்த்து, வாசித்து, குறிப்பு எழுதிய வழக்கமே உண்டு. ஆனால், இப்புத்தகத்தைப் பொறுத்தவரை சம்பிரதாயபூர்வமான ஒரு ஆசியுரையே கேட்கப்பட்டிருக்கிறது. எனவே, நூல் பற்றிய எந்த அபிப்பிராயத்தையும் குறிப்பிட முடியாவிடினும் இவ் ஊரின் வரலாற்றினையும் பாரம்பரிய பழக்கவழக்கங்களையும் கலை, கலாசார, பண்பாட்டினையும் இந்நூல் குறித்து நிற்கிறதென அறிய முடிகிறது.

இந்நூலின் தலைப்பே நமக்கு வியப்பை அளிக்க முடியும். நாம் அறிந்தவரையில் "நற்பிட்டிமுனை பழீல்" என்றுதான் பழீல் தனது ஊரைக் குறித்திருக்கிறார். மேலும் நாற்பட்டிமுனை, நாப்பட்டிமுனை என்ற குறிப்பினையும் கூறக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், இந்நூலாசிரியர் நெற்பிட்டிமுனை என்று தனது ஊரின் வளத்தினைக் குறிக்க வருவது மிகச் சுவாரஸ்யமான விதமாகவே அமையக்கூடும்.

உண்மையில் இந்நூலாக்கம் நமக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. நூலாக்கப் பணி என்பது மிகச் சிரமமானது. அதனை விட வரலாற்று நூல் ஒன்றை ஆக்குவது இன்னும் சிரமமான காரியம். அத்தகைய சிரமமான காரியத்தினைத் தன்னந்தனியே நின்று நிறைவேற்றி இருக்கிற இந்நூலின் ஆசிரியர் நண்பர் கையூம் அவர்களுக்கு நமது வாழ்த்துக்களும் பிரார்த்தனைகளும் என்றும் உண்டு.

**பேராசிரியர் றமீஸ் அப்துல்லா,**
**தலைவர் - மொழித்துறை,**
**தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்.**

# அணிந்துரை



வரலாறு இல்லாத சமூகம் என்று ஈழத்து முஸ்லிம்களை புறந்தள்ள ஒருசில ஆய்வாளர்கள் நினைத்தார்கள் அவர்களின் இந்த எண்ணம் அண்மைக் காலமாக பிழையானது என நிரூபித்துக் கொண்டிருக்கின்றோம்.

எமது வரலாறு மிகப் பழமையானது. இது எழுதப்படாதிருந்தது ஒரு குறையாக இருக்கலாம். ஆனால் இன்று நூற்றிற்கு மேற்பட்ட வரலாற்று நூல்கள் எழுதப்பட்டுள்ளன.

இதனை நான் லரீப் சுலைமான் எழுதிய இறக்காமம் வரலாறு, சமூகம் வாழ்வியல் எனும் நூலிற்கு என்னால் எழுதப்பட்ட அணிந்துரையில் சுட்டிக் காட்டியுள்ளேன்.

இங்கும் அதனைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அப்பட்டியலில் MLA. கையூம் அவர்களால் எழுதப்பட்டுள்ள வரலாற்று நூலும் இடம்பெற வேண்டும் என்பதனால் மீண்டும் இங்கு இப்பட்டியலை இணைத்துள்ளேன்.

மத்திய கிழக்கில் இருந்து மட்டக்களப்பு வரை - மணிப்புலவர் மருதூர் ஏ மஜீத்

தென்கிழக்கு முஸ்லிம்களின் பூர்வீக வரலாறு - மணிப்புலவர் மருதூர் ஏ மஜீத்

அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் - முஸ்லிம் பண்பாட்டு திணைக்களம்

அக்கரைப்பற்று வரலாறு - ஏ.ஆர்.எம். சலீம்

யாழ்ப்பாணத்து முஸ்லிம்கள் வரலாறும் பண்பாடும் - அப்துல் ரஹீம்

இலங்கையில் இஸ்லாம் - ஏ.எம்.ஏ. அஸீஸ்

இலங்கைச் சோனகர் இன வரலாறு - ஐ.எல்.எம். அப்துல் ரஹீம்

அருள் இறங்கும் அற்புதத்தலம் - ஏ.ஆர்.ஏ. பிஷ்ர் அல் ஹாபி

கொட்டியாரப்பற்று வரலாறு - எம்.ஏ. சமத்

மாத்தறை மாவட்ட முஸ்லிம்கள் - முஸ்லிம் பண்பாட்டுத் திணைக்களம்

முஸ்லிம் தேசியமும் எதிர்காலமும் - மூன்றாம் மனிதன் வெளியீடு

இலங்கை முஸ்லிம்களின் திருமண சம்பிரதாயங்கள் - அ. முஹம்மது சமீம்

The Muslim of Srilanka - Lorna de waria

நமது பாதை – ஏ.எல். அப்துல் மஜீத்

இரத்தின தீவின் இஸ்லாமியர் வரலாற்று குறிப்புகள் - எம்.ரீ.எம். மக்கீன் அன்சார்

ஈழத்தின் இன்னுமொரு மூலை - ஜும்ஆ மஸ்ஜித், சம்மாந்துறை

பர்பரீன் - எச்.எம். கமாலுதீன்

மருதமுனையின் வரலாறு - புலவர்மணி சரிபுத்தீன்

பொல்கஹவெல முஸ்லிம்கள் - அ.லெ.மு. ராசிக்

புத்தளம் வரலாறு - ஏ.என்.எம். ஷாஜஹான்

இலங்கை சோனகர்கள் பற்றிய கடந்தகால நினைவுகள் - சோனக இஸ்லாமிய கலாசார நிலையம்

இலங்கை முஸ்லிம்களின் வரலாறு (பாகம் 1) - மௌலவி அல்ஹாஜ் கலாநிதி கே.எம்.எச். காலிதீன்

கம்பஹா மாவட்ட முஸ்லிம்கள் - முஸ்லிம் பண்பாட்டு திணைக்களம்

இலங்கை முஸ்லிம்களும் இனப் பிரச்சினையும் - எம்.ஐ.எம். முகைதீன்

The Muslim Heritage of Eastern Srilanka - S.H.M. Jameel + Asiff Husain

சோனகர் தேசம் - ஏபியெம் இத்ரீஸ்

தென்கிழக்கிலங்கை முஸ்லிம்களின் மான்மியத்திற்கு முன்னோரளித்த அருஞ்செல்வம் - எம்.எம்.எம். காசிம்ஜீ

அனுராதபுர மாவட்ட முஸ்லிம்களின் வரலாறு - முஸ்லிம் பண்பாட்டு திணைக்களம்

முஸ்லிம்களின் தேசிய அடையாளம் - வித்துவான் வேல்

முஸ்லிம்களின் தேசிய அடையாளம் (பதில்) - ஜமால்தீன்

இலங்கை முஸ்லிம்களின் வரலாறு - றவூப் ஸெய்ன்

கிழக்கிலங்கை முஸ்லிம்களின் நாட்டார் பாடல்கள் - எஸ். முத்துமீரான்

இறக்காமத்தூர் பண்பாட்டுப் பாடல்கள் - லரீப் சுலைமான்

பட்டிப்பளை (நெய்னா காட்டு வரலாற்றுப் பேழை) - ஜலீல் ஜீ

இரு குருவிகள் - எம்.எம்.எம். காசீம்ஜீ

சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசல் வரலாறு - எஸ்.எச்.எம். ஜெமீல்

கல்முனைக்குடி ஜும்ஆப் பள்ளிவாசல் வரலாறு - ஹாஜி உஸ்மான் சாஹிப், எஸ். ஆதம்பாவா அதிபர்

கற்குடா முஸ்லிம்களின் ஓர் பூர்வீக குறிப்பு - அஷ்ஷெய்க் ஏ.எல். ஜுனைதீன்

காத்தான்குடி வரலாறு (ஓர் அறிமுகம்) - பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம்

The Arabu Navigation - Nadvi

கண்டி மாவட்ட முஸ்லிம்களின் வரலாறு - முஸ்லிம் பண்பாட்டு திணைக்களம்

இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாச்சாரமும் - எம்.ஐ.எம். அமீன்

பொலன்னறுவை மாவட்ட முஸ்லிம்களின் வரலாறு - முஸ்லிம் பண்பாட்டு திணைக்களம்

An Ethonological Surve of the Muslim of Srilanka - M.M.M. Mahroof

The Moors of Shinhala or Tamil Origin - Marzook Burhavi

Muslim of Srilanka - Dr. M.A.M. Shukri

ஈழத்து தமிழ் பேசும் மக்களின் வரலாற்று உருவாக்கமும் பதில் குறிப்புகள் தரும் சில நூல்கள் - பேராசிரியர் சி. மௌனகுரு

ஏறாவூர் வரலாறு - ஏறாவூர் வரலாற்று ஆய்வு மையம்

சாய்ந்தமருது வரலாறு - சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசல் வெளியீடு

இஸ்லாத்தின் தோற்றம் ஒரு சமூகப் பண்பாட்டியல் - டாக்டர் எம்.எஸ்.எம். அனஸ்

நூற்பட்டியல் விரிவஞ்சி ஐம்பதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இப்படி இருந்தும், முஸ்லிம்களின் வரலாறு இன்னும் எழுதப்படவில்லை என்று ஏன் கூறுகிறார்கள் என்று ஆராய வேண்டியுள்ளது.

மேற்கூறப்பட்ட நூற்பட்டியலில் காணப்படுகின்ற நூல்கள் தனித்தனியே ஊர்களைப் பற்றியும் மாவட்டங்களை பற்றியும் எழுதப்பட்டவையே.

முழு இலங்கையையும் பிரதிபலிக்கக் கூடிய வரலாறு என்று பார்த்தால் இரண்டொரு நூல்களே தேறுகின்றன.

இப்படித் தேறும் ஒரு சில நூல்களும் ஒத்திசைக்காமல் முரண்பாடுகளோடு காணப்படுகின்றன. வரலாறு என்பது இப்படி முரண்பாடுகளோடு இருப்பது, எது உண்மை என்ற பிரச்சினையை ஏற்படுத்திவிடும்.

அதுமட்டுமல்லாமல், இந்நூல்கள் தகவல்களை எடுத்துக் கூறுவனவாக உள்ளனவே தவிர, கூறப்பட்டுள்ள தகவல்கள் எந்தளவு உண்மைப்பாடுடையவை என்று ஆய்வு செய்யப்படவுமில்லை.

இது ஒரு புறமிருக்க சாய்ந்தமருது ஊர் வரலாறு ஒன்று கூற, கல்முனைக்குடி வேறு வரலாறு கூறுகின்றது. இது எப்படிச் சாத்தியமாகும்?

பிரிட்டிஸார், ஒல்லாந்தர், போத்துக்கீசர் இலங்கைக்கு வருவதற்கு முன் தென்கிழக்கே மட்டக்களப்பு என்றழைக்கப்பட்டது. இச்சொல் சுமேரிய மொழிச் சொல்லாகும்.

மட்டக்களப்பு என்ற சொல்லும் மஃபர் என்ற சொல்லில் இருந்து வந்ததுவே.

மட்டக்களப்பின் நீர்வழிப்பாதையின் துறைமுக பட்டினமே நற்பிட்டிமுனை.

இதனை வேறு ஒரு வகையாகக் கூறுவதாயின் மட்டக்களப்பு எனும் ஊரின் துறைமுகத்தின் ஐந்து முனைகளே கல்முனை, நற்பிட்டிமுனை, மருதமுனை, வீரமுனை, சொறிக்கல்முனை என்பனவாகும்.

நாளடைவில் நீர்வழிப்பாதை அடைபட்டுப் போனதும், தரைவழிப்பாதை பிரபலமாயிற்று எனலாம். அதாவது, இன்று அக்கரைப்பற்றுப் பாதை பிரபலமாயிற்று எனலாம்.

பழைய நற்பிட்டிமுனையின் சந்தையாக ஜவுலிக்கடையும் (தற்போதைய சவளக்கடை) பொருள் பாதுகாத்து வைக்கும் இடமாக கிட்டங்கியும் இருந்தது.

இவ்வாறு வரலாற்று முக்கியத்துவம் வாயந்த நற்பிட்டிமுனையின் வரலாறு அல்-அக்ஷா மகா வித்தியாலயத்தின் அதிபர் M.L.A. கையூம் அவர்களால் எழுதப்பட்டுள்ளமை மகிழ்ச்சியை தருகிறது.

இந்த வரலாற்று நூலில் ஊரின் கல்வி வரலாறு மிகமிக ஆழமாக எழுதப்பட்டுள்ளது.

இது நூலின் கனதிக்கு உதவுகின்ற அதேவேளை ஒருசில அத்தியாயங்கள் அதாவது ஊருக்கு வெளியே இருந்து வந்து திருமணம் முடித்து ஊருக்கு சிறப்புச் செய்கிறவர்கள் -

ஊரில் இருந்து வெளியே சென்று திருமண பந்ததில் இணைந்து கொண்டவர்கள் போன்ற விபரங்களும் -

ஊரின் ஆரம்பம்முதல் இன்றுவரை அயல் கிராமங்களில் இல்லாத நற்பிட்டிமுனைக்கு மட்டுமே உரித்தான தொழில்கள், கலை, இலக்கியப் பண்பாட்டுக் கோலங்கள், வாழ்க்கை முறைகள் என்பன துல்லிதமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

மேலும் ஊரின் ஜும்ஆப் பள்ளிவாயலின் வரலாறும் அதனோடு கூடிய சிறிய பள்ளிவாயல்களின் வரலாறும் கால வரையறைகளோடு எழுதப்பட்டுள்ளன. இது மிக்க மகிழ்ச்சியைத் தரும் விடயமாகும்.

இதேபோல வைத்தியமுறைகளும் எழுதப்பட்டுள்ளன.

நான் மட்டக்களப்பு மாந்தரீகம் எனும் ஆய்வு நூலொன்றினை எழுதிக் கொண்டிருக்கிறேன்.

எனது ஆய்வுக்குட்படாத பல விடயங்கள் இந்த நூலில் இடம்பெற்றுள்ளமை எனக்கு ஆச்சரியத்தை கொடுத்தது.

இந்த வகையில் கையூம் அவர்களை பாராட்டாமல் இருக்க முடியாது.

கடைசியாக இக்குறிப்பினையும் சேர்த்துக் கொள்ள விரும்புகின்றேன்.

வரலாறு எனும்போது ஊர், நகர், மாநகர், மாவட்டம், மாகாணம், முழு இலங்கையும் என விரிவடைந்து போக வேண்டும். அதனோடு சேர்ந்து எமது ஊர் வரலாறும் எழுதப்பட வேண்டும்.

அப்பொழுதுதான் ஊரின் வரலாற்றின் நம்பகத்தன்மை பேணப்படும்.

இதனை வரலாற்று ஆசிரியர்கள் எல்லோரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.


இங்கு எழுதப்பட்டுள்ள நற்பிட்டிமுனை வரலாற்றில் இத்தன்மை பேணப்பட்டுள்ளது என்றாலும் போதாது என்பது எனது எண்ணமாகும்.

நூலாசிரியர் M.L.A. கையூம் அவர்களின் முயற்சிக்கு எனது பாராட்டுக்கள்.

நன்றி

**மணிப்புலவர் மருதூர் ஏ மஜீத்**
B.A (Hons) P.G.D.E, S.L.E.A.S

# வாழ்த்துரை



நாகரீகம் வளர்ந்து உச்சகட்டத்தை அடைந்து கொண்டிருக்கும் தற்காலத்தில் பக்கத்து தெருவில் வாழ்பவர்களைக்கூட தெரிந்து கொள்ளாத நிலையில் இன்றைய இளம் சமூகத்தினர் இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. பிற்காலத்தில் இவை தூரப்போகும் என்ற ஐயமும் இருக்கிறது. குடும்பம், கோத்திரம், சந்ததி என்பதெல்லாம் மாறி தானும் தனது பிள்ளைகளும் என்கின்ற மனப்பாங்கும் எதையும் அறிய நேரமில்லாத நிலையும் வாசிப்புப் பழக்கம் இல்லாத தன்மையும் காணப்படுவது வேதனைக்குரிய விடயமாகும்.

அந்த வகையில் நூலாசிரியர் அல்ஹாஜ் MLA. கையூம் அவர்களின் "நெற்பிட்டிமுனையின் வரலாறும் பண்பாட்டியலும்" எனும் நூலை சந்ததியினருக்காக எழுத முன்வந்ததையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இவர் பாரம்பரியம், சம்பிரதாயங்கள், பழக்கவழக்கங்களையும் ஆரம்பகால முஸ்லீம்களின் பண்பாட்டியலையும் மிகத் தெளிவாகவும் சிறப்பாகவும் எழுதியுள்ளார். அத்தோடு வரகவிகள், அறிஞர்கள் பற்றிக் கூறுவதும் பாராட்டுக்குரிய விடயமாக இருக்கிறது. மேலும் வரலாறுகள் மங்கிமறைந்து போகும் இக்கட்டான சூழ்நிலையில் தனிமனித முயற்சி வரவேற்கத்தக்கது.

ஒரு சமூதாயம் அதன் தோற்றம், வளர்ச்சிப் படிகள் பற்றி அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். அவற்றை தெரிந்து கொள்ளாதிருப்பது சமூகத்தின்மீது நாம் கொண்டுள்ள அக்கறையின்மையினை வெளிப்படுத்துவதாக காணப்படும். அவற்றை நிவர்த்தி செய்யும் பொருட்டு அவற்றை வெளிப்படுத்த முன்வந்த எம்.எல்.ஏ. கையூம் அவர்களை பாராட்டுகின்றேன். அவரது நோக்கம் நிறைவேற இறைவனைப் பிரார்த்திக்கன்றேன்.

**எம்.எஸ். அப்துல் ஜலீல்**

B.Com (Hons)Sp,PGDE,MA(Econ),SLEAS

கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர்

# வாழ்த்துச் செய்தி



ஒரு ஊரின் வரலாற்றை அறிந்து கொள்வதற்கு பொதுமக்கள் எல்லோரும் ஆவலுடன் இருப்பார்கள்.


பெரும்பாலான தருணத்தில் அந்த வரலாறு ஆவணமாக தொகுக்கப்படாமல் இருக்கும்.

இத்தகைய பின்னணியில் நெற்பிட்டிமுனையின் வரலாற்றையும் பண்பாட்டையும் நூல் வடிவில் வெளியிட எடுக்கப்பட்ட முயற்சி பாராட்டத்தக்கது.

அவருடைய முயற்சி வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

**டாக்டர் பி.கே. இரவிந்திரன்**
பொது சத்திரி சிகிச்சை நிபுணர்
அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலை
கல்முனை

# கோட்டக்கல்விப் பணிப்பாளரின் இதயத்திலிருந்து...



வழிகாட்டும் வான் மறையை வழங்கி அருள்பாலிக்கும் வல்லோன் வளர் கருணை பேரருளால்....

நெற்பிட்டிமுனை வரலாறு எனும் இன்னூலுக்கு ஆசி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பல வருடங்களாக ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றி வரும் MLA. கையூம் அவர்களது கவிதையாற்றலும் இரசனை கலந்த சிந்தையிலும் தேடல் மிகுந்த உற்சாகத்திலும் உருவானதே இந்நூலாகும்.

இந்நூலானது நெற்பிட்டிமுனையின் உருவான வரலாற்றையும் அம்மக்களின் வாழ்வியல் அம்சங்களையும் கலை, கலாச்சார விடயங்களையும் வணக்க வழிபாடுகள், சடங்குகள், சுவடுகள், தொழில் முறைகள் என்பனவற்றையும் அக்கால தனவந்தர்கள், கற்றவர்கள், ஊழியர்கள், அதிகாரிகள் போன்றோர்களின் விபரங்களையும் உள்ளடக்கிய வரலாற்றுப் பொட்டகமாக இந்நூல் ஜனாப் கையூம் அவர்கள் வார்த்திருப்பது பெருமையுடையதாகும்.

ஜனாப் கையூம் அவர்கள் இலக்கியத் துறையில் ஆர்வம் மிக்கவர் என்பதற்கு இவரால் வெளியிடப்பட்ட "தவறிய தவறுகள்" என்ற கவிதை நூலும் சான்று. அத்துடன், அன்று தொட்டு இன்று வரை பத்திரிகைகளில் வெளிவருகின்ற கவிதைகளும் இவரை கவிஞராக வெளிப்படுத்துகின்றது.

எனவே, இவருடைய இவ்வெளியீடு சிறந்தது என நான் கருதுகிறேன். இவருடைய எழுத்தாக்கங்கள் மேலும் தொடர வாழ்த்துகிறேன்.

AL. சக்காப்

**கோட்டக்கல்விப் பணிப்பாளர்,**

**கல்முனை முஸ்லீம் பிரிவு.**

# ஆசிரியர் கருத்து

நெற்பிட்டிமுனை, மக்களால் நேசிக்கப்படுகின்ற அழகிய ஊராகும். இங்கு ஏறக்குறைய முஸ்லீம் மக்களின் தொகைக்கேற்ப தமிழ் மக்களும் சமமாக வாழ்கின்றார்கள். ஆங்காங்கே அழகிய பாரம்பரியக் கோயில்களும் கட்டடக்கலை பொதித்த பள்ளிவாயல்களும் அலங்கரித்து நிமிர்ந்து நிற்கின்றன. மேலும் வயலும் வயல்சார்ந்த நிலமும் உழவர்களின் உற்சாகக் குரலோசையும் பள்ளிவாயல்களின் பாங்கோசையும் பட்சிகளின் இன்னிசைப் பாடல்களும் மேலாக கோயில்களின் மணியோசையும் பார்ப்பவர்களைப் பரவசப்படுத்தும் ஊராக விளங்குகிறது.

கிராமத்து மக்கள் சேற்றில் இறங்கி சீர்செய்து வயல் உழுது நாற்றுநட்டு களைபிடிங்கி நல்விளைவைப் பெருக்கி சோற்று அரிவை உருவாக்கி நாட்டின் நாற்புறமும் அரிசனுப்பி உண்டு மகிழும்போது தோன்றும் சந்தோசம் பிள்ளையைப் பிரசவித்துவிட்டு சந்தோசமாகப் பெருமூச்சுவிடும் தாயைவிட மேலான சந்தோசமடைகின்றனர் விவசாயிகள். அதனால்தான் நெற்பிட்டிமுனை எனும் நாமம் சூடப்பட்டது இவ்வூருக்கு. வயலின் ஒருமருங்கில் இவ்வூரை சுற்றிவர பாதைகள் அமைக்கப்பட்டு பாதையின் அருகிலே வம்மி மரங்களும், மருத மரங்களும் இயற்கையாக நிழல் கொடுத்து நிற்பதால் உச்ச வெயில் நேரத்தில் இளைப்பாறும் விவசாயிகளும், மக்களும் சுத்தமான காற்றை சுவாசிப்பதற்காகவும் உடல் களைப்பைப் போக்குவதற்காகவும் கூடியிருப்பார்கள்.

இவர்களின் அவ்வாறான ஓய்வையும் உழைப்பையும் கண்ணுற்ற எனது அடிமனதில் ஏற்பட்ட உணர்வலையே "நெற்பிட்டிமுனையின் வரலாறும் பண்பாட்டியலும்" நூல் வெளிவருவதற்குக் காரணமாக அமைந்தன. 1983ம் ஆண்டுக் காலப்பகுதியில் நானும் எனது விளையாட்டுத் தோழர்களுமான நெற்பிட்டிமுனை பளீல், MT. இஸ்ஸதீன் ஆகியோர் பல்கலைக்கழக மாணவர்களாக இருந்தபோது ஓய்வு நேரங்களில் ஊரைப்பற்றி சிந்திப்போம். அவ்வேளையில் உதயமானதே இவ்வூர் வரலாறு எழுத வேண்டும் என்ற எண்ணம். அப்போதைய காலச்சூழல் இடம் தராததன் காரணமாக அம்முயற்சி விடுபட்டுப் போய்விடடது.

அதன்பின்னர் ALM. பளீல் அவர்கள் பிரதேச செயலாளராகி விட்டார். நான் அதிபராகி விட்டேன். MT. இஸ்ஸதீன் இருக்கும் வேளையில் 2007ம் ஆண்டு S. அஸீறுல்லாஹ் AO (சம்மாந்துறை பிரதேச செயலகம்) அவர்கள் என்னை அணுகி இப்படி ஒரு வரலாற்று

நூலை தொகுக்க வேண்டும் எனக்கூறி மீண்டும் ஒரு முயற்சியில் ஈடுபட்டோம். அதற்குத் துணையாக AM. ஜமால்தீன் அதிபர், YL. இஸ்ஹாக் இலிகிதர் (ஊடகவியலாளர்), AL. உமர்கத்தா இலிகிதர் ஆகியோர்கள் இணைந்து சில வருடங்கள் முயற்சித்தோம்

அவ்வேளையில் AM. ஜமால்தீன் அதிபர் மரணித்துவிட்டார். அதன் பின்னர் பல கூட்டங்கள் கூடி சிந்தித்தோம் பகுதி பகுதியாகப் பணிகள் ஒவ்வொருவருக்கும் ஒப்படைக்கப்பட்டன. இருந்தபோதிலும் பணிகளைப் பலர் சிறப்பாகச் செய்யவில்லை. அதனால் அம்முயற்சியும் கைக்கூடவில்லை. இவைகளால் தோல்வி அடைந்த நான் தனிமையில் முயற்சிக்கத் தொடங்கினேன். அம்முயற்சியின் பயனே இந்த "நெற்பிட்டிமுனையின் வரலாறும் பண்பாட்டியலும்" என்னும் நூல் வெளிவரக் காரணமாக அமைந்தது.

இவ்வூர் பன்னெடும் காலம்தொட்டு வர்த்தகப் பிரதேசமாக அமைந்திருந்தது. கிட்டங்கி துறைமுகத்திலே வர்த்தகப் பொருட்கள் சேர்த்து வைத்து நீர்வழிப்பாதையாகிய மட்டக்களப்பு வாவியினூடாக பல தூர நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன் காரணமாக இவ்வூர் பிரபல்யம் பெற்றிருக்கிறது.

எமது ஊருக்கு அடுத்தாற்போல் உள்ள ஜவுலிக்கடை என்னும் சவளக்கடையில் பிற்பட்ட காலத்தில் ஆங்கிலேயரால் உருவாக்கப்பட்ட அரிசி ஆலையில் உற்பத்தியாகும் அரிசிகள் யாவும் தூர இடங்களுக்கு அனுப்புவதற்கு ஏற்ற வகையில் நீர்வழிப்பதை அமைந்திருந்தது. அதன் பின்னர் பாலங்கள் அமைக்கப்பட்டு பாதைகள் உருவாக்கப்பட்டதன் காரணமாக தரைவழிப்பாதைகளால் அரிசி ஏற்றுமதி 40 ஆண்டுகளுக்கு முன்னர் வரை இடம்பெற்று வந்தது.

நெற்பிட்டிமுனை மக்களின் பிரதான தொழிலான நெற்செய்கையின் காரணமாக கல்வித்துறை நாட்டம் வெகுவாக குறைந்து காணப்பட்டது. நாங்கள் சேற்றில் இறங்காவிட்டால் நகர மக்கள் சோற்றைப் புசிக்க முடியாது என்பதற்கு அமைய எமதூர் கல்வியில் நாட்டம் குறைந்திருந்தது. அதனால் கற்றலில் வீழ்ச்சி ஏற்பட்டது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். இதற்கு கற்றவர்களின் பங்களிப்பு தேவையாக உள்ளன.

எது எவ்வாறாக இருந்தபோதிலும், இலங்கையில் முஸ்லீம்களின் வருகையை அல்லது முஸ்லீம்களின் வரலாற்றை நோக்கும்போது மிக நீண்ட காலங்களுக்கான தடயங்கள் தென்படுகின்றன. சுலைமான் நபி (அலை) அவர்களின் காலத்தில் அவருடைய மனைவிகளில்

ஒருவரான பல்கீஸ் (அலை) அவர்களிடம் இலங்கையில் இருந்து தருவிக்கப்பட்ட சிவப்பு மாணிக்கக்கற்கள் இருந்ததாக வரலாற்றில் இருந்து அறியக் கூடியதாக இருக்கிறது.

இவற்றை நோக்கும்போது மிக நீண்ட காலத்திற்கு முன்னரே முஸ்லீம்களின் தொடர்பு இலங்கையில் இருந்திருக்கிறது. இத்தொடர்பு வியாபார நோக்காகவும், ஆதிபிதா ஆதம் (அலை) அவர்களின் பாதம் பதித்த இடத்தை தரிசிப்பதாகவும் இருந்திருக்கலாம். இவ்வாறு வருகைதந்த அரபியர்கள் அல்லது முஸ்லீம்கள் அக்காலத்தில் பாதை வசதிகள் இல்லாதிருந்த காரணத்தினால் நீர்வழிப்பாதைகளையே பயன்படுத்துவதற்கு அதிக வாய்ப்பு இருந்திருக்கும். அந்த வகையில் நோக்கும் போது புளியந்தீவு (மட்டக்களப்பு) வாவியூடாக கிட்டங்கித்துறை, மண்டூர், சவளக்கடை, சம்மாந்துறை போன்ற ஊர்களையும் துறைகளையும் பயன்படுத்தி பிரயாணங்களை மேற்கொள்ளுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம் இருந்திருக்கிறது.

சம்மாந்துறை துறைமுகத்தில் வள்ளங்களை கட்டிவிட்டு அங்கிருந்து தரை மார்க்கமாக மல்கம்பிட்டி, நெயினாகாடு வழியாக பட்டிப்பளை ஆற்றை ஊடறுத்து இறக்காமத்தை அடைந்து அங்கிருந்து கொன்றை வெட்டுவான் (கொண்டவெட்டுவான்), கொடபுவ (வெல்லவஸ்ஸ), மொனறாகலை ஊடாக இரத்தினபுரி சென்று அதனூடாக பாவா ஆதம் (அலை) பாதத்தை தரிசித்தனர். வரும்போது வாசனைத் திரவியங்கள், யானைத்தந்தங்கள், மான் கொம்புகள், சிவப்பு மாணிக்கங்கள், தேன், நெய் போன்றவற்றை அரேபியாவுக்குக் கொண்டு சென்றனர்.

வடமேல் பருவப்பெயர்ச்சிக் காற்றினை எதிர்பார்த்து கிட்டங்கி, சம்மாந்துறை போன்ற இடங்களில் தங்கியிருந்து காற்று வீசத் தொடங்கியதும் பயணத்தை ஆரம்பித்தனர். இவ்வாறு சென்றவர்களால் அறியப்பட்ட அரேபியர்களின் வரவு அதிகரிக்கத் தொடங்கியது. தொடர்ந்து வியாபார நோக்கோடு வருகை தந்து தவள முறையில் மாடுகளில் பொருட்களை ஏற்றிக்கொண்டு மலைநாடு சென்று வியாபாரத்தை முடித்துக் கொண்டு வரும் வழக்கம் ஏற்பட்டது. அவ்வாறு அவர்கள் செல்லும் இடங்களெல்லாம் தங்கிச் செல்ல வேண்டிய சந்தர்ப்பத்தில் அவ்விடங்கள் முஸ்லீம் ஊர்களாக உருவாகத் தொடங்கின. அவ்வாறு உருவாகியதே கிடடங்கித் துறையும் நெற்பிட்டிமுனைக் கிராமமுமாகும்.

நெற்பிட்டிமுனை கிராமத்தில் ஆதிக்குடிவாசிகளாகிய அரேபியர்கள் தங்கியிருந்திருக்கிறார்கள். பிற்பட்ட காலத்தில் குடியிருப்புக்கள் தோற்றம்

பெற்றாலும் ஆரம்பகாலம் முதலே நெற்பிட்டிமுனையை அரேபியர்கள் அறிந்திருக்கிறார்கள். அந்த வகையில் இவ்வூரின் முக்கிய முதிசமாக விளங்கிய பாவாப்பிள்ளை ஸியாரம் கி.பி 10ம் நூற்றாண்டுக் காலப்பகுதியாகத் தெரிய வருகிறது. இந்த ஸயாரத்தை வழிபடுவதற்காக அராபியர்கள் கிட்டங்கித் துறைமுகத்தில் வள்ளங்களைக் கட்டிவிட்டு பாவாப்பிள்ளை ஸியாரத்தை தரிசித்துவிட்டு அவ்விடத்தில் சில காலம் தங்கி மீண்டும் தத்தமது தேவைகளுக்காகப் புறப்பட்டுசென்று வந்தனர் என வரலாறு கூறுகிறது. அத்தோடு நீர்வழிப்பாதை பிரபல்யம் பெற்றிருந்த அக்காலத்தில் கல்முனை, நெற்பிட்டிமுனை, கிட்டங்கித்துறை, சவளக்கடை வியாபார நடவடிக்கைகளில் பிரபல்யம் பெற்றிருந்தன. தரைவழிப்பாதை பிரபல்யம் பெற்றதும் நெற்பிட்டிமுனை, கிட்டங்கித்துறை, சவளக்கடை ஆகியவைவகளின் பிரபல்யம் ஓய்வு கண்டன.

இவ்வாறான நீண்ட வரலாற்றை கொண்ட இந்த நூலை எழுதுவதற்கு வாய்ப்பு வசதிகளை உருவாக்கித்தந்த இறைவனைப் புகழ்கின்றேன். எனது தந்தை அல்ஹாஜ் சின்னலெப்பை மீராலெப்பை போடியார் அவர்களையும், எனது அன்புத் தாயார் தம்பிசாஹிபு போடி மரியம் வீவீ அவர்களையும் பாராட்டுகின்றேன். இவர்கள் இருவரும் நிறையத் தகவல்களை எனக்குத் தந்து உதவினார்கள். அத்தோடு எனது அன்பு மனைவி சமீறா கையூம் (ஆசிரியை) ஆக்கமும் ஊக்கமும் தந்து ஒத்துழைப்பு நல்கினார்கள்.


மேலும், இந்நூலை நூலுருப் பெறுவதற்கு ஒத்துழைப்பு நல்கிய பாடசாலை பிரதி அதிபர், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரிய-ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் அனைவரையும் அன்புடன் நேசிக்கின்றேன். இன்னும் ஜும்ஆ பள்ளிவாயல் தலைவர், செயலாளர், நிருவாக உறுப்பினர்கள் அனைவரையும் அன்புடன் நோக்குகின்றேன். அத்தோடு இந்த ஊரைச் சேர்ந்த அறிவாளிகள், புத்திஜீவிகள், கல்விமான்கள், செல்வந்தர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் நூலுருப் பெறுவதற்கு பேருதவியை நல்கியதோடு ஆக்கபூர்வமான கருத்துக்களையும் தந்துதவியதன் காரணமாக அந்நபர்களும் நன்றிக்குரியவர்களாக கருதப்படுகின்றனர்.

என்னால் முடிந்தவரை தகவல்களைத் திரட்டியுள்ளேன். எனது முயற்சியின் அறுவடை உங்கள் கரங்களில்.

அன்புடன்
- ஆசிரியர் -

# சமர்ப்பணம்

அண்ட சாசரங்களைப் படைத்து அகிலத்திற்கு அருட் கொடைகளாக நபிமார்களைப் படைத்து அர்ஷிலே ஆட்சி அமைத்து அரசாளும் அரசர்களுக்கெல்லாம் அரசன் மகா கிருபையாளன் அல்லாஹ்வுக்காக இந்நூலை சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.



என்னுடைய தந்தை அல்ஹாஜ் சின்னலெப்பை மீராலெப்பை போடியாரும் எனது தாய் தம்பிசாஹிபு மரியம் பீவியும் என்னை ஈன்றிடாவிட்டால் இந்த நூல் எதிர்கால சந்ததியினருக்கு இல்லாமல் போயிருக்கும். அவர்களையும் நினைத்தழுகின்றேன்று சமர்ப்பிக்கின்றேன்.

ஆரம்பமுதல் பல்கலைக்கழகம் வரை கல்விப் பசிபோக்கி அரும்பாடுபட்டு உருவாக்கிய ஆசிரிய பெருந்தகைகள் அத்தனை பேருக்கும் நன்றி செலுத்துகின்றேன் நற்பேருடன் சுவர்க்கம் சேர இவர்களுக்காகவும் சமர்ப்பணம் செய்கின்றேன்.



ஆலையில் உருவாக்கப்பட்டு ஆசிரியராக, அதிபராக உருமாற உற்ற துணைசெய்த கற்ற பெரும்தகை மருதமுனையைச் சேர்ந்த அல்ஹாஜ் MM. நிஜாமுத்தீன் அதிபர் அவர்களுக்கும் அன்னாரின் மனைவி, மக்கள் அனைவருக்கும் சத்தியச் சான்று பகரட்டும். சமர்ப்பணம் செய்கின்றேன்.

இவ்வரிய நூலை விலை கொடுத்து வாங்கி கற்றுப் பயன்பெறும் ஒட்டுமொத்த அத்தனை பேருக்கும் உளம் கனிந்த நன்றிகளை சமர்ப்பணம் செய்வதில் சளையாதிருக்கிறேன்.

– ஆசிரியர் –


எங்கள் அதிபர்
MLA.KAIYOOM,
PRINCIPAL

# இலங்கை முஸ்லீம்களின் தோற்றமும் வளர்ச்சியும்

கி.பி. 7ம் நூற்றாண்டில் இஸ்லாம் பரவத் தொடங்கியவேளை அரேபியத் தீபகற்பத்திலிருந்து வியாபாரத்திற்காகவும் புனித ஆதம் மலையைத் தரிசிப்பதற்காகவும் வருகை தந்த அரேபிய முஸ்லீம்கள் மூலம் இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாகின்றது.

ஏற்கனவே வாழ்ந்துகொண்டிருந்த அரேபியர்கள் தங்களுக்குள் ஒருசிலரைத் தேர்ந்தெடுத்து இஸ்லாத்தை அறிந்துவர அரேபியாவுக்கு அனுப்பிவைத்தார்கள். அங்கு சென்றவர்கள் முஹம்மது நபி (ஸல்) அவர்களைச் சந்திக்கவில்லை. அபூபக்கர் (ரலி) அவர்களையும் சந்திக்கவில்லை. இருவரும் மரணித்துவிட்டார்கள். உமர் (ரலி) அவர்கள் கலீபாவாக ஆட்சியிலிருக்கும்போதே இலங்கைக்கு இஸ்லாத்தின் தேவை பற்றி எடுத்துக் கூறப்பட்டதற்கு இணங்க ஸஹாபாக்களில் சிலரை உமர் (ரலி) அவர்கள் அந்தக் கூட்டத்தோடு இலங்கைக்கு அனுப்பிவைத்தார்கள். அதன் மூலம் இலங்கையில் இஸ்லாம் பரவத் தொடங்கியதாக வரலாறு கூறுகின்றது.

கி.பி. 7ம் நூற்றாண்டுகளுக்கு முன்னரே இலங்கையில் துலுக்கர், அரேபியர், பட்டாணியர், பவனர் போன்றோர் வாழ்ந்திருக்கின்றனர். இவர்கள் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவியதும் இஸ்லாமிய சமூகம் உருவாகியதாகவும் கூறப்படுகின்றது.

அரேபியாவிலிருந்து இலங்கைக்கு வந்த அரேபியர்களான முஸ்லீம்கள் இந்த நாட்டிலேதான் பெண்களைத் திருமணம் செய்தார்கள். சிங்கள, தமிழ் பெண்களை மணந்தார்கள். பறங்கியர்களையும் மணந்தார்கள். இவர்களின் பிள்ளைகள் யாவரும் தந்தை வழியில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு முஸ்லீம்களாகவே வாழ்ந்தனர்.

முஸ்லீம்களில் எவராவது ஒருவரின் பரம்பரைத் தேடலை தந்தை வழியில் நடத்தினோமேயானால் அது அரேபியரான முஸ்லீம் ஒருவரையே சென்றடையும். இதே நபரின் பரமப்ரைத் தேடலை தாய்

வழியில் நாடினால் அது இந்த நாட்டு இனங்களுக்கிடையிலான இரத்த உறவை வெளிப்படுத்துவதோடு பௌத்த, இந்து, கிறிஸ்துவ மதங்களிலிருந்து வந்ததான மாற்றத்தை காண்பிக்கின்றது. ஆகவே, இஸ்லாம் மார்க்கம் இலங்கையில் பன்னெடுங்காலமாக இருந்து வருகின்றது என்பதை எவராலும் மறுத்துக் கூறமுடியாது.

இது இவ்வாறிருக்க, முஸ்லீம்களின் ஆரம்ப வரலாறு தென்கிழக்கு என்பதை அறியக் கிடைக்கின்றது. இவ்வாறு முஸ்லீம்கள் தென்கிழக்கில் குடியிருப்புக்களைத் தோற்றுவிக்கக் காரணம் மட்டக்களப்பு வாவியும் கிட்டங்கி வாவியும் கிட்டங்கித்துறைமுகமும் என்பதை யாரும் மறுத்துக் கூற முடியாது. கிட்டங்கித் துறைமுகத்தில் இறங்கிய அரேபியர்கள் நாட்டின் நாலா பாகங்களுக்கும் சென்று தங்கள் வியாபாரத்தை மேற்கொள்வதற்குப் பொருத்தப்பாடாக அமைந்திருக்கின்றது. இப்படி இவற்றை நோக்கும்போது நெற்பிட்டிமுனையின் வரலாறு தொன்மையானது என நோக்க வேண்டியிருக்கின்றது. இந்தச் சிறிய ஊரின் பெருமை எழுத்தாளர்களாலும் வரலாற்றாளர்களாலும் மூடி மறைக்கப்பட்டிருக்கின்றது என்பதை அறியக் கிடைக்கின்றது.

நெற்பிட்டிமுனை என்னும் பிட்டி பல நூறு வருட காலங்களுக்கு முன் இருந்தாலும்கூட மக்கள் குடிவாழ்க்கை பிற்பட்ட காலங்களிலேதான் ஆரம்பமாகியிருக்கின்றது. குறைந்த சனத்தொகையைக் கொண்ட ஊராக இருந்தாலும் இலங்கையின் தென்கிழக்கு முஸ்லீம்கள் வரலாற்றிலே முதலிடம் பிடித்த ஊர் என்பதை எவராலும் மறுத்துக் கூற முடியாது.

இப்படி பெருமைவாய்ந்த இந்த ஊர் எடுப்பார் கைப்பிள்ளைகளாக இருப்பதையிட்டு கவலை கொள்கின்றேன். கற்றவர்கள் வெளியேறுவதும் அன்றாடத் தேவைகளுக்காக மற்றைய ஊரவர்களை நாடுவதும் தனித்துவம் பேணாதிருப்பதும் காரணம் என்று நினைக்கின்றேன்.

ஆகவே, நெற்பிட்டிமுனை என்னும் ஊர் தென்கிழக்கு ஊர்களிலே மிகப் பழைமையான ஊர் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது.

# வரலாற்றுப் பின்னணி

இலங்கை முஸ்லீம்கள் வரலாற்றில் தென்கிழக்கு முஸ்லீம்களின் வரலாறு சற்று வித்தியாசமாகக் காணப்படுகிறது. அதாவது மட்டக்களப்பில் இருந்து பொத்துவில் வரை வாழ்கின்ற முஸ்லீம்களைப் பொறுத்தவகையில் மொழி ரீதியாக, கலை கலாச்சார ரீதியாக, பாரம்பரிய வழிமுறைகள் விழுமியங்கள் ரீதியாக ஏனைய பிரதேச முஸ்லீம்களை விடவும் மறக்கமுடியாத பண்புகளுடனும், சிறப்புக்களுடனும் வாழ்திருக்கின்றார்கள் என்பதற்கு பல சான்றுகளைக் காணலாம். அவ்வகையில் மூன்று பக்கங்களும் ஆற்றுப்பகுதியைக் கொண்டு விளங்கும் நெற்பிட்டிமுனை முக்கிய இடத்தை வகிக்கின்றது.

கல்முனை மாநகர சபைக்கு மேற்குப்புறமாக ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்குள் அமையப்பெற்ற இவ்வூர் அதன் மேற்குப்புறத்தில் கிட்டங்கி வாவியையும் வடபுறமும் தென்புறமும் கிட்டங்கி ஆற்றின் இரு பகுதிகளை அதாவது சேற்றுக்குடா வடபக்கமும் கல்முனை வெளி தெற்குப்பக்கமும் கிழக்குப்பக்கம் கல்முனை மாநகர சபையை நிலத்தொடர்புடன் கொண்டு விளங்குவதோடு மேற்குப்பக்கமாக கிட்டங்கி வாவியும் அமைந்து காணப்படுகிறது.

இங்கு வாழ்கின்ற மக்கள் பல நூற்றாண்டுகளாக விவசாயிகளாகவும், பண்ணை மேய்ப்பாளர்களாகவும், மீன் பிடிப்பவர்களாகவும், காட்டிற்குச் சென்று கனிவகைகள் கொய்து வருபவர்களாகவும், விறகு வெட்டுபவர்களாகவும் இன்னும் பல சிறிய தொழில்களையும் கைத்தொழில்களையும் செய்து சம்பாதிக்கக் கூடியவர்களாகவிருந்தனர். பச்சைப் பசேலெனக் காட்சி தரும் பசும் தரையாக ஆற்றோரப்பகுதி விளங்குகிறது. பசும் தரையை அடுத்தாற்போல் ஆறும் அதற்கடுத்தாற்போல் பசும் தரையான வேளாண்மை செய்யும் பகுதியும் அதற்கடுத்தாற்போல் நாணற் புல்வெளியும் ஊருக்கு அழகு சேர்த்துக் கொண்டிருக்கிறது. மாலை நேரத்தில் புல்வெளியில் மறைந்து வாழும் பறவையினம் இனிய குரலெழுப்பி எங்கும் பரந்து உலாவருவது மாலைப்பொழுதை மேலும் மெருகுறச் செய்கிறது. பறந்து திரியும் புள் இனங்கள் மறைந்து

வாழ்வதற்கு ஏற்றாற்போல் இயற்கையாக அப்பிரதேசம் அமைந்திருப்பது இன்னும் எழில் சேர்க்கிறது.

வெள்ளைக்கொக்கும்
வெளிநாட்டுப் பறவைகளும்
கள்ளத்தனமாக - மீனை
கவர்ந்து பிடிக்கும் போது...
பொறிவைத்துப் பறவைகளை
பிடித்து விற்போரும்
வாங்குவோரும் - இங்கு
வாழ்கின்றனரே.

பன்புல் பிடிங்கி பாய் இழைத்து விற்று பசி நீக்கும் பெண்களும் இன்னும் வாழ்கின்றார்கள். அத்தோடு அத்தாங்கு பிடித்து கூனி என்னும் மீனினத்தை வடித்து காயவைத்து விற்றுப் பசி போக்குவோரும் இருந்திருக்கிறார்கள் என்றால் இந்த ஊரின் சிறப்புக்களை எடுத்துக்காட்டுகின்றது. இதற்கெல்லாம் இவர்களுடைய ஊரின் சூழலே காரணமாக அமைகின்றது. ஆற்றுப்படுக்கைக்கு அருகிலே வீடுகள் காணப்படுவதால் தொழிலுக்காகவும் பொழுதுபோக்கிற்காகவும் குளிப்பதற்காகவும் ஆடு மாடுகளை கழுவுவதற்காகவும் ஆற்றையும் ஆற்றுச் சூழலையும் பயன்படுத்தி இருக்கிறார்கள்.

மேலும் அவர்களுக்குச் சாதகமாக ஒட்டன்குளம், மான்குளம், வாலாட்டியன்குளம், பெரியகுளம், சிறுகுளம் மற்றும் சேற்றுக்குடாவும்



பாய் இழைக்கும் காட்சி

சூழவரக் காணப்பட்டதால் விவசாயச் செய்கைக்கு நீர் பாய்ச்சுவதற்கும் பண்ணை வளர்ப்புக்கும் மிக உகந்த சூழலாக அமையப் பெற்றிருந்தது.

கோடை காலங்களில் அறுவடைக்குப் பின்னர் குளக் கட்டோரங்களை சிறுவர்கள் விளையாட்டுத்திடலாகப் பயன்படுத்துவர். கிட்டிப்பொல்லு, மட்டப்பந்து, அடிச்சுப்பிடிச்சு, கட்டப்பந்து, நொண்டியடித்தல், வேடர்விளையாட்டு என்று பல்வகைப்பட்ட கிராமிய விளையாட்டுக்களையும் விளையாடுவர். பெரியவர்கள் குளத்தோர வம்மிமர நிழல்களில் கூடியிருந்து அரட்டை அடிப்பார்கள். மாலையானதும் மாடாடுகளை சாய்த்துக்கொண்டு வீடுகளுக்கு வருவார்கள்.

*பத்த வாயலில் பொழுதும்*
*பக்கிரிவாயில சோறும்*

என்பதற்கு அமைய இரவுநேரச் சமையல் முடிந்திருக்கும். மாடாடுகளுக்கு புகை வைத்துவிட்டு, மேல் கைகால்களைக் கழுவிக்கொண்டு வீட்டோடு வந்து உட்காந்து விடுவார்கள். சாப்பாடு தயாராகி விடும். உண்டு விட்டு உறங்குவார்கள்.

சிலர் இரவு நேரங்களில் நிலா முற்றத்தில் பாட்டி (வயதுபோன முதாட்டி) புராணக்கதைகள் சொல்ல அக்கம் பக்கத்தில் உள்ள சிறுவர்கள், பெரியவர்கள் கூடியிருந்து கேட்டுக் கொண்டிருப்பார்கள். சிலவேளைகளில் ஒருவர் நொடி (விடுகதை) சொல்ல மற்றையவர் விடை சொல்வதற்காக தலையை பிய்த்துக்கொண்டிருப்பார்கள். இன்னும் சிலவேளைகளில் கவிகள் பாடிக் கொண்டிருப்பார்கள். இவ்வாறு இரவுநேர, பகல்நேரப் பொழுதைப்போக்கி வந்தார்கள்.

அக்கால மக்களுக்கு இப்போது உள்ளது போல் கவலைகள், வேற்றுச்சிந்தனைகள் குறைவாக இருந்தன. சந்தோசமான வாழ்க்கை, நிம்மதியான தூக்கம் அவர்களோடு ஒட்டியிருந்தன. இரவு நேரங்களில் தண்ணீர் அள்ளுவதற்காக மண் முட்டிகள் கொண்டு ஊற்றுக்கிணறுகளுக்குப் போவார்கள். தண்ணீரைச் சேகரித்து தத்தமது அன்றாட தேவைகளுக்காவும் குடி நீருக்காகவும் பயன்படுத்துவார்கள்.

ஆரம்ப காலத்தில் பூவலை தண்ணீர் பெறுவதற்காகப் பயன்படுத்தினார்கள். மரத்தை துளைத்து பூவலுக்குள் வைத்து அம்மரப் பொந்தினுள் இருந்து குடிதண்ணீர் பெற்று வந்தார்கள். "மட்டக்களப்பார் மரத்துக்குள் இருந்து தண்ணீர் எடுக்கிறான்" என்பது



பூவலிலிருந்து நீர் பெறுவதற்காக குடங்களுடன் பெண்கள் காத்திருக்கும் காட்சி

வெள்ளைக்காரர்களின் வாய்ச் சொல்லாகும். "பூவல்"• என்பது "poor well" அதாவது ஏழைக்கிணறு அல்லது ஏழைகளின் கிணறு. இது ஆங்கில சொல்லின் திரிபாகும்.

• *பூவல் - மடு*

பின்னர் காலம் செல்லச்செல்ல ஆட்சிக்காரர்களால் ஒருசில பொதுக் கிணறுகள் கட்டிக்கொடுக்கப்பட்டன. அதில் ஒன்று மையவாடியின் அருகே உள்ள வீதியின் வட்டை ஓரமாக அமையப்பெற்ற அரச மரத்தடிக்கிணறு, சவக்காலைக்கிணறு தமது விளையாட்டு மைதானத்திற்கு அருகில் இருக்கும் பள்ளிவாயல் இருக்கின்ற இடத்தில் ஒரு கிணறு மௌலூத்துக்கிணறு இருந்தது. அதற்கு அடுத்தது அல் ஹாஜ் MSM. யூசுப் ஆசிரியர் (பூனைக்குட்டி) வளவுக்குள் ஒன்று. தற்பொழுதும் இருக்கிறது. மற்றையது அடிச்சாட்ட தோட்ட வளவிற்குள் தம்பிசாஹிபு போடியாரால் கட்டப்பட்ட கிணறு. தற்பொழுதும் உள்ளது. யாரும் பாவிப்பதில்லை. இவற்றுக்கெல்லாம் பிற்பட்ட காலத்தில் கிராம சபையால் கட்டப்பட்ட மர்ஹூம் பாறூக் பொலிஸ் சார்ஜன்ற் அவருடைய வளவுக்குள் உள்ளது. மற்றுமொன்று மர்ஹூம் சொக்கன் இலவை வட்டவிதானை வளவுக்குள் உள்ளது. இன்னும் நெற்பிட்டிமுனையில் கோயிலுக்கருகாமையில் ஒரு கிணறு உள்ளது. அதுவும் பழங்காலமிருந்து மக்கள் பாவனைக்காக இருந்து வந்துள்ளது. அடுத்து பூசாரியின் கிணறு, பள்ளிவாயல் கிணறு என்பன இவ்வூரில் உள்ள பழைய கிணறுகளாகும். இன்னுமொன்று ராஜ் சினிமா வீதியில் உள்ள அல்ஹாஜ் M. மலிக்கின் என்பவரின் மகளுடைய வீட்டிற்கும் திருமதி விந்தா யாக்கூப் உடைய வீட்டிற்கும் இடையில் இருந்தது. இவ்வாறான

கிணறுகள் தான் தமிழர்களும் முஸ்லீம்களும் பாவிப்பதற்கு பயன்படுத்தப்பட்டன எனக் கூறலாம்.

மேலும் கோடை காலங்களில் கிணறுகளில் ஊற்றுக்கள் வற்றுகின்ற வேளைகளில் பெண்கள் கூட்டம் கூட்டமாக பாண்டிருப்புக்கு மேட்டுவட்டை பாவன்காய் வழியூடாகச் சென்று மண்முட்டிகளில் குடிநீர் எடுத்து வருவார்கள். காலை, மாலைவேளைகளில் பெண்கள் அணியணியாக நீர் நிறைந்த குடத்துடன் வருவது பார்ப்பதற்கு மிக அழகாக இருக்கும். இளைஞர்களும் ஆண்களும் கட்டோரங்களில் பார்த்து இரசித்துக் கொண்டிருப்பார்கள்.


சிறுவர்கள் மாலை நேரத்தை பொதுவாக விளையாட்டிலேயே கழித்துவந்தார்கள். இப்போதைய சிறுவர்களைப்போல் மேலதிக நேர வகுப்பு, மாலைநேர வகுப்பு, மதரஸா வகுப்பு என்றெல்லாம் செல்வதில்லை. பாடசாலை விட்டுவந்தால் பின்னேர வேளைகளில் கட்டோரமாக விளையாடி வருவார்கள். தென்னை மரத்தின் பெருந்தலை, மட்டைவெட்டி வண்டில் போல் செய்து மட்டையால் மாடுகள் இரண்டு பூட்டி, மணல் ஏற்றி விளையாடுவார்கள். அவர்களுக்கு சற்று பெரியவர்கள் காட்டோரங்களில் நிற்கும் நாயுண்ணி செடியின் பூவையும் காயையும் உண்டு, வெற்றிலை சப்புகிறோம் என்று சிவப்பாக துப்பித்திரிவார்கள். சிலபிள்ளைகள் காய்ந்த நாடந்தண்டை அளவுக்கு முறித்து நெருப்பில் மூட்டி, சுருட்டுபோல் புகைப்பார்கள். காய்ந்த மரவள்ளி தடிக்குள் இருக்கும் உள்ளீடு சிகரட்போல் இருக்கும். அதில் ஈக்கிலால் ஓட்டை குத்தி நெருப்பில் மூட்டி சிகரட் புகைப்பதுபோல் புகைப்பார்கள். பெரியவர்கள் யாராவது அப்பக்கத்தால் வந்தால் காட்டுக்குள் ஓடி மறைந்து விடுவார்கள். பபில்கம், சுவிங்கியம் சப்புவார்கள். ஆலைமரத்தின் இலைக்காம்பை சப்பி ஆலைமரத்தில் கல்லால் அடிக்க பால்வரும் சப்பிய இலைத்தண்டுக்களை வாய்க்குள் இருந்து எடுத்து அந்தப்பாலில் ஒற்றி தொடர்ந்து சப்புவார்கள். தொடர்ந்து பாலில் ஒற்றுவார்கள். பின்னர் சப்புவார்கள். இப்படிச் சப்பும்போது அது சுவிங்கியம் போல் நீண்டு வரும். மற்றவர்களிடம் காட்டி நீட்டி மகிழ்வார்கள். மாரி காலங்களில் கனமான தகட்டை வாள்போல் வெட்டி, தீட்டி தண்ணீருக்குள் மீன் வெட்டுவதற்குச் செல்வார்கள். தூண்டில் கொண்டு மீன்பிடிப்பார்கள். கண்ணி வைத்து கானான், வயற்கோழி, கொக்கு, நாரை முதலிய பறவைகளைப் பிடிப்பார்கள். இவைகளெல்லாம் அக்காலச் சிறுவர்களின் விளையாட்டும் பொழுதுபோக்குகளுமாகும்.

## விவசாயச் செய்கை

'தை பிறந்தால் தரை வலிக்கும்' என்பார்கள். வெள்ள வடிவுக்குப்பின்னர் தை, மாசி மாதப் பகுதியிலே வயல்களில் விதைப்பதற்குத் தயாராகுவார்கள். கிடா மாடுகள்• கொண்டு வயல்களை மிதிக்கும்போது -

வாரிக் காளா வளைந்த கொம்பா
சார் கட்டிப் போடா
வாரிக்காளா சாயங்காலம்
புல்லுத்திங்களாம் ஒஹ்... ஒஹ்...

இப்படிப் பாடல்கள் பாடி மாடுகளை ஓட்டி வயலை மிதித்து சீர்செய்து விதைக்கின்றனர். இச் செயற்பாடு ஒரு வருடத்திற்குப் போதுமான உழைப்பாகும் என்பதால் மிகக் கவனமாக நெல் எறிந்து விதைப்பார்கள். கூலிக்குக் கூலியாட்கள் பிடிப்பதில்லை சகோதரர்கள், உறவினர்கள் ஒன்றுசேர்ந்து வேலைகளைக் கச்சிதமாகச் செய்து முடிப்பார்கள்.



• *கிடா மாடு – எருமை மாடுகளில் ஆண் மாடுகள*

இவ்வாறு செய்து பயிராக்கி நெற்பயிர்கள் குலை குலையாக நெற்கதிரை தள்ளும் காலம் வரும். அப்போது குருவிகள், கிளிகள் முதலான பறவைகள் கதிர்களைக் கொறித்துத் தின்பதைத் தடுப்பதற்காக குருவிக்காவல் பார்ப்பார்கள்.

சட்டித்தலைக் குருவி
தவிட்டு நிறக் குருவி
தக்க பழக் குருவி
சனியன் வெள்ளைக் குருவி
கெட்டித் தனமுரைக்கும்
கிளையில் குஞ்சுக் குருவி

கீழே நுழையும்
பறக்கேலா வரக்குருவி
குருவியைப் பாராய்
நெல்லுத்தின்னும் குருவியைப்
பாராய் ஹோய் ஹோய் ஹோய்...

நாலு அல்லது ஆறு கால்களைக்கொண்டு உயரமாக இரண்டு அல்லது மூன்று குறுக்குக் கம்புகளைக் கட்டி ஏறி அதன்மேல் தட்டி கட்டி கூரை அமைத்து கட்டுவது 'பறன்' என்று சொல்லப்படும். அந்த உயரமான பறனில் இரவு நேரங்களில் காவல் இருப்பது வழக்கம். (இது பன்றி, மாடு போன்ற பிற விலங்குகளால் நெற்கதிருக்கு தீங்கு ஏற்படாமல் காவல் காப்பதற்காக) இரவு நேரங்களில் தூக்கக் கலைப்புக்காக கவிகளைப் பாடுவார்கள். சிலவேளைகளில் அடுத்த பறனில் இருப்பவர்களுக்கு குத்துக்கவி பாடுவார்கள்.

இப்படி அறுவடைக்கு தயாரானபோது நெற்கதிர்களை அறுப்பதற்கு தாக்கத்தி கொண்டு அறுப்பார்கள். இவைகளை அறுப்பதற்கு 10, 15 பேர் தத்தியாகச் சேர்ந்து 'தத்தி' எனப்படுவார்கள். அதற்கு ஒரு தலைவர் இருப்பார். அவர் முகாமை என்று அழைக்கப்படுவார். அவருடைய கட்டளைப்படி அனைவரும் இயங்குவார்கள். வெட்டி உப்பட்டி உப்பட்டியாக (கற்றை) போட்டு ஒருநாள் அல்லது இருநாட்கள் காய்ந்த பின்பு கட்டாகக் கட்டி சூடு வைப்பார்கள். வைத்த சூடை சிலநாட்களுக்குப் பின்பு பிரித்து கிடாமாடுகள் கொண்டு மிதித்து நெல் வேறு, வைக்கோல் வேறாகப் பிரித்தெடுப்பார்கள்.

வாரிக்காலா
வளைந்த கொம்பா
வைக்கோலை தின்று
பொலி பொலி
அம்மா தாயே பொலி பொலி

என்று பாடிக்கொண்டே மாடுகளைச் சாய்த்து, மிதித்து பல மணி நேரங்களின் பின்பு வேலைக்காரன் தடி கொண்டு பிரித்தெடுப்பார்கள். குவியல் குவியலாக குவித்து, தூற்றி சாக்குகளில் கட்டுவார்கள். அக்காலங்களில் பூதங்கள் நெற்குவியல்களில் உள்ள நெல்லை அள்ளிச் சென்றுவிடும் என்ற நம்பிக்கை அக்கால மக்களிடம் காணப்பட்டது. அதற்காக நெற்குவியல்களை வளைத்து இரும்புச் சங்கிலி போட்டு, மந்திரம் சொல்லி காவல் பண்ணி பாதுகாப்புச் செய்வார்கள். சூடு மிதிக்குமிடம் 'களவெட்டி' என்று சொல்லப்படும். களவெட்டியில் உள்ள தட்டுமுட்டுச் சாமான்களை வித்தியாசமான பெயர் கொண்டு அழைப்பார்கள்.

- **பெருவாயன் (கடகம்)** - நாலு, ஐந்து மரைக்கால் நெல்லைக் கொள்ளக்கூடியது.
- **குஞ்சுவாயன் (கைப்பெட்டி)** - நெல்லை தூற்றுவதற்காக நெல் அள்ளும் உபகரணம்.

1960களுக்கு முன் நெல் அறுவடையின் பின்னர்
சூடு குவிக்கப்பட்டிருக்கும் காட்சி



- **கணக்கன் (மரைக்கால்)** - நெல் அளப்பதற்கு பயன்படுத்தப்படும்.
- **நெடுவாலன் (கயிறு)** - உப்பெட்டி கட்டுவது.
- **பட்டறை** - நெல்லை சேமித்து வைப்பது.
- **சிவப்பு** - நெருப்பு
- **அவரி** - நெல்லுத்தூற்றுவதற்காக மூன்று கால் கொண்டு அமைக்கப்படுவது, வைக்கோல் புரியிட்டு கட்டப்பட்டிருப்பது.
- **வேலைக்காரன் கம்பு** - சூடு பிரிப்பதற்காகவும், வைக்கோல் வாட்டுவதற்காகவும் பயன்படுத்தப்படுவது.

இப்படி களவெட்டியில் காவல் இருந்து 10, 15 நாட்களுக்குப் பின்னர், மாட்டு வண்டிகள் மூலம் வீட்டுக்குக் கொண்டு வருவார்கள். கொண்டுவந்த நெல்லை பட்டறையில் போட்டு மூடி வைப்பார்கள்; அல்லது வைக்கோலை புரியிட்டு சுற்றிச் சுற்றி பட்டறை போல் அமைத்து மூடிவைப்பார்கள். இப்படி ஒவ்வொரு வீட்டிலும் நெற்கள் குவிக்கப்பட்டிருக்கும். இதனால்தான் 'நெற்பிட்டிமுனை' என்ற பெயர் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தது எனக் கூறலாம். இன்று இப்பெயர் நற்பிட்டிமுனையாக திரிபடைந்துள்ளது.

பிற்பட்ட காலத்தில் குடும்பங்கள் அதிகரிக்க அதிகரிக்க மக்கள் தொகை அதிகரித்ததனால் வேளாண்மை பயிர்செய்கைக்கு நிலத்தேவை ஏற்பட்டது. காடுகள் வெட்டப்பட்டு காணிகள் உருவாக்கப்பட்டன. அந்த வகையில் சடயன்தலாவை மேற்கண்டம், நடுகண்டம், கிழக்கண்டம், வடநடுக்கண்டம், தென்நடுக்கண்டம், களிமடு போன்ற வயற்காணிகள் உருவாக்கப்பட்டு வேளாண்மை செய்யப்பட்டது. குறிப்பாக தமிழர்கள், முஸ்லீம்கள் என்று பாகுபாடின்றி நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. சிலர் தமிழர்களிடம் விலை கொடுத்து காணிகளை வாங்கிக்கொண்டனர்.

மேலும் சனப்பெருக்கம் அதிகரிக்க சடயந்தலாவை பகுதிக்கு அப்பால் சற்று தூரத்திலிருந்த பகுதிகளுக்குச் சென்று காடுகளை வெட்டி காணிகளை உருவாக்கினர். அந்தவகையில் சிங்களத்தி வட்டை, வீரக்கொடை, மாற்கண்டி பிரதேசங்களுக்கு மக்கள் சென்று வேளாண்மை செய்யத் தொடங்கினர். இவை தூரப்பிரதேசம் ஆனபடியால் வாடிகள் அமைத்து அங்கே குடியிருக்கலாயினர். வாடியின் மறுபெயர் 'புரை' என்று சொல்லப்படும். இது சிறுவீடு போல் அமையப்பெற்றிருக்கும். தற்பொழுது நாம் மாடிவீடு அமைப்பது போன்று அதாவது மாடி வீட்டுக்கு

நாம் கொங்கிறீற் அமைப்பது போன்று புரையை வெறும் கம்புகளைக் கொண்டு பரவி அதன்மேல் களிமண்ணைப் போட்டு பூசியிருப்பார்கள். அது பார்ப்பதற்கு குளிர்ச்சியாகவும், மிகவும் சுத்தமாகவும் இருக்கும். கீழ்த்தளத்தில் சமைப்பதற்குரிய வசதிகள் செய்யப்பட்டிருக்கும். கூரைக்கு கிடுகு, வைக்கோல், இலுக்குப்புல்லு கொண்டு அமைத்திருப்பார்கள். வாடியைச் சுற்றி புற்பூண்டுகள் இல்லாமல் துப்பரவாக இருக்கும். இது பாம்பு, தேள் போன்ற ஊர்வனவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காகவும், காட்டு மிருகங்களின் நடமாட்டத்தை அறிந்து கொள்வதற்காகவும் துப்பரவு செய்திருப்பார்கள்.

இரவு வேளைகளில் நெருப்பைப் பற்றவைத்திருப்பார்கள். இதனையே அவர்கள் வெளிச்சமான விளக்குகளுக்குப் பதிலாக பயன்படுத்திக்கொண்டிருந்தனர். அத்தோடு யானைத் தாக்கத்திலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கும், அது உதவியாக இருந்தது. சிலர் குடும்பமாகவும் வாழ்ந்துவந்தனர். பலர் ஆண்கள் மட்டும் வாழ்ந்து வந்தார்கள். வாரத்திற்கு ஒருமுறை அல்லது மாதத்திற்கு ஒருமுறை ஊருக்கு திரும்பிவந்து தேவையான உணவுப்பொருட்கள், தட்டுமுட்டுச் சாமான்களை வாங்கி உமலில் சேகரித்து காவுபோட்டு கால்நடையாகச் செல்வார்கள். காலையில் வெளிக்கிட்டு மாலையில் போய்ச்சேர்வார்கள். 'உமல்' என்பது பொருட்களை அதற்குள் வைத்து கம்பை தோளில் போட்டு கம்பின் இரு பக்கங்களும் உமலைக் கட்டித் தூக்குவார்கள். இதைக் 'காவு' என்று சொல்லப்படும். உமல் பன்புல்லால் இளைக்கப்பட்ட ஒரு பையாகும். இப்படி வேளாண்மை செய்கைக்காகவே இம்மக்கள் தமது வாழ்நாளை அர்ப்பணித்திருக்கிறார்கள்.

அதே போன்றுதான் மாடுகள் வளர்ப்போரும் காடுகளில் காலை அமைத்து மாடுகளை அடைத்து, மேய்த்து பராமரித்து வந்தார்கள். பால் கறந்து தயிராக்கி பாலாகவும், தயிராகவும் விற்பனை செய்து தமது ஜீவனோபாயத்தை நடத்திவந்தார்கள். இவர்களும் மேற்சொன்னவாறே வாடி அமைத்து வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.

அப்படி இருந்தபோதிலும் பெரும் போடிமார்களும் வாழ்ந்திருக்கிறார்கள். அந்தவகையில் (போடியார் என்பது பெரும் செல்வந்தரைக் குறிக்கும் சொல்) சுலைமாலெப்பை போடியார் 1870ம் ஆண்டுக் காலப்பகுதியில் வாழ்ந்தவர். இவருடைய பேரர்கள் MU. தம்பிசாஹிபுப்போடி (மூத்தபோடி), MU. சரிபுப்போடி, MU. முத்துப்போடியார் போன்றோர் 1900 ஆண்டுகளில் வாழ்ந்தவர்கள். மேலும் கனியன்போடி, அறவில்போடி போன்றோரை பின்னர் குறிப்பிட முடியும். சுதந்திரத்திற்குப்

பின்னர் அல்ஹாஜ் KLM. இப்றாகீம் முதலாளி, லெப்பைக்கனி முதலாளி. MM. இப்றாகீம் முதலாளி, சாஹிபு முதலாளி போன்றோரையும் கூறமுடியும். தற்பொழுது உள்ள ஒரேயொரு போடி சி. மீராலெப்பை போடியார் ஆவார். அவருக்கு வயது 95 ஆகும். இவர் தற்பொழுது உயிருடன் வாழ்கிறார்.

இது இவ்வாறிருக்க நெற்பிட்டிமுனை மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினை கஷ்டமாக இருந்த காலகட்டத்தில் விவசாயச்செய்கைக்கு போதியளவு நிலப்பரப்பு இல்லாதது பெரும் தடையாக இருந்தது. அக்காலகட்டத்தில் இலங்கையின் சுதந்திரத்திற்குப்பின் பிரதமராக இருந்த D.S சேனநாயக்கா அவர்களின் முயற்சியின் பயனாக கல்லோயா உதயமானது அபிவிருத்தித்திட்டமாகும். இது 1949ல் ஆரம்பமானது. கல்லோயா நதியை மறித்து அணைகட்டி சேனநாயக்கா சமுத்திரம் உருவாக்கப்பட்டது. இதன் நோக்கம் இப்பிரதேச வயல் நிலங்களுக்கான நீர்ப்பாசனத் திட்டத்தை உருவாக்குவதும், குடியிருப்புக்களை உருவாக்குவதும், மின் உற்பத்தியினை உருவாக்குவதுமாகும். இதன் அடிப்படையில் காடுகள் அழிக்கப்பட்டு காணிகளுக்கு வாய்க்கால்கள் மூலம் நீர் அனுப்பிவைக்கப்பட்டது. அத்தோடு வீடமைப்புகளும் உருவாக்கப்பட்டன. ஒன்று முதல் நாற்பது கொளணிகளை உருவாக்கி அதற்குரிய வசதிகளும் அமைக்கப்பட்டு மக்கள் குடியேற்றப்பட்டனர். அந்த வகையில் ஒருபாடல் இவ்விடத்திற்கு பொருத்தமானதென்று நினைக்கிறேன்.

## கல்லோயா திட்டம்

பஞ்சம் வருகுதென்றும் - சனங்கள்
பசியால் மெலிந்துரிகி
அஞ்சு வருசமதால்
இலங்கையை அளந்து கணக்கெடுத்தான்.

கணக்கைப் பிரித்தறிந்தான்
காண தென்று
கல்ஓயாவைப் பிடித்தான்
இணக்கப்படித்து வைத்தான்
குடும்பம் கொண்டு ஏற்றிவைத்தான் பாரும்

முன்னொரு தேனிருந்த - அந்த



கல்லோயாத் திட்ட
அங்குரார்ப்பணத்தின்போது
அன்றைய பிரதமர்
டி.எஸ். சேனநாயக்காவுடன்
எம்.எஸ். காரியப்பர் 1949ல்

முடிமன்ன ராசாக்கள்
தன்னரசாண்டிருந்த - அந்த
அசல்களை சாற்றுதல் தேவையடி

சோலை நகரழிக்க
சூத்திரம் கொண்டுவந்து
காலை போல வளைந்து - காட்டை
அழித்தாரடி பாரும்

காடு வெட்டும் மெசினும்
கரும் கல்லை சப்பித்துப்பும் மெசினும்
ஏற்றிழுக்கும் மெசினும் - கணக்கிட
என்னால் முடியுதில்லை
தந்தனத்தானானா தனதன தந்தனத்தானானா

❖ *பாடியவர்: பை. மீரார்*

அன்றைய ஆட்சியாளர்களின் முக்கிய குறிக்கோள் மக்களைக் குடியமர்த்தி தொழில்வாய்ப்பினை வழங்கி வறுமையை கட்டுப்படுத்துவதாகும். அவ்வடிப்படையில் குடியேற்றவாசிகளின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் மூன்று ஏக்கர் நீர்ப்பாசன வயற்காணி, இரு ஏக்கர் குடியிருப்பு நிலம், ஒருசோடி உழவுமாடு, இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட ஒரு கறவைப்பசு ஆகியவைகளும் வீட்டுத் தளபாடங்களும் வழங்கப்பட்டன. அவர்களுக்கான உறைவிடமாக 10'x10' சதுர பரப்பைக்கொண்ட மூன்று அறைகளையும், இரு வராந்தாக்களையும (Varandha) உள்ளடக்கியதாக இல்லமொன்றும் புறம்போக்கு நிலத்தில் கழிவறை (Lavatory) ஒன்றும் அமைத்துக் கொடுக்கப்பட்டது. அவர்களுக்குத் தேவையான நீரினை அருகில் உள்ள வாய்க்காலில் இருந்து பெறுவதற்கும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருந்தன. இவ்வாறு கொடுக்கப்பட்டபோது நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் எங்கள் ஊரிலிருந்து குடிபெயர்ந்து 4ம், 5ம் கொளணிகளில் குடியமர்த்தப்பட்டனர். 4ம் கொளணி முஸ்லீம் பிரிவில இருப்பவர்கள் எங்கள் ஊர் வழித்தோன்றல்களே என்பதை இளைஞர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இக்குடியேற்றத்திற்கு மூல காரணமாக இருந்தவர் கேற்முதலியார் MS. காரியப்பராவார். அந்தவகையில் முன் வரிசையில் சென்றவர்கள் நெற்பிட்டிமுனையைச் சேர்ந்த ஆதம்பாவா

(முடவர்), முத்தலிபாலெப்பை, அவின்தின்னியர்(பக்கீர் தம்பி), சின்னவர், அறுபதுப் பரிசாரியார் போன்றோரை குறிப்பிடலாம்.

இது இவ்வாறிருக்க வெள்ளைக்காரர்களின் அனுசரனையுடன் 'ஜவுளிக்கடை' எனும் சவளக்கடையில் ஒரு பாரிய அரிசிஆலை உருவாக்கப்பட்டது. இதில் நூற்றுக்கணக்கான தமிழ், முஸ்லீம் தொழிலாளர்கள் தொழிலில் ஈடுபட்டனர். இந்த அரிசிஆலை கிழக்காசியாவில் இரண்டாவது அரிசி ஆலையாக கூறப்பட்டது. இதில் குற்றப்படும் அரிசிகளெல்லாம் வள்ளங்களில் ஏற்றி கிட்டங்கி வாவி ஊடாக மட்டக்களப்புக் கடலுக்குச் சென்று கப்பல்கள் மூலம் ஏனைய நாடுகளுக்கும் கொழும்பு போன்ற நகருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுக் கொண்டிருந்தது. இது மட்டக்களப்பு பாலம் அமைப்பதற்கு முன்னர் இடம்பெற்ற நிகழ்வாகும். பாலம் அமைத்த பின்னர் தரைமார்க்கமாக அரிசி ஏற்றிச் செல்லப்பட்டது. மேற்சொன்ன அரிசி ஆலை தற்பொழுது நாவிதன்வெளி பிரதேச செயலகம் அமைக்கப்பட்டிருக்கும் இடத்தில் இருந்தது என்பதை எதிர்கால சந்ததியினர் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

அக்காலத்தில் கிட்டங்கி வாவியை ஊடறுத்து றோட்டுப் போடப்பட்டிருக்கவில்லை மக்களின் பயணமெல்லாம் 'பாதை' என்கிற பெரிய வள்ளத்தினையும் (எஞ்சின் பூட்டியது) தோணிகளையும் பயன்படுத்தினார்கள். 'பாதை' வருவதற்கு முன்னர் பிட்டி ஆற்றால் வண்டிகளில் பிரயாணித்திருக்கிறார்கள். வண்டி, தோணி இல்லாத சந்தர்ப்பங்களில் நீருக்குள்ளால் நடந்து வருவார்கள். மிகவும் சிரமப்பட்டு தொழில்செய்த எமது முன்னோர்களை நாம் கவலையோடு நோக்கவேண்டியிருக்கிறது. நாம் இப்பொழுது நினைத்த இடத்திற்கு நினைத்த வாகனங்களில் செல்கிறோம், தூரதேசத்தில் உள்ளவர்களோடு உடன் தொடர்புகொள்ள வசதிகள் இருக்கின்றது. ஆனால் எமது முன்னோர்களால் தூர இடங்களுக்குச் செய்தி அனுப்ப வேண்டுமென்றால் கால்நடையாகச் சென்று வருவார்கள் அல்லது மாட்டு வண்டியில் பயணிக்க வேண்டும். பிற்காலத்தில் கடிதங்கள் மூலம் தொடர்புகொள்ளப்பட்டது.

கிட்டங்கிப்பாதை அமைப்பதற்கு நெற்பிட்டிமுனை மக்கள் பலவகைப்பட்ட இன்னல்களை அனுபவித்தனர். அக்காலத்தில் இருந்த அமைச்சர்களோடு தொடர்புகளை ஏற்படுத்தி பல முயற்சிகளை மேற்கொண்டும் பயனற்றுப்போயின. சட்டசபையில் அங்கம் வகித்த தம்பிராசா M.P அவர்களையும் தொடர்பு கொண்டு விடயங்களை விளக்கினர். தம்பிராசா M.P பட்டிருப்புத் தொகுதியிலிருந்து சட்டசபைக்கு தெரிவானவர். அவருடைய வதிவிடம் நெற்பிட்டிமுனையாகும்.

பலவருடங்களாக இவ்வூரில் திருமணம் முடித்து வாழ்ந்து வந்தவர். அவராலும் முடியாது போக கல்முனைத்தொகுதி சட்டசபை உறுப்பினராக இருந்த ஜனாப் MC. அகமது அவர்களை அணுகி பிரச்சனைகளை எமதூர் பெரியவர்கள் எடுத்துக்கூறியபோது 'என்னுடைய வெற்றியைத் தீர்மானிக்கும் ஊராகிய நெற்பிட்டிமுனை மக்களுக்காக அவற்றைச் செய்து தருகிறேன்' எனக்கூறியதோடு மட்டுமல்லாமல் உடன் காரியத்தில் இறங்கினார்கள். அவர் அமைச்சர்களை சந்தித்து விடயத்தை விளக்கி பெருமனதோடு அப்பாரிய கைங்கரியத்தை செய்தார். இந்நிகழ்வு 1975ம் ஆண்டு நிறைவு பெற்றது. அதன் காரணமாக நீண்டகரை விவசாயச்செய்கை, கொளணித்திட்டத் தொடர்புகள், மேற்கண்டம், நடுக்கண்டம், கிழக்கண்டம் போன்ற வயல்வெளிச் செய்கைகள் உக்கிரமடையத் தொடங்கின. மேலும் அம்பாறை, மண்டூர், நாவிதன்வெளி தொடர்புகள் இலகுவாக்கப்பட்டன. இதற்கு காரணமாகவிருந்த பாராளுமன்ற உறுப்பினர் மர்ஹூம் அல்ஹாஜ் MC. அஹமது அவர்களை மறக்கமுடியாது என்பதை பாமரமக்கள் அடிக்கடி பேசிக்கொள்வார்கள்.

திராவிடர்களின் குடியேற்றத்தினால் தமிழர்கள் குடியேறி இருக்கலாம் என நம்பப்படுகிறது. அவர்கள் நீண்டகாலமாக இங்கு வாழ்ந்ததாக சரித்திரங்கள் கூறுகின்றன. இவர்களும் விவசாயச் செய்கைக்காகவும், பண்ணை வளர்ப்புக்காகவும் இவ்வூரை பயன்படுத்தியிருக்கிறார்கள். திடல் நிலங்களைத் தேடிச்சென்று சேனைப்பயிர்ச்செய்கை, காலைசெய்தல் என்பனவற்றை செய்து வந்திருக்கிறார்கள். காலை செய்தல் என்பது காடுகளை வெட்டி துப்புரவு செய்து புகையிலை, கத்தரி, பயிற்றை, மரவள்ளி போன்ற பயிர்கள் செய்வதாகும். இது சேனைப்பயிர்ச்செய்கையிலிருந்து சற்று முன்னேற்றம் கண்டது. காலை செய்யும்போது "தோப்பை" கட்டி நீர் பாய்ச்சுவார்கள். பெரிய பூவல் அல்லது வாய்க்கால் அல்லது குளம் போன்றவற்றுக்கு அருகில் வாய்க்கால் போல் கட்டி அதில் நீரை அள்ளி ஊற்றுவார்கள். நீர் வாய்க்கால் வழியாக ஓடிச் சென்று பயிர்களுக்குப் பாயும்.

அத்தோடு இந்த நெற்பிட்டிமுனையின் அருகில் கரையோரப்பகுதியில் தமிழர்கள் குடியிருக்கிறார்கள். திடல் காணிகளில் பயிர் வகைகளை பயிரிடுவது இவர்களின் பிரதான தொழிலாகும். அதற்காக காடுகளை வெட்டி சேனைப்பயிர் செய்வது வழக்கமாகும். அந்தவகையில் மரவள்ளி, கச்சான (நிலக்கடலை), சோளம், இறுங்கு, மிளகாய், கத்தரி, வெண்டி, புடோல், பீக்கு, சுரை, நாடை, பாகற்கொடி போன்றவையும் இன்னும் பலவற்றையும் சேனைப்பயிர்ச்செய்கையாக செய்கை பண்ணுவார்கள். இதனால் நெற்பிட்டிமுனையின் மேற்கே

சேனைப்பயிர்ச்செய்கை பண்ணியதால் சேனைக்குடியிருப்பு என்ற பெயர் வழங்கலாற்று. இப்படியாக தமிழ் மக்களும் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். பிட்டும் தேங்காய்ப் பூவும் போல் ஒட்டி இருந்திருக்கிறார்கள். இதற்கு பல சான்றுகளைக் கூறமுடியும். உதாரணமாக தமிழர்களுடைய திருவிழாக்களில் முஸ்லீம்கள் பங்கேற்பது, முஸ்லீம்களுடைய நிகழ்வுகளில் தமிழர்கள் பங்கேற்பதும், சகஜமாக பழகுவதும், முஸ்லீம் பெரியார்களைக் கண்டால் தமிழ்ச் சகோதரர்கள் தங்கள் தோளில் கிடக்கும் சால்வையை கமுக்கட்டில் எடுத்துவைத்து குனிந்து செல்வது, மாமன் மச்சான் முறையோடு பழகுவது, தங்கராஜா, தம்பிராஜா, றாஜு, றாஜுமதி, ராஜன், ராணி போன்ற பெயர்களை முஸ்லீம்களும், தமிழர்களும் இப்பொழுதும் வைத்திருப்பதைக்கூட நாம் அறிந்திருக்கிறோம்.

மேலும் அம்மாநாச்சிகுடி, உலவிப்போடிகுடி, மூத்தநாட்சிக்குடி, இளையநாட்சிக்குடி போன்ற வழிமுறைகளில்கூட முஸ்லீம்களும், தமிழர்களும் ஒருமித்திருந்தார்கள். நெற்பிட்டிமுனையில் 1910ம் ஆண்டுக் காலப்பகுதியில் உருவாக்கப்பட்ட பாடசாலை தற்பொழுது கமு/அல் அக்ஸா ம.வி, கமு/சிவசக்தி ம.வி ஆகிய இரண்டும் ஒன்றாகவே இருந்திருக்கின்றன. தமிழ், முஸ்லீம் கலவன் பாடசாலை என்னும் பெயரில் 1957ம் ஆண்டுவரை ஒரே கிணற்றுநீர் பருகி கற்ற வரலாறு இன்னும் நினைவிருக்கிறது. 1957க்குப் பின்னர்தான் கமு/அல் அக்ஸா ம.வி மாகவும், கமு/சிவசக்தி வித்தியாலயமாகவும் பிரிந்துள்ளது. இதன் ஆரம்பகால அதிபர் ஒரு தமிழராகவே இருந்திருக்கிறார். இவைகள் தமிழர், முஸ்லீம்கள் ஒற்றுமையின் உச்சகட்டத்தில் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

ஒரு வன்னியரின்கீழ் முஸ்லீம்கள், தமிழர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். அவ்வன்னியர் தமிழராகவும், முஸ்லீமாகவும் இருந்திருக்கின்றனர், வன்னியர் என்பவர் வெள்ளைக்காரருடைய ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் பிரதேச ரீதியாக நிதி அறவீடு செய்து அரசுக்கு கொடுக்கக் கூடியவர்களாகவும், பொதுமக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பவர்களாகவும், பொதுமக்களுக்கு பாதுகாப்பாகவும் இருந்திருக்கிறார்கள். அந்தவகையில் கேற்முதலியார் MS. காரியப்பர், சத்துருக்கப்போடி, சின்னத்தம்பிப்போடி வன்னிமை ஆகியோரைக் கூறமுடியும்.

## மக்கள் குடியேற்றத்திற்கு முன்னர்

இவ்வூரவர் குடியேற்றம் முந்நூறு ஆண்டுகளுக்குள் இருந்த போதிலும் அதற்கு முன்பிருந்தே பிரபல்யம் பெற்றிருந்தது. இலங்கைக்கு போர்த்துக்கேயர் வருவதற்குமுன் அரேபியர்கள் வருகைதரத் தொடங்கிவிட்டனர். அவர்களின் வருகைக்குச் சான்றாக நெற்பிட்டிமுனை மேற்கே அமைந்துள்ள கிட்டங்கிவீட்டை கூறமுடியும். அவ்வீட்டில் மட்டக்களப்பு வாவி ஊடாக கிட்டங்கிவீட்டை அரேபியரின் கப்பல்கள் பண்டூர் (மண்டூர்) இலும், கிட்டங்கிக்கு அருகாமையிலும், செம்மண்துறை என அழைக்கப்பட்ட சம்மாந்துறையிலும் கட்டப்பட்டதாகவும் இப்பகுதிகளில் இருந்து நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று வியாபாரப் பொருட்களைக் கொண்டுவந்து கிட்டங்கி வீட்டிலே சேமித்து வைத்ததாகவும் கூறப்படுகிறது. குதிரை வண்டிகளில் பலதூர இடங்களிலிருந்து கொப்புறா, வாசனைத் திரவியங்கள், நெய் (நெய் என்பது கால்நடைகளிலிருந்து பெறப்படும் பாலிலிருந்து பெறப்படுவது. இவ்வாறு நெய் உற்பத்தி செய்யப்பட்டதால் நெய்பிட்டிமுனை என்று அழைக்கலாயினர் என்றும் சிலர் கூறுகின்றனர்) முதலானவற்றை சேகரித்து வைப்பதற்காகவும், நெற்பிட்டிமுனை ஊடாக கிட்டங்கியை அடைவதற்காகவும், நெற்பிட்டிமுனையிலே அமையப்பெற்ற பாவாப்பிள்ளை ஸியாரத்தை தரிசிப்பதற்காகவும் இவ்வூரைப் பயன்படுத்தி இருக்கின்றனர். இவைகளின் காரணமாக இவ்வூர் பிரபல்யம் பெற்றிருந்தது.

பிறகு இவர்கள் பண்டூரில் தங்கள் குடியிருப்புக்களை அமைக்கத் தொடங்கினர். கடல்காற்று சாதகமாக வீசும் காலங்களில் வியாபாரப் பொருட்களுடன் அரேபியா நோக்கி பயணிக்கத் தொடங்குவார்கள். மண்டூர் பிரபல்யம் பெற தொடங்கிய காலத்திலிருந்தே தற்பொழுது சவளக்கடை என அழைக்கப்படும் ஊரானது அரேபிய தேசத்து ஆடை வகைகள் விற்பனை செய்யப்படும் இடமாக இருந்ததால் அக்காலத்தில் சவளக்கடை 'ஜவுளிக்கடை' என அழைக்கப்பட்டது. தற்பொழுது ஜவுளிக்கடை திரிபடைந்து சவளக்கடையாக மாறியிருக்கிறது. பிரபல்யம் அடைந்திருந்த ஜவுளிக்கடை பிரதேசத்தில் வெள்ளைக்காரருடைய ஆட்சிக்காலத்தில் கல்லோயாத்திட்டம்

உருவாக்கப்பட்டபோது கிழக்காசியாவிலே மிகப்பெரிய அரிசிஆலை (Rice Mill) கட்டப்பட்டிருந்ததை நமதுகால முதியவர்கள் கூறுகின்றார்கள்.

மண்டூரில் தங்குமிடங்களை அமைத்துக் கொண்டிருந்த அரேபியர்கள் பின்னர் செம்மண்துறையை நோக்கி நகரத் தொடங்கினர். அங்கு கப்பல்கள் கட்டப்பட்டு குடிநீர் போன்றவற்றை நிரப்புவதற்கு கிணறுகளை அமைத்து அவ்வூரைப் பயன்படுத்திக் கொண்டனர். செம்மண்துறைக்கு அருகில் இருக்கும் வீரமுனைப் பிரதேசத்தில் இன்னும் அவர்கள் பயன்படுத்திய பாரிய கிணறுகள் இருப்பதாக சொல்லப்படுகிறது.

மக்கள் வாழ்விடங்களை மாற்றி புதிய இடங்களுக்கு குடியேறுவதென்பது தொழிலுக்காகவும், எதிரிகளுடைய தாக்கத்திற்கு ஈடுகொடுக்க முடியாமையினாலும், மன்னர்களால் நாடு கடத்தப்படுவதனாலும் இப்படி பலவகைப்பட்ட காரணங்களினால் குடியிருப்புக்களும், ஊர்களும் உருவாகத் தொடங்கி இருக்கிறது.

பின்னர் போர்த்துக்கேயர் வருகை, அதனைத் தொடர்ந்து ஒல்லாந்தர் வருகை அதன் பின்னர் அரேபியர்களின் வருகையைத் தடை செய்யும் பொருட்டு கோட்டைகள் அமைக்கப்பட்டு பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டன. ஆங்கிலேயரின் வருகையின் பின்னர் பாலங்கள், பாதைகள் அமைக்கபட்டமையால் கிட்டங்கி வீட்டின் தேவை குறைவடையத் தொடங்கியது. எது எவ்வாறிருந்த போதிலும் நெற்பிட்டிமுனையின் வரலாறு சம்பந்தமாக நோக்கும்போது ஆரம்பகாலம் முதல் அதாவது 1000 வருடங்களுக்கு முன்பிருந்தே இவ்வூர் பிரபல்யப்பட்டிருக்கிறது. ஆகவே தற்பொழுது பிரபல்யம் பெற்றிருக்கும் பெரிய ஊர்களைவிட தென்கிழக்குப் பிரதேசத்தில் நெற்பிட்டிமுனை பெயர் பெற்று இருந்திருக்கிறது.

அத்தோடு நெற்பிட்டிமுனை மக்களின் பாரம்பரிய காணிகளாகவிருந்த சடயன்தலாவையில் நடுக்கண்டம் எனப்படும் பூமி நெற்பிட்டிமுனை மக்களின் பாரம்பரிய பூமியாக இருந்தது. அந்த வயல் பிரதேசத்தின் ஒரு பகுதியில் பாவாப்பிள்ளை - குருந்தையடிவாப்பா ஸியாரம் ஒன்று அமைந்திருந்தது. அந்த ஸியாரத்தை இவ்வூர் மக்கள் சென்று தரிசித்து வந்தனர். தற்பொழுதும் அது இருக்கிறது. அதன் பராமரிப்பை இவ்வூர் மக்களே இன்றுவரையும் செய்து வருகின்றனர். அதன் திறப்பு முத்தலிப் வட்டவிதானையாரிடம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. தற்பொழுது கல்முனைக்குடியைச் சேர்ந்தோர் வருடாந்தம் கந்தூரி கொடுத்து விழாவாகக் கொண்டாடி வருகின்றனர்.

## மக்கள் குடியேற்றம்

பாவாப்பிள்ளை ஸியாரம் ஒன்று இருந்தது. அது நமதுர் மையவாடிக்கும், சீதளையான் கோயிலுக்கும் அருகாமையில் வயல் வட்டை ஓரமாக அமையப்பெற்றிருந்தது. அதற்கு அருகில் அமையப் பெற்ற திடல் காணியில் அம்மனாச்சியார்குடி, உலவிப்போடிகுடி, ஆராய்ச்சியார்குடி, சங்கரபத்தான்குடி, ஆதம்பட்டாணிகுடி, சின்னகதிரன் குடி போன்ற குடிகளில் சீக்கியாவத்தையில் இருந்து வந்த சின்னசாறா உம்மாவும், கூவாக்கா மரைக்காரும் முதலில் ஆத்திமேட்டில் (மருதமுனை வட்டைப்பக்கம்) குடியிருந்ததாகவும், அவர்களுக்கு ஆறு பெண்குழந்தைகள் பிறந்ததாகவும், அந்த ஆறு பெண்களையும் சாய்ந்தமருதூரிலிருந்து வந்த ஆறு ஆண்கள் திருமணம் முடித்ததாகவும், அவர்களுடைய சந்ததிகளே மேற்சொன்ன குடிகளாக பிரிந்ததாகவும், பின்னர் மேற்சொன்ன பாவாப்பிள்ளை ஸியாரம் வசிப்பதற்கு பொருத்தமில்லை எனக்கருதி முகையதீன் ஜும்ஆபள்ளி வாயலுக்கு அருகாமையில் குடியேறியதாகவும், அங்கிருந்த சந்ததிகள் ஊரின் மறு இடங்களுக்குச் சென்றதாகவும், அதனைத் தொடர்ந்து மன்னார்தீவு, முருங்கைதீவு போன்ற இடங்களில் இருந்து சிலர் வந்து குடியேறியதாகவும் வரலாறுக்களில் இருந்து அறியக்கூடியதாக இருக்கிறது.

மேலும், அக்காலத்தில் ஏற்பட்ட இனக்கலவரத்தினால் பெரும்பான்மை சமூகத்தின் நெருக்குதலினால் தென்கிழக்குப் பிரதேசத்திற்கு முஸ்லீம்கள் குடியேறத் தொடங்கினர். அரேபியாவின் அலி இப்னு அபூதாலிப் அவர்களின் ஆட்சிக்காலத்திற்குப் பின்னர் கி.பி. 661ல் உமையா வம்சத்தை சேர்ந்த முஆவியா (ரலி) என்பவர் இஸ்லாமிய ஆட்சியை பலவந்தமாகப் பறித்துக்கொண்டதன் காரணமாக உமையாக்கள் ஆட்சி தொடர்ந்தது. இது கி.பி. 750 வரை நீடித்திருந்தது. அவ்வேளை கி.பி. 661.10.10 நபி (ஸல்) அவர்களின் பேரன் ஹுசைன் (ரலி) அவர்களும், அவர்களது குடும்பத்தினரும் உமையாப் படையினரால் கொலை செய்யப்பட்டதும், நபி (ஸல்) அவர்களின் கிளையான பனூஹாஷிமீகளுக்கும், உமையாக்களுக்கும் இடையிலான

பகைமை மேலும் உக்கிரமடைந்ததால் அவர்களின் தொல்லைகளுக்குத் தாக்குபிடிக்காத முஸ்லீம்களின் ஒரு பகுதியினர் ஜாவா, மலாயா, சுமத்திரா முதலான துார கிழக்கு நாடுகளில் குடியேறி வாழத்தொடங்கினர்.

கொத்தாந்தீவுப் பிரதேசத்தில் முக்குலத்தவர்(முக்குவர்) வாழ்ந்தார்கள். அவர்களுக்கும், பக்கத்து பிரதேச தலைவன் மாணிக்கம் என்பவருக்கும் இடையில் ஏற்பட்ட சண்டையில் புத்தள கடலில் நங்கூரம் இட்டிருந்த முஸ்லீம்கள் முக்குலத்தாருக்கு போரில் உதவிசெய்து வெற்றி ஈட்டிக்கொடுத்ததோடு மாணிக்கம் என்பவனை சிறைபிடித்து கொலை செய்தனர். அதனால் நட்புக் கொண்ட முக்குலத்தவர் அரபிகளோடும், முஸ்லீம்களோடும் அன்பாக பழகியதாலும் முஸ்லீம்களோடு கொண்ட விருப்பத்தாலும் பல முக்குலத்தவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டனர். அத்தோடு முக்குலப் பெண்களை அரேபியரும், பட்டாணியரும் திருமணம் முடித்து வாழத்தொடங்கினர். அதனைத்தொடர்ந்து அங்கு வாழ்ந்த தென்னிந்தியாவைச்சேர்ந்த திராவிடர்களின் பரம்பரையைச் சேர்ந்தவர்களிடமிருந்தே குடிமரவுமுறை பரவலாயிற்று. இதன் காரணமாக தமிழ் மக்களுக்குள் சண்டைகள் ஏற்படும்போது பட்டாணியருக்கு 'பெண் கொடுத்த கூட்டம்' என்று வசை பேசுவது இன்னும் இருக்கிறது.

மேற்சொன்னது அவ்வாறிருக்க புத்தள பிரதேசத்தில் முஸ்லீம்கள் குடியேறுவதற்குமுன் தென்கிழக்கில் முஸ்லீம்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத் அவர்களின் 'தென்கிழக்கு முஸ்லீம்களின் பூர்வீக வரலாறு' எனும் நூல் குறிப்பிடுகின்றது. கிறிஸ்துவுக்கு முன்பிருந்தே தென்கிழக்கு பிரதேசமான மண்டூரில் குடியேறியிருக்கிறார்கள். பின்னர் செம்மண்துறை, வீரமுனை போன்ற இடங்களுக்கு குடியேறி பிறகு சாய்ந்தமருதுாரில் குடியேறினார்கள். அது கடற்கரை பிரதேசமாக இருந்தபடியால் அவ்வூரில் வசிக்கத் தொடங்கினர்.

அதேபோன்று தற்போதைய சவளக்கடை அக்காலத்தில் ஜவுளிக்கடை என அழைக்கப்பட்டது. அதாவது சவளக்கடையில் புடவை, சீலை வியாபாரம் நடைபெற்றிருக்கிறது. மேலும் நெற்பிட்டிமுனைக்கு மேற்கே கிட்டங்கிவீடு அமைக்கப்பட்டு பொருட்கள் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. கிட்டங்கி என்பது பொருட்களை தேக்கிவைக்கும் இடமாகும். இங்கு வியாபாரப் பொருட்கள் தேக்கப்பட்டு வள்ளம் போன்ற கப்பல்களில் ஏற்றி கிட்டங்கிவாவி ஊடாக மட்டக்களப்பை அடைந்து வங்களா விரிகுடா கடலின் ஊடாக மத்தியகிழக்கு நாடுகளுக்கு சென்று

வியாபாரம் செய்யப்பட்டிருக்கிறது என்றால் நெற்பிட்டிமுனையின் வரலாறு நீண்டகாலத்திற்கு முன்பிருந்தே ஆரம்பமாகி இருக்கிறது என்பதை இங்கு அவதானத்தோடு நோக்க வேண்டியிருக்கிறது.

கி.பி. 8ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த தென்கிழக்கு வாழ் முஸ்லீம்கள் தங்களுடைய மூதாதையர்களை சந்திப்பதற்காகவும், அரேபிய தீபகற்பகத்தில் இஸ்லாம் மார்க்கத்தின் தோற்றத்தினாலும், இஸ்லாத்தை தழுவவேண்டும் என்ற நோக்கோடும் ஒரு குழுவினர் மதீனாவுக்குப் புறப்பட்டுச் சென்றனர். இவ்வாறு சென்ற குழுவினர் முகம்மது நபி (ஸல்) அவர்களை சந்திக்கவில்லை. அவர்கள் வபாத்தாகி விட்டார்கள். அபூபக்கர் (ரலி) அவர்களும் வபாத்தாகி விட்டார்கள். உமர் இப்னு கத்தாப் (ரலி) அவர்களின் ஆட்சிக்காலமாகவிருந்தது. அவர்களிடம் விடயத்தைக்கூறி இஸ்லாத்தை ஏற்றதோடு அங்கிருந்து மார்க்க அறிஞர்கள் சிலரையும் அழைத்துக்கொண்டு இலங்கை நோக்கிப் புறப்பட்டார்கள். வழியில் பாகிஸ்தானில் "மக்றூன்" என்ற இடத்தில் இக்குழுவுக்கு தலைமைதாங்கி வந்தவர் வபாத்தாகிவிட்டார். இவருடைய அடக்கஸ்தலம் "மக்றூன்" என்ற இடத்தில் இருப்பதாக புகழ்வாய்ந்த அரேபிய எழுத்தாளரும் சரித்திர ஆசிரியருமான "இபின் சஹ்ரியார்", அஜாப் அல்-ஹிந்து எனும் நூலில் கி.பி. 953ல் கூறியுள்ளார்.

இப்படி அழைத்துவரப்பட்ட குழுவினர் "ஒஸ்தாதுகள்" என அழைக்கப்பட்டனர். இவர்கள் முகம்மது நபி (ஸல்) அவர்களுக்கு தலைமுடி வெட்டியவர்கள். இவர்கள் அபிசீனியரின் பரம்பரையினராவர். இவர்களின் பரம்பரையினரே இன்றும் தலைமுடி வெட்டுவது, சுன்னத்து செய்வது போன்ற தொழிலில் ஈடுபடுகின்றனர். கி.பி. 114-136 ஆட்சி செய்த கஜபாகு மன்னனில் அன்பு கொண்ட முக்குவர், பட்டாணியர் கல்முனை காரைதீவுப் பிரதேசத்தை கஜபாகுபற்று என அழைக்கலாயினர். அதனைத்தொடர்ந்து சம்மாந்துறைப்பற்று, நிந்தவூர்பற்று, கஜபாகுபற்று என பிரிக்கப்பட்டன. அந்த கஜபாகுபற்றே இன்றைய கரவாகுப்பற்று எனச்சொல்லப்படுகிறது.

இந்த கஜபாகு மன்னனின் ஆட்சியை இலகுபடுத்துவதற்காக இந்தியாவிலிருந்து இலங்கையின் வன்னிப்பகுதிக்கு குடியேறியவர்களே வன்னியர்கள் என அழைக்கப்படுகின்றனர். இவர்களே பிற்காலத்தில் வன்னியர்கள் அதாவது பிரதேச நிர்வாகம் செய்ய நியமிக்கப்பட்டவர்கள். முதலில் மட்டக்களப்பில் வன்னியர்கள் நியமிக்கப்பட்டனர். பிற்காலத்தில் இந்தியாவில் கஜனிமுகம்மதுவின் படையெடுப்புக்கு அஞ்சி சில திராவிடக்

குடும்பங்கள் தென்கிழக்கில் வந்து குடியேறினர். இது கி.பி. 1017-1029 வரையுள்ள காலமாகும்.

பின்னர் திராவிடர்களுக்கும், திமிலர்களுக்கும் ஏற்பட்ட சண்டையில் மத்தியகிழக்கு வாசிகள் திராவிடர்களுக்கு உதவியதன் காரணமாக திமிலர்கள் தோல்விகண்டனர். இதில் திருப்தியுற்ற திராவிடர்கள் கைங்கரியமாக மத்தியகிழக்குவாசிகளின் ஏழு கப்பற் தலைவர்களுக்கும் ஏழு குடிப்பெண்களை திருமணம் முடித்துக் கொடுத்தனர். இவர்கள் சாய்ந்தமருதூரில் குடியமர்த்தப்பட்டனர். அவர்களுக்கு பணிசெய்ய பள்ளன், பறயன், தட்டான், வண்ணான், நாசிவன், நளவன், குயவன் போன்ற பதினெட்டுச் சாதியையும் இவர்களின் பக்கத்தில் குடியேற்றினர்.

இந்த ஏழு கப்பற் தலைவர்களுக்கும் பிறந்த பிள்ளைகளின் பரம்பரையினரில் இருந்து குடிகள் உருவாகத் தொடங்கின. முதலாவது பெண் மூத்த நாச்சிக்கும், அரேபிய கப்பல் தலைவனுக்கு பிறந்த பிள்ளை மூத்த நாச்சிகுடி எனவும், இரண்டாவது பெண்ணுக்குப் பிறந்த பிள்ளை இளைய நாச்சிகுடி எனவும், மூன்றாவது பெண்ணுக்குப் பிறந்ந பிள்ளைகள் அம்மா நாச்சிகுடி என்றும், நான்காவது பொன்னாச்சிக்குடி என்றும், ஐந்தாவது வரிசை நாச்சிகுடி என்றும், ஆறாவது முகாந்திர நாச்சிகுடி என்றும் ஏழாவது மாலைகட்டும்குடி எனவும் அழைக்கப்படுகிறது. இதனை "மட்டக்களப்பு மாண்மியம்" கூறுகிறது.

## போக்குவரத்தும் நெற்பிட்டிமுனையும்

இரவுச்சாப்பாட்டின் பின் இரட்டை மாட்டுவண்டில்க் கூட்டு வண்டில் நெற்பிட்டிமுனையிலிருந்து புறப்படும். வண்டிலில் வைக்கோல் பரப்பி மெத்தை போன்றிருக்கும்

அதன் மேல் பாய் விரிக்கப்பட்டிருக்கும். புறப்பட்டு சிறிது நேரத்தில் வண்டில்காரன் உட்பட அனைவரும் உறங்கி விடுவர். மாடுகள் தன் பாட்டுக்கு நடந்து கொண்டிருக்கும்.

வண்டிலின்கீழ் தாங்கும் அரிக்கன் லாம்பு மங்கலான வெளிச்சத்தைப் பரப்பும். பட்டிருப்புத் தோட்டத்தடியில் மாடுகளை சிறிது நேரம் இளைப்பாறச் செய்துவிட்டு, மீண்டும் பயணத்தைத் தொடர்ந்து விடியற்காலையில் கல்லடித்துறையை அடைவர்.

அப்போது கல்லடிப் பாலம் கிடையாது. அது, 1930ம் ஆண்டு கட்டப்பட்டது. காலைக் கடன்களை முடித்து அவ்விடத்திலேயே சாப்பிட்டுவிட்டு மாட்டு வண்டிலை அங்கே கட்டிவிட்டு, தோணி மூலம் வாவியைக் கடந்து புளியந்தீவுக் கோட்டையில் இறங்குவர். ஒல்லாந்தரினால் கட்டப்பட்ட கோட்டையிலேயே கச்சேரியும் ஏனைய அலுவலகங்களும் அமைந்திருந்தன. சக்சேரி அலுவல்களை முடித்துக் கொண்டு பிற்பகலில் மீண்டும் தோணி மூலம் இப்பால் வருவர். வண்டிக்காரன் அங்கேயே மீன் வாங்கி பயணத்தின்போது எடுத்துச் சென்றிருந்த சமையல் பொருட்களைக் கொண்டு சோறு, கறி சமைத்து வைத்திருப்பான்.

சாப்பிட்டுவிட்டு மீள் பயணத்தை ஆரம்பித்து அடுத்தநாள் அதிகாலை ஊரை அடைவர் என அக்கால பயணம் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது.

இதேகாலகட்டத்தில் கல்முனைக்கும் மட்டக்களப்புக்குமான பிரதான போக்குவரத்துப் பாதையாக மட்டக்களப்பு வாவி விளங்கியது. நெற்பிடடிமுனை மக்கள் பிரயாணங்கள் மேற்கொள்ளும்போது தரை வழிப்பாதையை மேற்படி மேற்கொண்டு வந்தார்கள்.

நீர்வழிப் பாதையை பயன்படுத்தும்போது கிட்டங்கி வாவியிலிருந்து பாதை (வள்ளம்) மூலம் மட்டக்களப்புக்குச் செல்வர். அலுவல்களை முடித்துவிட்டு அதே வள்ளத்தில் திரும்புவர்.

இப்பாதை ஒருகாலத்தில் சம்மாந்துறை வரை நீடித்திருந்தது. பதினைந்தாம் நூற்றாண்ல் ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக்காலத்தில் சுமாத்திரா தீவிலுள்ள "பாலாம்பாங்" எனுமிடத்திலிருந்து இலங்கை வந்து வாழ்ந்த ஆனந்த தேரரின் கூற்றுப்படி, காசியப்ப மன்னன் நாட்டின் வடக்கு, மேற்கு, கிழக்கு ஆகியவைகளில் மூன்று துறைமுகங்கள் அமைத்தான் எனவும் அவை வல்லிபுரம், களனி, சம்மாந்துறை எனவும் அறியக் கிடக்கின்றது.

எனவே, சம்மாந்துறை நீண்டகாலத்துக்கு முன்னர் துறைமுககமாக இருந்திருக்கின்றது.

சம்மன் என்னும் வகை வள்ளம் வந்தடையும் துறை எனப்பொருள்படும் இவ்வூர்ப் பெயரும் அதனை நிலைநிறுத்தும்.

எனினும், இந்நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் கிட்டங்கியிலிருந்து சம்மாந்துறை வரையிலான வாவி மண்ணரிப்பினாலும் தரைப் புற்களினாலும் மூடப்பட்டதனால் காலக்கிரமத்தில் உபயோக்கிக்க முடியாமற் போய்விட்டது.

கிட்டங்கித்துறை என்னும் பெயர் ஒல்லாந்தர் காலத்தில் ஏற்பட்டது. அவ்வாட்சிக்காலத்தில் நெல், கொப்புறா முதலிய பொருட்களைச் சேமித்து வைத்ததற்கான கட்டிடமொன்றை பர்ணாட் என்னும் ஒல்லாந்தர் இவ்விடத்தில் நிறுவினார்.

அக்கட்டிடம் 'கிட்டங்கி' என அழைக்கப்பட்டது. அதையொட்டியே இவ்விடமும் 'கிட்டங்கித்துறை' எனப் பெயர் பெற்றது.

மிகச் சமீப காலம் வரை கல்முனையில் மேற்கே அமைந்துள்ள கிராமங்களுக்கும் கல்லோயா குடியேற்றத் திட்டத்தின் சில கொளனிகளுக்கும் வாவியைக் கடந்து செல்ல இவ்விடத்தில் வள்ளங்களும் தோணிகளும் பயன்படுத்தப்பட்டன.

1975ம் ஆண்டளவிலேயே கிட்டங்கி - சவளக்கடை வீதியும் தாம்போதியும் வாவிக்கு குறுக்கே அமைக்கப்பட்டது.

வாவிப் போக்குவரத்தில் பாரிய அபிவிருத்தியொன்று 1891ல் ஏற்பட்டது. அவ்வாண்டிலே தான் OSD ஓக்ரெடி என்பார் சாம்றொக் (Shamrock) எனும் நீராவிப் படகுச் சேவையை ஆரம்பித்தார்.

ஓக்ரெடி என்னும் இவர் காரைதீவு, ஒலுவில் ஆகிய இடங்களிலே பாரிய தென்னந்தோட்டங்களை ஆரம்பித்து நடத்தியவராவார். இவரைக் 'கரடித்துரை' எனவும் இவரின மனைவியை கரடியம்மா எனவும் இப்பிரதச மக்கள் அதைத்தனர்.

இவரால் ஆரம்பிக்கப்பட்ட இப்படகுச் சேவை அக்காலத்தில் புரட்சிகரமாகக் கருதப்பட்டது. மணிக்கு ஏழு மைல் வேகத்தில் பயணம் செய்து மூன்றரை மணி நேரத்தில் பயணத்தை முடித்தது. தினசரி காலையில் கிட்டங்கியிலிருந்து மட்டக்களப்பை அடைந்து மாலையில் கிட்டங்கியை மீளும். காலக்கிரமத்தில் ஸ்டான்லி கிரீன் என்பார் 1907ல் அலிஸ், பிரைல் என இரு படகுகளை இப்பாதையில் சேவைக்கு விட்டார்.

மட்டக்களப்பின் தென்பகுதியிலிருந்து கண்டிப் பிரதேசத்துடனான போக்குவரத்து 'தவளம்' மூலம் மேற்கொள்ளப்பட்டது. தவளம் என்பது காளை மாடுகளின் துணையுடன் செய்யப்படும் பிரயாணமாகும். பொருட்களை சாக்குகளில் கட்டி மாட்டின் முதுகின் இருபுறமும் தொங்கவிடுவர்.

ஒரு தவளததில் 20 தொடக்கம் 40 மாடுகள் வரை இருக்கும். அம்மாடுகள் காட்டின் ஊடாக ஒற்றையடிப் பாதையால் ஒன்றன்பின் ஒன்றாகச் செல்லும். அவற்றின் கழுத்திலே கட்டப்பட்டு சகடை எனும் மணி பெரும் ஓசையை எழுப்புவதனால் வன விலங்குகள் விரண்டோடிவிடும்.

ஒக்கஸ்பிட்டி, வெல்லஸ்ஸ, பிபிலை போன்ற பிரதேசங்களினூடாக இக்கண்டிப் பிரயாணம் நிகழ்ந்தது. கரையோரப் பிரதேசங்கிலிருந்து உப்பு, கருவாடு, வெற்றிலை, சுண்ணாம்பு, புகையிலை முதலிய பொருட்களைக் கொண்டு செல்வர். மீண்டு வரும்போது குரக்கன், இறுங்கு, மிளகு, பாக்கு, பழவகைகள், சோளம், திணை, மண்டு, வற்றாளைக் கிழங்கு என்பவற்றுடன் வருவர். வர்த்தகம் அனைத்தும் பண்டமாற்று அடிப்படையில் நடந்தன.


இவ்வாறு மெதுவான போக்குவரத்து முறைகள் இந்நூற்றாண்டின் முதன் மூன்று தசாப்தங்களில் மெல்ல மெல்ல மாற்றமடைந்தன.

1910ம் ஆண்டளவில் பைசிக்கிள் இப்பிரதேசத்தில் அறிமுகமாகியது. 1912ல் பஸ் ஓட ஆரம்பித்தது. கம்மல்துறை சொலுக்கார், அலியார், தாஸ் பிரதர்ஸ், சைமன் முதலாளி, புகாரி ஆகியோர் பஸ் சேவையினை நடாத்தினர்.

திருகோணமலை புகையிரதப்பாதை 1927 மே இரண்டாம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 1958ல் புகையிரதம் மட்டக்களப்பை வந்தடைந்தது. கல்லடிப் பாலம் 1930ல் கட்டி முடிக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தின் போக்குவரத்து வசதிகளை அதிகரிப்பதில் அப்போதைய சட்டநிரூபண சபை அங்கத்தவராகவிருந்த ER தம்பிமுத்துவின் பங்கு மிக முக்கியமானது.

இலங்கையின் ஏனைய பகுதிகளுடன் புகையிரத சேவையினால் மட்டக்களப்பை இணைக்க வேண்டும். மட்டக்களப்பு வாவிக்குக் குறுக்கே கல்லடியில் பாலம் அமைத்தல் வேண்டும் என சட்டநிரூபண சபையில் அவர் மிக வலியுறுத்தினார்.



1968ல் ஆரம்பித்து வைக்கப்பட்ட
குடிநீர்த்திட்டம்

# நெற்பிட்டிமுனை பள்ளிவாயல்களின் வரலாறு

## மஸ்ஜிதுல் ஜாமிஇல் கபீர் (ஜும்ஆப் பள்ளிவாசல்)

முஸ்லீம்கள் எங்கு குடியேறினாலும் முதலில் ஒரு பள்ளிவாயலை அமைப்பார்கள். அந்தவகையில் நெற்பிட்டிமுனையில் குடியேறிய நம்மூதாதையர்களும் பள்ளிவாயலை அமைப்பதில் சிரமத்தை காட்டியிருக்கிறார்கள். ஆரம்பத்தில் பாவாப்பிளளை ஸியாரம் எனும் இடத்தில் மௌலுத்துகள் ஓதுவது, பாத்திஹா ஓதுவது போன்ற கிரியைகளைச் செய்துவந்த நம்முன்னோர்கள் பள்ளிவாயல் தேவைகளை உணர்ந்தபோது பள்ளிவாயல் அமைப்பதற்குரிய இடத்தை தேடியிருக்கிறார்கள். அந்தவகையில் சங்கரப்பத்தான்குடியைச் சேர்ந்த 'கல்வீட்டுக் கதீஜா' என்பவரின் தாயார் உமறுநாச்சி என்னும் தாய் தனது வளவை தருவதாக ஒப்புக்கொண்டார். அதன் நிமிர்த்தம் அக்காலத்தில் வாழ்ந்த பெரியார்கள் ஒன்றுசேர்ந்து கட்டுமானப் பணிகளை மேற்கொண்டார்கள்.

நன்கொடையாக வழங்கிய உமறுநாச்சி என்னும் தாய் முன்னாள் கதீபாக இருந்த மர்ஹூம் M. யாசீன் பாவா லெவ்வை (கலீபா லெவ்வை) என்பவரின் மூத்தம்மா. இவர் ஐந்து தலைமுறைக்கு முன்புள்ள ஒரு மூதாட்டியாவார். இவர் மர்ஹூம் அல் ஹாஜ் SLA. கரீம் B.A என்பவருக்குச் சொந்தமானவராவார்.

இப்பள்ளிவாயல் சுமார் 200 வருடங்களுக்கு முன்பிருந்தே இக்கிராமத்தில் அமையப்பெற்று வந்ததாக ஒரு வரலாற்றுப் பின்ணணியிலிருந்து தெரியவருகிறது. இப்பள்ளிவாயல் ஆரம்பகாலத்தில் இருந்து இலுக்குப் புற்களாலும் வைக்கோலாலும் வேயப்பட்டு வந்த கூரை அமைப்புடைய பள்ளிவாயலாகவே இருந்து வந்துள்ளது. இப்பிரதேசத்தில் வீசிய சூறாவளியால் 1907ம் ஆண்டு பெரிதும் சேதமுற்றது. பிறகு காலப்போக்கில் நாகரீகம் வளரவளர 1909ம் ஆண்டு மக்கள் தொகையும் அதிகரிக்க இப்பள்ளிவாயல் சொறிக்கற்களாலும், செங்கற்களாலும் நீற்றுக்கலவை பாவித்து கட்டுமானப்பணிகள் செய்து கூரைக்கு சல்லிஓடுகள் போட்டு அதன் விறாந்தைக்கு சுற்றிவர கிராதிகள்

அமைத்து சுமார் 300 பேர் தொழுகை நிறைவேற்றக்கூடிய ஒரு பள்ளிவாசலாக சுமார் நூறு வருடங்களுக்கு மேலான காலத்திலிருந்து வந்துள்ளது. அக்காலப்பகுதியில் வாழ்ந்த மக்கள் பலசாலிகளாக இருந்திருக்கிறார்கள். காடுகளுக்குச்சென்று பெரிய முழு மரங்களை அறுத்து மாட்டுவண்டிகள், தோணிகளில் கொண்டுவந்து அம்மரங்களை சீவி, செப்பனிட்டு அழகிய கரைகள் ஓடி, கைகளால் தூக்கி தூண்களாக அமைத்திருக்கிறார்கள் என்றால் இவர்கள் திறமைசாலிகளாகவும், பலம்வாய்ந்தவர்களாகவும் இருந்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் கூலியாட்கள் இன்றி சிரமதான அடிப்படையிலே செய்து வந்திருக்கிறார்கள். நவீன ஆயுதங்கள் இல்லாத அக்காலத்தில் மூளைப்பலத்தாலும், உடற்பலத்தாலும் யாவும் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இக்காலத்தைப் பொறுத்தமட்டில் இப்பள்ளிவாயல் மிகவும் பழைமை வாய்ந்ததாகவும், சனத்தொகைக்கு ஏற்ப தொழுகை நிறைவேற்ற போதாமையினாலும் தற்பொழுது நாகரீகத்திற்கேற்ப மாடிப்பள்ளிவாசலாக கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இது வரலாற்றுக்குறிப்பின் படி படிப்படியாக திருத்தம் செய்யப்பட்டு வந்தவகையில் ஐந்தாவது பள்ளிவாயலாகக் கருதப்படுகிறது. ஆரம்பத்தில் இப்பள்ளிவாயல் முகையதீன் ஜும்மாப்பள்ளியென அழைக்கப்பட்டது. 1978ல் வீசிய சூறாவளியால் பள்ளிவாயல் முற்றாக சேதமானது. பிறகு இப்புதிய பள்ளிவாயல் நிர்மானப்பணிகள் 1982ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அப்போதைய பாராளுமன்ற உறுப்பினராக இருந்த AR. மன்சூர் அவர்களின் அழைப்பின் பேரில் கலாச்சார அமைச்சராக இருந்த MH. முகம்மட் M.P அவர்கள் வருகைதந்து, கல்நாட்டுவித்து ஆரம்பித்து வைத்தார்கள். அக்கால பரிபாலன சபைத்தலைவர் அல் ஹாஜ் அகமதுப்போடி அபூபக்கர் லெப்பை இருந்தார். இந்நிகழ்வு AA. கபூர் அதிபர் அவர்களின் முயற்சியின் பயனாக ஏற்பாடாகியிருந்தது. இப்படி அடித்தளமிடப்பட்ட பள்ளிவாயலே இன்று சிங்கம்போல் தலைநிமிர்ந்து இவ்வூரை அழகுறக் காத்து நிற்கிறது.

கட்டடக்குழு முக்கிய உறுப்பினர்களாக தலைவர் S. இஸ்மாலெப்பை (A.I) அவர்களும், செயலாளராக AA. கபூர் அதிபர் அவர்களும், பொருளாளராக அல்ஹாஜ் MI. தங்கராஜா (J.P) அவர்களும், கணக்குப் பரிசோதகராக அல்ஹாஜ் SLA. கரீம் (B.A) அவர்களும் மற்றும் பலரும் சேர்ந்த குழுவினரின் முயற்சியால் கட்டடப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வந்தது. 1996ல்

நிருவாகத்தைப் பொறுப்பேற்ற சபை கட்டடக்குழுவை கலைத்ததுடன் தம்மால் இயன்ற முயற்சிகளை செய்தனர். 2006ல் பள்ளிவாயல் பரிபாலனத்தை பொறுப்பேற்ற சபை கூடுதல் முயற்சிசெய்து ஊர்மக்களின் பங்களிப்புடன் கட்டடப்பணியை முடிவுறும் தறுவாய்க்குக் கொண்டுவந்தனர். புதிய பெயரும் சூட்டப்பட்டது. அல் மஸ்ஜிதுல் ஜாமிஇல் கபீர் என்ற பெயரில் இன்று இயங்கிக்கொண்டு வருகிறது.

இப்பள்ளிவாயல் உசன்லெவ்வை ஆலிம் அவர்களின் மருமகன் சேக்காதிப்போடியார், சாயுவுலெவ்வை விதானையார் (SP. காசீம் பாவா (வட்டவிதானையின் தந்தை), கலந்தர் விதானை (மூலமரைக்காரின் தந்தை), மீராகுட்டி விதானை (வெள்ளைத்தொப்பியரின் தந்தை) ஆகியோரால் ஆரம்பகாலத்தில் பராமரிக்கப்பட்டு வந்ததாக அறியக்கிடைக்கிறது. புளிச்சர் ஓடாவியார் சுலைமாலெவ்வை (யூசுப் மௌலவியின் தந்தை) அவர்களும் இணைந்து செயற்பட்டிருக்கிறார். அத்தோடு நெற்பிட்டிமுனையில் மிகவும் பிரபல்யம் பெற்று விளங்கிய சுலைஹிப் போடியாரும் அவரது குடும்பத்தினரும் பள்ளிவாயலைக் கட்டிமுடிக்க பராமரிக்க ஆரம்பகாலத்தில் அதிக அக்கறை காட்டியுள்ளனர். இப்பள்ளிவாயலுக்கு ஆரம்பகால இமாம் சுலைஹிப் போடியாரின் மருமகன் உசன்லெப்பை ஆலிம் (சரிவுப்போடியாரின் தந்தை) சேவையாற்றியுள்ளார். பின்னர் மூலமரைக்காயர் (மர்ஹூம் AM. ஜமால்தீன் அதிபரின் தந்தை), உசன்லெப்பை ஆலிம் அவர்களின் மகன சரிவுப் போடியாரும் பொறுப்பேற்று செயற்படுத்தி வந்தனர். இவர்களைத் தொடர்ந்து முகம்மது காசீம் (வ.வி), சரிவுப் போடியார், சட்டம்பியார், சீனிப்போடியார், கலந்தர்லெவ்வை (ஆலாவர்) என்போர் பரிபாலித்து வந்தனர்.

1959ல் இருந்து முஸ்லீம் சமய கலாச்சார திணைக்களத்தில் பதியப்பட்ட வகையில் கீழ்வருவோர் இடம்பெறுவர்.

**1959-02-04**

01. எம்.யூ.எல். ஷெரிப், தலைவர் (எம்.எஸ்.எம். காசிம் அதிபரின் தந்தை)
02. கே.எல். அபூபக்கர் (மூல மரைக்காயர்)
03. எம்.பி.எம். காசீம் (ஜமால்தீன் அதிபரின் தந்தை)

1966-07-12

01. எம். முஹமமட் இஸ்மாயில், தலைவர் (சட்டத்தரணி அஸீஸின் தந்தை)

02. ஏ. முஹம்மட் இஸ்மாயில், உப-தலைவர் (நூறுமுஹம்மட் மனேஜரின் தந்தை)

03. கே. முஹம்மட் தம்பி, பொருளாளர் (கனியன் போடியார்)

04. எஸ்.எல். அப்துல் காதர், செயலாளர் (மாக்கார் எனும் புனைப்பெயர் கொண்டவர்)

05. அல்ஹாஜ் ஏ.பி. அபூபக்கர்லெவ்வை, உப செயலாளர் (உமறுகத்தா இலிகிதரின் தந்தை)

1972-04-11

01. அல்ஹாஜ் எம். முஹம்மட் காசிம் அதிபர், தலைவர் (டாக்டர் மாஹிரின் தந்தை)

02. அல்ஹாஜ் ஏ.பி. அபூபக்கர்லெவ்வை, உப தலைவர்

03. ஏ. முஹம்மட் இஸ்மாயில், உப தலைவர்

04. ஏ. ஷரிபுத்தம்பி, உப-தலைவர் (அல்ஹாஜ் ஹயாத்து முஹம்மட் தந்தை)

05. அல்ஹாஜ் எஸ்.எச். அஹமட்லெவ்வை அதிபர், செயலாளர் (அல்ஹாஜ் எஸ். அப்துர் ரஹ்மான் (G.S) அவர்களின் மாமனார்)

06. வி. கனிமுத்துலெவ்வை, செயலாளர் (கனிமுத்து வட்டவிதானை)

07. வி.எம். இப்றாஹிம் அதிபர், பொருளாளர் (கனியான் போடியாரின் மருமகன்)

08. அல்ஹாஜ் எஸ்.பி.ஏ. மஜீட் மனேஜர் (பஸால் G.S இன் தந்தை)

09. அல்ஹாஜ் யூ லெப்பைக்கனி முதலாளி (மௌலவி ஏ.எல். சாஹுல் ஹமீதின் மாமனார்)

10. ரி. சின்னலெவ்வை வட்டவிதானை (எஸ்.எல். ஜமால்தீனின் தந்தை)

11. அல்ஹாஜ் சி.எம். சீனித்தம்பி (ஏ.எஸ். இஸ்மாலெப்பை (A.I)யின் தந்தை)

1980-09-27

01. அல்ஹாஜ் ஏ.பி. அபூபக்கர்லெப்பை

02. ஏ. முஹம்மட் இஸ்மாயில்

03. அல்ஹாஜ் எஸ். எச். அஹமட்லெப்பை, அதிபர்

04. ஏ. கனிமுத்துலெவ்வை, வட்டவிதானை

05. அல்ஹாஜ் யூ. லெப்பைக்கனி முதலாளி

1985-01-05

01. அல்ஹாஜ் ஏ.பி. அபூபக்கர்லெப்பை

02. எஸ். அபூபக்கர்லெப்பை (சித்திர ஆசிரியர் முகம்மட் தம்பியின் தந்தை)

03. அல்ஹாஜ் எஸ்.எச். அஹமட்லெப்பை, அதிபர்

04. ரி. சின்னலெவ்வை வட்டவிதானை

05. அல்ஹாஜ் யூ. லெப்பைக்கனி முதலாளி

1987-07-06

01. அல்ஹாஜ் ஏ.எல். சாஹுல் ஹமீட் மௌலவி (யூ. லெப்பைக்கனி முதலாளியின் மருமகன்)

02. அல்ஹாஜ் ரி.எஸ். அக்பர் அதிபர் (அல்ஹாஜ் மதனி (L.O) வின் தந்தை)

03. கே.எல். காசிம் மனேஜர் (நஜீப் ஆசிரியரின் தந்தை)

04. ஏம்.ஏஸ். உமறுகத்தா P.M.B (எஸ். அபூபக்கர்லெப்பை வட்டவிதானையின் மருமகன்)

05. அல்ஹாஜ் யூ. லெப்பைக்கனி முதலாளி

1990-07-27

01. அல்ஹாஜ் எஸ்.பி.எம். இஸ்மாயில், பிரதிஅதிபர் (சாய்வுலெப்பை விதானையாரின் மகன்)

02. அல்ஹாஜ் ரி.எஸ். அக்பர், அதிபர்

03. கே.எல். காசிம்

04. எம். அப்துல் ஹனிபா

1992-08-04

01. அல்ஹாஜ் எம்.ஜ. அஸீஸ் L.L.B தலைவர் சட்டத்தரணி

02. அல்ஹாஜ் எம்.எஸ்.ஏம். யூசுப் ஆசிரியர்

03. அல்ஹாஜ் கே.ஏல்.எம். இப்றாஹிம் முதலாளி

04. கே. றசீட் முதலாளி

05. அல்ஹாஜ் ஏ.எல். சாஹு"ல் ஹமீட் மௌலவி

06. ஏ.எல். உமறுகத்தாப் (இலிகிதர்)

07. எஸ்.எல். ஜமால்டீன் (தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)

08. அல்ஹாஜ் எஸ்.பி.எம். இஸ்மாயில், பிரதி அதிபர்

09. எம். தம்பிராசா கிளாக்கர், பொருளாளர்

10. என். இஸ்மாயில் (S.K)

**1996-09-15**

01. அல்ஹாஜ் எஸ்.பி.எம். இஸ்மாயில் பிரதி அதிபர், தலைவர்

02. ரி. சின்னலெவ்வை வட்டவிதானை, உப தலைவர்

03. கே. றசீட், உப-தலைவர்

04. அல்ஹாஜ் எம்.எல். நாஸர் (சமுர்த்தி மனேஜர்), செயலாளர்

05. எம்.எம். ஹமீட் (மக்கள் வங்கி), பொருளாளர் (லெப்பைக்கனி முதலாளியின் மருமகன்)

06. அல்ஹாஜ் ஏ.எல். சாஹு"ல் ஹமீட் மௌலவி

07. ஏ.ஏ. கபூர், அதிபர்

**2006-01-01** (விசேட நம்பிக்கையாளர் சபை)

01. அல்ஹாஜ் மௌலவி யூ.எல்.ஏ. கபூர், பிரதி அதிபர் அல்-ஹாமியா அறபுக் கல்லூரி (மதார் ஹாஜியாரின் மருமகன்)

02. மௌலவி ஏ.எல். நாசிர்கனி M.A விரிவுரையாளர், தேசிய கல்விக்கல்லூரி, அட்டாளைச்சேனை

03. அல்ஹாஜ் ஏ.எல்.எம். ஜஹாங்கீர் மௌலவி I.S.A

04. அல்ஹாஜ் எம்.எல்.ஏ. கரீம் B.A பணிப்பாளர்

05. அல்ஹாஜ் எம்.ஐ. அஸீஸ் LL.B சட்டத்தரணி

**2006-07-10**

01. அல்ஹாஜ் மௌலவி U.L.A. கபூர், அதிபர் அல்-ஹாமியா அறபுக் கல்லூரி (மதார் ஹாஜியாரின் மருமகன்)

02. மௌலவி A.L. நாசிர்கனி M.A விரிவுரையாளர், தேசிய கல்விக்கல்லூரி, அட்டாளைச்சேனை

03. அல்ஹாஜ் M.I. அஸீஸ் LL.B பொருளாளர் (சட்டத்தரணி)

04. A. உமறுகத்தா, உப-தலைவர் (இலிகிதர்)

05. V.T. சலீம்கான், உப-செயலாளர் (இலிகிதர்)

06. அல்ஹாஜ் S.T. ஹயாத்து முஹம்மட் (நெக்கோட்)

07. M.P. முஹம்மட் தம்பி முதலாளி (காதர்)

08. M.I. நூர்முஹம்மட் (மனேஜர்)

09. S.M.A. ஜ.ஃபர் (அதிபர்)

10. அல்ஹாஜ் M.L.A. சலாம் முதலாளி

குறிப்பு: 2006-01-01க்கு முற்பட்ட காலப்பகுதியில் பதிவு செய்யப்படாமல் பின்வருவோர் பொறுப்புவாய்ந்த பரிபாலனப் பதவிகளில் இருந்துள்ளனர்.

01. அல்ஹாஜ் A.L. மதார் சாஹிப் (தலைவர்)

02. S.L. ஜமால்டீன் (தலைவர்)

03. H.M. நசீர் (உப தலைவர்)

04. K.M சௌதுன் நஜ்ஜாஸ் ஆசிரியர் (செயளாளர்)

05. M.I. முஹைறதீன் J.P. (பொருளாளர்)

2010 - 2015 வரை

01. அஷ்ஷெக் KL. நஸிபர் மௌலவி (தலைவர்)

02. MI. முகையதீன் (உப தலைவர்)

03. MM. ஹசன் இலிகிதர் (செயலாளர்)

04. MLM. அஷ்ரப் (உப செயலாளர்)

05. ST. ஹயாத்து மொகமட் (பொருளாளர்)

♦ நிர்வாகசபை உறுப்பினர்கள

01. AB. இஸ்ஹாக்

02. ALM. தௌபீக்

03. அஷ்ஷெக் ALM. ஜஹாங்கிர் மௌலவி

04. K. றசீட்

05. MI. உதுமாலெப்பை

06. AM. சமிட்

07. MM. ஜிப்ரி மொகமட்

08. ML. நாஸர்

**2015ம் ஆண்டுக்குப் பின்னர்**

01. அஷ்ஷெக் AL. நாஸிர்கனி விரிவுரையாளர் (தலைவர்)
02. அல்ஹாஜ் MLA. ஸலாம் (உப தலைவர்)
03. AS. ஜ.்.பர் சமூர்த்தி (செயலாளர்)
04. ஐ. பாயிஸ் ஆசிரியர் (உப செயலாளர்)
05. அல்ஹாஜ் AM. மதானி LO (பொருளாளர்)

♦ நிர்வாகசபை உறுப்பினர்கள்

01. அஷ்ஷெக் ALM. ஜஹாங்கிர் ADE
02. அஷ்ஷெக் முனொபர்
03. MI. ஜாக்கூப்
04. MI. சியாத்
05. அல்ஹாஜ் HM.
06. AM. சமீட்
07. AGM. கிசோர்
08. AL. சாஹிப் தம்பி
09. KA. றசாக்

**மஸ்ஜிதுஸ் ஸலாம் பள்ளிவாசல்**

இப்பள்ளிவாயல் வளவு எனது மூத்தவாப்பாவாகிய (உம்மாவின் வாப்பா) முகம்மது உசைன் தம்பிசாஹிவுப்போடி (மூத்தபோடி) என்பவரால் நன்கொடையாகக் கொடுக்கப்பட்டது. காலத்தின் தேவைக்கேற்ப மக்கள் தொகை அதிகரிப்பைத் தொடர்ந்து இப்பள்ளிவாயல் பொதுமக்களின் உதவியினால் கட்டப்பட்டது. இது 1962ம் ஆண்டுக் காலப்பகுதியில் கட்டப்பட்டதாக அறியக்கூடியதாக இருக்கிறது. இப்பள்ளிவாயல் முதன்முதலில் தகட்டால் ஆன கூரையால் கட்டப்பட்டது. பின்னர் 1975ம் ஆண்டுக்காலப்பகுதியில் கல்லால் ஆன

கட்டடமாகக் கட்டப்பட்டு ஓடு போடப்பட்டது. பொதுமக்களின் பங்களிப்பு மூலமே இப்பள்ளிவாயல் கட்டப்பட்டதென்றே கூறமுடியும். குறிப்பாக -

- Sl. அபபக்கர் லெப்பை வ.வி
- மீராமுகையதீன் ஓடாவியார்
- MB. முகம்மது இஸ்மாயில் வ.வி
- S. யூசுப் மௌலவி
- AL. முகம்மது தம்பி ஆசிரியர்

ஆகியோரின் அயராத முயற்சியின் பயனாக உருவானது. இப்பள்ளிவாயலுக்கு கிணறு தேவைப்பட்டபோது அக்கிணற்றை தனது சொந்த நிதிமூலம் MB. முகம்மது இஸ்மாயில் வ.வி, (சட்டத்தரணி அல்ஹாஜ் MI. அஸீஸ் அவர்களின் வாப்பா) கட்டிக் கொடுத்தார். மேலும் இப்பள்ளிவாயலின் முஅத்தின்களாக கீழ்வருவோர் கடமையாற்றி இருக்கின்றனர்.

1. குப்பயர் லெவ்வை
2. சம்சு லெவ்வை
3. றவுண் தூக்கியர்
4. மீராமுகையதீன் (முடிச்சிக்கட்டியர்)
5. அப்துல் மஜீது
6. முகையதீன் வாவா (வாட் மெம்பர்)
7. அப்துல் ஹமீது (ஜிஹாத் மௌலவியின் தந்தை)

இப்பள்ளிவாயல் 2013ம் ஆண்டு முற்றாக உடைக்கப்பட்டு அறபி ஒருவரின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

## மஸ்ஜிதுல் ஹுதா பள்ளிவாயல்

அல் மஸ்ஜிதுல் ஸலாம் பள்ளிவாயல் உருவாக்கப்பட்டு சரியாக பத்து வருடங்களின் பின்னர் இன்னுமொரு பள்ளிவாயலின் தேவை இவ்வூருக்கு ஏற்பட்டது. அதனைத்தொடர்ந்து பெரியார்களின் முயற்சியின் பயனாக அல்ஹாஜ் அகமதுப்போடி அபூபக்கர் லெவ்வை

என்னும் பெரியாரை அணுகியபோது தன்னுடைய வளவை பள்ளிவாயல் கட்டுவதற்காக தருவதாக வாக்களித்ததற்கு அமைய 1972 வைகாசி மாதம் 4ம் திகதி வக்பு செய்து கொடுத்ததற்கு அமைய அல்ஹாஜ் அகமதுப்போடி அபூபக்கர் லெவ்வை என்பவரினதும், அவரது மனைவி இஸ்மாயில், அவ்வா உம்மா ஆகிய இருவரினதும் ஜனாஸாக்களை அப்பள்ளிவாயல் வளவுக்குள் அடக்கம் செய்வதாக பரிபாலன சபை தீர்மானித்து வக்பு செய்யப்பட்ட வளவின் உறுதிப்பத்திரத்தில் பதிவு செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து 2004ம் ஆண்டு இஸ்மாயில் அவ்வா உம்மாவும், 2005ல் அல்ஹாஜ் அகமதுப்போடி அபூபக்கர் லெவ்வை என்பவர்களின் ஜனாஸாக்கள் அப்பள்ளிவாயல் வளவுக்குள் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றது.

1972ம் ஆண்டில் இருந்து உழைத்ததன் பயனாக 1973ல் பொது மக்களின் உதவியால் அல் மஸ்ஜிதுல் ஹுதாப் பள்ளிவாயல் உருவாக்கப்பட்டது. இதன் முன்னோடிகளாக

- அல்ஹாஜ் AL. இப்றாலெவ்வை (ஹாபிஸ்)
- PT. மீராலெவ்வை மௌலவி
- அல்ஹாஜ் ULA. கபூர் மௌலவி
- AL. உமர்கத்தா இலிகிதர்
- S. அபூபக்கர் லெவ்வை C.O
- K. றசீது (பெயாடீல்)

மேலே கூறப்பட்டவர்கள் இருந்தபோதிலும் மேலும் பல இளைஞர்களும், ஹீரோ விளையாட்டுக் கழகமும் முயற்சி செய்ததன் பயனாக இப்பள்ளிவாயல் உருவாக்கப்பட்டது எனக்கூறலாம். 1973ம் ஆண்டு இப்பள்ளிவாயலில் தொழுகை நடாத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2014ல் பழைய பள்ளிவாயல் கட்டடம் உடைக்கப்பட்டு 2015ல் அழகிய தோற்றத்துடன் புதிய பள்ளிவாயல் உருவாக்கப் பட்டிருக்கின்றது. இதுவும் அரபி ஒருவரின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### ஆசுஷூர் பள்ளிவாசல்

**பள்ளிவாயல் தோற்றத்திற்கான காரணம்:**

2000ம் ஆண்டு காலப்பகுதியிலும், அதற்கு முற்பட்ட ஒரு தசாப்த காலப்பகுதியிலும் மார்க்க பிரச்சார நடவடிக்கைகளிலும் அவ்வப்போது மக்களுக்கு எடுத்துச்செல்லவேண்டிய மார்க்க தீர்ப்புகளையும், தொழுகை முதலான வழிபாடுகள் பற்றிய இஸ்லாமிய சட்ட விளக்கங்களையும் ஜும்மாப்பள்ளிவாசல் உள்ளிட்ட ஊரின் ஏனைய உலமாக்கள் எடுத்துக்கூற முற்பட்டபோது பல்வேறு தடைகளும் இடையூறுகளும் ஏற்பட்டன. அக்கால கட்டத்தில் நிருவாகத்தில் இருந்தோர் இணக்கப்பாடான தீர்வை எட்டிக்கொடுக்க வேண்டுமென்ற ஆர்வம் இல்லாதிருந்தமை துரதிஷ்டவசமான ஓர் அம்சமாகும்.

இதனால் உலமாக்கள் மனசோர்வடைந்தும், சுதந்திரமான உண்மையான மார்க்க கருத்துக்களை எடுத்துக்கூற உரிய சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தனர். இதுதவிர ஊர் பிரதானவீதியில் இஸ்லாமிய கலாச்சாரத்தை பறை சாற்றக்கூடிய தடையங்கள் இல்லாதிருந்ததும் மேலும் பிரதான வீதியில் போக்குவரத்து செய்யும் பிரயாணிகள் தமது தொழுகையை நிறைவேற்ற பள்ளிவாசல் ஒன்று அமையப்பெற வேண்டிய அவசியம் இருந்தது.

இத்தகைய காரணங்களை கருத்தில் கொண்டு பிரதான வீதிக்கு அருகே பள்ளிவாசல் ஒன்று அமைக்க பொருத்தமான ஒரு இடம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## காரண கர்த்தாக்கள்

ஆஷுர் பள்ளிவாசல் நெற்பிட்டிமுனைக்கு வருவதற்கு அடிப்படை மூலமாக இருந்தவர் அஷ்ஷெய்க் AL. நாஸிர்கனி ஆவார். மர்ஹூம் SL. யூசுப் ஹஸரத் அவர்களினால் ஏற்பட்ட பாலமுனை ஜம்இய்யதுல் ஸஹ்வா அல் கைரியா தொடர்பு இப்பள்ளிவாசலை இங்கு கொண்டுவருவதற்கு பெரிதும் உதவியது. இப்பள்ளிவாசலுக்கான நிலத்தை தெரிவுசெய்வது தொடக்கம் பள்ளிவாசல் கட்டுமானப்பணி முடிவடையும் வரை அஷ்ஷெய்க் AL. நாஸிர்கனி அவர்களின் வலது கையாக இருந்து தோள்கொடுத்து உதவியவர் அஷ்ஷெய்க் AM. சாலித்தீன் அவர்கள். மேலும் அஷ்ஷெய்க் ULA. கபூர் (அதிபர் அல் ஹாமியா அறபுக்கல்லூரி) உள்ளிட்ட ஊர் உலமாசபை உறுப்பினர்கள், ஜம்இய்யதுல் கைரியா உறுப்பினர்கள் ஆகியோரினால் இப்பள்ளிவாசல்

நிருமாணப் பணிகளுக்கான பங்களிப்பு மகத்தானது. குறிப்பாக MI. சாலித்தீன், M. உமர் கத்தாப், MP. சித்திக் டெய்லர் ஆகியவர்கள் குறிப்பிட்டுக் கூறத்தக்கவர்கள்.

## ஒப்பந்தம் கைச்சாத்து

பள்ளிவாசலை கட்டுவதற்கு அனுசரனை வழங்கியவர்களை 1ம் தரப்பாகவும், முன்னின்று கட்டுபவர்களை 2ம் தரப்பாகவும் கொண்டு ஒப்பந்தம் கைச்சாத்தப்பட்டது. 1ம் தரப்புச் சார்பாக பாலமுனை ஜம்இய்யதுஸ் ஸஹ்வா அல் கைரியாவின் தலைவர் அஷ்ஷெய்க் ILM. ஹாஸீம் மதனி, செயளாளர் அஷ்ஷெய்க் ALA. அப்துல் ஹபீழ், பொருளாளர் ALM. முஸ்தபா ஆகியோர்கள் ஒப்பமிட்டனர். 2ம் தரப்பு சார்பாக அஷ்ஷெய்க் AL. நாஸிர்கனி (ஹாமி), அஷ்ஷெய்க் AM. சாலித்தீன் (ஹாமி), ULA. கபூர் (பலாஹி) ஆகியோர்கள் ஒப்பமிட்டனர். அவ்விடத்தில் MP. சித்திக் டெய்லர், MI. ஜக்கூப், ST. நிஸார் B.A ஆகியோர்கள் பிரசன்னமாயிருந்தனர்.

ஒப்பந்தம் 2001.08.09ம் திகதி (ஹி. 1422 ஜமாத்துல் ஆகிர் பிறை 15ல்) கைச்சாத்தானது. ஒப்பந்தத்தின் பிரதான ஷர்த்தாக பள்ளிவாசல் குர்ஆன் - சுன்னா அடிப்படையில் நடைபெற வேண்டுமெனவும் ஷிர்க், பித்அத் முதலான இஸ்லாமிய விரோதச் செயல்கள் இடம்பெறக்கூடாது என்பதாக அமைந்திருந்தது.

### அல் றாஜிஹி பள்ளிவாயல் (மையவாடிப் பள்ளிவாயல்)

## பராமரிப்புப் பணியில்

பள்ளிவாயல் கட்டி முடிக்கப்பட்டதும் அஷ்ஷெய்க் AL. நாஸிர்கனி அவர்கள் அல் ஜம்இய்யதுல் கைரியா மற்றும் பள்ளிவாயலை சூழவுள்ள மக்களை அழைத்து பள்ளிவாயலை நிர்வகிப்பதற்கான நிர்வாகம் ஒன்றை தெரிவுசெய்தார். அவ்வமையம் தலைவராக அல்-ஹாஜ் MIM. ஹாலித் முதலாளி அவர்களும், செயலாளராக MI. யாக்கூப் அவர்களும் பொருளாளராக SL. இப்றாகிம் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

பின்னர் ML. றஷீட் முதலாளி அவர்கள் தலைவர் பதவியைப் பொறுப்பெடுத்து செயல்பட்டார். அக்காலப்பகுதியில் செயலாளராக MBM. நிஸ்பர் மௌலவி அவர்களும் IA. றசாக் அவர்களும்

செயல்பட்டார்கள். பின்னர் KL. அப்துல் றஸ்ஸாக் அவர்களிடம் தலைமைப்பதவி சுமத்தப்பட்டதுடன் இன்றுவரை அப்பதவியில் இருந்துகொண்டு பள்ளிவாயலை சிறப்பாக நிர்வகித்து வருகிறார். அவருடன் இணைந்து MI. யாக்கூப் அவர்கள் செயலாளராக தொழிற்பட்டு வருகிறார். இவரது தலைமையின் கீழ் A. அஸீஸ், ML. தஸ்லீம் என்போர் சேவை செய்துள்ளதுடன் தற்பொழுது மௌலவி AR. ஜஃபர் அவர்கள் பொருளாளர் பதவியைப் பொறுப்பேற்று பொறுப்புடன் செயல்பட்டு வருகிறார்.

### அல் மஸ்ஜிதுல் பலாஹ் பள்ளிவாயல்

அல்ஹாஜ் மர்ஹூம் SPM. இஸ்மாயில் ஆசிரியர் மாநகரசபை உறுப்பினராக பதவியேற்ற சில காலங்களின் பின்னர் அல் லாபீர் வித்தியாலயம் உருவாக்கப்பட்ட காலத்தில் அப்பிரதேசத்தில் பள்ளிவாயல் ஒன்றின் தேவை உணரப்பட்டது. அக்காலப்பகுதியில் பாடசாலை இருந்த இடத்தில் தொழுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு 1996.01.26ம் திகதி முதலில் தொழுகை ஆரம்பிக்கப்பட்டது.

அல்ஹாஜ் ML. நாஸீர், MT. சித்தீக், AR. பைறோஸ்கான், மிஸ்றுல் லாபீர், SL. அஸீஸ், MJA. நாளிப், SL. இப்றாகிம், M. அப்துல் இன்னும் பலர் கூடி தொழுகையை நடாத்தி வந்தனர். பின்னர் அப்பள்ளிவாயலை அமைப்பதற்கு விருப்பம் கொண்டவர்கள் பண உதவிசெய்ததோடு பொருள் உதவியும் செய்ததனால் தகரத்தினால் ஆன பள்ளிவாயல் உருவாக்கப்பட்டது. பின்னர் அல்லாஹ்வின் உதவியோடு அல்ஹாஜ் M. அகமதுலெப்பை வைத்தியர் அவர்களும் இணைந்து கொண்டதனால் மேலும் முன்னேற்றம் கண்டது. அக்கால நிருவாகத்தினராக கீழ்வருவோர் தெரிவு செய்யப்பட்டு அப்பள்ளிவாயல் வளர்ச்சிக்கு துணை நின்றனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | - | அல்ஹாஜ் M. அகமட் லெப்பை |
| உப தலைவர் | - | அல்ஹாஜ் ML. நாஸீர் |
| செயலாளர் | - | MT. சித்தீக் |
| உப செயலாளர் | - | SL. அஸீஸ் |
| பொருளாளர் | - | MA. அப்துல் மஜீது |
| | | MS. மஃமூது லெப்பை |

MJM. நாளிப்

SL. இப்றாகீம்

ML. இஸ்மாலெப்பை

தற்பொழுது இப்பள்ளிவாயல் புனர்நிர்மானம் செய்யப்பட்டு த:்.வாப் பணிபுரியும் ஒரு பள்ளிவாயலாக விளங்குகிறது.

**அல் ஹுனாபா பள்ளிவாயல்**


இப்பள்ளிவாயல் 2015.06.16ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அல்ஹாஜ் மர்ஹூம் MSM. யூசுப் ஆசிரியரின் நினைவாக அவரது மூத்த மருமகன் அல்ஹாஜ் CB. காலீத் (ஓய்வுபெற்ற வங்கி உத்தியோகத்தர்) அவர்களுடைய வழிகாட்டலில் அவர்களது மதினிமார், சகலன்மார் ஆகிய MJM. ஹரீஸ் ஹாஜியார், MI. றியாஸ் ஹாஜியார், VT. தாஹிர் ஆகியோரின் நிதிப்பங்களிப்போடு உருவாக்கப்பட்டதாகும். இப்பள்ளிவாயலில் சுன்னத் வல் ஜமாஅத் அடிப்படையில் பள்ளிவாயல் நிர்வகிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்துக்கு அமைய அப்பகுதிவாழ் மஹல்லா வாசிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

**நிர்வாகிகளாக**

| | | |
|---|---|---|
| தலைவர் | - | AL. கமால் நில அளவைகள் திணைக்களம் |
| பொருளாளர் | - | அல்ஹாஜ் காசீம்வாவா |
| செயலாளர் | - | KL. பரீட் ஆசிரியர் |
| உப தலைவர் | - | அஸீஸ் நானா |
| உப செயலாளர் | - | அல்ஹாஜ் ML. ஹனீம் |

**அல் மதுரிஸதுல் சமதானியா குர்ஆன் பாடசாலை**

நமது ஊரிலுள்ள முதலாவது குர்ஆன் மதுரிஸா இதுவாகும். இம்மதுரிஸாவுக்கு வளவு கொடுத்து, மதுரிஸா கட்டிடம் அமைத்துக் கொடுத்து, ஒஸ்தாத்துகளுக்கான சம்பளம் கொடுப்பதற்காக நிரந்தர வருமானத்திற்காக இரண்டு ஏக்கர் புளியடி வம்மித்துறை காணியும் கொடுத்து, சகல வசதிகளையும் வழங்கியவர் நெறிபிட்டிமுனையைப் பிறப்பிடமாகக் கொண்ட முகம்மது உஸைன்லெப்பை போடியின் புதல்வர் தம்பி சாஹிபுப்போடி (மூத்தபோடி) என்பவராவார். இவர் TS. அக்பர்



மஸ்ஜிதுல் ஜாமிஉல் கபீர் ஜும்ஆ பள்ளிவாயல்




மஸ்ஜிதுல் ஸலாம் பள்ளிவாயலின் பழைய தோற்றம்



மஸ்ஜிதுல் ஹுதா பள்ளிவாயலின் பழைய தோற்றம்




மஸ்ஜிதுல் பலாஹ் பள்ளிவாயலின் பழைய தோற்றம்



மஸ்ஜிதுல் ஆசூர் பள்ளிவாயல்



மஸ்ஜிதுல் ராஜிஹி பள்ளிவாயல்



மஸ்ஜிதுல் ஹுனாபா பள்ளிவாயல்



கிட்டங்கி வீட்டுக்கு அருகாமையில்
அமையப் பெற்றிருக்கும் கோயில்.

அதிபர் அவர்களின் தந்தையாவார். எனக்கு மூத்தவாப்பா ஆவார். இவர் இம்மதுரிஸாவை 1926ம் ஆண்டு ஸ்தாபித்துள்ளார். இக்குர்ஆன் பாடசாலையில் இற்றை வரைக்கும் 8000 ற்கும் மேற்பட்ட மாணவர்கள் குர்ஆன் ஓதி ஆரம்பக்கல்வியை பெற்றிருக்கிறார்கள். நூறுகது மேற்பட்ட மாணவர்கள் மௌலவிகளாக வெளியாவதற்கு இக்கல்லூரி வித்திட்டிருக்கிறது. இவ்வாறான நல்ல பல சேவைகளை செய்வதற்காக ஜு்ம்ஆ பள்ளிவாயல் பரிபாலனசபை தம்பி சாஹிபுப்போடியாரினதும், அவரது மனைவி குழந்தை உம்மாவினதும் ஜனாஸாக்களை மதரஸா வளவிற்குள் அடக்கம் செய்ய வேண்டும் எனத்தீர்மானித்ததற்கு அமைய 1970ம் ஆண்டு அடக்கம் செய்யப்பட்டார்கள்.

இம்மதரஸாவின் நிர்வாகத்தை அவருடைய காலத்தில் அவரே நிர்வகித்து வந்துள்ளார். அவர் மரணத்தை தொடர்ந்து அவரது மூத்தமகன் TS. அக்பர் அதிபர் பராமரிப்பு பணிகளில் ஈடுபட்டு வந்தார். அவரது மரணத்திற்குப் பின்னர் அவரது இளையதம்பி TS. றசூல் C.O அவர்களால் பராமரிக்கப்பட்டது. தற்பொழுது அவர் மருதமுனையில் வசிப்பதால் அவருடைய மருமக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பாக சட்டத்தரணி அல்ஹாஜ் MI. அஸீஸ் பொறுப்பேற்றார். அதன் பின்னர் 1935ம் ஆண்டு கட்டப்பட்ட கட்டடம் உடைக்கப்பட்டு தற்போதைய புதிய கட்டடம் உருவாக்கப்பட்டது. இக்கட்டடத்துக்கு அல்ஹாஜ் AMA. ஜாயா வனபரிபாலன பணிப்பாளரின் முயற்சியால் கூரைக்கு சீற் வழங்கப்பட்டது. AMA. குசையிர் பங்களிப்புகள் செய்தார். மேலும் அல்ஹாஜ் CBM. சியாம் ரூபவாஹினி கூட்டுத்தாபன செய்திப்பணிப்பாளர் அவர்களின் முயற்சியால் கணணி வசதிகள், சிறுவர் யூங்கா, மலசல கூடத்தொகுதி போன்றவை அமைக்கப்பட்டுள்ளன. தளபாடங்கள், ஒலிபெருக்கி வசதிகள் போன்றவற்றுக்கும் அவரே பங்களிப்பு செய்தார். இதற்கு முன்னின்று உழைத்தவர் MLA. கபீர். அவரோடு அனுசரனையாக UCM. கிபார், BF. லியாஸ், A. சுஹாஸ், MT. பிர்ணாஸ், B. அகமட் பெறோஸ், DKM. றிஸ்வி, MLM. ஜஹாங்கிர், R. ஹு்மைட், R. ஜெலௌட், AMA. பசால், MLA. கையூம், A. மதானி, MI. றியால், DM. உவைஸ், ML. ஹனீம், K. ஜெரீத், MI. மன்சூர், DM. அஜ்மீர், CM. சுபின், DKM. மௌசீன், MT. றம்சீன், CM. கியாஸ், A. றுசூத், B. அகமட் ஜெரோஸ், AM. அன்பாஸ் போன்றோராகும்.

பின்னர் மக்தப் என்னும் பிரிவு தொடங்கப்பட்டு வெகு விமர்சையாக நடைபெற்று வருகிறது. ஆரம்பப் பணியாளர்களாக A. றுசுத் மலிக், MLA. கபீர், AM. ஹு்சையிர் ஆகியோர் திறம்பட


மேற்கொண்டு வருகிறார்கள். இப்பிரிவு 2015-05-01ல் ஆரம்பிக்கப்பட்டு ஆசிரியர்களாக மௌலவி AH. ஜிஹாத், மௌலவி S. றிஹாப் ஆகியோர் கற்பித்தல் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

## பெரிய பள்ளிவாயல் குர்ஆன் மதரஸா


நெற்பிட்டிமுனை ஜும்ஆப் பள்ளிவாயலுக்கு அருகாமையில் குர்ஆன் மதரஸா ஒன்று இருந்தது. அந்தப் பிரதேசத்தில் உள்ள மாணவர்கள் குர்ஆன் ஓதி வந்தார்கள். இம்மதரஸா இப்பொழுது உள்ள பள்ளிவாயலின் வலப்பக்கத்தில் அமைந்திருந்தது. பள்ளிவாயல் கட்டிட நிர்மாணப் பணிகள் ஆரம்பமானது முதல் மேற்படி குர்ஆன் மதரஸா கமு/அல் அக்ஸா மகா வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவில் நடாத்தப்பட்டு வருகிறது. ஏறக்குறைய 1955ல் கட்டப்பட்டதாக சான்றுகள் கூறுகின்றன. இதில் ஆலிம்களாக

- சுங்கான் ஆலிம்
- மு. ஜாசீன் பாவா லெவ்வை (கலிபா)
- கூனர் ஆலிம் ஆகியோரும்

இவர்களுக்கு பிறகு உலமாக்கள் பாரமெடுத்து கற்றுக்கொடுத்து வருகின்றனர்.



குருந்தையடி அப்பா (பாவா அப்பார்) ஸியாரம்
(இது சுமார் 10ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.)



கிணற்றுக்கு சுமார் 50 யார் தூரத்தில்
வாபா பிள்ளை ஸியாரம் அமையப் பெற்றிருந்தது.
இதுவம் சுமார் 10ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.
எனினும் சுமார் 60 வருடாங்களுக்கு முன்னர்
இது கபளீகரம் செய்யப்பட்டு வீடு அமைக்கப்பட்டுள்ளது.

# ஸியாரங்கள்


நெற்பிட்டிமுனையின் முதுசங்களில் முதன்மை வகிப்பது இந்த ஸியாரங்களாகும். அவ்வகையில் நெற்பிட்டிமுனை சவக்காலையின் கிணற்றடிக்கு 150 மீற்றர் தூரத்தில் PT கனி கிராம சேவை அலுவலரின் வளவிலிருந்து வட்டையோரமாக அமையப் பெற்றிருந்த ஸியாரம் பாவாப் பிள்ளை ஸியாரம் ஆகும். இந்த ஸியாரமானது கி.பி. 10ம் நூற்றாண்டினைச் சேர்ந்ததாகக் கருதப்படுகின்றது.

இந்த ஸியாரம் தற்போது அழிக்கப்பட்டு அவ்விடத்தில் வீடு நிர்மாணிக்கப்பட்டுள்ளமையை காண முடிகின்றது. இந்த ஸியாரம் கபளீகரம் செய்யப்பட்டிருப்பதனை நம்மூர் அவதானம் செலுத்தாமல் இருப்பதும் கவலையளிக்கின்றது.

அதே காலப்பகுதியில் நமது இன்னுமொரு ஸியாரம் நமது முன்னோர்களின் பாரம்பரிய விவசாய நிலமாகிய நடுக்கண்டம் எனும் வயல்வெளியில் இருக்கின்றது. இது குருந்தையடி அப்பா ஸியாரம் ஆகும். இந்த ஸியாரம் இன்றுவரை நிலைத்திருக்கின்றது. இப்படிப்பட்ட ஸியாரங்கள் முஸ்லிம்களின் வரலாறுகளைக் கூறுவதாகும். இவைகள் பாதுகாக்கப்படல் வேண்டும்.

நமது ஊர் இன்று நேற்று தோன்றியதல்ல. சிந்துபாத் எனும் கடலோடி இலங்கையின் கிழக்குச் சீமையிலே ஒரு துறைமுகத்தில் தங்கியதாகவும் அத்துறைமுகப் பிரதேசத்தில் சிலர் வேளாண்மை செய்து கொண்டிருந்த தாகவும் அவ்விவசாயிகளோடு சிந்துபாத் அறபு மொழியில் உரையாடியதாக வும் தனது கடற்பிரயாண அனுபவ நூலில் குறிப்பிட்டிருப்பது இங்கு கவனிக்கத்தக்கதாகும். இதனை உற்றுநோக்கும்போது நீண்ட காலத்துக்கு முன்பிருந்தே அரேபியர்கள் நமதூர் பிரதேசங்களில் வாழ்ந்திருப்பதாகவும் விவசாயம் செய்திருப்பதாகவும் நம்பப்படுகின்றது.

"கிழக்குச் சீமையிலே" என்று கூறப்பட்டிருக்கும் துறைமுகம் கிட்டங்கி துறைமுகமாகக் கருதப்படுகின்றது.



குருந்தையடி அப்பா ஸியாரத்தில் காணப்படும் கல்வெட்டு
(சுமார் 10ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருப்படுகின்றது)

# நெற்பிட்டிமுனை பாடசாலைகளின் வரலாறு

1890ம் ஆண்டுக்குப் பிறகுதான் கல்வியின் அவசியம் உணரப்பட்டது. அக்காலத்திற்கு முன்னர் வாழ்ந்த மக்கள் ஏடுகளையும் எழுத்தாணிக் கூரையையும் கொண்டு கற்றிருக்கிறார்கள். தமிழர்கள் குருகுலக்கல்வி மூலம் கற்று வந்திருக்கிறார்கள். அந்த வகையில் M.U. தம்பி சாஹிபுப்போடி, M.U. சரிவுப்போடி போன்றோர் தமிழர்களோடு நெருங்கிய உறவு வைத்திருந்ததால் ஏட்டில் படிக்க, எழுத கற்றுக்கொண்டார்கள். அவர்களைப்போல் இவ்வூரைச்சேர்ந்த இன்னும் சிலரும் அவ்வாறு கற்றுக்கொண்டார்கள். இவ்வகையில் இந்த ஊரில் கல்வி வரலாறு ஆரம்பமானது. சிலர் இயற்கையாகவே கவி புனைவதிலும், கதைகள் உருவாக்குவதிலும், நொடிகள் கட்டுவதிலும், அறம் பாடுவதிலும், நாடகங்கள் தயாரிப்பதிலும் திறமை பெற்றிருந்தார்கள். வேறு சிலர் மந்திரங்கள், வைத்தியங்கள் செய்வதிலும் வல்லமை பெற்றிருந்தார்கள். மந்திரங்களைக் கொண்டு வைத்தியங்கள் செய்வதிலும் பெண்கள், திருடர்களை வரவழைத்தல், அங்கமிடுதல், வசியம் பண்ணுதல் போன்றவற்றையும் தமது தொழிலாக செய்துவந்திருக்கிறார்கள். பேய், பிசாசுகளை விரட்டுதல், வரவழைத்தல் என்பனவும் இவர்களது கைவந்த கலையாக இருந்திருக்கிறது.

**வசியம் பண்ணுதல்**

மந்திரம் சொல்லி ஊதி பெண்ணின் உடலில் பூசுவது அல்லது மந்திரம் சொல்லி ஊதி சாப்பாட்டோடு கொடுப்பது இப்படிக் கொடுத்து வசியப்படுத்தி வரவழைப்பது வசியம் பண்ணுதல் என்று சொல்லப்படுகிறது. ஆடவர்கள் பெண்களை வசியப்படுத்துவதற்காக மந்திரவாதிகளைக் கொண்டு செய்யப்படும் முறையாகும். காதலித்த பெண் விரும்பாவிட்டால் அவளை வசப்படுத்தி எடுப்பது, சேர்ந்திருக்கும் இருவரை பிரிப்பது போன்றன அக்கால மக்களுக்கு கைவந்த கலையாக இருந்திருக்கிறது.

1. சேத்தி மருந் தோ
செவ்விளநீர் ஓதிய தோ
எண்ணெய் தெறித்த தோ - நீ
என் முகத்தைப் பாராமல்.

2. பாவக்காய் பிஞ்செடுத்து
பச்சோணான் குச்செடுத்து
சேத்தி மருந்தரச்சி - உன்ர
சேலையில பூசுவண்டி

## அங்கமிடுதல்

கோபதாபங்கள் ஏற்படும்போது அல்லது பிணக்குகள் ஏற்படுகின்றபோது ஒருவரை ஒருவர் அழிப்பதற்காக (இறக்கச் செய்தல்) அங்கமிடுவது வழக்கமாகும். இது சேவல், பாம்பு, ஓணான் முதலிய பிராணிகளை மந்திரம் சொல்லி, ஏவி எதிரியினுடைய பெயருக்கு உருப்பண்ணி அனுப்புவதாகும். இப்பிராணிகள் உரியவரிடம் சென்று தீண்டினால் உடனே மரணம் ஏற்பட்டு விடும் எனப்படும். இதனையே 'அங்கமிடுதல்' என்று சொல்லப்படுகிறது.

## பேய் பிசாசுகள் விரட்டுதல்

மந்திரவாதியை அழைத்துவந்து பேய்பிடித்த பிள்ளைக்கு வைத்தியம் செய்து மந்திரம் ஓதி மடை வைத்து ஊரின் நாலாம் சந்தியில் பேய்க்கு உணவுப்பண்டங்கள் படைத்துவைத்து பேய், பிசாசுகள் விரட்டப்படுகிறது. அம்மடையில் பாக்கு, வெற்றிலை, பூக்கள், மஞ்சள், கோழிச்சேவல், நாணயங்கள், இளநீர், உணவுப்பண்டங்கள் என்பன பேய்க்கு படைக்கப்படுகிறது.

## வைத்திய முறை

அக்கால வைத்திய முறை முற்றிலும் மூலிகைகளும், பிராணிகளின் உடல் உறுப்புகளும் சேர்க்கப்பட்டு மந்திரம் சொல்லி வைத்தியர்கள் வைத்தியம் செய்கின்றனர். இம்முறை வைத்தியங்கள் யூனானி முறை வைத்தியத்திலிருந்து திரிபுபட்டு வந்ததாகக் கருதப்படுகிறது. இம்முறைகள் மூலம் நோயாளிகள் குணம் பெற்றதாக

வரலாறுகள் கூறுகின்றன. வைத்தியர்களின் ஏட்டிலிருந்து பெற்ற ஒன்றுபின்வருவாறு காணப்படுகின்றது.

வானத்தில் மின்னும்
மலையரசன் தன்னகமும்
ஏனத்தின் கொம்பும்
இராவறவான் நெஞ்செலும்பும்
கூனக் கிழவன் முதுகெலும்பும்
கொடுங் கிழவன் பல்லும்
கானக் குறத்தி
முலைப்பாலில் அரைத்து
கண்ணில் விட
ஆணிப்பு வந்தாலும்
அணுகாதாம் ஒரு நாளும்

- ♦ மலையரசன் - களுகு
- ♦ ஏனத்தின் கொம்பு - பன்றியின் கொம்பு
- ♦ இராவறவான் நெஞ்செலும்பு - ஆலா
- ♦ கூனக் கிழவன் - முயலின் முதுகெலும்பு
- ♦ கொடுங் கிழவன் - ஆமை
- ♦ கானக் குறத்தி - பசுமாடு
- ♦ ஆணிப்பு - நோய்

இங்கே சொல்லப்படும் பாடல் கண் நோய்க்குரியதாகும். இவ்வாறு அக்கால வைத்தியர்கள் பாடல்களாகவே ஏடுகளில் பதிந்திருக்கிறார்கள். காரணம் இலகுவாக மனனமிடுவதற்காகவும், ஏடுகளில் எழுதுவது இலகுவானது என்பதற்காகவுமே இவ்வாறு பயன்படுத்தியிருக்கிறார்கள்.

**முறிவு வைத்தியம்**

இம்முறிவு வைத்தியம் இன்றுவரை நிலைத்திருக்கிறது. முறிந்த இடத்தில் மட்டை வைத்துக் கட்டி எண்ணெய் தேய்த்து, மூலிகை மருந்து அரைத்துப்பூசி பின்னர் பத்துப்போட்டு முறிவை ஒட்ட வைக்கிறார்கள். பத்து பல தடவைகள் போடப்படும். இறுதியாக வச்சீரப்பத்துப் போடப்பட்டு குணப்படுத்தப்படுகிறது. இவ்வைத்தியம்

செய்தவர்கள் MU. தம்பிசாஹிபு போடியார். அவர் மகன் TS. கரீம் ஆகியோர் செய்து வந்தார்கள்.

**பாம்பு வைத்தியம்**

இவ்வைத்திய முறையும் பாடல்பாடி என்ன இனப்பாம்பு என இனங்கண்டு பாம்பு இனத்திற்கேற்ப வைத்தியம் செய்யப்படுகிறது. பின்னர் விசக்கல் வைத்து விசம் உறிஞ்சப்பட்ட பின்பு விசக்கல் கழன்று கீழே விழும். அதன்பிறகு மூலிகைகள் அரைத்துப் பூசப்படுகிறது. மயக்க நிலையில் இருப்போரை வேப்பிலைக்கொத்து கொண்டு மந்திரம் சொல்லி அடிப்பார்கள். அதன்பிறகு மயக்கம் தெளியும். அதனைத் தொடர்ந்து மூன்று நாட்கள் வைத்தியம் செய்யப்பட்டு வீட்டுக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

இன்னுமொருமுறை இருக்கிறது பாம்பை வரவழைத்து விசத்தை கடிவாயில் பாம்புவாய் வைத்து விஷத்தை உறிஞ்சிக் குடித்துவிட்டு பாம்பு திரும்பிவரும். அதற்கு பாலும் பழமும் கொடுத்து திருப்பி அனுப்பி வைக்கப்படும். இதற்கு திறமைவாய்ந்த மந்திரவாதிகளால் தான் செய்ய முடியும்.

- MU. தம்பிசாஹிபு போடியார்
- TS. அக்பர், அதிபர்
- S. அபூபக்கர் (கிண்ணியாக் கொட்டர்)
- MH. இத்ரீஸ், தொழில்நுட்ப உத்தியோகத்தர்
- MU. சரிவுப் போடியார்
- திரு. முருகேசு ஆசிரியர்
- அருமைப்பெருமாள் ஆகியோரை குறிப்பாகக் கூறமுடியும்.

**அதிசயச் செயல்**

அருமைப் பெருமாள் ஒரு மந்திரவாதி. விச வைத்தியரும் கூட. இவர் சட்டப்பிரச்சனை காரணமாக பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு ஜெயிலில் அடைக்கப்பட்டிருந்தார். அந்த சந்தர்ப்பத்தில் வழக்கை விசாரிக்கும் நீதிபதியின் மகளை பாம்பு தீண்டிவிட்டது.

இக்காலத்தைப்போல் வைத்தியசாலையில் அனுமதித்து வைத்தியம் பார்ப்பதில்லை. அதற்கான வசதிகளும் இருக்கவில்லை. அப்படியான சந்தர்ப்பத்தில் இந்நிகழ்வு ஏற்பட்டது. அந்தவேளையில் தான் அருமைப் பெருமாள் ஜெயிலில் இருக்கிறார். நீதிபதி அவர்கள் கோர்ட்டுக்கு வரவில்லை. விடயத்தை அறிந்த அருமைப் பெருமாள் காவலாளர்களை அழைத்து என்னால் பிள்ளையை குணப்படுத்த முடியும். எனக்கு அனுமதி தாருங்கள் எனக் கேட்டார். அனுமதி வழங்கப்படுகிறது. உடனே பிள்ளையை பார்த்துவிட்டு சம்மந்தப்பட்ட பாம்பு எங்கு இருக்கிறது எனத்தேடினார். கடைசியில் தூரத்தே ஒரு பாம்புப்புற்று காணப்பட்டது. புற்று இருந்த இடத்திலிருந்து பிள்ளை இருக்கும் இடம் வரைக்கும் வாழையின் மடலை உரித்தெடுத்து பாம்புவரும் பாதை போல் செய்து பால், பழம் கரைத்து ஒரு தட்டிலும், பால் ஒரு தட்டிலுமாக வைத்துவிட்டு மந்திரம் சொல்லி பாம்பை வரவழைத்தார்.

பாம்பு வந்தது. பிள்ளையுடைய கடிவாயில் வாயை வைத்து உறுஞ்சி இழுத்தது. சற்று நேரத்திற்குப்பிறகு பிள்ளை விழித்து விட்டது. பாம்பு பாலில் விஷத்தைக் கக்கிவிட்டு பழச்சாற்றை உறிஞ்சிக் குடித்துவிட்டு தானாக தனது இருப்பிடம் நோக்கிச் சென்றது. அங்கு இருந்தவர்கள் வியப்படைய மூலிகை மருந்தெடுத்து கடிவாயில் தடவிவிட்டு எழுந்து நடக்கச் சொன்னார். வைத்தியரின் இந்நிகழ்வைக்கண்ட நீதிபதி அவரைப் பாராட்டி அவருக்கு விடுதலை அளித்து பல்லாக்கில் ஏற்றி அவருடைய வீட்டிற்கு அனுப்பிவைத்தார். இப்படி திறமைவாய்ந்த மந்திரவாதிகளும் வாழ்ந்திருக்கின்றார்கள் என்றால் அவர்களின் உடலைக்கூட மண் தின்னுமா என்ற கேள்வி எழுகிறது. இவ்வூரவர் பரம்பரை வைத்தியர்கள் என்பதற்குச் சான்றாக கீழ்வரும் வரலாற்றுச் சம்பவத்தை கூறமுடியும். 12ம் நூற்றாண்டில் பொலன்னறுவை இராசதானியை ஆண்ட மகாசேனனுக்கு வைத்தியம் செய்வதற்காக இவவூரைச் சேர்ந்த செல்லத்தம்பி பரிகாரியும், சாய்ந்தமருதூரைச் சேர்ந்த ஆதம்லெப்பை பரிகாரியும் மன்னனால் அழைக்கப்பட்டு அவரில் பீடித்திருந்த நோயை சில நிமிடங்களில் குணப்படுத்தியதால் மன்னனால் பாராட்டும், பரிசும் பெற்று வந்ததாக வரலாறு கூறுகிறது.

**கண்ணூறு கழித்தல்**

கண்ணூறு பட்டவரை கூட்டிவைத்து தூயசாம்பல் அல்லது திருநூறு அல்லது பைடர் போன்றவற்றை கையில் வைத்துக்கொண்டு கண்ணூறு பட்டவரின் நெற்றியிலும், முகத்திலும் மந்திரம் சொல்லி

தூவுவார்கள். அதேபோன்று நகம்படாத தண்ணீர் எடுத்து தண்ணீரை ஓதி, ஊதி முகத்தில் அடிப்பார்கள். சிறுபிள்ளைகள் திணுக்கிட்டு எழுந்து கத்தும். அப்போது சுகமாகிட்டது என்று கூறுவார்கள். இதேமுறை இப்பொழுது சற்று மாற்றம்பெற்று ஆயத்துல் குர்ஷியை ஓதி குடிக்கக்கொடுத்தல், இசும் கட்டுதல், பீங்கானில் அரபு எழுத்தை எழுதி குடிக்கக்கொடுத்தல் போன்றவை உலா வருவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. இதுபற்றி ஏட்டிலிருந்து கிடைத்த ஒரு மந்திரம் வருமாறு:

எரிஎரி சக்கரம்
எரிபுரி சக்கரம்
திருமாச் சக்கரம்
திரிவர சக்கரம்
கன்னிப் புடாரி
கண்ணி கொண்டு
வாராளைக் கேட்டு
கண்ணூறு, நாவூறு
பில்லி வஞ்சுனை
சூனிய மெல்லாம்
எரி எரிந்து படு படுத்து
பூந்துறைக்கி பூமிக்குள்
புகுந்து போகவே
சுபாஹா சுபிக்

என்று கூறி சாம்பல், திருநூறு அல்லது பைடர் கொண்டு நெற்றியில் தடவி துப்பிக் கழித்து விடுவார்கள். நோய்கள் பறந்து போகுமாம் என்று ஒரு மூதாட்டியிடம் கேட்டறிந்து கொண்டேன்.

**மனநோய் வைத்தியம்**

இம்முறை வைத்தியம் இன்றும் எமது கிராமத்தில் செய்யப்படுகிறது. ஆரம்பகாலத்தில் நோயாளியை குற்றியில் போட்டு, சங்கிலியால் பூட்டுப்போட்டு பூட்டப்படும். பின்னர் மூலிகைகள் சேர்த்து அரைத்து தலையில் தப்பப்படும். நோயாளியின் தலைமயிரை வளித்து

மொட்டை அடிக்கப்படும். அந்தநோயாளி வைத்தியரின் வீட்டில் வதிவிடமாகவிருந்து வைத்தியம் பண்ணப்படும். பூரண சுகம் பெற்றதும் நோயாளி வீட்டுக்குப்போக அனுமதிக்கப்படுவார். அரைப்பு பலநாட்கள் தப்பி குளிப்பாட்டப்படுவார் அவரை அடக்குவதற்கு வைத்தியர் பிரம்புடன் வந்து அடித்து அடக்குவார். அந்தநோய் வந்தவர்கள் பூரண சுகமடைந்து தான் வீடு திரும்புவார்கள். அவ்வாறு பூரண சுகம் அடையாதவர்கள் எவரும் இல்லை என வைத்தியர் என்னிடம் கூறினார். இம்முறையில் வைத்தியம் செய்பவர்கள் இருவர் இவ்வூரில் உள்ளனர்.

1. மர்ஹூம் TS. கரீம் வைத்தியர் (பெரும் வைத்தியர் சுலையிப்போடியின் பேரரின் மகன்)

2. MM. இப்றாகீம் வைத்தியர் (தேசிக்காய்) (பெரும் வைத்தியர் சுலையிப்போடியின் பேரரின் பேரன்)

குற்றியில் போடுவது என்பது மிகவும் கடினமான செயற்பாடாகும். பெரிய தென்னம் குற்றியை எடுத்து அதில் இரண்டு கால்களையும் ஓட்டக்கூடியவாறு துளையிட்டு இருகால்களையும் அதனுள் செலுத்தி (ஓட்டக்கூடியவாறு) அலவாங்கை நாட்டி அதனோடு இணைத்து சங்கிலியால் கட்டுவார்கள். நோயாளி அசையமுடியாது. அதற்குப்பின்தான் மருந்து, உணவு முதலியன கொடுக்கப்படும். நல்ல பிரம்படியும் கிடைக்கும். சுகமானதும் குற்றியை கழற்றி விடுவார்கள்.

கி.பி. 1900ம் ஆண்டிற்கு முன்னர் இவ்வாறு ஏடுகளைக் கொண்டு கற்றவர்கள் தொழிலுக்காக வைத்திய முறையை கற்றிருக்கலாம். இம்முறை பழங்காலத்து ஞானிகள் பயன்படுத்திவந்த கல்வி முறையாகக் கொள்ள வேண்டியுள்ளது. மீதமானவர்கள் கற்காமலே இருந்திருக்கிறார்கள். பத்து வீதமானவர்கள் மாத்திரம் கற்றிருக்கிறார்கள். இதற்குக்காரணம் அப்போது கல்வி வசதிகள் இருக்கவில்லை. மிஷனரி நெறி பாடசாலைகள் மாத்திரம் இயங்கியதாக அறியக்கிடைக்கிறது. மேலும் அங்கு சென்று கற்பவர்கள் மதம் மாற்றப்படும் நிலை அக்காலத்தில் நிலவி இருக்கிறது. அதன் பிற்பட்ட காலத்தில் சில மாணவர்கள் அங்குசென்று ஆங்கில மொழியில் கல்வி பயின்றுள்ளார்கள். உவெஸ்லியம் மிஷனரி, பாத்திமா மிஷனரி, போன்ற பாடசாலைகளைக் குறிப்பிட முடியும்.

S. சாமித்தம்பி
1930

K.S. வைரமுத்து
1933-



I.M.A. குத்தூஸ்
1936 - 1938

T. பொன்னையா
1938-1949

T.S. கந்தையா
1949-1955



A.H. முஹம்மத்
1-7-1955 - 1-1-1959



S. அஹமதுலெவ்வை
1-11-1959 - 31-12-1962



M.M. அப்துல் காதர்
1-1-1953 - 30-04-1964



U.L. இஸ்மாயில் மரைக்கார்
30-04-1964 - 01-02-1967



M.S.M. காசிம்
30-02-1967 - 26-02-1973



M.M. இப்றாஹிம்
27-02-1973 - 30-08-1983



T.S. அக்பர்
20-10-1983 - 01-09-1984


V.M.M. இஸ்மாயில்
02-09-1984 - 30-06-1991


A.M.A. சமத்
01-07-1991 - 01-07-1995


A.M. ஜமால்தீன்
02-07-1995 - 13-02-2006


S.M.A. ஜஃபர்
14-02-2006 - 03-02-2009


S.H.M. அக்பர்
05-02-2009 - 30-09-10


M.L.A. கையூம்
15-10-2010 -இன்றுவரை

அக்காலத்தில் பெண்கள் கல்வி கற்பது தடையாக இருந்தது. இதன் முக்கிய நோக்கம் இஸ்லாமிய மார்க்க அடிப்படையில் பெண்கள் தனியாகச்செல்வது தடைசெய்யப்பட்டிருந்தது. ஊருக்கு மேற்கே கல்முனை வரைக்கும் காட்டுப்பிரதேசமாக இருந்ததும் ஒரு காரணமாக இருக்கலாம். துணிந்த ஆண் மாணவர்கள் மட்டும் சென்று கற்று வந்தார்கள். பிள்ளைகள் பார்வையாகுவார்கள், பேய், பிசாசுகளின் நம்பிக்கை, மதிய நேரத்தில் பேய்கள், பிசாசுகள் பார்வையாகும் என்ற நம்பிக்கை எல்லா மக்களிடமும் காணப்பட்டது. இதற்கு மேலாக துணிந்து சிலபெண் பிள்ளைகளும் கல்முனைக்குச்சென்று கற்று வந்திருக்கிறார்கள். அந்த வகையில் குறிப்பிடக்கூடிய பெண்மணி கொட்டாற்ற மகள் குழந்தை உம்மாவை குறிப்பிட்டு கூறமுடியும். அம்மாது பள்ளி செல்வதை ஊர்மக்கள் ஏளனம் செய்தனர். பாட்டுக்கள் பாடி பகுடிவதைகள் செய்தனர்.

குதிவால் உடுப்புடுத்து
குழந்தை உம்மா நடந்த நடை
முஸ்லீம் சனங்களெல்லாம்
முக்கியமாய் பேசுகினம்.
ஈனா கிடுகிடுக்க
என்னவென்று பார்மகளே
கொட்டாற்ற மகள்
குழந்தையும்மா வேலை எடுக்கா!

## அல் அக்ஸா மகா வித்தியாலயம்

இது போன்ற பாட்டுக்கள் பாடி நையாண்டி பண்ணினார்கள் என்றால் பெண்களின் கல்விக்கு பாரிய தடை இருந்திருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும். பின்னர் அப்பெண் பெரிய மனிசியானதும் அவருடைய பாடசாலை வாழ்வு முற்றுப்பெற்று விட்டது. இதனால் பெண்கள் கல்வி கற்க பயப்பட்டார்கள். பின்பு மருதமுனை, சாய்ந்தமருது,



கல்முனை போன்ற இடங்களில் பாடசாலைகளின் தோற்றம் ஆரம்பிக்கப்பட்ட பிறகு நெற்பிட்டிமுனைக்கும் அத்தேவை ஏற்பட்டது. அதனைத்தொடர்ந்து நெற்பிட்டிமுனை தமிழ்மக்கள் அக்கால வன்னிமையின் துணையோடு படித்த சில ஆசிரியர்கள், பொதுமக்கள் சேர்ந்து தற்போது சிவசக்தி மகா வித்தியாலயம் இருக்குமிடத்தில் 1930ம் ஆண்டு ஓலைகளால் குடிசை கட்டப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. 40 பிள்ளைகளும் 2 ஆசிரியரும் கடமையாற்றியதாகவும் 1934ல் பதிவு செய்யப்பட்டதாகவும் அறியக் கிடைக்கிறது.

இவ்வாறு முதலாவது அதிபராக S. சாமித்தம்பி கடமையாற்றினார். அப்பாடசாலை இயங்குவதைக் கண்ட முஸ்லீம்கள் கல்வியில் ஆர்வம்கொண்டு அப்பாடசாலையுடன் இணைந்து கற்கத்தொடங்கினர். இவ்வாறு தமிழ், முஸ்லீம் கலவன் பாடசாலை என்னும் பெயரில் அப்பாடசாலை இயங்கத் தொடங்கியது. சிவசக்தி பாடசாலை இருக்குமிடத்தில் பெண்களும், அல் அக்ஸா இருக்குமிடத்தில் ஆண் மாணவர்களுமாக பாடம் புகட்டப்பட்டு வந்தது. இவ்வாறு இப்பாடசாலை பின்னர் தமிழர், முஸ்லீம் கலவன் பாடசாலை என அழைக்கப்பட்டது. 1957ம் ஆண்டுவரை இரண்டு இன மாணவர்களும் ஒரே பாடசாலையில் கற்று வந்தார்கள். 1957ம் ஆண்டில் சிவசக்தி வித்தியாலயம், அல் அக்ஸா வித்தியாலயம் என இரண்டாகப் பிரிந்தன. கமு/அல் அக்ஸா வித்தியாலயத்தில் முதலாம் தரத்தில் சேரும்போது ஒரு கிணறு இருந்தது. அந்தக்கிணற்றை நடுவாகப் பிரித்து வேலி போடப்பட்டிருந்தது. அக்கிணற்றிலிருந்து இரண்டு பாடசாலை மாணவர்களும் தண்ணீர் அள்ளிக் குடித்தது இன்னும் என் மனக் கண்முன் இருக்கிறது.

**இப்பொழுது அதிபர்கள் வரிசையை அவதானிப்போம்.**

| | | | |
|---|---|---|---|
| 1. | S. சாமித்தம்பி | :- | 1930க்கு முன்னர் |
| 2. | KS. வைரமுத்து | :- | 1930 - 1936 |
| 3. | IMA. குத்தூஸ் | :- | 1936 - 1938 |
| 4. | T. பொன்னையா | :- | 1938 - 1949 |
| 5. | TS. கந்தையா | :- | 1949 - 1955 |
| 6. | AH. முகமட் | :- | 1955.07.01 - 1959.01.01 |
| 7. | S. அகமது லெப்பை | :- | 1959.11.01 - 1962.12.31 |
| 8. | MM. அப்துல் காதர் | :- | 1963.01.01 - 1964.04.30 |
| 9. | UL. இஸ்மாயில் மரைக்கார் | :- | 1964.04.30 - 1967.02.01 |

| | | | |
|---|---|---|---|
| 10. MSM. காசீம் | :- | 1967.02.30 - 1973.02.26 |
| 11. MM. இப்றாகிம் | :- | 1973.02.26 - 1983.08.30 |
| 12. TS. அக்பர் | :- | 1983.10.20 - 1984.09.01 |
| 13. VMM. இஸ்மாயில் | :- | 1984.09.01 - 1991.06.30 |
| 14. AMA. சமட் | :- | 1991.06.30 - 1995.07.01 |
| 15. AM. ஜமால்டீன் | :- | 1995.07.01 - 2006.02.13 |
| 16. SMA. ஜ.:.பர் | :- | 2006.02.13 - 2009.02.03 |
| 17. SHM. அக்பர் | :- | 2009.02.05 - 2010.09.30 |
| 18. MLA. கையூம் | :- | 2010.10.15 - இன்று வரை |

## தரம் 5 புலமைப்பரீட்சையில் சித்தியடைந்தவர்கள்

1. 1999ல் MA. பயாஸ்
2. 2000ல் MIF. ஜஹ்றானா
   AGS. நளீபா
3. 2001ல் IL. ஸர்ஜுன்
4. 2003ல் MZ. முனவ்வறா
5. 2004ல் JM. ஹஸீப்
   L. ஜெஸ்மின் நஹ்றார்
6. 2006ல் AG. ஜெஸீலா
   AR. இர்ஷா பர்வின்
   HM. சமியா
   AM. றிஸ்னா பானு
   FM. சௌமி
   ASM. அர்ஸத்
   UM. வஸீம்
7. 2007ல் AGM. சஜித்
   A. சாஜிதா
   R. பாத்திமா சபானா
8. 2008ல் T. சுமையா
   M. பாத்திமா சிறீன்
   AMM. ஸஜீத்

AGM. அஜீத்
9. 2009ல் MSM. சபீத்
AS. பாத்திமா சமா
10. 2010ல் MA. சானா அம்றி
11. 2012ல் AMM. றுபைக்
12. 2013ல் S. றிஸ்கானா
MR. பாத்திமா றுஜா
K. ஜெஸான் முகம்மட்
13. 2014ல் MA. பாத்திமா அனுசா பேகம்
NM. ஷான்
AH. பாத்திமா ஹிமா

## GCE O/L பரீட்சையில் ஒவ்வொரு ஆண்டிலும் முதல்தர பெறுபேறு பெற்றவர்கள்

1. 1975ல் A. லெப்பைக்கனி
2. 1976ல் M. பதுறுதீன்
3. 1980ல் I. அஸ்ரப்பு நிஸா
4. 1981ல் V. தாஹிர்
5. 1982ல் ML. ஹனீம்
6. 1983ல் M. நூறுல் ஹிதாயா
7. 1984ல் M. ஜீனைட்
8. 1985ல் ALM. சல்மான்
9. 1986ல் A. தாஹிறா
10. 1987ல் IM. முஹிஜிசாத்
11. 1988ல் V. தையூப்
12. 1989ல் S. உமறுநாச்சி
13. 1990ல் M. சாலிதீன்
14. 1991ல் AC. ஆரிபா வீவி
15. 1992ல் ML. தாஹிர்
16. 1993ல் MJM. றமீஸ்
17. 1994ல் MI. றினோஸா
18. 1995ல் CM. நஜீப்
19. 1996ல் I. பாயிஸ்
20. 1997ல் IM. சூபி

21. 1998ல் AG. சர்மிலா
22. 1999ல் A. றொபினா
23. 2000ல் AGM. நௌசாத்
24. 2001ல் I. இஸ்ஸடீன்
25. 2002ல் AG. தஸ்லீமா
26. 2003ல் ALM. பிர்னாஸ்
27. 2004ல் IL. ஜசலா பேகம்
28. 2005ல் K. சாஜிதா பர்வின்
29. 2006ல் AG. நளீபா
30. 2007ல் S. பாத்திமா றொசானா
31. 2008ல் நசீறா
32. 2009ல் MS. முனவ்வறா
33. 2010ல் L. ஜெஸ்மின் நஹார்
34. 2011ல் AR. றக்சானா
35. 2012ல் I. தஸ்னிகா பானு
36. 2013ல் J. சஜிதா
37. 2014ல் S. றுஸ்னா பஸ்லின்
38. 2015ல் MSM. சபீத்

## GCE A/L **பரீட்சையில்**
## **உச்ச பெறுபேறு பெற்றவர்கள்**

1. 1989ல் CBS. தாரிக் அலி
2. 1990ல் AL. ஹாலித்
3. 1991ல் P. இப்னுஹிதாய
4. 1992ல் V. தையூப்
5. 1993ல் ML. இஸ்ஹாக்
6. 1994ல் AK. தாஹிறா
7. 1995ல் CB. பௌசியா
8. 1996ல் AM. றஹுப்
9. 1997ல் ILS. அனீஸா
10. 1998ல் AA. நிமேரி
11. 1999ல் IL. நஸ்றீன்
UK. சிபாறா பானு

12. 2000ல் AHM. முஸாதிக்
13. 2001ல் AR. றதீனா
14. 2002ல் U. சுமைறா
15. 2003ல் AH. முபாஸ்
16. 2004ல் MJ. றம்யா
17. 2005ல் H. சபானா
18. 2006ல் A. றொஸானா
19. 2007ல் I. ஜெஸ்மின்
20. 2008ல் AM. றிஸாட்
21. 2009ல் AGS. நளீபா
22. 2010ல் I. ஹபீலா
23. 2011ல் AM. சாஜித்
24. 2012ல் ----------
25. 2013ல் AH. அஜிதா
26. 2014ல் AS. அப்றின்
27. 2015ல் N. ஜெஸ்றீன்
J. சபானா பேகம்
A. சரிலா
I. தஸ்னிகா பானு

## பல்கலைக்கழகங்கள் தெரிவானோர்

1. 1989ல் CBS. தாரிக் அலி
2. 1992ல் V. தையூப்
J. நிறோஸ்
3. 1993ல் ML. இஸ்ஹாக்
4. 1995ல் A. தாஹிறா உம்மா
5. 1996ல் AM. றஹுீப்
6. 1999ல் MM. றியாஸ்
I. பாயிஸ்
7. 2000ல் AHM. முஸாதிக்
8. 2003ல் AHM. முபாஸ்
I. காப்தீன்

9. 2004ல் MJ. றம்யா
AG. றிஸானா
MI. சர்பின்
AL. கஸ்பியா வீவி

10. 2006ல் IL. ஜெஸிறா
J. முஸாதிக் அயாஸ்
J. ஜபீனா

11. 2007ல் S. சுஹாஸ்

12. 2009ல் AG. சித்தி நளீபா

13. 2015ல் N. ஜெஸ்றின்
J. சபானா பேகம்

## கல்விக்கல்லூரிக்கு தெரிவானோர்

1. 1992ல் MI. சஹிலா
T. அஜீசா
AG. ஹினாயா

2. 1998ல் A. அஸ்வறுல் நிமைரி
MI. றினோசா
IL. சித்தி அனிஸா

3. 1999ல் UK. சிபாறா பானு
IL. நஸ்றீன்

4. 2000ல் A. அறிஸானா
AG. சாஜிதா
J. ஜுமைறா
IL. ஜுமையா

5. 2001ல் CM. பலாஹி

6. 2003ல் UK. நஜீப்
I. முஜீபா

7. 2004ல் S. ஜனூன்
SL. பௌசுல் கினாயா

8. 2005ல் AJ. சிபானா

MA. ஜனுல் ஆபிதா

9. 2006ல் A. றிலாஸ்

I. உபைதுல்லாஹ்

A. றொசானா

A. பர்வீன்

J. பளீலா

A. சாஹிலா

C. கபீரா

10. 2007ல் SM. லுபைத்

11. 2008ல் MA. ஹனாசா பேகம்

ML. இர்பானா பேகம்

12. 2011ல் MA. லுபைபா பல்தீஸ்

13. 2013ல் AH. அஜிதா

14. 2014ல் A. சாஜிதா அப்றின்

15. 2015ல் A. சரிலா

I. தஸ்னிக்கா பானு

1955.07.01ல் பாடசாலையைப் பொறுப்பேற்ற AH. முகமட் அதிபர் அவர்களின் வருகையை தொடர்ந்து மருதமுனை, பொத்துவில் இன்னும் பல ஊர்களிலிருந்தும் மாணவர்கள் இப்பாடசாலைக்குச் சேரத் தொடங்கினர். குதுபித்தீன், சக்காப் Z. மௌலானா, றகீம், றசாக், நாபி, அமீர், S. ஜின்னா, S. நயீம், MM. நிஜாமுத்தீன், SM. இஸ்மாயில், பதுறுத்தீன், சஹாப்தீன் போன்றோரை குறிப்பிட்டுக்கூற முடியும். இப்பாடசாலையிலே இவர்கள் க.பொ.த. சா/த பரீட்சையும் எழுதினர். அக்கால கட்டத்தில் சிறந்த க.பொ.த. சாதாரண தரப் பாடசாலையாக இப்பாடசாலை விளங்கியது.

O/L பரீட்சையில் சித்தியடைந்த MM. நிஜாமுத்தீன் என்பவர் இப்பாடசாலையிலே ஆசிரியர் நியமனத்தையும் பெற்றுக்கொண்டார். இத்தகவல் அவரது வாய் வழியாகக் கேட்டு அறிந்து கொண்டேன். பின்னர் அதற்கு பிற்பட்ட காலத்தில் M. அலியார் ஆசிரியராக இருந்தபோது விளையாட்டுத்துறையை பொறுப்பேற்றுக் கொண்டிருந்தார். அவருடைய முயற்சியின் பயனாக பல மாணவர்கள் விளையாட்டுத் துறையில் சாதனை படைத்திருக்கிறார்கள். குறிப்பாக உயரம் பாய்தலில் AL. சத்தார், AL. இஸ்மாயில், ஓட்ட நிகழ்வுகளில் SL. அப்துல் கரீம்

போன்றவர்களை குறிப்பிட முடியும். பிற்காலத்தில் ஏனைய ஊர் பாடசாலைகள் சற்று முன்னேற்றம் கண்டதன் காரணமாக வெளி!ர் மாணவர்கள் வருகை குறையத் தொடங்கியது. அதனால் O/L இலும் வீழ்ச்சி ஏற்பட்டது. அத்தோடு GCE A/L படிப்பதற்கு மாணவர்கள் கல்முனை ஸாஹிறாக் கல்லூரி, பாத்திமாக் கல்லூரி, உவெஸ்லி உயர்தர பாடசாலைகளுக்குச் செல்ல ஆரம்பித்தனர். இதனால் மாணவர் தொகை வீழ்ச்சி காணத்தொடங்கியது.

இது இவ்வாறு இருக்க, கற்றவர்கள் தொகை அதிகரித்தது. குறிப்பாக இப்பாடசாலை 1C தரத்திற்கும் தரம் உயர்த்தப்பட்டது. இது 1987ல் இடம்பெற்றது. இது VMM. இஸ்மாயில் மருதூர் கொத்தன் அதிபராக இருக்கும்போது ஏற்பட்டது. இந்த ஊரின் முதலாவது ஆசிரியராக S. அப்துல்லாஹ் (பயில்வான்) அவர்களும் அவர்களைத் தொடர்ந்து MM. இப்றாகீம், MSM. காசீம், TS. அக்பர் ஆகியோர் ஆசிரிய நியமனம் பெற்றனர். இதேவேளை பெண்களும் கல்வி கற்கத்தொடங்கினர். கணிசமான பெண்கள் கல்வியில் ஆர்வம் கொண்டு கற்கத் தொடங்கினார்கள். அதனால் ஊரில் கல்விப்புரட்சி ஏற்பட ஆரம்பித்தது. அதன் விளைவாக S. மீராஉம்மா ஆசிரியையும் அவர்களைத் தொடர்ந்து MC. கதீஜா உம்மா ஆசிரியையும் உருவானார்கள். இவர்களின் கவர்ச்சியால் மேலும் மேலும் பலர் கற்கத் தொடங்கினர். அந்தவகையில் ML. சம்சுன் நஹார் என்பவர் இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகம் தெரிவானார். இவரே ஊரின் முதலாவது பெண் பட்டதாரியாக வெளியானார். தென்கிழக்கிலே இவரே முதலாவது முஸ்லிம் பெண் பட்டதாரி என்னும் நாமத்தைச் சூடிக்கொண்டார். இவரைப்போன்று சம்மாந்துறையைச் சேர்ந்த உசைமா என்னும் பெண்மணியும் பட்டதாரியாக வெளியானார். அக்காலகட்டத்திற்கு சற்று முன்னர் கமு/அல் அக்ஸா வித்தியாலயத்தில் கல்வி கற்று வந்த SLA. கரீம் இங்கு A/L படிப்பதற்குரிய வசதியில்லாததன் காரணமாக கமு/ஸாஹிறாக் கல்லூரியில் A/L பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழகம் தெரிவானார். அவரைத்தொடர்ந்து SL. அபூபக்கர் என்னும் மாணவன் ஒரு வருடத்தின் பின்னர் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு தெரிவானார். இவர் இரண்டாம் வருடத்தில் இருக்கும்போது நோயின் காரணமாக இறந்துவிட்டார்.

இவ்ர்களுக்குப் பல வருடங்களுக்கு முன்னர் MSM. மரைக்கார் தம்பி விஞ்ஞான துறையில் கற்றவர். இவர் இந்தியாவுக்கு புலமைப் பரிசில் பெற்றுச் சென்றார். அவரைத்தொடர்ந்து A. அகமட் என்பவரும்

இந்தியாவுக்கு பட்டப் படிப்பிற்காகச் சென்றார். ஆனால் அவர் பட்டப்படிப்பை நிறைவுசெய்யாமல் திரும்பி ஊர் வந்துவிட்டார். MSM. மரைக்கார் தம்பி பட்டம் முடித்து வெளியானார். இவர்களே ஆரம்பகாலத்தில் கற்றவர்கள் என அறியக் கிடைக்கிறது. இவர்களைத் தொடர்ந்து விஞ்ஞான, கணித, வர்த்தக, கலைப்பட்டதாரிகளும் ஆசிரியர்களும் உருவாகத் தொடங்கினார்கள். மேலே சொல்லப்பட்ட MSM. மரைக்கார் தம்பி இந்தியா செல்லும்போது அவருடைய தந்தை MU. சரிவுப்போடியார் உருக்கமான பாடலொன்றைப் பாடி அழுதாராம்.

காரேறி, ரெயில் ஏறி
கரை கடந் தோடி
கலை தேடும் - மகனாரை
காத்தருளும் அல்லாஹ்!
என்குக்சோ உன்னிடம்
தஞ்சமென்று - அழுதார்

இது இவ்வாறிருக்க மாணவர்கள் இப்பொழுது டாக்டர்களாகவும், பொறியியலாளர்களாகவும், மிருக வைத்தியர்களாகவும், விஞ்ஞான பட்டதாரிகளாகவும், வர்த்தக பட்டதாரிகளாகவும், சட்டத்தரணிகளாகவும், கலைப்பட்டதாரிகளாகவும் வெளிவந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் ஒரே ஒரு சொத்தாக விளங்கும் கல்விக்கூடமாகிய கலங்கரை விளக்கு கமு/அல் அக்ஸா மகா வித்தியாலயத்தினை கவனிப்பதற்கும் அக்கறை செலுத்துவதற்கும் நம் முன்னோர்கள் தவறி விட்டனர். கல்விகற்று முடிந்ததும் தொழில் பெற்றுக்கொண்டதும் அயல் ஊர்களில் வசதியான இடங்களில் தமது திருமண வாழ்வை அமைத்துக் கொள்வதனால் இவ்வூரில் அக்கறையின்றி வாழ்வதால் பாடசாலையும் ஊரும் தாழ்ந்து போகும் நிலை காணப்படுகிறது. மேலும் சொல்லப்போனால் தாய்மார்கள் தங்களது பிள்ளைகளை ஊருக்கு வெளியே உள்ள பாடசாலைகளில் சேர்த்து இன்பம் காண்பதால் எதிர்காலத்தில் இந்த ஊரிலுள்ள இரு பாடசாலைகளும் மூடப்படும் நிலை ஏற்படும் என்பதில் எவ்வித சந்தேகமும் கொள்ளத்தேவை வராது என நான் நினைக்கிறேன். அதற்குச்சான்றாக பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு கடந்த வருடம் சேர்ந்த பிள்ளைகளை விட இவ்வருடம் குறைவாக இருக்கிறது. இனிவரும் வருடங்களில் அதைவிட குறைவாகச் சேரக்கூடிய நிலையும் உருவாகும் என நினைக்கிறேன்.

இதற்கெல்லாம் காரணம் நம்மூரின் படித்த முன்னோர் கவனிக்காது விட்டதேயாகும். அத்தோடு பெற்றோர்கள் வெளிப் பாடசாலைகளின் கவர்ச்சியால் ஈர்க்கப்பட்டு செல்வதும் எங்களுடையது என்பதை மறுப்பதும், எது என்ன நடந்தாலும் எனது பிள்ளை உருவாக வேண்டும் என்கிற கீழ்த்தரமான எண்ணமுமே இதற்கு காரணமாக இருக்கிறது. முன்னுள்ள படித்தவர்கள் கவனிக்காது போனாலும்கூட இப்பொழுது படித்தவர்கள், இளைஞர்கள், நலன்விரும்பிகள், நம்பிக்கையாளர் சபையினர் முதலானோர் பாராமுகமாக இருந்தால் நான் மேலே சொன்ன நிலைமை ஏற்பட வாய்ப்பு இருக்கிறது என்பதில் எவ்விதமான சந்தேகங்களும் கொள்ளத் தேவையில்லை.

## அல் லாபிர் வித்தியாலயம்

அல் லாபிர் வித்தியாலயம் உருவாக்க வேண்டுமென்ற நோக்கோடு பலபேர்கள் இருந்தபோதிலும் SPM. இஸ்மாயில் ஆசிரியருடைய துணிச்சலான முற்போக்கு அவ்விடத்தில் அப்பாடசாலை தோன்றுவதற்கு வித்திட்டது எனக் கூறலாம். மான்குளம் என்னுமிடத்தில் அமையப்பெற்ற இப்பாடசாலைக்கு மர்ஹூம் MHM. அஸ்ரப் அவர்களின் நிதி ஒதுக்கீடும் மண்போடுவதற்கும் கட்டடம் அமைப்பதற்கும் துணையாக இருந்தது. அந்தவகையில் உருவான இப்பாசாலையில் முதன்முதலில் 21 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 1997.02.17ல் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை படிப்படியாக வளர்ச்சி பெற்று இன்று தரம் 9 வரை வகுப்புக்களைக் கொண்டுள்ளது.

இதன் முதலாவது அதிபராக மருதமுனையைச் சேர்ந்த AR. அப்துல் றசீக் கடமையாற்றியிருக்கிறார். அவரைத்தொடர்ந்து பொறுப்பேற்ற அதிபர் SLM. ஜலாலுதீன் மிகவும் சிறப்பாக பாடசாலையை வழிநடத்தினார். ஆங்கிலத்தில் மோகம்கொண்ட அதிபர் அவர்கள் பிள்ளைகளை ஆங்கிலத்திலும் விளையாட்டுக்கள் பயிற்றுவிப்பதிலும் கற்பித்தல் செயற்பாடுகளிலும் தம்மை ஈடுபடுத்தி பயிற்றுவித்தார்கள். அதனால் ஒழுக்கத்தில் பிள்ளைகள் சிறந்து விளங்க காரணமாக அமைந்தது. அவரைத்தொடர்ந்து கடமையேற்ற HMA. வதூத் அதிபர் அவர்கள் கல்முனை முஸ்லீம் பிரிவு கோட்டக்கல்வி பணிப்பாளராகவும் கடமையாற்றிக் கொண்டிருந்ததன் காரணமாகவும் திடீரென ஏற்பட்ட சுகயீனம் காரணமாகவும் பாடசாலையின் வளர்ச்சியில் தற்காலிக தளர்வு ஏற்பட்டது.

அதன் பின்னர் பொறுப்பேற்ற SMA. ஜ.்.பர் அதிபர் அவர்கள் மிகச்சிறப்பாக பாடசாலையை வழிப்படுத்திக் கொண்டிருக்கும் வேளையில் கல்முனை முஸ்லீம் பிரிவு கோட்டக்கல்விப் பணிப்பாளராக பொறுப்பேற்க வேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்பட்டபோது அதிபர் பதவியை விட்டுவிட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டதால் அவர் கோட்டக்கல்விப் பணிப்பாளராக பதவியை உயர்த்திக் கொண்டார். அதன் காரணமாக பாடசாலை அனாதையாக்கப்பட்டபோது சாய்ந்தமருது கமு/மல்ஹர் சம்ஸ் வித்தியாலயத்தில் கடமையாற்றிய ஜெஸ்மினா ஹாரிஸ் இப்பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று வந்தார். அவரையே காரியாலயம் அதிபர் பொறுப்பை ஏற்கும்படி பணித்ததற்கு அமைய அவர் பாடசாலையை பொறுப்பேற்றுக் கொண்டார். இன்றுவரை அவரே அதிபராக கடமையாற்றிக் கொண்டிருக்கிறார்.

அல் லாபிர் என்னும் பெயர் காலம்சென்ற மீராசாஹிபு முதலாளி என்பவர் விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு ஒரு ஏக்கர் காணியை ஊருக்கு கொடுத்ததற்காக அவருடைய மரணித்த மகன் லாபிர் என்பவரின் பெயரை பாடசாலைக்கு சூடிக்கொண்டனர்.

## ஹிஜாக் கல்லூரி

மேற்படி ஹிஜாக் கல்லூரி என நாமம் சூடப்பட்ட தனியார் பாடசாலையானது 2007ம் ஆண்டு தொடங்கப்பட்டதாகும். இதன் ஸ்தாபகத் தலைவர் (அதிபர்) W. ஐயூப்கான் ஆசிரியர் ஆவார். பிரதி அதிபராக IM. சூபி ஆசிரியர் விளங்குகின்றார். இவர்கள் இருவருடைய முயற்சியாலும் ஹிஜாக் கல்லூரி சிறந்து விளங்குகிறது. தரம் 6 முதல் 11 வரையான மாணவர்கள் பிரத்தியேக நேரங்களில் கல்வி கற்று வருகின்றார்கள். இவர்கள் இவ்வூரில் சிறந்த பெறுபேறுகள் கிடைப்பதற்கு வித்திட்டிருக்கிறார்கள். 6ம் கொளணி, 5ம் கொளணி, 4ம் கொளணி போன்ற கொளணிகளில் இருந்தும் மாணவர்கள் வந்து கல்வி கற்கின்றார்கள். மேலும் தமிழ் மாணவர்களும் சேர்ந்து கற்று வருகிறார்கள். இக் கல்வி நிலையத்தில் கடந்த 2015ம் வருடம் 11ம் மாதம் O/L மாணவர்களுக்கான O/L தினம் கொண்டாடப்பட்டது. வருடா வருடம் O/L தினம், களப்பயணங்கள், சுற்றுலாக்களில் ஒட்டுமொத்தமாக பிள்ளைகள் கலந்து சிறப்பிப்பது இக் கல்வி நிலையத்தின் சிறப்புக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். குறிப்பாக தமிழ்மொழி, விஞ்ஞானம், கணிதம் போன்ற முக்கிய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. இக் கல்வி நிலையம் மேலும் சிறந்து விளங்க வேண்டும் என்பது இவ்வூர் மக்களின்

விருப்பமாகும். மேலும் மேலும் ஓங்கிவளர எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## எவரெஸ்ற் கல்வி நிலையம்

இக்கல்வி நிலையம் 2010ல் ஆரம்பிக்கப்பட்டது. இதன் ஸ்தாபகத் தலைவர் KLA. கபூர் ஆசிரியர் ஆவார். இக்கல்வி நிலையத்தில் வரலாறு, இஸ்லாம், ஆங்கிலம் முதலான பாடங்கள் போதிக்கப்படுகிறது. தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களுக்கு கற்பித்தல் செயற்பாடு நடைபெறுகிறது. 6ம் கொளணி, 5ம் கொளணி, 4ம் கொளணி போன்ற கொளணிகளில் இருந்தும் மாணவர்கள் வந்து கல்வி கற்கின்றார்கள். மேலும் தமிழ் மாணவர்களும் சேர்ந்து கற்று வருகிறார்கள். இக்கல்வி நிலையம் குறிப்பிட்ட காலத்தில் பல்வேறு வளர்ச்சியையும் சாதனையையும் புரிந்துள்ளது. இங்கு இஸ்லாம் பாடத்தை அஷ்ஷெய்க் ஜ.்.பர் மௌலவி அவர்களும் ஆங்கில பாடத்தை ஆசிரியர்களான MM. ஹஸ்னி மூஸா, ஜெஸ்மின், ரஹ்மான் ஆகிய ஆசிரியர்கள் கற்பிக்கின்றனர். KLA. கபூர் ஆசிரியரின் இக் கல்வி நிலையத்தில் கற்பவர்கள் எல்லாம் நல்ல பெறுபேறுகளைப் பெற்று விளங்குகின்றார்கள் என பரவலாகப் பேசப்படுகின்றது. இக் கல்வி நிலையத்தின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் எனது வாழ்த்துக்கள் என்றும் உண்டு.

## NTC கல்வி நிலையம்

இக்கல்வி நிலைய ஸ்தாபகர் CM. நஜீப் ஆவார். இவர் கல்முனை வலயக்கல்வி அலுவலக செயற்திட்ட உத்தியோகஸ்தராக கடமையாற்றுகின்றார். இவரே இக் கல்வி நிலையத்தின் அதிபராகவும் இருக்கிறார். இவர் 4, 5, 6ம் தரங்களுக்கு கல்வி போதிக்கின்றார். இக்கல்வி நிலையம் 2013ல் ஆரம்பிக்கப்பட்டது. இவர்கள் சிறுவர்களுக்கான கற்பித்தலை மிகச்சிறப்பாக மேற்கொண்டு வருகிறார்கள். இவருக்கு துணையாக DKM. மௌசீன் ஆசிரியர், சாஹிதா ஆசிரியை போன்றோர் கற்பித்து வருகிறார்கள். இக் கல்வி நிலையம் சிறுவர்களை மிகவும் கவரக்கூடிய ஒரு நிறுவனமாகும். பெண் ஆசிரியர்கள் கற்பிக்கும் கல்வி நிலையமும் இதுவாகத்தான் இருக்கிறது. இதன் காரணமாகவும் கற்பித்தல் திறன் காரணமாகவும் சிறுவர்கள் கவரப்படுகிறார்கள். சிறப்புபெற்று வளர்ச்சிபெற எனது வாழ்த்துக்கள்.

## CMF கல்வி நிலையம்

இக்கல்வி நிலையம் 2013ல் ஆரம்பிக்கப்பட்டது. இதன் ஸ்தாபகத்தலைவர் CM. பலாஹி ஆசிரியராவார். இக் கல்வி நிலையத்தில் வரலாறு. இஸ்லாம் போன்ற பாடங்கள் போதிக்கப்படுகின்றது. இக் கல்வி நிலையத்தில் வரலாற்றுப் பாடத்தை CM. பலாஹி ஆசிரியர் அவர்கள் கற்பிக்கின்றார்கள். அவரைத்தொடரந்து அஷ்ஷெய்க் AM. சாலித்தீன் (அதிபர்) கற்பித்து வருகின்றார். நிறைய மாணவர்கள் கற்கும் இக் கல்வி நிலையம் நெற்பிட்டிமுனை சந்தியில் அமையப் பெற்றிருக்கின்றது. இவ்வூர் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு இவர்களது சேவை தினந்தோரும் தேவை எனக் கருதுகிறேன். வாழ்த்துக்கள்.

## பிறின்ஸ் கல்லூரி

இக்கல்லூரி 2012ம் ஆண்டில் MM. றியாஸ் B.A அவர்களால் நிறுவப்பட்டது. இவரே இக் கல்வி நிலையத்தின் பணிப்பாளராக இருக்கிறார். இவர் சிறார்களின் கல்வியை மேலோங்கச் செய்வதன் மூலம் கல்வியில் உச்ச பயன்பெற முடியும் என்ற கொள்கையுடையவர். இவரொரு சிறந்த சமூக சேவையாளரும் கூட. தனது சொந்தச் செலவில் தனது சொந்த வளவைப் பயன்படுத்தி கட்டடங்கள் உருவாக்கி, பாலர் கல்வியில் மொழியில் பயன்பெற வேண்டும் எனக்கருதி மொழிப்பாடங்களில் தேர்ச்சியடைந்தவர்களைக் கொண்டு சிறப்பாக வகுப்புக்கள் நடாத்தி வருகின்றார். 2012ல் புதிதாக மாணவர்களைச் சேர்க்கும்போது 76 மாணவர்கள் சேர்ந்தார்கள். மூன்று ஆசிரியர்கள் பாடம் புகட்டினர்.

1. ULS. அஜமிலா
2. V. லூட்மேரி
3. I. பர்ஸானா

இதில் இரண்டு வகுப்புக்கள் உண்டு. LKGல் கற்பவர்கள் நான்கு வயதுக்குட்பட்டவர்களும் UKGல் ஐந்து வயதுக்கு உட்பட்டவர்களும் கற்று வருகின்றனர். இங்கு தமிழ்மொழி, ஆங்கிலமொழி, சிங்களமொழி, அரபுமொழிப் பாடங்களை திறமைபெற்ற ஆசிரியர்களைக் கொண்டு வழிநடாத்தி வருகின்றார். வருடாவருடம் பரிசளிப்பு விழாக்கள், கலை-கலாச்சார நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள், களப்பயணங்கள், கல்விச்சுற்றுலாக்கள் என்பன

நடைபெறுகின்றன. இதன் காரணமாக மாணவர்கள் கற்றல் கூச்சமின்றி மொழித்திறனோடு முதலாம் தரத்திற்கு தெரிவுசெய்யப்படுவதன் மூலம் மாணவர்களின் கற்றல் திறன் அதிகரிக்கின்றது.

இக்கல்லூரிக்கு கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் HMM. ஹரீஸ் அவர்கள் ரூபா 50,000 நிதி ஒதுக்கீட்டில் தளபாடக் கொள்வனவிற்காக வழங்கியுள்ளார்கள். அத்தோடு கிழக்கு மாகாணசபை உறுப்பினர் KJ. தவம் அவர்கள் 30,000 ரூபாவை ஒதுக்கியுள்ளார். இது சிறுவர் பான்ட் வாத்தியக்கருவிகள் கொள்வனவிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சிறார்களைக் கொண்டு பான்ட் வாத்தியக்குழுவை உருவாக்கத் திட்டமிட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும். இதுபோன்ற கல்விக்கூடங்கள் உருவாக்கப்பட வேண்டும். மேலும் ஒழுக்க விழுமியங்களும் போதிக்கப்பட வேண்டும். தற்பொழுது இக் கல்வி நிலையத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர். இக் கல்வி நிலையம் மேலும் மேலும் வளர்ச்சி பெற்று சிறந்து விளங்க எனது வாழ்த்துக்கள் என்றும் உண்டு.

MM. றியாஸ் அவர்களின் இம்முயற்சிக்கு துணையாக நின்றவர்கள்.

- RM. லியாஸ்
- A. யாஹிர்
- அஷ்ஷெய்க் AL. நாசிர் கனி (விரிவுரையாளர்)
- UL. தௌபீக் (முன்னாள் மாநகரசபை உறுப்பினர்)
- AR. பைறூஸ்கான் (ஆசிரியர்)
- AK. நூர்தீன்

## மீரா கல்வி நிலையம்

சிரேஷ்ட ஆசிரியர் ML சாலிதீன் (சமீர்) அவர்களின் முயற்சியினால் 2005ம் ஆண்டு நெற்பிட்டிமுன அல் அக்ஸா மாணவர்களின் நலன்கருதி மாலைநேரங்களில் விசேட வகுப்புக்களை நடாத்தி வந்தார். இந்நிகழ்வு கல்லூரி அதிபர் ஜனாப் AM ஜமால்தீன் அவர்களின் அனுமதியோடு மேற்படி பாடசாலையில் நடைபெற்று வந்தது. இதன்காரணமாக மாணவர்கள் சிறந்த பயன் பெற்றுவந்தார்கள்.

இவ்வாறிருக்கையில் AM ஜமால்தீன் அவர்கள் ஓய்வுபெற்றுச் சென்றதும் புதிதாக பதவியேற்ற SMA ஜ.்.பர் அதிபர் அவர்களுக்கும் விசேட வகுப்புகள் நடாத்தும் ஆசிரியர்களுக்குமிடையே ஏற்பட்ட சில முரண்பாடுகள் காரணமாக இந்த மாலைநேர வகுப்புகள் கைவிடப்பட்டு தனியாக கல்வி நிலையம் ஆரம்பிக்க முடிவாகியது. அதன்படி இக்கல்வி நிலையத்தினை சிரேஷ்ட ஆசிரியர் ML சாலிதீன் (சமீர்) அவர்கள் தனது தந்தையின் பெயரில் "மீரா கல்வி நிலையம்" என பெயரிட்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் ஸ்தாபகத் தலைவர் ML பதுவுத்தீன் அதிபர் அவர்களாவர்.

இக்கல்வி நிலையத்தில் தமிழ், ஆங்கிலம், கணிதம், வரலாறு போன்ற பாடங்கள் ML பதுவுத்தீன், NL சமீர், W. ஐயூப்கான், CM. பலாஹிர், ACM கிஷோர், N சுமன், AB நிமோரி, MTA சத்தார் ஆகியோரால் கற்பிக்கப்பட்டன.

இக்கல்வி நிறுவனம் கற்பித்தலில் மட்டும் கவனம் செலுத்தாது சிறப்பான சமூகப்பணிகளிலும் ஈடுபட்டு வந்தது. அதன் தொடரில் ஓய்வுபெற்றவர்களைப் பாராட்டும் விழாவினை ஏற்பாடு செய்தனர்.

இந்நிகழ்வுக்கு அன்றைய பிரதி உயர்கல்வி அமைச்சராகவிருந்த மையோன் முஸ்தபா அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டிருந்தார். இந்நிகழ்வில் பின்வருவோர் பாராட்டப்பட்டனர்:

அல்ஹாஜ் SPM இஸ்மாயில் ஆசிரியர்

அல்ஹாஜ் MSM யூசுப் ஆசிரியர்

அல்ஹாஜ் SLA ஹமீத் மௌலவி

ஜனாப் C காசிம் பாவா ஆசிரியர்

ஜனாப் KLM மஜீத் கிராம சேவை உத்தியோகத்தர்

ஜனாப் PT அபூபக்கர் கிராம சேவை உத்தியோகத்தர்

ஜனாப் AM ஜமால்தீன் அதிபர்

ஜனாப் YBA அலிபா நிருவாக அலுவலர்

ஜனாப் M மஜீத் முஅத்தினார்

ஜனாப் THM பாறூக் பொலிஸ் அலுவலர்


KM/KM/AL
SH
MAHA V DYALAYA



**முதல் வரிசை:** ஜனாப் KLA கபூர், திரு S சிவாகரன் (உதவி அதிபர்), ஜனாப் VM ஸம்ஸம் (பிரதி அதிபர்), அல்ஹாஜ் MLA கையூம் (அதிபர், மௌலவி AM சாலித்தீன் (உதவி அதிபர்), ஜனாப் C தௌபீக், ஜனாப் MAS ஜபருல்லாஹ்

**பின் வரிசை:** MBM ஸாஹிர் (KKS), ஜனாப் AKK றஹீம், ஜனாப் MM ஹில்மி, திரு V மௌனுஜன், ஜனாப் MR றபி அமான், ஜனாப் US ஸபீல், ஜனாப் AM றிலாஸ், மௌலவி MR நவ்பல், ஜனாப் ACA மாஹிர், மௌலவி I காமில், ஜனாப் ILM ஐயூப்

**சமூகமளிக்காதோர்:** ஜனாப் MT றம்ஸீன், ஜனாப் DKM மௌஸீன், ஜனாப் NM மிர்ஸான் (KKS)



**முதல் வரிசை:** திருமதி SLM ஸம்ஸம், திருமதி SA அஷ்ரஃப், திருமதி SNH முஹம்மத், திருமதி M பதுறுத்தீன், திருமதி S ஸிறாஜுதீன், திருமதி AM முனாஸிர் (உதவி அதிபர்), திருமதி IM இஸ்ஸதீன், திருமதி MCS றபீனா, செல்வி K குழந்தையும்மா

**இரண்டாம் வரிசை:** திருமதி ML றிபாயா, திருமதி FI ஸஹாப்தீன், திருமதி MSM லியாஸ், திருமதி J பழீலா, திருமதி AG தஸ்லிமா, திருமதி SR நிஸார், திருமதி IL ஜமையா, செல்வி MI இர்பானா பேகம், திருமதி HMS றிஸ்வானா, திருமதி SN சாதிக்கீன்

**மூன்றாம் வரிசை:** திருமதி SV நூர்தீன், திருமதி JA கபூர், திருமதி JA அஸீஸ், திருமதி P மேகநாதன், திருமதி SA அஸீஸ், திருமதி SH பைஸால், திருமதி UK சிபாறா பானு, திருமதி MT றமீஸா, திருமதி FJM ஸாஹிர், (சமூகமளியாதோர் திருமதி NA ஜாயா)

ஜனாப் MCM ஜமால்தீன் ஆசிரியர்

இவ்விழாவில் அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தோர்:

அல்ஹாஜ் MI அஸீஸ் சட்டத்தரணி

அல்ஹாஜ் MLA கையூம் அதிபர்

ஜனாப் AA கபூர் அதிபர்

ஜனாப் MM முனாப் அதிபர்

## கல்வித்துறையில் முதன்முதல் தடம் பதித்தோர்

### அல்ஹாஜ் மர்ஹூம் SLA. கரீம் B.A



சம்சுலெப்பை - ஆசியாத் தம்பதிகளுக்கு ஏக புதல்வராக அப்துல் கரீம் B.A. அவர்கள் 1949.01.16ம் திகதி பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை கமு/அல் அக்ஸா மகா வித்தியாலயத்திலும் உயர்கல்வியை கல்முனை சாஹிறாக் கல்லூரியிலும் பயின்று உயர்தர பரீட்சையில் முதல்தர சித்திபெற்று பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவானார். 1969.10.14 பேராதனை கலைப்பீடத்தில் கல்வி பயின்ற இவர் புவியியல் பாடத்தில் சிறப்புப்பட்டம் பெற்று 1974ல் வெளியானார்.

பின்னர் பிற்பட்ட காலத்தில் ஓய்வு நேரங்களில் மாணவர்களுக்கு விசேட வகுப்புக்கள் நடாத்தி கல்விக்காக உழைத்து வந்தார். அதனைத்தொடர்ந்து TS. அக்பர் அதிபர் - ஆயிசா உம்மாவின் புதல்வி கமறூன்நிசா அவர்களை திருமணம் முடித்தார். நாவிதன்வெளி பலநோக்குச்சங்க பொதுமுகாமையாளராக இரண்டு வருடங்கள் கடமையாற்றினார். பின்னர், திட்டப்பணிப்பாளர் பரீட்சையில் சித்தியடைந்து திட்டமிடல் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று மாவட்ட செயலகத்தில் (அம்பாறைக் கச்சேரியில்) கடமையாற்றினார்.

ஆங்கில, சிங்கள மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்ததன் காரணமாக மாவட்ட செயலாளரின் மொழி பெயர்ப்பாளராகவும் கடமையாற்றினார். அத்தோடு மாவட்ட அபிவிருத்திச்சங்க கூட்டங்களில் மாவட்ட செயலாளர் இல்லாத வேளைகளில் தலைமை தாங்கி நடாத்துபவராகவும், மொழிபெயர்ப்பாளராகவும் இருந்து வந்துள்ளார்.

தன்னுடைய சிறப்பான சேவையின் பயனாக புலமைப்பரிசில் பெற்று பிலிப்பைன்ஸ், தாய்லாந்து போன்ற இன்னும் பல நாடுகளுக்குச் சென்றுள்ளார். அதனைத்தொடர்ந்து நேகொட் திட்டப் பணிப்பாளராகப் பொறுப்பேற்று திருகோணமலை உட்பட கிழக்குமாகாணத்தில் பாரிய அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வந்தார். நெற்பிடிமுனை கமு/ அல் அக்ஸா மகா வித்தியாலயத்திற்கு மூன்று மாடிக்கட்டடம், சது/ வீரத்திடல் அல் ஹிதாயா மகா வித்தியாலயத்திற்கு இரண்டு மாடிக்கட்டடம் கமு/அல் லாபிர் வித்தியாலயத்திற்கு இரண்டு கட்டடங்களும் நெற்பிட்டிமுனை வைத்தியசாலை இன்னும் பலவும் குறிப்பிட்டுக் கூறக்கூடியதாக உள்ளன. பாரபட்சமின்றி சேவைகள் செய்ததன் பயனாக விடுதலைப் புலிகளாலும் பாராட்டுப் பெற்றார். இவ்வாறு அரியபல சேவைகள் செய்த இவர் ஊரில் உள்ள பல அமைப்புக்களில் தலைவராகவும், கணக்குப் பரிசோதகராகவும் அங்கத்தவராகவும் இருந்து சேவையாற்றியிருக்கிறார்.

இவருக்கு ஒரேயொரு மகன் உண்டு. ACM. மாஹிர் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராக கடமையாற்றுகின்றார். திறந்த பல்கலைக்கழக இறுதிநிலை சட்டத்துறை மாணவனாகவும் பயிற்சியை தொடர்ந்து கொண்டிருக்கின்றார். தொடர்ந்து சமூக சேவைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அல் ஹாஜ் SLA. கரீம் புனித ஹஜ் கடமையை நிறைவுசெய்ததோடு, மார்க்க கடமையிலும் ஈடுபட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ML. **சம்சுநாஹார்** B.A



மீராலெவ்வை - மர்யம் வீவி தம்பதிகளுக்கு மூத்த புதல்வியாக 1954.09.10ம் தகதி பிறந்த இவர் தனது ஆரம்பக்கல்வியை நெற்பிட்டிமுனை அல் அக்ஸா மகா வித்தியாலயத்தில் கற்று பின்னர் இடைநிலை கல்வியை கார்மெல் பாத்திமா கல்லூரியில் கற்ற இவர் உயர்கல்வியை கமு/உவெஸ்லி உயர்தர பாடசாலையில் கற்று பல்கலைக்கழகம் தெரிவானார். பின்னர் பேராதனை பல்கலைக்கழகத்திற்கு 1976ல் தெரிவான இவர் கலைமாணிப்பட்டத்தை முடித்த பின்னர் 1980-1982 வரை கல்முனை கல்வி அலுவலகத்தில் இலிகிதராக

பணியாற்றிய பின் ஆசிரியராக 1982 முதல் 1984ம் ஆண்டு வரை கார்மெல் பாத்திமா கல்லூரியில் பணியைத் தொடர்ந்தார். இரண்டு வருடங்கள் அப்பாடசாலையில் சேவையாற்றி மீண்டும் தமதூர் பாடசாலையான நெற்பிட்டிமுனை அல் அக்ஸாவுக்கு 1984ல் இடமாற்றம் பெற்று வந்தார். பின்னர் அப்பாடசாலையில் தொடர்ந்து பணிசெய்து கடைசியாக ஓய்வுபெறும் வேளைக்கு முன்னர் இரண்டு வாரங்கள் அதிபராக இருந்து 2009ல் ஓய்வு பெற்றார்.

கல்முனைக்குடியை சேர்ந்த A. ஆதம்வாவா பட்டதாரி ஆசிரியரை திருமணம் முடித்து இரண்டு குழந்தைகளுக்கு தாயாரான இவர் ஒரு பெண் பிள்ளையையும் (இவர் மிருகவைத்தியராக இரண்டு வருடங்கள் கடமைசெய்துவிட்டு அக்கல்வியில் வெறுப்புற்ற இம்மாணவி வேற்றுத்தொழில்களும் வேண்டாம் என்று விட்டு வீட்டில் இருக்கிறார்.) இளைய மகன் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் பொறியியலாளர் பட்டம் பெற்று மன்னாரில் ரெலிகொம் பொறியியலாளராகக் கடமையாற்றுகிறார்.

இவரே தென்கிழக்குப் பகுதியில் முதல் முஸ்லீம் பட்டதாரியாக வெளிவந்தவர். இவரைத்தொடர்ந்து பெண்மாணவியர் கல்விகற்கத் தொடங்கியது மட்டுமல்லாமல் உயர்கல்வி கற்று பல்கலைக்கழகம் செல்லத் தொடங்கினர்.

## நெற்பிட்டிமுனை அல் அக்ஸா ம.வி ஆரம்பப் பிரிவு (அகமது மண்டபம்)

இப்பிரிவு 1977ம் ஆண்டு அப்போதைய பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த ஜனாப் MC. அகமது அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டு அவர்களின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் 100'x20' அடிக்கட்டடமும் கட்டப்பட்டது. அதனைத்தொடர்ந்து அங்கு ஆரம்பப்பிரிவு வகுப்பான தரம் 1 முதல் 5 வரையான மாணவர்கள் அம்மண்டபத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். அன்றுமுதல் இன்றுவரை தரம் 5க்கு கீழ்ப்பட்ட மாணவர்கள் கற்று வருகிறார்கள்.

கமு/அல் அக்ஸா ம.வி மாணவர் தொகை அதிகரிப்பைத் தொடர்ந்து இடப்பற்றாக்குறை ஏற்பட்டபோது இவ்வாறு வேறு இடத்தில் இப்பிரிவு தொடங்கப்பட்டது. அன்றுமுதல் இன்றுவரைக்கும் நல்ல பெறுபேறுகளை தந்து கொண்டிருக்கிறது. MC. அகமது மண்டபத்தைத் தொடர்ந்து MHM. அஸ்ரப் மண்டபம் உருவாக்கப்பட்டது. பின்னர் வேறு

வகுப்பறைக் கட்டடமும் உருவாகியது. AM. ஜமால்தீன் அதிபர் காலத்தில் 2002ல் அக்காலப்பகுதியில் அமைச்சராக இருந்த ALM. அதாவுல்லஹ் இரண்டு மாடி ஆராதனை மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டு அத்திவாரம் போடப்பட்டது. இதற்கு முழு மூச்சாக உழைத்தவர் காலம் சென்ற AM. அபூல் தாஜ"ர் சட்டத்தரணியானவர். இவரின் கடின முயற்சியால் இக்கட்டடத்துக்கான ஆரம்ப வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டன. AM. அபூல் தாஜ"ர் ALM. அதாவுல்லாஹ் அமைச்சரின் இல்மனைற் கூட்டுத்தாகனத்தின் பணிப்பாளராகவிருந்தார். அதன் தலைவர் டாக்டர் உதுமாலெப்பை இருந்ததன் காரணமாக இவ்வாறான நிகழ்வுக்கு வித்திடப்பட்டது. ஆனால் AM. தாஜ"ருடைய திடீர் மரணம் இக்கட்டடம் இடைநிறுத்தப்பட்டதற்கு காரணமாக அமைந்தது.

AM. ஜமால்தீன் அதிபரின் பின்னர் 2006ல் அதிபர் பொறுப்பேற்ற SMA. ஜ.்.பர் அவர்களின் அயராத முயற்சியால் கெயார் இண்டர்நெசனல் நிறுவனத்தால் அவ் ஆராதனை மண்டபம் பூர்த்தியாகி தலை நிமிர்ந்து நிற்கிறது. இந்த மண்டபத்தில் பாடசாலை நிகழ்வுகள், கலை நிகழ்ச்சிகள், இன்னும் பல பொது நிகழ்ச்சிகள் என்பவையெல்லாம் இக்கட்டடத்தில் நடைபெறுகிறது. அத்தோடு மேல்மாடியில் வகுப்பறைக் கட்டடம் ஆன படியால் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

மேலும் SMA. ஜ.்.பர் அதிபருடைய காலத்தில் நெகோட் திட்டத்தின் கீழ் 3 மாடிக்கட்டடம் கட்டப்பட்டது. இதற்கு SLA. கரீம் B.A திட்டமிடல் பணிப்பாளராக இருந்தபோது நெகோட் திட்ட பணிப்பாளராகவும் இருந்தார். அவருடைய அனுசரனையில் 3 மாடிக்கட்டடம் கமு/அல் அக்ஸா உயர்தர பிரிவில் உதயமானது. இது இவ்வாறிருக்க இப்பிரிவுக்கு பொறுப்பதிபர்களாக இருந்தவர்கள் பின்வருமாறு

- அல் ஹாஜ் SPM. இஸ்மாயில் ஆசிரியர்
- அல் ஹாஜ் SL. ஹமீட் மௌலவி
- றசூல் அதிபர்
- காதர்
- AM. ஜமால்தீன் அதிபர்
- முஸ்தபா
- திருமதி N. மஜீட்
- திருமதி சம்சுநஹார் ஆதம்பாவா

- SHM. அக்பர்
- YAK. தாஸிம்

• தற்பொழுது AM. முனாசிர் பொறுப்பாளராகவும் DKM. மௌசீன் பகுதி தலைவராகவும் செயற்படுகின்றனர்.

அது அவ்வாறிருக்க உயர் பிரிவில் முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவர் அல் ஹாஜ் றஊப் ஹக்கீம் அவர்களினால் இரண்டுமாடிக் கட்டடம் ஒன்று உருவாக்கப்பட்டது இந்நிகழ்வு அதிபர் AM. ஜமால்தீன் அவர்களின் காலத்தில் இடம்பெற்றது. அதற்குப் பல வருடங்களுக்கு முன்னர் இருமாடிக்கட்டடம் அமைச்சராகவிருந்த AR. மன்சூர் அவர்களின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் 60'x25' இருமாடிக் கட்டடம் கேற்முதலியார் MS. காரியப்பர் என்னும் பெயரில் கட்டப்பட்டது இதற்குத் தூண்டுகோலாகவிருந்தவர் AA. கபூர் அதிபர் அவர்களாவார்.

மேலும் முஸ்லீம் காங்கிரஸால் கட்டப்பட்ட இருமாடிக் கட்டடத்தின் மூன்றாவது மாடியை அப்போது திட்டமிடல் பணிப்பாளராகவிருந்த A. அன்வர்டீன் அவர்களால் நிதி ஒதுக்கீடு செய்து கட்டிமுடிக்கப்பட்டது. இது அக்கால அதிபராகவிருந்த அல் ஹாஜ் MLA. கையூம் அதிபரின் முயற்சியின் பயனாக விளைந்தது. HMM. ஹரீஸ் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் 100,000 ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. அத்துடன் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட 100'x20' அடிக்கட்டடம் ஒன்றும் பல்தேவை கட்டடம் ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது.

# கலை கலாச்சார பண்பாட்டியல்

கலை கலாச்சாரத்தை பொறுத்த வகையில் நாடகங்கள் நடித்தல், கும்மி நடனமாடுதல், பொல்லடித்தல், குரவையிடுதல், கயிறு இழுத்தல், கவிப்போட்டிகள், தொட்டில் ஊஞ்சல்கட்டி அதில் ஆடுதல், விடுகதைப்போட்டிகள், சீனடி சிலம்படி போன்றவற்றைக் குறிப்பிடலாம். கலை இலக்கிய பலம்வாய்ந்தவர்கள் இங்கு வாழ்ந்திருக்கிறார்கள். பொழுதுபோக்குக்காகவும் இந்நிகழ்வுகளைச் செய்து இருக்கிறார்கள். இன்றுவரை கல்முனைக்குடி கொடியேற்றப் பள்ளிவாயலில் மௌலூதுகள் ஓதி கந்தூரி கொடுப்பதுபோல் இவ்வூரிலும் அவ்வாறு செய்து வந்திருக்கிறார்கள். பிற்பட்ட காலங்களில் அவை உலமாக்களின் நடவடிக்கைகளால் தூர்ந்து போய்விட்டன. அக்கொடியேற்ற நிகழ்வை செய்து மேற்படி போட்டிகளை நடாத்தி வந்தார்கள். காலப்போக்கில் அவை மாறியதும் மீலாத்து விழாக்கள் நடாத்தி வந்தார்கள். அதுவும் தற்பொழுது இல்லாதொழிந்து விட்டன.

கொடிகளை ஏற்றி விழாக்களை கொண்டாடும் காலங்களில் மண்மேடை கட்டி அதில் ஏறிநின்று நிகழ்வுகளை நடத்துவார்கள். ஒலிபெருக்கி' இருக்கவில்லை. வாயினால் பேசியே நிகழ்வுகள் நடத்தப்பட்டு வந்தன. இவற்றைக் கண்டுகளிப்பதற்காக ஏகப்பட்ட சனங்கள் ஒன்று கூடுவார்கள். எல்லா நிகழ்ச்சிகளுக்கும் சிறந்த வரவேற்பு இருக்கும். வெளிஊர்களில் இருந்துகூட மக்கள் வந்து சேர்வார்கள். இப்படி பெறுமதி வாய்ந்ததாக இருக்கும். மாலை நேரங்களில் தொடங்கி நள்ளிரவு வரை நிகழ்வுகள் நீடித்திருக்கும். பந்தங்கள் கொண்டும் இலாம்புகள் கொண்டும் வெளிச்சத்தை ஏற்பாடு செய்திருப்பார்கள். இவை அக்கால மக்களுக்கு சிறந்த பொழுதுபோக்குகளாக இருந்தன. விவசாய வேலைகள் முடிந்ததும் வீட்டில் சும்மா இருந்தவர்களுக்கு தேன் குடித்த மாதிரி சந்தோச மன நிறைவுகளைக் காண்பிப்பார்கள்.

அந்த வகையில் அக்காலத்தின் நாடகங்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

**அலிபாத்திஸ்ஸா நாடகம் (கதைச் சுருக்கம்)**

ஒரு காலத்தில் சாம் தேசத்தை ஆண்டுவந்த அலிபாத்திஸ்ஸா என்னும் மன்னர் தம்முடைய ஆட்சியை நல்லமுறையில் செய்துவரும் காலத்தில் மக்களால் நல்ல பேரும் புகழும் ஏற்படுகிறது. பஞ்சம் என்பதே கிடையாது. மக்களும் மன்னரும் சந்தோசமாக வாழும் காலத்தில் அபுசன்னா என்பவர் அலிபாத்திஸ்ஸா மன்னனின் மூத்தமகன். இவன் வாலிபப் பராயத்தில் அராஜகத்தில் ஈடுபடத் தொடங்கிவிட்டான். இதன் காரணமாக ஆத்திரம் கொண்ட மக்கள் மன்னரிடம் முறையிட்டனர். இதுபற்றி மன்னன் தனது மகனிடம் பல தடவைகள் எடுத்துக்கூறியும் பயனின்றிப் போய்விட்டன. நீதி தவறாது ஆட்சிசெய்த மன்னன் ஆத்திரம் கொண்டு தன்னுடைய மகனுடைய கொடுங்கோல் தன்மையை வெறுத்து நாடுநகர் விட்டு தனது மனைவி, பிள்ளைகள் இருவருடன் (ஆண்பிள்ளைகள்) வெளியேறுகின்றார்கள். பல தேசங்கள் தாண்டிவந்த அவர்கள் உண்ண உணவின்றி தவிக்கிறார்கள். இந்தக்கட்டத்தில் சுல்மான் ராசா என்னும் அரசனுடைய தேசத்தில் தர்மம் கொடுக்கப்படுகிறதாம் என்பதை அறிந்தார்கள். மன்னன் மன்னரிடம் போய் பிச்சை கேட்பதா? என்ற கவலையில் அலிபாத்திஸ்ஸா இருந்தபோது அவருடைய மனைவி சபுரியத்தும்மா நானும் பிள்ளைகளும் போய் வாங்கிவருகிறோம் என்று அடம்பிடித்ததற்கு சரியென மன்னர் ஏற்றுக்கொள்கிறார்.

புரிசர்கள் பொருளைத் தேடி
பூவயர் களித்தலுண்டு
அரிவையர் பொருளைத் தேடி
ஆடவர் களிப்ப துண்டோ

என்று கவலையோடு கேட்கிறார். சபுரியத்தும்மா மிகவும் அழகானவர். அவர் அழகில் மயங்காதோர் இல்லை என்றே சொல்லலாம் அந்த அளவுக்கு அழகானவர். இவரும் பிள்ளைகள் இரண்டு பேருமாக உரிய இடத்திற்குப் போய்ச்சேருகிறார்கள். சுல்மான் ராசாவுடைய அரச சபையிலே தர்மம் கொடுக்கப்படுகிறது. வந்தவர்களெல்லாம் வாங்கிக்கொண்டு மன்னனை வாயார வாழ்த்திச் செல்கிறார்கள். சபுரியத்தும்மாவையும் பிள்ளைகளையும் ஓர் இடத்தில் அமருமாறு உத்தரவு கிடைத்ததற்கு அமர்ந்து இருக்கிறார்கள். நாலு, ஐந்து நாட்களாக உணவு உண்ணவில்லை. பசியின் கொடுமையோடு இருக்கிறார்கள். பின்னர், எல்லோரும் போனபின்பு சபுரியத்தும்மாவை

மாத்திரம் அழைத்து கதவைச்சாத்திக் கொள்கிறார்கள். தாய் பிள்ளைகளை நினைத்து அழுகின்றாள்; பிள்ளைகள் தாயை அழைத்து அழுகின்றார்கள். பின்னர் தந்தையிடம் ஓடி வருகிறார்கள். விடயத்தை கூறி அழுகின்றார்கள்.

**தாயாரும் பிள்ளைகள் இருவரும் உணவு தேடிச்சென்ற போது**

தாயாரும் நாங்களும்
போனொரு செய்தியை
தந்தையே நீ கேளாய் - எம் பாவா
தந்தையே நீ கேளாய்

ஓயாமல் கால்களும்
பிந்திப் போகாமலே ஓடி
நடந்து போனோம் - எம் பாவா
ஓடி நடந்து போனோம்

எல்லோர்க்கும் முன்னரே
தர்மச் சத்திரம் நாங்களும்
போய் சேர்ந்தோம் - எம் பாவா
தாங்களும் போய் சேர்ந்தோம்

அந்தப் பொல்லாத பாதகன்
எங்களைப் போய் ஓர் புறத்தில்
இருக்கச் சொன்னான் - எம் பாவா
புறத்தில் இருக்கச் சொன்னான்

மடத்துள்ளே வாபிச்சை
தாறேன் என்று - அந்த
மட்டிக் கணக்கன் சொன்னான் - எம் பாவா
மட்டிக் கணக்கன் சொன்னான்

தாயாரை மாத்திரம்

வாவென்று கூப்பிட்டு - தள்ளிக்
கதவடைத்தான் - எம்பாவா
தள்ளிக் கதவடைத்தான்

அம்மா வென்று நாங்கள்
அலறயில் அல்லாஹ்
அமானம் என்றார் - எம் தாயார்
அல்லாஹ் அமானம் என்றார்

வாயால் அம்மா வென்று
கூறி அழுகையில்
வல்லோன் அமானம் என்றார்
தாயார் வல்லோன்
அமானம் என்றார்.

**அலிபாத்திஸ்ஸா மன்னர் அழுதல்**

நந்தாமணி விளக்கே - என்
நாயகியான சபுரியத்தே
கல்லும் இரும்புகளும் - உந்தன்
காரணம் கேட்டால் கரைந்திடு மே

நந்தாமணி விளக்கே - என்
நாயகியான சபுரியத்தே
கல்லும் இரும்புகளும் - உந்தன்
காரணம் கேட்டால் கரைந்திடு மே

வேடன் கையில் பட்ட
மான் போல - நீ
வேந்தன் கையில்
அகப்பட்டா யோ

வேடன் கையில் பட்ட
மான் போல - நீ
வேந்தன் கையில்
அகப்பட்டா யோ

இப்படி அழுது பாடிவிட்டு பிள்ளைகள் இருவரையும் அழைத்துக்கொண்டு வேறுதேசம் செல்கின்றார்கள். இப்படி காடும் மேடும் தாண்டிச் செல்கையிலே ஆறு வருகிறது. அவ்வாற்றைக் கடப்பதற்கு கையில் காசு இல்லை. அதனால் ஒரு பிள்ளையை மரத்தில் கட்டிவிட்டு மறுபிள்ளையை கையில் தூக்கிக்கொண்டு ஆற்றுக்குள் இறங்கி நீந்திச்சென்று அக்கரையை அடைந்தபிறகு அம்மகனை அங்கோர் இடத்தில் கட்டிவிட்டு மற்றைய மகனை தூக்கி வருவதற்காக அக்கரைக்குச் செல்கிறார்கள். அந்தவேளையில் ஆற்றில் இருந்த முதலை ஒன்று அவரை பிடித்துக்கொள்கிறது.

**முதலை வாயில் அகப்பட்ட அலிபாதிஸ்ஸா மன்னன**

பொல்லா முதலை வாயில்
பிடிபட்ட மீன் போல
போறன்டா மக்காள் - நான்
போறன்டா மக்காள்.

இதைக்கண்ட பிள்ளைகள் இருவரும் அழுகிறார்கள். யாரும் துணைக்கு வரவில்லை. இவ்வாறு இருக்கையில் இரக்கமுள்ள ஓடக்காரன் ஒருவன் இருவரையும் தனது தோணியில் ஏற்றிக்கொண்டு வீட்டில் வளர்க்கின்றான். சில நாட்களுக்கு பிறகு அவ்வாற்றில் சிறிய கப்பல் ஒன்று வந்தது அக்கப்பலில் வேலைக்காக இரு சிறுவர்களையும் விற்றுவிடுகிறான். இப்படி இரண்டு பிள்ளைகளும் கப்பலில் ஏற்றப்பட்டு பயணிக்கின்றனர். கடலுக்குள் கப்பல் பிரவேசிக்கின்றது. பிள்ளைகள் கப்பலில் சிறிய வேலைகளை செய்துகொண்டு இருக்கின்றனர்.

**பிள்ளைகள் ஓடக்காரனிடம் வேண்டுவது**

கட்டப்பட்டிருநத பிள்ளைகள் அழுகிறார்கள் ஓடக்காரனிடம் கெஞ்சுகிறார்கள்.

கையில் அரைச் சல்லியில்ல
ஓடக்காரா - அண்ணா
கடன் தருவார் யாருமில்லை
ஓடக்காரா
உடுத்த துணிதான் மிச்சமடா
ஓடக்காரா - அண்ணா
உனக்குப் பாதி கிழித்துத்தாரோம்
ஓடக்காரா
ஏழைகளில் ஏழை அல்லோ
ஓடக்காரா - நாங்கள்
ஈன்ற தாயை இழந்தபாவி
ஓடக்காரா

இவ்வழு குரலைக்கேட்ட ஓடக்காரன் தான் தனது வீட்டில் சிலநாட்கள் வைத்துவிட்டு சந்தர்ப்பம் வந்தபோது கப்பல்காரனுக்கு விற்று காசை எடுத்துக்கொள்கிறான் என்பதை மேலே அறிந்தோம். கடலில் கப்பல் சென்று கொண்டிருக்கையில் கடலில் மீன் துள்ளி விளையாடுவதைக் கண்ட சிறுவனில் இளையவன் சிரிக்கின்றான்.

இந்த நிலையில் முதலைதின்ற அலிபாத்திஸ்ஸா அவர்களின் மண்டையோடு கரையில் வந்து கிடக்கிறது. இந்த நேரத்தில் முகையதீன் ஆண்டகை ஜலானி (ரஹ்) அவர்கள் சிறுநீர் கழிப்பதற்காக ஆற்றோரம் செல்கிறார்கள். அந்தவேளை மண்டையோடு ஸலாம் சொல்லுகிறது. ஸலாத்துக்கு புறத்தி சொல்லிவிட்டு தேடுகிறார்கள். யாரையும் காணவில்லை. இறுதியில் மண்டையோட்டை காண்கிறார்கள். பின்னர் மண்டையோட்டிற்கு உருவத்தைகொடுத்து உயிர்பித்துத்தா இறைவா! என்று இறைவனை பிரார்த்திக்கிறார்கள். இறைவன் உதவியால் உயிர்ப்பித்து கொடுக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க பிடிபட்டபெண் சபுரியத்தும்மாவை சுல்மான்ராசா திருமணம் முடிக்க கேட்கிறார்கள். அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. சுல்மான்ராசாவுக்கு குஸ்டரோகம் பீடிக்கிறது. இதைக் குணப்படுத்துவதற்காக அவரை கப்பலில் ஏற்றிக்கொண்டு, வைத்தியர் ஒருவர் இருக்கிறார் என்று கேள்விப்பட்ட இவர்கள் சபுரியத்தும்மாவையும் கப்பலில் ஏற்றிக்கொண்டு வரும்வழியில் பிள்ளைகள் விற்கப்படுகிறார்கள்.

இவ்வாறு தம்பி கூறியதைக்கேட்ட காக்கா கூறுகிறான்; நாம் தாயை இழந்து தந்தையை முதலை கொண்டுபோய் கவலையோடு இருக்கும்போது இவ்வாறு சிரிப்பதாடா என்று கூறியதை தாய் கேட்டுக் கொண்டிருந்து அல்லாஹ்விடம் துஆக்கேட்டு அழுகிறார்கள். அந்தவேளையில் கதவு வெடித்து திறக்கப்படுகிறது. ஓடிவந்த தாய் இரண்டு பிள்ளைளையும் அள்ளி அணைத்து அழுகிறாள்.

இது இவ்வாறிருக்க வைத்தியம் செய்பவர் முகையதீன் ஆண்டகை ஜலானி (ரஹ்) அவர்கள் அல்லாஹ்விடம் வேண்டியதற்கிணங்க அல்லாஹ்வால் உயிர்ப்பிக்கப்பட்ட அலிபாத்திஸ்ஸா அவர்களாவார். அவர்கள் வைத்தியம் செய்து சுல்மான்ராசாவை குணப்படுத்துகிறார்கள். அவருடைய காலில் இருந்த மச்சத்தை வைத்து பிள்ளைகளாலும் சபுரியத்தும்மாவாலும் அடையாளம் காணப்படுகின்றார். இவர் ஒரு மன்னன் என அறிந்த சுல்மான்ராசா அவரையும் அவரது மனைவி மக்களையும் சேர்த்து வைத்து அவருடைய தேசத்திற்கு அழைத்துச்சென்று நாட்டை ஆளவைத்து மகன் அபுசன்னா திருந்திவந்து நல்லாட்சி செய்ததாக வரலாற்றுக்கதை கூறுகிறது.

இந்த நாடகத்தை எமது ஊரைச்சேர்ந்த மிகவும் பிரசித்திபெற்ற வரகவிகளும், அறிவாளிகளுமான கீழ்வருவோர் நடித்திருக்கிறார்கள். இதுவே இந்த ஊரின் முதலாவது நாடகமாகும். இது 1940ம் ஆண்டுக் காலப்பகுதியில் நடிக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. இதன் நடிகர்களாக

- சுலையுமாலெவ்வை புளிச்சர் ஓடாவியார்
- சீனியர்
- மூலமரைக்கார்
- பொலிஸ்

போன்றோரை குறிப்பிடலாம்.

அலிபாத்திஸ்ஸா நாடகம் நடிக்கப்பட்டு 25 வருடங்களுக்குப்பின்னர் திரைப்படங்களை ஒத்தான நவீன முறையில் நாடகங்கள் தயாரிக்கப்பட்டன. இவை 1966ம் ஆண்டுக் காலப்பகுதியில் நடிக்கப்பட்டன. கதை, வசனம், தயாரிப்பு என அத்தனைக்கும் பொறுப்பாக ஜனாப் MI. தாவூத் அவர்களே இருந்தார். இவர் சிறந்த தயாரிப்பாளராவார். இவருடைய பெயர்சொல்லக்கூடிய தயாரிப்பில் உருவான நாடகங்களாக "வாழ்கைப் போராட்டம்", "யார் அந்த

முகமூடி?", "இதுதான் உலகம்" போன்ற நாடகங்களை குறிப்பிட முடியும். குடும்பக்கதை, துப்பறியும்கதை இவருடைய கதைகளில் சிறப்பு வாய்ந்தவையாகும்.

MI. தாவூத்தின் கதை, வசனம், தயாரிப்பு நடிகர்களாக (மௌசீன் ஆசிரியரின் தந்தை)

- A. முகம்மதுத் தம்பி
- MI. பீர்முகமட்
- PTM. கனி (அபூபக்கர்)
- MI. பதுறுத்தீன்
- V. நெயினா முகமட்
- L. குப்பையர்
- I. அலியார்
- A. அகமது லெப்பை (பழணி)
- அப்பாஸியர்

இன்னும் பலர் சேர்ந்து நடித்த மறக்கமுடியாத நாடகங்களை நினைவுகூர வேண்டியுள்ளது. இதே பாணியில் இன்னுமொரு குழுவினரும் நாடகம் நடித்துள்ளனர். "அவனா? இவனா?" என்னும் நாடகத்தை கதை, வசனம், தயாரிப்பாளராக AM. ஜமால்தீன் அதிபர் தயாரித்து அரங்கேற்றியுள்ளார்.

இதற்கு சற்றுப்பின்னர் அதாவது 1964ம் ஆண்டு இவ்வூர் கலைஞர்கள் திரைப்படம் ஒன்றை தயாரிப்பதற்குரிய ஏற்பாட்டை செய்தனர். அத்திரைப்படம் "வல்லவ மல்லன்" என்னும் பெயரில் தயாரிக்கப்பட்டது. இதன் கதை, வசனம், தயாரிப்பு எல்லாம் SM. அப்துல்லா பயில்வான் அவர்களால் தயாரிக்கப்ட்டது.

**கதைச்சுருக்கம் :-**

திருடர்களும், முரடர்களும் வாழும் ஊரில் அநியாயங்கள் அடிக்கடி ஏற்படுவதைக்கண்டு சீர்திருத்துவதற்காகப் புறப்பட்டு வருகிறான் கதாநாயகன். முரடர்களோடும், திருடர்களோடும் போராடி உண்மையை நிலைநாட்டுகிறார். அந்நிலையில் கதாநாயகி கடத்தப்படுகிறார். அவரைத் தொடர்ந்து தேடுதல் பணியில் ஈடுபடுகிறான் கதாநாயகன். இறுதியில்

வில்லன் அநியாயம் செய்வதற்கு திட்டமிட்டிருந்த வேளையில் இருவருக்கும் இடையில் சண்டை மூழ்கிறது. இறுதியில் வில்லர்களை வென்று கதாநாயகியைக் காப்பற்றுகிறார்.

- கதாநாயகன் SM. அப்துல்லாஹ் பயில்வான் கதை, வசனம், தயாரிப்பு
- கதாநாயகி திருமதி ஆசா சம்சுதீன் (திருகோணமலை)
- வில்லனாக V. நெயினா முகமட் (நெற்பிட்டிமுனை)
- M. நூகு லெப்பை (ஒலுவில்)
- சிறுவனாக A. கயஸ் (மருதமுனை)
- ஹாசிய நடிகர் ஜொஹார் (கொழும்பு)
- ஒளிப்பதிவு SPM ஸ்ரூடியோ (ஹந்தான, கொழும்பு)
- இசையமைப்பு R. முத்துசுவாமி
- பாடல்கள் முகையதீன் பேக், டோணி ஹசன், நாராயணன், நிர்மலாதேவி

இன்னும் பலர் சேர்ந்து நடித்த திரைப்படம் "வல்லவ மல்லன" இறுதிநேரத்தில் வெளியிடமுடியாது தற்பொழுதும் SPM ஸ்ரூடியோவில் இருப்பதாக அறியக்கூடியதாக இருக்கிறது. இதனை வெளியிடாமைக்கு காரணம் கேட்டபோது சொல்லமுடியாது என மறுத்துவிட்டார். எது எப்படி இருந்தாலும் கலை, கலாச்சாரத்தில் இவ்வூர் மக்கள் சிறந்த ஈடுபாட்டை உடையவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட்டுக் கூறமுடியும்.

இதன் பிறகு நாடகங்கள் பெரிதாக நடிக்கப்படவில்லை. 1987ம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் என்னால் நடிக்கப்பட்ட "சாம்ராட் அசோகன்" ஓரங்க நாடகம் சிறந்த வரவேற்பைப் பெற்றது. இது ஒரு அரசியல் நாடகமாகும். இந்த நாடகத்தை எனது பல்கலைக்கழக நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் 1988ல் மீண்டும் மேடையேற்றப்பட்டு எல்லோருடைய பாராட்டையும் பெற்றது.

## கும்மி நடனம்

இந் நாடகமானது அரேபியாவில் இருந்து இங்கு பரவியதாக கருதப்படுகிறது. தமிழ் சகோதரர்களின் கும்மி நடனத்தில் இருந்து

வேறுபட்டது. அரேபியா, பாக்கிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளின் பாணியில் தென்கிழக்குவாழ் முஸ்லீம் பெண்கள் நடனமாடுவதை காணக்கூடியதாக இருக்கிறது. இடுப்பை வளைத்து கைகளை ஒன்று சேர்த்து கைகளால் அடிக்கும் கும்மி ஒத்த ஓசையாக இருக்கும் கலாச்சாரத்தை பேணும் வகையில் சிறந்ததாக இருக்கும். இந்நிகழ்வுகள் கலைகலாச்சார நிகழ்வுகளின் போதும் மீலாத்து விழா கொண்டாட்ட நிகழ்வுகளின்போதும் வரவேற்பு நிகழ்வுகளின்போதும் நிகழ்த்தப்படுகிறது. இந்த ஊரைப் பொறுத்தவகையில் ஆரம்ப காலத்தில் S. முகம்மது ஹனிபா ஓடாவியார், யூசுப் ஆசிரியர் (பக்கீர் வாத்தியார்), MI. பதுறுத்தீன், MI. அஸீஸ், AB. அப்துல்லாஹ் ஆகியோரால் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்கப்பட்டது. பிற்காலத்தில் மறந்து போனாலும்கூட தற்பொழுது பாடசாலைகளில் கலாச்சார நிகழ்வுகளின்போது நிகழ்த்தப்படுகிறது. அண்மையில் 2015ம் ஆண்டில் கமு/அல் அக்ஸா ம.வி மாணவிகளின் கும்மி நிகழ்ச்சி தேசிய மட்டத்திற்கு தெரிவானதையும் நினைவில் கொள்ள வேண்டியிருக்கிறது.

பாடல் (1)

சோபன கீதம் பாடுவோம் - நாமே
சோபனக் கீதம் பாடுவோம்
இந்த மதுரிஸா எங்கும் துலைங்கிட
எங்கள் நபியைப் போற்றுவோம் - நாமே
சோபனக் கீதம் பாடுவோம்

போடியார் ஸெப்பையும்
கூடிய பேர்களும்
ஈடில்லா நற்கதிபெற - நாமே
சோபனக் கீதம் பாடுவோம்

மாசில்லா மாநபி
மாண்புறு சுன்னத்கள்
சீராகச் செய்து வாழவே - நாமே
சோபனக் கீதம் பாடுவோம்

பாடல் (2)

வள்ளல் நபி வாழ்க்கையது
மாந்தர் கன்றோ
வானவர்கள் மகிழ்ந்திடவே
வாழ்த்திய தன்றோ

மன்னர் நபி வழங்கிய நல்
மார்க்கமல்லவா - அதை
மறந்திடாமல் காப்பதெங்கள்
கடமையல்லவா

(வள்ளல் நபி)

அண்ணல் பட்ட இன்னல் கட்டு
எல்லையில்லை யே
அற்புதங்கள் காட்டியதில்
குறைவுமில்லை யே

சோதனைக்குள் ஏகப்பல
சாதனை கண்டார்
சொர்க்கமதில் வாழும் நபியை
காண்பதுமுண்டோ

(வள்ளல் நபி)

## பொல்லடித்தல் / களிகம்பு அடித்தல்

இது மிகவும் பழைமை வாய்ந்த கலையாகும். இக்கலை முற்காலத்தில் வாழ்ந்த எல்லா ஆண்களுக்கும் தெரிந்திருந்தது. இது கிராமிய வரலாற்றுப் பாடல்களோடு ஆரம்பிக்கப்படும். இவர்களை வழிநடாத்த அண்ணாவியார் இருப்பார். அண்ணாவியார் பாடலை பாடிக்கொண்டே இருப்பார். ஆட்டக்காரர்கள் தொடர்ந்து அடித்துக் கொண்டிருப்பார்கள். இக்கலை மங்கி மறைந்து போய்க் கொண்டிருக்கிறது. கமு/அல் அக்ஸா மகா வித்தியாலய தற்போதைய அதிபர் அல்ஹாஜ் MLA. கையூம் அவர்கள் தனது பாடசாலை



2015ல் அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற கலாச்சாரப் போட்டியில் 2ம் இடம் பெற்ற
அல் அக்ஸா மாணவ அணி. பயிற்றுவிப்பாளர் மர்ஹூம் ஜபானா M. நூர் முஹம்மதுடன்

மாணவர்களுக்கு இக்கலையை பயிற்றுவித்தார்கள். இதன் காரணமாக இம்மாணவர்கள் தேசிய மட்டத்திற்கு தெரிவாகி இரண்டாம் இடத்தைப்பெற்று சாதனை படைத்துள்ளார்கள்.

இக்கலைக்காகப் பயன்படுத்தப்படும் பொல்லுகள் விற்பனைக் கம்பில் இருந்து பெறப்படுகிறது. காரணம் சிறந்த சத்தம், முறியாத தன்மை விற்பனைக் கம்புக்கு உண்டு. சிலர் பொல்லுகளில் சதங்கையை வைத்து இறுக்கி இருப்பார்கள். சதங்கைச் சத்தமும் கேட்கும்போது ஓசையாக இருக்கும். பொல்லுகளுக்கு பல வர்ணங்களில் சாயம்பூசி இருப்பார்கள். பொல்லுகள் அசையும்போது சிறந்த காட்சியாக இருக்கும். வெள்ளை தலைப்பாகையும், வெள்ளை வெனியனும், வெள்ளைச்சாரமும் அணிந்திருப்பார்கள். உள்வட்டம், வெளிவட்டம், நிரை போன்ற வடிவங்களில் அடித்துச் செல்வார்கள் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும்.

பழைய காலங்களில் மாப்பிள்ளையை அழைத்துவரும் போதும், சுன்னத்துக் கல்யாண நிகழ்வுகளின் போதும், அதிதிகள் வரவேற்கப்படும் போதும், விழாக்கள் கலை நிகழ்ச்சிகளிலும் பொல்லடி அடிக்கப்படுகிறது. அதிதிகள் அணியாக வரும் வேளைகளில் பாதை ஓரங்களில் நிற்கும் பெண்கள் குரவையிட்டு வரவேற்பார்கள். வானவெடி முழக்கமாக ஒலிக்கும். இந்தவேளை ஊர்வலம் சிறப்பாக இருக்கும். சிறப்புவாய்ந்த அண்ணாவியர்களாக A. சேகுபிள்ளை, இசுமான் ஓடாவியார், மம்முத்தாயயர், சீனியர், காதர் போன்றோரைக் குறிப்பிட்டுக்கூற முடியும். தந்தனத் தந்தானே, தான தந்தனத் தானேனே என்று கூறி ஆரம்பித்து லாயிலாஹ இல்லல்லாஹு, லாயிலாஹ இல்லல்லாஹு, லாயிலாஹ இல்லல்லாஹு முகம்மது ரசூலில்லாஹ் தாம் ததிக்கிட தாம் ததிக்கிட தை என்று நிறுத்துவார்கள்.

## பொல்லடிப்பாடல்

பள்ளிவிட்டு பிச்சை யில்லை யென்று
ஒருவன் ஆணையிட்டு குறுக்கே மறுக்கிறாளே
கொழுந்துவிட்டு தணல் நெருப்பு எரிய
குமரி யொன்று குறுக்கே மறுக்கிறாளே

பங்கமென்ன வெளியில் வந்திடுமோ
எந்தன் பற்றாஹுவே இதற்கேது செய்வேன்

காணமாணி எண்ணெய் விற்று மெள்ள - ஒருவன்
கசடு தோணி கட்டி முன்னே போறான்

தலைவிரித்து தொரு கோபணி
எண்ணெய் தலையுடனே - ஒருத்தி
எதிரே வாறாள்
ஏராளமாய் சேர்ந்து லாந்து - இப்ப
இடம் வலமாய் போகுதங்கே

சொல்லு
தன்னே நானே தன்னே நானே

மட்டக்களப்பு பாலம் புதிதாகக் கட்டியபோது பார்வை யிடுவதற்காக மக்கள் கூட்டங் கூட்டமாக சென்று வருகிறார்கள். அக்கால கட்டத்தில் காவியமாக எழுந்த பாடல் பொல்லடிப்பாடலாக பயன்படுத்தப்பட்டது.

பொட்டகத்தை திறந்து
பொன்வெள்ளிச் சாமானைப் போடு
வாத்து முடிச்ச வடக்குத்திச் சோமனை
வண்ணக் குயிலே - நீ
கொஸ்சி உடு

மொக்காட்டைப் போட்டு - நீ
முகத்தை மூடிக்க
முன்னாலே நான் போறேன்
பின்னாலே - நீ வாடி
பாலம் பார்க்க போக வாறயா - பெண்ணே
கல்லடிப்பாலம் பார்க்க போக வாறயா

காத்தான் குடுப்பும்
கல்லடிப் பாலமும் கிட்ட நெருங்கிய தூரம்
சீனத்தான் செய்திட்ட வேலையை - நீயும்
சேய்மிளையே கண்ணால் பாராய்
பாலம் பார்க்க போக வாறயா

கட்டி இரும்பைக் காச்சி உருக்கி
கந்கிணறு போல் வார்த்து - அதந்
குள்ளே கொங்கிறீந்றுப் போட்டு
சீனத்தான் செய்திட்ட வேலையை - நீயும்
சேய்யிளையே கண்ணால் பாராய்
பாலம் பார்க்க போக வாரயா - பெண்ணே
சொல்லு
தன்னானே தன்னானே
தான தந்தனத் தானா னா

## குரவையிடுதல்

இவ்வூரில் இன்றும் நிலைத்திருக்கின்ற கலாச்சார நிகழ்ச்சி இதுவாகும். பெண்கள் பலபேர் ஒன்றுசேர்ந்து நாக்கை வளைத்து கோசமிடுவார்கள். அது ஓசையாக இருக்கும். அதிதிகள் வரவேற்கப்படும் போதும், சுன்னத்துக் கல்யாணம், வாழ்வுக்கல்யாணம் போன்ற நிகழ்வுகளின் போதும் குரவையிடப்படுகிறது. இது ஒரு கிராமிய நிகழ்ச்சியாகும். தென்கிழக்குப் பிரதேசத்தில் பல ஊர்களில் இன்றும் வழக்காக இருக்கிறது. மகிழ்ச்சிகரமான சந்தர்ப்பங்களிலும் சனங்களை ஒன்று சேர்ப்பதற்காகவும் குரவையிடப்படுகிறது.

## கயிறு இழுத்தல்

பொது நிகழ்ச்சிகளின் போதும், கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்களிலும், ஏனைய விழாக்களின் போதும் கயிறு இழுத்தல் போட்டியை வைப்பார்கள். குறிப்பாக திருமணம் ஆன ஆண்களும் திருமணம் ஆகாத ஆண்களுமாக இழுப்பார்கள். இதற்கு நடுவர் ஒருவர் இருப்பார். றெடி என்றதும் இருதரப்பினரும் இழுக்கத் தொடங்கிவிடுவார்கள். கயிற்றின் நடுவில் ஓர் அடையாளம் கட்டப்பட்டிருக்கும். அதேபோன்று நிலத்தில் மூன்று கோடுகள் போடப்பட்டிருக்கும். நடுவில் உள்ள கோட்டில் அடையாளமிருக்கும். ஒரு பக்கத்தில் 6 அல்லது 7 பேர் நிற்பார்கள். இழுக்கத் தொடங்கியதும் அடையாளம் எந்தப்பக்கம் செல்கிறதோ அவர்களே வெற்றி பெற்றதாக நடுவரால் அறிவிக்கப்படும். அக்குழுவினரே வெற்றிபெற்றவராகக் கருதப்படுவர்.

## கவிப் பாடல்கள்

தென்கிழக்குவாழ் மக்கள் பழங்காலம் தொட்டு இப்பிரதேசத்தில் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களின் கலை, கலாச்சாரங்கள் ஏனைய கலாச்சாரங்களைவிட தனித்து இஸ்லாமியக் கலாச்சாரத்தோடு ஒட்டி நிற்பதை அவதானிக்கலாம். இந்தவகையில் நெற்பிட்டிமுனை வாழ் மக்கள்கூட அதற்கு விதிவிலக்கல்ல என்பதை அவர்களுடைய பாடல்கள் மூலமும் அவர்களுடைய நம்பிக்கை மூலமும், தொழில்கள் மூலமும், வாழ்கைமுறை மூலமும் கண்டு கொள்ளக்கூடியதாக இருக்கிறது. இவ்வூரில் பழம்பெரும் புலவர்கள், வரகவிகள், புலமைவாய்ந்தவர்கள், அறக்கவி பாடக்கூடியவர்கள், பள்ளுப்பாடக் கூடியவர்கள் என்றெல்லாம் ஏகப்பட்டவர்கள் வாழ்த்திருக்கிறார்கள். ஊரில் அல்லது தென்கிழக்குப் பிரதேசத்தில் ஏற்படும் இயற்கை அனர்த்தங்கள் மனதைத் தைக்கின்ற விடயங்களுக்கெல்லாம் பாடல் அமைத்து விடுவார்கள். பாடல்கள் தேடித்திரிந்து புத்தகங்களில் எழுதுபவர்கள் இல்லை. அதனால், சந்தர்ப்பம் வருகின்ற போதெல்லாம் வாயால் பாடி மனனமிட்டு விடுவார்கள். அதைக்கொண்டு ஏனையவர்களும் மனனமிட்டு பாடிக்கொண்டு திரிவார்கள். நான் தற்பொழுது எழுதுவதெல்லாம் வாய் மொழிமூலம் பாடப்பட்டவைகளேயாகும். ஏட்டில் எழுதிவைக்கும் வழக்கம் இவர்களிடம் இருக்கவில்லை. நான் நினைக்கிறேன் நான் எழுதுவதுதான் முதற் தடவையாகும்.

இப்படி ஏகப்பட்டவற்றையெல்லாம் பாடல்களாகவும், கவிகளாகவும், காவியமாகவும் பரம்பரை பரம்பரையாகப் பாடிக்கொண்டிருப்பார்கள். பாடியது யார் என்று கேட்டல் தெரியாது என்ற பதிலே மிச்சமிருக்கும். இருந்தபோதிலும் இப்படிப்பட்டவைகளை தொகுக்க வேண்டும் என்ற நீண்டநாள் ஆசையை நிறைவேற்றும் சந்தர்ப்பம் இது எனக் கருதுகிறேன். பாடியவர்களில் அனைவரும் மரணித்து விட்டார்கள் என அறியக் கிடைக்கிறது. இருந்தாலும் இன்னும் காலதாமதம் ஏற்படும்போது தெரிந்தவர்கள்கூட மரணித்துவிடக்கூடும் என்ற அச்சத்தின் காரணமாக இத்தொகுப்பை தொகுப்பதற்கு முன்வருகிறேன். அல்லாஹ்வின் துணைகொண்டு இத்தொகுப்பு சிறப்பாக அமையும் எனவும் எதிர்பார்க்கிறேன்.

பழைய பாரம்பரிய தொழிலை இவ்வூர் மக்கள் இன்றுகூட மறந்திடாமல் செய்துகொண்டிருப்பது இந்த ஊரின் சிறப்பம்சங்களில் ஒன்றாகக் காணப்படுகிறது. உதாரணமாக பன் பிடுங்குதல், பாய் இழைத்தல், திராய், பொன்னாங்கண்ணி நோண்டுவது, விற்பது, கூனி

பிடிப்பது விற்பது, நன்னீர் மீன்பிடிப்பது, தோட்டங்கள் செய்வது தோட்டங்கள் என்பது அப்போதைய சேனைப்பிர் செய்கையின் நவீனம். சேற்றில் இறங்கி விவசாயம் செய்வது, மாடு வளர்ப்பது, ஆடு வளர்ப்பது இவையெல்லாம் பழங்காலத்தில் இருந்து இன்றுவரை நடைபெற்று வருகின்ற தொழில்களாகக் கொள்ளப்படுகின்றன. உலகம் நாகரீகத்தில் மாறிக்கொண்டிருக்கும்போதும் இன்னும் இத்தொழில்களில் நிலைத்து நிற்பதென்றால் கிராமியம் இன்னும் மாற்றம் அடையவில்லை என்றே கருத வேண்டியிருக்கிறது.

ஏடறியா இலக்கியங்கள் என்று சொல்லக்கூடிய இவ்வூர் மக்களின் செயற்திறன்கள் இற்றைக்கு 75 ஆண்டுகளுக்கு முன்னர் எழுத்தறிவு பெற்றோர் எண்ணக்கூடிய அளவிலே இருந்திருக்கிறார்கள். 1947ல் பட்டிருப்புத் தொகுதியிலிருந்து US. எதிர்மன்ன சிங்கம், SM. இராசமாணிக்கம், VO. குருகுல சிங்கம் போன்றோர் தேர்தலில் போட்டியிட்டவர்களாவர். இவர்களின் தேர்தல் பிரச்சாரங்களின்போது இந்த ஊரில் எழுத வாசிக்கத் தெரிந்திருந்த ஒரேஒரு பெண்மனிதான் இருந்திருக்கிறார். கொட்டார் மகள் குழந்தையும்மா என்னும் அப்பெண்மனியைப் பயன்படுத்தியே வாக்குச்சீட்டுக்கு புள்ளடியிட பழக்கி இருக்கிறார்கள். அக்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் கீழ் கல்முனைப் பிரதேசம் இருந்த காலமாகும். அதற்கு முன்னர் 1850ம் ஆண்டு காலப்பகுதிக்கு முன்னர் எழுத வாசிக்கத் தெரிந்தவர்கள் எந்தளவு இருந்திருப்பார்கள் என்பதை நாம் சிந்தித்து அறிந்து கொள்ளக்கூடிய விடயமாகும். அக்காலத்திற்கு முன்பிருந்தே பாடல்களைப் பாடி வந்திருக்கின்றார்கள் என்றால் அதற்குப் பின்னர் உள்ள காலத்தில் எத்தனை நூல்களை நாம் எழுதிக்குவித்திருக்க வேண்டும்? சிந்தனைக்கு இவ்விடயத்தை குறிப்பிடுகிறேன். பின்னர், 1960ம் ஆண்டு மார்ச் மாதம் சட்டமன்ற உறுப்பினர் MS. காரியப்பரின் முயற்சியினால் கல்முனைத் தொகுதியோடு எமது ஊர் இணைக்கப்பட்டது.

எழுத்துக்கள் காலத்தால் அழியாதவை. எழுத்துக்களில் வைத்திருந்தால் எத்தனை நூல்களை எழுதியிருக்க முடியும்? படித்தவர்கள் இதற்கு முன்வரவில்லையே என்பது எனது கவலை. தானும் தன்பாடும் என்று வாழாவிருந்து விட்டனர். இது இந்த ஊரிலுள்ள பெரும் குறைபாடாகும். இவ்விடயம் திருத்தி அமைக்கப்பட வேண்டும். இளைஞர்கள் விழித்தெழ வேண்டும். அப்பொழுதுதான் ஊரின் அடையாளம் தெரியும். ஆகவே இவ்விடயத்தைக் கருத்தூன்றிக் கவனிக்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறேன்.

இப்போது காவியம் ஒன்றைப் பார்ப்போம். 1882ம் ஆண்டு சித்திரை மாதம் 12ம் திகதி நடந்த கோரச் சம்பவம் ஒன்று. தன்னுடைய கணவன் வேறொரு பெண்ணோடு கூடினான் என்ற செய்திகேட்ட சின்னம்மா என்னும் பெண் தன்னுடைய கணவனின் இக்கொடிய செயலால் மனமுடைந்து இனி இந்த உலகில் வாழ்வதில்லை என்று எண்ணி, அவளுடைய பிள்ளைகள் மூவரையும் கையில் பிடித்துக்கொண்டு கடலுக்குச்சென்று கடலிலே மூழ்கி மரணமடைகிறாள். பிள்ளைகளையும் பொண்டாட்டியையும் காணவில்லை என அறிந்த கணவன் ஊர்சனத்தின் உதவியோடு தேடுகிறான். இறுதியில் கடற்கரைப்பக்கம் சென்றதாக அறிந்து தீப்பந்தங்கள் கொழுத்திக்கொண்டு கடற்கரை ஓரங்களில் தேடுகிறார்கள். பலன் காணவில்லை. இறுதியில் கல்லாற்றிலே சடலங்கள் கிடப்பதாக அறிந்து அங்கு சென்று பார்க்கையில் அவை தன்னுடைய பிள்ளைகளும், மனைவியும் என்பதை அறிந்து கொள்கிறான். பின்னர் ஜனாஸாக்களை எடுத்துவந்து அடக்கம் செய்யப்படுகிறது. இந்த நிகழ்வு 1882ம் ஆண்டு சித்திரை 13ம் திகதி நடந்தததாக வரலாறு கூறுகிறது.

## காவியம் I

வாவியில் விழுந்த கதை போலவே
கிருபை செய்வாய் ஆதி றகுமானே
றகுமானே உன்னுடைய அடியார்கள்
வாழும் நற்பிட்டிமுனை தன்னில் ஒருமாது

நடை அலங்கார சூழல் மானமுடன்
நாகமணி ஈன்றகுழல் வஞ்சியர் தமக்கும்
மேன்மை உடனே அந்த மெல்லிகை நடந்தான்
நேரமதிலே பெரிய சோதி அருளாலே
மடமாது கணவனிடம் நேர் தயவு பொங்கி
மைந்தர்கள் பிறந்து வெகு சிந்தை மகிழ்வானார்.
சிந்தை பொருந்தியே ஆக்களைப் புகழ்ந்து
செப்பமுடியாத லகாத்தும் நோன்பும்
சொந்தமாய் வருகின்ற சுன்னத்து நோன்பும்
தொழுகை தன்னை ஒருபோதும்
மறவாத மாது.

சொந்த மணவாளனது சூழ்வினை யினாலோ
தூய பெரியவனது சூழ்வினையினாலோ
தந்தை தாய் செய்த அநியாயமதினாலோ
தலை தனில் எழுந்து தான் அறியிலேனே.
அறியாத வினைகள் வந்து அடைவதனாலோ
அந்நாளிலோ முடிகசெய் கொடுமையினாலோ
வறியவர்கள் தமக்கிரணம் ஈயாததனாலோ
மற்றுமோர் வினைவந்து சுற்றுவதனாலோ.

சிறிய இள மழலைகள் செய்த வெப்பென்ன
சிரியாத கணவனையும் பிள்ளையையும் கிழந்து
பூவுலகிலே செய்த புதுமையிது கேளும்
வேறு மணமகளோடு கூடினான்
என்ற வசை பேச
புதிய மணவாளன் தான் என்று உரைத்தான்.

உரைத்த வசை பேசியதால் அந்த மடமாது
ஊர்தனில் இருப்பதில்லை என்று மனமெண்ணி
கருத்துடன் சோறு கறி சகலதும் சமைத்து
கணவன் தனக்கு ஒரு சடுதியில் அனுப்பி
பிடித்த திருமேல் உள்ள மாந்தர் அறியாமல்
வெளியாகவே அந்தப் பழிகாறன் போக
கருத்துடன் ஆனபல சங்கதியும் எண்ணி
சண்டாளி போகவே நன்றாக எழுந்தாள்.

எழுந்தவள் ஒரு குழந்தையை இடுப்பினில் இடுக்கி
இனிதாகவே மறு குழந்தையை நடாத்தி
பழமது இழந்த சில பட்சிகள் போல
பாவி அவள் ஏகினாள் வாவிதனை நாடி.

அளந்தபடி குறையாத ஆதி முடிவு
வந்தடைவது போல
தானும் பிள்ளைகளும் பாண்டிருப்பு
ஊரும் கடந்து
வாவிதன்னை நாடியே காரிகையும் நடந்தாள்.

காரிகை கடந்து நேர்கடலை நாடி
பாலை மர நிழலிலே ஓய்வும் எடுத்து
சூரியன் அமையும் அளவும் இருந்து
சொல்ல முடியாத பல சேரியும் எடுத்து
வாவியின் மீதிலே யாரும் அறியாமல்
மடியில் இருந்த மழலை தனை எறிந்தாள்

எறிந்தவுடன் மறுமழலை கண்டோட
எலிதனை பூனைபாய்ந் தெய்யுவது போல
பிடித்தவள் குழந்தையை கையில் இடுக்கி
பொருந்தும் என் கண்மணியே அருமை மகனே
புதுமை இது கேளும் என் அருமை மகனாரே

முறிந்த அலை தன்னிலே பாலனையும் கொண்டு
மூழ்கினாளோ அந்த மங்கை மடமாது
மடமட வே என்றந்த மாபாவி உருள
வாவிதனிலே வந்த அலை மொத்த
சடசட னவே அந்த சண்டாளியைத் தள்ளியே
தான் நீர் கொண்டு போக
படபட ன்ன ஆவியது சடுதியில் போக
துடிதுடித்து இக் கொடுமை தனை
பாவியவள் வாவியில் செய்தாள்.

இயற்றியவர்:- தெரியாது
பாடியவர்:- பக்கீர்த்தம்பி மீரார்

## காவியம் II

அப்போது பிரதமாராகவிருந்த DS. சேனநாயக்கா இங்கினியாக்கலை சேனநாயக்கா சமுத்திரத்தை கட்டுவித்து நீர்ப்பாசன ஏற்பாடும் செய்து குடியேற்றத்தை ஏற்படுத்தினார். அக்காலத்தில் மின்சார உற்பத்திக்கும் அச்சமுத்திரம் பயன்படுத்தப்பட்டது. இப்படிக் கட்டப்பட்ட அச்சமுத்திரத்தை பார்வையிடுவதற்காக மக்கள் சாரை சாரையாக சென்றனர். இன்றும்கூட சென்று பார்வையிட்டு வருகின்றனர். இப்படியான இந்த நிகழ்வின்போது இவ்வூர் வரகவிக்களால் பாடப்பட்ட பாடலே இதுவாகும்.

இக்கினியாகலை பார்க்க எழுந்துமே
இன்சொல் கிளி மொழியாளே
பஞ்சு படாமலே ஓடி நடந்து வா
பார்த்து மகிழ்ந்து பலன் பெறலாமே

பாவையரே நீ எழுந்து நடந்து வா
பாண்டிருப்பு அதைப் பாரு
பார்த்தால் சனக் கூட்டமாகவே நிற்குது
பாவையே வந்து நீ பாரு

மட்பாண்டம் செய்யும் தலமொன்று இருக்குது
மங்கையே நீ வந்து பாரு - அங்கே
தங்கத்தால் வேலை செய்யும் தல மொன்று
தட்டுகிற சத்தமும் கேளு

தங்காமல் ஓடி நடந்துமே வாரீர்
தாளவட்டான் சந்தி அங்கே தெரியுது
சேற்றை உழுதுவே சென்நெல் விதைக்கிறார்
சற்றே நடந்து வா மற்றதைச் சொல்கிறேன்
ஆசுபத்திரி ஆனதொரு கட்டடம்
அன்னா தெரியுது மானே - அங்கே
சோதனை பண்ணும் குழல் கொண்டு வைத்து
சுறுக்கா மருந்துகள் கொடுக்கார்

இன்னும் ஊசுகள் பாச்சி
மருந்துகள் ஏற்றுறார்
ஓடி வந்ததைப் பாரு

மார்க்கட்டுச் சந்தையில்
மாங்கனி விற்கிறார்
மாமயிலே வந்து பாரு - அங்கே
மாடாடு அறுத்து இறைச்சிகள் தூங்குது
மங்கையரே அதை வந்து பாரு

சாய்ந்தமருது என்னும் ஊர் தெரியுது
தையலரே வந்து சேரு
அங்க சங்கவான் கூடியிருக்கும் தலமாம்
தங்கலாம் என்றுரைப்பாரு
ஜவுளிக்கடைகள் பரத்தியிருக்கிறார்
தையலரே அதைப்பாரு
பட்டுப் புடவைகள் மிச்சம் இருக்குது
பார்த்து அதிலே கொஞ்சம் வேண்டு
இன்னும் பாவாடை, சட்டைத்துணிகள் இருக்குது
பட்டால தச்ச றவுக்கை இருக்குது
ஒன் கைக்கு ஏற்ற துணிகள் இருக்குது
கோவையரே நீ ஏவி நடந்து வா
இக்கினியாகல்லு மானே
பார்க்க எட்டி நடந்துவா தேனே

காலைறியாமலே ஓடி நடந்து வாஷ
காரதீவெங்கிற ஊரு
நீயும் முன்னே நடந்து வா
முச்சந்தி றோட்டு ஊடுகள் தெரியுது பாரு
பாதையோரம் சோனகர் நின்று
பாத்திஹா ஓதுவார் கேளு

அங்கே பக்கத்தில் மக்காமும் கட்டியிருக்குது
பார்த்து நீ காணிக்கை போடு
அடி மானே நடந்து வா பாலங்கள் போகுது
மாவடிப்பள்ளியாம் ஊர் வருகுது
சற்றே நடந்து வா சம்மாந்துறையிது
தங்கியே போகலாம் மங்கையே நீ கேளு
இக்கினியாகல்லு மானே பார்க்க
எட்டி நடந்து வா தேனே

நேரே நடந்து வா நேரமாகுது
நெத்திக்கு நேரே ஒரு நோட்டுத் தெரியுது
மத்தியான வெயில் மெத்த விழுகுதுவு
மாமயிலே நீ ஏகி நடந்து வா
இக்கினியாகல்லு மானே பார்க்க
எட்டி நடந்து வா தேனே

மாமயிலே நீ ஏகி நடந்து வா
மல்வத்தை என்கிற ஊரு
அதில் மட்டிலடங்காத வயல்கள் இருக்குது
மாங்குயிலே வந்து பாரு
இன்னும் கூடாரம் கட்டும் குறவர் இருக்கிறார்
கோதையயே நீ வந்து பாரு
கொஞ்சம் நடந்தால் குளங்கள் தெரியுது
கோதையயே நீ வந்து பாரு
மாலையதாகுது சோலை வருகுது
மான்கலைக் கூட்டம் வழியினில் போகுது
அஞ்சாமல் ஓடி நடந்து நீ பாரடி

அம்பாறை என்னும் குளமங்கு தெரியுது
இக்கினியாகல்லு மானே பார்க்க
எட்டி நடந்து வா தேனே

இவ்வாறு நடந்து சென்று இங்கினியாகலையை அடைந்தவுடன் அங்குள்ள நிலைமைகளையும் பெரிய இயந்திரங்களையும் வேலைத் தலங்களையும் வேலைகளையும் புலவர் பாடியுள்ளார்.

அன்னா தெரியுது இங்கினியாகல்லு மானே
எட்டி நடந்து வா தேனே
ஓலைக்கடைகளும் பேலியாய் தோணுது
ஓடி நடந்து போய்ச் சேரு

காய்கறி விற்கும் கடைகளிருக்குது
கன்னியரே போய்ப்பாரு
கட்டாக் கருவாடு கட்டோடு விற்கிறார்
பார்த்து அதில் கொஞ்சம் வேண்டு
சோத்துக்கடை வைத்து ஆக்கிக் கொடுக்கிறார்
சும்மா பசியாறிப்பாரு

ஓடி நடந்து வா உள்ளால போகலாம்
உத்தம ராஜரின் சித்திர வேலையாம்
கண்ணே நடந்து வா இன்னமும் சொல்லுறன்
சுற்றி மிசின்கள் சுழண்டு வருகுது
இக்கினியாக்கல்லு மானே பார்க்க
எட்டி நடந்து வா தேனே

மண்ணினை அள்ளி மரத்தைப் பிடுங்குது
மாங்குயிலே வந்து பாரு
கேடரைத் தூக்கியே கீழே இறக்குது
கிட்ட நடந்து போய்ச் சேரு
மரத்தை அறுத்து மலைபோல் குமிக்குது
மாங்குயிலே வந்து பாரு

மண்ணினை அள்ளி மலைபோல் குமிக்குது
மன்னவனே வந்து பாரு
இன்னும் கம்பி மரங்களை நாட்டியிருக்குது

காந்த கலிந்துக்கள் தூக்கியிருக்குது
காறுகளோடி மாறித்திரியிது
கண்ணே நடந்து வா இன்னமும் சொல்லுறன்
இக்கினியாகல்லு மானே பார்க்க
எட்டி நடந்து வா தேனே

இயற்றியவர்:- தெரியாது
பாடியவர்:- TS. மரியம் வீவீ

## காவியம் III

1957ம் ஆண்டில் ஏற்பட்ட சூறாவளியும், தொடர் மழையும் வெள்ளப்பெருக்கும் மாறிமாறித் தொடர்ந்ததால் பாரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு மக்கள் அகதிகளாக்கப்பட்டனர். நூற்றுக் கணக்கானனோரை வெள்ளம் பலி கொண்டது வீடுகள் உடைந்தும், பாரிய மரங்கள் வீழ்ந்தும் போக்குவரத்து தடைப்பட்டது. வாகனங்கள் போகவர முடியாமல் நின்ற இடத்திலேயே நின்றன. சில வாகனங்கள் வெள்ளத்தினால் அள்ளுண்டு சென்றன. பல ஊர்கள் முற்றாக வெள்ளத்தால் மூழ்கியதன் காரணமாக மரத்தின் மீதேறி உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தனர்.

காப்பாற்ற வழியின்றி அரசு தவித்தது. நிவாரணங்கள்கூட கொண்டுசெல்ல முடியாத நிலை ஏற்பட்டது. மண்சரிவுகள் ஏற்பட்டதால் பாதைகள் மூடப்பட்டன. வீடுகள் மண்ணுக்குள் புதையுண்டன. இவ்வாறான சந்தர்ப்பத்தில் மக்கள் அகதிமுகாம்களில் இருந்து அழுது புலம்பினர். தோணிகளும் வள்ளங்களும் கொண்டு மீட்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இருந்தபோதிலும் மீட்புப்பணிகள் சீராகச் செய்ய முடியாது பணியாட்கள் கவலையுற்றனர். அரசு ஹெலிகப்றர் மூலம் ஆகாயவழி நிவாரண உதவிகள் செய்தபோதிலும் போதுமான அளவு உரிய இடங்களுக்குப் போய் சேரமுடியாத நிலை இருந்தது.

இவ்வாறு மூன்று நாட்கள் இவை தொடர்ந்தன. பின்னர் ஓரளவுக்கு வெள்ளம் ஓரளவு வடியத் தொடங்கியது. இவ்வாறான கோரச் சம்பவத்தைத் தொடர்ந்து உருவானது இக்காவியமாகும். இதை இயற்றியவர் யாரென்று தெரியாது. பாடியவர் TS. மரியம் வீவீ ஆவார். அவர் எனது தாயார்.

பார்புவியில் ஓர் பகுதி
இலங்கை நகர் தன்னில்
பாவையரும் ஆடவரும்
வாழ்ந்து வரும் நாளில்
சீர் புவியை மூழ்கடிக்க
வெள்ளம் வந்த செய்தி
சொல்லவே அருள் செய்வாய்
வல்ல பெரியோனே!

பெரியவா 1957ம் வருடம்
அரிய பெரும் மார்கழி
16ம் திகதி
அந்நாளில் வந்ததுமாம்
மழையுடனே காற்றும்

மழையுடனே வருகின்ற
காற்றும் புயலும்
மாறிமாறியே மீறிஅடித்து
தழை கொடி செடி மரம்
முதலானவை யெல்லாம்
தாறு மாறாய் தரையில்
வீழ்ந்தது அம்மா!

அம்மாசம் 1957ல் அடங்காத வெள்ளம்
ஒடுங்காமல் வந்து
எம்மாத்திரம் வீடுகள் சாமான்கள் எல்லாம்
ஏகினதாம் வெள்ளமதில்
தோகை மயிலாரே

தோகையரே கல்லோயாப் பள்ளத்தாக்கில்
உள்ள மக்களெல்லாம்
அப்பகுதிவிட்டு தேகம் பொறுக்கவே
ஓடி நடந்து தீவிரமாய் வந்தார்கள்
கோபுரங்கள் விட்டு

விட்டு வடமத்திய கிழக்கு மாகாணம்
வாரிபோல் ஆயிரக்கணக்கான மக்கள்
வீடுகள் இழந்து தவித்தார்கள் என்று
விள்ளனர் வானொலியில்
இன்னமும் கேளும்
வீடிழந்து சுவர் கவிழ்ந்து
வெளியேறுவோர் ஒரு கூட்டம்
வீடு வீடாய் புகுந்து களவெடுப்போர் ஒரு கூட்டம்
ஆடு மாடுகளை அறுத்துப் புசிப்போர் ஒரு கூட்டம்
என்றுமுள்ள கள்வருக்கு அன்று கொண்டாட்டம்

காலம் தவறாமல் ஓடும் ரயிலும்
தரைப் பாதையால் வரும் காரும் லொறியும்
பாலம் பழுதான செய்தியது கேட்டு
போய் வர முடியாதது கொழும்பு நகர் என்றார்.

என்றார் வவுனியா மூதூர் மக்கள்
ஏறிமரத்தில் இருந்து தவித்தனராம்
நன்றாக சல்லாபம் பாதிக்கவே பட்டு
நாடி இருநூறு குளங்கள் வழிந்தோடி
தன்னாமுனை சித்தாண்டி வந்தாறுமூலை
தார்குளலே ஏறாவூர் நீரில் மூழ்கிப் போச்சு

போச்சே வயல் வந்நிப்போன மநுபேர்கள்
பிள்ளைகளும் ஆடவரும் மெல்லிழையார் களெல்லாம்
நீத்சத் தோணி கொண்டு திரிந்து தேடி எடுத்தனராம்
ஆனசில பேரை
என்னார் வண்டாரவளையில் மண்சரிந்து
சேரவே நாலுபேர் சிவலோகம் போனார்
அன்னமே பேராதனையில் ஒரு குடும்பம்
ஆனதொரு மண்சரிவால் தாலுயிர் இழந்தார்.

கொடுத்தார்கள் கூப்பனுக்கு
இரண்டு படி அரிசி
குறையாமல் தேயிலை சீனி கால்நாத்தல்
அடுக்காக மாசி வெங்காயம் பருப்பு
அத்தனையும் அகதிகளுக்கு
மொத்தமாகச் சேர்த்தார்.

சேர்த்தார்கள் விமானமதில்
ஜேமுடனே பாணும்
சீராக உடுபிடவை நேராய் கொடுத்து
பார்த்தார்கள் கண்ணை இமையது போல
பாதுகாக்கும் நம் அரசாங்கத்தாரும்.

இயற்றியவர்:- தெரியாது

பாடியவர்:- TS. மரியம் வீவீ

## காவியம் IV

1890ம் ஆண்டு காலப்பகுதியில் இந்த ஊர் மக்களுக்கு அம்மை நோய் பரவத்தொடங்கியது. இந்த நோயை கொப்பளிப்பான் என்றும் சொல்லப்படும். இது தொற்றும் நோயாகும். நூற்றுக்கணக்கான மக்கள் இந்நோயினால் பாதிக்கப்பட்டதால் அரசாட்சியாருக்கு சிரமம் ஏற்பட்டது.

நாளுக்குநாள் நோயாளிகள் அதிகரித்துக்கொண்டு இருக்கிறார்கள். அம்மாளுக்கான வைத்தியம் நடைபெற்றபோதிலும் போதிய பலன் கிடைக்கவில்லை. இதேநேரத்தில் ஏனைய ஊர்களுக்கும் பரவும் அபாயம் நிலவியது. இதன்காரணமாக கவலை கொண்ட அரசாட்சியார் இந்நோயாளிகளை தனிமைப்படுத்தி நோய்க்கான நிவாரணம் காணவேண்டும் என்ற நோக்கில் கடற்கரை ஓரத்திலே முகாம் அமைத்து அதிலே தங்கவைத்து வைத்தியம் செய்தார்கள். அந்தவகையில் காட்டுக்குச் சென்று கம்புகள் வெட்டி முகாம் அமைத்து அங்கே தங்கவைத்து வைத்தியங்கள் நடைபெற்று குணப்படுத்தப்பட்டதாக வரலாற்றில் இருந்து அறியக்கூடியதாக இருக்கிறது. அந்தவகையில் உதயமானது இப்பாடல் (காவியம்). இதனை முழுக்கப்பெற முடியாது போய்விட்டது. இருந்தாலும் ஞாபகத்திற்காக அறிந்தவற்றை இங்கு குறிப்பிடுகிறேன்.

அரச்ச மஞ்சள் அம்மில
அறுத்துக் கழுவிய மீன் சட்டில
பாத்து மூடிய சோறு அடுப்பில
பாலன் சிறு குழந்தை மடியில

காட்டில கம்புகள் வெட்டட்டோ
கடற்கரை வீதியில் கொட்டட்டோ
நாட்டுக்கால் கொண்டு நாட்டட்டோ
நன்றாய் கேம்புகள் அமைக்கட்டோ

ஓடியே வந்த உடையான் மார்
ஒவ்வொரு மனிதனாய் எண்ணிட்டார்
காட்டியே கொண்டு அடைந்திட்டார்
கம்பு கட்டிய கேம்புல போட்டிட்டார்.

இயற்றியவர்:- தெரியாது
பாடியவர்:- காதர் கிழவர்

பால் கொடுத்த மாதிரியும் அரிசி உலையில் போட்ட மாதிரியும் மீன் அறுத்த மாதிரியும் சாப்பிட்ட குறையோடும் இன்னும் அவரவர் செய்து கொண்டிருந்த வேலைகளைப் பொருட்படுத்தாமல் நோயாளிகளைக் கண்ட கண்ட இடத்தில் வைத்து உடையான்மார்

பிடித்துக்கொண்டு சென்று கேம்பில் (முகாமில்) அடைத்து வைத்தியம் பண்ணினார்கள். ஓடிஒழிந்தவரும் மாறி மறைந்தவரும் பிடிபட்டார்கள். பாகுபாடின்றி பிடித்துக் கொண்டு அடைந்திருக்கின்றனர்.

## காவியம் V

இரயில் பாதை அமைப்பதற்காக இவ்வூரைச்சேர்ந்த ஓடாவிகளும், கூலித்தொழிலாளரும் தெரிவு செய்யப்பட்டு பல ஊர்களைச் சேர்ந்தவர்களையும் சேர்த்து தண்டவாளக் கட்டைகள் அறுப்பதற்காக வாவின்னை, பறவகலை, அம்பக்காவலை, வட்டினாகலை, எக்கலோயா, மரியந்தளாவை போன்ற காட்டு ஊர் பகுதிகளில் இடத்துக்கிடம் ஸ்ரேசன் உண்டாக்கி கொழும்புக்கு இரயில் ஓடுவதற்காக கட்டைகள் அறுக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டது. அச்சந்தர்ப்பத்திலே இக்காவியம் பாடப்பட்டிருக்கிறது. இந்நிகழ்வு எத்தனையாம் ஆண்டு என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் வெள்ளைக்காரருடைய ஆட்சிக்காலத்தில் என்பதை குறிப்பிட்டுக்கூற முடியும். 1948ம் ஆண்டுக்கு முன்னர் என்பதை ஊகித்துக் கொள்ளவும் முடியும்.


வாவின்னை, பறவகல், அம்பக்காலைல்ல
வட்டினாகல், எக்கலோயா, மாரியன் தளாவாய்
தமனை ஊர் ஆள்வாண்ட பிட்டியோர் தன்னில்
நாகரீகமான பல ஸ்டேசன்கள் உண்டாக்கி
கொழும்புக்கு இரயில் ஓட என்று அவர் சொல்லி
கட்டைகள் அறுக்க வழிபாதைகள் இணக்க
கையாட்கள் 500 பேர் வரை சேர்த்தார்.

பொய்யாமைச் சாதியின் திட்டமாற்ற வரும்
கூசாமல் அரசுக்கு நேரே அறிவித்தார்
அறிவித்தல் கண்டவுடன் அரசாட்சியாரும்
ஆலோசனை சங்கம் வைத்தவர் விளங்கி
முதலாளி துரிதமாய் மறுமொழிகள் சொல்ல

முழுவதும் சரியென அரசு கையேந்து
சட்டவாள் வீரவாள் காதரை எடுத்து
சரிநூல் அறுத்து அதில் பிச கொன்றும்மில்லாமல்
சண்டத்துடன் துண்டாடச் சொன்னார்.

இயற்றியவர்:- தெரியாது

பாடியவர்:- பக்கீர்த்தம்பி மீரார்



கல்லடி(புளியந்தீவு)ப் பாலம் நிர்மாணிக்கப்படும் காட்சி 1929

## புளியந்தீவுப் பாலம்

முற்காலத்தில் புளியந்தீவு என அழைக்கப்பட்ட மட்டக்களப்பு வாவியை ஊடறுத்து ஆங்கிலேயருடைய ஆட்சிக்காலத்தில் பாலம் அமைக்கப்பட்டபோது அக்காலத்தின் கட்டுமான வேலைகளைப் பார்வையிடுவதற்காக மக்கள் கூட்டங்கூட்டமாக நெற்பிட்டிமுனை கிட்டங்கி வாவியிலிருந்து புளியந்தீவு - மட்டக்களப்பு வரை சூத்திரக்கப்பல் (இயந்திரப்படகு) மூலம் மக்கள் சென்று பார்வையிட்டு வந்தனர். அக்காலத்தில் மாவடிப்பள்ளியிலிருந்து புலவரும் அவருடைய பாரியாரும் இன்னும் சிலரும் பாலம் பார்க்க பயணப்பட்டபோது பாடப்பட்ட காவியாமாகும்.

சீர்பெருகி நல் சிறப்போடு மதினா நகராம்
சொல்ல முடியாத நல் வானமும் பூமியும்
துணையான நபிகள் நாயகமே ...
நண்பான பூமிதனில் மானிடர்க்குதவியாய்
அருள்பெற்ற அவுலியாக்கள்
ஆரிபீன்கள், வலிமார்கள், அறிவுள்ள கல்வியாட்கள்
சொற்பிழைகள் வரி சிற்றெழுத்து சீரெடுத்தென
துன்பம் நீக்கி ...
சுத்தமுடன் வெற்றி தந்தருள்வாய் துய்ய மா காப்பு நீயே...

நீதி தவறாத மூமீன்கள் வாழுகின்ற
மாவடிப்பள்ளியிலிருந்து
நல்ல நகையதாகிய மாலை மணிகளும்
நின்றிதமாக வணிந்து
கோரிடும் கூந்தலை வாரிமுடித்து
குலங்கலையாமலே குச்சுமணிந்து
மாதிரியான ரவிக்கையும் சூட்டிய மாமணியே

பாலம் பார்க்க போவோம் வாருங்கோ
எந்தன் பாவையரே நடந்து வாராய்
பாலம் பார்க்க போவோம் வாருங்கோ

உன்காலடிப் பீலி கலீர் கலீர் என்கவே
கையில் வளையல் வலீர் சலீர் என்கவே
மூக்குத்தி நல்லா பளீர் பளீர் என்கவே
மோதலைக்காப்பு தக, தக என்கவே
கைக்கட்டு தாவத்து கண்ணொற்றி மின்னவே
கெண்டையில் தண்டை கலீர் கலீர் என்கவே
கிளிமொழி மாதே என்கூட நடந்துவா பாலம் பார்க்க ...

கண்ணுக்கு சுறுமத கணக்காக போட்டுக்கோ
பல்லுக்கு காவி பருவமாய் தீட்டிக்கோ
சட்டை ரவிக்கை சரியாகப் பூட்டிக்கோ
வெண்பட்டுச் சோமனை விசிறி உடுத்துக்கோ
கொண்டைக்கு மாலையைகூர்மையாய் குத்திக்கோ
கூடவருவாரோ முறவாகப் பேசிக்கோ
கொண்ட கணவனை கண்டு நடந்துவர் பாலம் பார்க்க ...

அரிசி கறிகள் அடுக்காய் எடுத்துக்கோ
தக்கவிதமாக சாமான்கள் எடுத்துக்கோ
அயல்வீட்டுககாரரரை ஆராய்ந்து பார்த்துக்கோ

பக்கத்தில் வாறவரை பார்த்து நீ சேர்ந்துக்கோ
நின்டுகதைக்கவும் நேரம் காணாது
நேரிழையாளே வா நீ காரில் ஏறுவம் பாலம் பார்க்க ...

காருக்கு காசு கணக்கான எடுத்துக்கோ
கண்ட சாமான் வாங்க புறம்பா எடுத்துக்கோ
நின்டு கதைக்கவும் நேரமும் காணாது
வசு வருகுது வாங்க நாம ஏறுவம்
ஏறிய உடனே இழுத்தங்கு ஓடிடும்
ஏந்திழையே புள்ள பயப்படாதடி பாலம் பார்க்க ...

பாலப் புதுமையை பாங்காகவே கேளு
பட்டபாட்டை சொல்ல எட்டு நாள் செல்லும்டி
தலையிடி காய்ச்சல் கிறுகிறுப்புப்போல
சத்திய எடுக்க ஓங்காளம் வாறாப்போல
வெற்றிலை பாக்கையும் தின்னவும் ஏலாது
அந்திரம்போலவே கண்ணுக்குத் தோணுது
அக்காமாரே இது என்ன புதுனம்டி பாலம் பார்க்க ...

சங்கை மிகுந்திடும் மன்னர்கள் வாழ்கின்ற
சாய்ந்தமருது இதுதான்டி
நல்ல சங்கை பொருந்திய நல் சாமான்கள் விற்கின்ற
சந்தைக்கு முன்னால தோன்றி
வாசமணச்சாமான் வாங்கி
இன்பமாகிய நல்ல செண்டு
இந்த கரைவாகு ஊர்விட்டு
அதோ கல்முனை தோணுது பாலம் பார்க்க ...

கல்னைச் சந்தையில் கடற்கரை வீதியில்
கட்டடத்தைச் சுற்றிப் பாரு
இதில் கட்டளைச்சட்ட கவர்மேந்து

நீதி கருத்தாளுகின்ற நாடு
கட்டளைச் சட்டம் கவர்மேந்து நீதியும்
கச்சவடம் செய்து மிச்சம் எடுப்போரும்
மெத்த செய்து மிச்சப்படுவோரும்
மெத்த என சனம் சுற்றியிருக்குது
மெல்லியலாளே நீ வா இன்னமும் சொல்கிறேன் பாலம் பார்க்க ...

கன்னி இளம் குயில் அழகாகச் சொல்லிடும்
காதல் மொழி தனைக் கேளீர்
என்ற கால்நடையாக நடக்க முடியாது
கனதூரம் அந்த ஊரு
மாதாதளம் அன்னா தெரியிது
என்னுடன் சேர்ந்து நடந்து வா தோழியே
நன்னயமாகிய முன்னோர்கள் சொல்லிடும்
நெற்பிட்டிமுனையைக் காணலாம் பாலம் பார்க்க ...

நெற்பிட்டிமுனை நகர்தனைச் சேர்ந்திட்டால்
நாகரீகம் இதைப் பாரு
இதைநாடி நடந்து அப்பால போனாக்கா
நல்லதோர் கிட்டங்கி ஆறு
அதில் மீறிய சூத்திரக்கப்பலைப் போல விசைகொண்டு
ஓடுது எந்நாளும் நாம ஏறியதில் ஓடுவோம்
இனிச் சுணங்காமலே ஏநதிளையே வழிபூத்து நடந்து வா பாலம் பார்க்க ...

ஏறியே அங்கம் விசை கொடுத்தால்
இரைச்சலாய் ஓடுது பாரு
அந்த மீறிய சீறிச் சினத்து
விசைகொண்டோடுது எந்நாளும்
அதில தேடித்திரிகின்ற மீன்கள் சில
திரண்டு விரண்டு திசைதப்பி
தப்பியோடுதென்னாளும் பாலம் பார்க்க ...

காச்சிப்பெருநகர் கத்தான்குடி நகர்தானே
கண்மணி நாயகம் குழந்தையும்மா கபுரடி
நின்று அவர் கபுரடியில் பாத்திஹாவும் ஓதி
நேர்த்திகளான முராதுகளும் வைத்து
நல்ல கலியானச் சோறு பலகாரவகைகளும்
காணிக்கை கட்டியே கையேந்தி நிற்பர்.
அள்ளு காணிக்கை அவிழாமல் கட்டியும்
அவரவர் தக்க முராதுகள் வைப்பர் பாலம் பார்க்க ...

புத்தி சிறந்த புளியந்தீவிது
பூங்கொடி மாதே என்கூட நடந்து வா
ஆற்றுக்கங்காலே அன்னா தெரியிது
அதுதான் பெண்ணே புளியந்தீவு நகர்
அந்தரத்தைத் தொட்ட கல்வீடு, கச்சேரி
அன்னா தெரியிது இன்னமும் நடந்து வா
கிட்ட நடந்து வா கிளிமொழி மாதே
என்கெட்டிதனமாக இன்னமும் சொல்கிறேன்.

நாட்டார் பாடலில் கீழ்வரும் வகைப்பாடல்கள் உள்ளன. அவற்றுள் சிலவகைப் பாடல்களே இப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்பட்ட தலைப்புகளுக்கான பாடல்களை மட்டும்தான் இவ்வூரார் பாடியிருக்கிறார்கள்.

1. பண்டிகைப் பாடல்கள்
2. தொழில் வகைப் பாடல்கள்
3. பிரார்த்தனைப் பாடல்கள்
4. கதா கலாட்சேபப் பாடல்கள்
5. புராணம் சம்மந்தப்பட்ட பாடல்கள்
6. வாழ்த்துப் பாடல்கள்
7. கேலியும் கிண்டலுமான பாடல்கள்
8. வசைப் பாடல்கள் (பள்ளுப் பாடல்கள்)

9. அறப் பாடல்கள்

10. ஒப்பாரிப் பாடல்கள்

11. விளையாட்டுப் பாடல்கள்

12. தாலாட்டுப் பாடல்கள்

13. பிரிதலும் தூதுமான பாடல்கள்

14. இரங்கல் பாடல்கள்

15. காதல் பாடல்கள்

16. கதைப் பாடல்கள்

17. பொதுப் பாடல்கள்

என்ற கிராமியப்பாடல் வரிசையிலே கீழ்க்குறிப்பிடப்படும் பாடல்கள்தான் வழக்கமான பாடலாக இருந்திருக்கின்றன. அப்பாடல்களில் சிலவற்றை இங்கு குறித்துக் காட்டுகிறேன்; பாடிப்பாருங்கள். ஓசைநயம நிறைந்ததாகவும், கருத்தாழம் மிக்கதாகவும் இப்பாடல்கள் காணப்படுகின்றன.

வறுமையும் கிராமமும் ஒன்று சேர்ந்திருப்பது வழக்கமாகும். அந்தவகையில் இக்கிராமம் விதிவிலக்கல்ல. வறுமை தாங்கமுடியாத சந்தர்ப்பத்தில் கேற்முதலியார் MS. காரியப்பர் (வன்னிமை) அவர்களைச் சந்தித்து தமது குறையை எடுத்துக்கூறி பயன்பெற்று வரலாம் எனக்கருதி இவ்வூரில் உள்ள பெண்கள் சென்றார்கள்.

இதேபோன்றுதான் வறுமையில் வாடும் புலவர்கள் மன்னர்களைச் சந்தித்து வாழ்த்துக்கள் பாடி பரிசுபெற்று வருவது வரலாற்றில் வழக்கமாக இருந்து வந்துள்ளன. அந்தவகையில் மேற்சொன்ன சம்பவமும் இருக்கின்றது. அதேவகையில் வன்னிமையைக் கண்டு பாடல்பாடி பரிசு பெற்று வந்திருக்கிறார்கள் என்றால் புலமைக்கும் வறுமைக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றன. இவ்வூர் மக்களும் புலமை பெற்றவர்கள் என்பது இந்த சம்பவம் மூலம் புலனாகின்றது.

வம்மிக்காய் தின்று
வயிற்றில் நசல் எழும்பி

கும்மம் திரட்டி
குளறிவந்தோம் வன்னுமையே!

சம்புக் களப்பு தளச்சவள்ளல்
பிச்சி வந்து
கறியாக்கித் தின்று
கழை தீர்ந்தோம் வன்னுமையே

உடுக்கப் பிடவையில்லை
உண்டிருக்கச் சோறுமில்லை
படுக்க ஒரு பாயுமில்லை
பாராளும் மன்னவரே!

இப்படிப் பாடல்கள் பாடியபோது அவர் எந்த ஊர் என விசாரித்தாராம். அதன்பிறகு பரிசுப்பொதிகள் கொடுத்து அனுப்பி வைத்திருக்கிறார்கள். அதைக்கொண்டு உண்டு மகிழ்ந்ததாக வரலாற்றில் ஓர் சம்பவம் இடம்பிடித்திருக்கிறது.

## அறப்பாடல்கள்

குலோத்துங்க சோழன் காலத்தில் மன்னனால் ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. பொற்காசுகளை முடிச்சில் கட்டி புலவர்களைப் பார்த்து பாட்டால் அறுத்துப்போ என்று கட்டளையிட்டான். புலவர்களும, கவிஞர்களும் ஒன்று சேர்ந்தனர்; பாடுகின்றனர். அண்ணாந்து பார்த்துக்கொண்டு விழாதா என்ற ஏக்கத்தோடு நிற்கின்றனர். நாட்கள் பல நகர்ந்தன. முடிச்சி அவிழ்ந்து விழவேயில்லை. எல்லோரும் ஒன்றுசேர்ந்து ஔவையாரைச் சந்திக்க செல்கின்றனர். ஔவையாரே! குலோத்துங்க சோழனால் பொற்காசி முடிச்சு மரத்திலே கட்டித் தூங்குகின்றன. பாட்டால் அறுக்குமாறு மன்னன் கட்டளை இட்டிருக்கிறான். உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்டார்கள். விடை இல்லையெனக் கிடைத்தது. வாருங்கள் போவோம் என்று சொன்னார்கள். ஔவையாரும் வந்தார். மரத்தில் தொங்கும் பொற்காசு முடிச்சை பார்த்தார்; மீண்டும் பார்த்தார். பாடல் ஒன்றை பாடினார். உடனே அறுத்து கீழே விழுந்தது. கூடியிருந்தோர் அதிசயித்தனர்.

அந்த பாடல் வருமாறு.

உண்மை வழக்கிருக்க

வழக் கொழித்து

வழக் கொழிந்தாலும்

குற்றமும் அழுத கண்ணீரால்

அவன் குற்றமும் குடும்பமும் அறும்

என்று பாடினார்கள். அறுந்து கீழே வீழ்ந்தது. அதேபோன்று எமது ஊரில் அறக்கவி பாடக்கூடியவர்கள் சிலேடைக் கவிகளையும் பாடியுள்ளனர்.

சிறந்த அறிவாளி, கவிஞர், எழுத்தாளர் என்று சொல்லக்கூடிய அளவுக்கு பெயர்பெற்றவர். மக்காவில் தனது ஹஜ்ஜுக் கடமையை நிறைவுசெய்து அங்கேயே மரணமானார்கள். அவர்தான் அல்ஹாஜ் S. யூசுப் (கபூரி) அவர்கள். ஒருநாள் அநுராதபுரத்திற்கு 40 நாட்கள் கொண்ட ஜமாஅத் பணிக்காகச் சென்றிருந்தார். அவ்வேளை இரவுநேரம். இஷாத் தொழுகை முடிந்தபின்பு பள்ளிவாயலை அடைத்திருந்தார்கள். அக்குழுவினர் (ஜமாஅத்) அப்பள்ளிவாயல் பூட்டப்பட்டிருந்ததைத் தொடர்ந்து பள்ளிவாயல் தலைவரை சந்திக்க முயன்றனர்; முடியவில்லை. காட்டுப்பிரதேசம். பள்ளிவாயல் கதவு மூடப்பட்டு பூட்டுப் போடப்பட்டிருந்தது. வேறு வழியில்லை. அறக்கவி ஒன்றை பாடினார். பூட்டு தானாகவே திறந்து விட்டது.

இவருடைய இக்கவியை நான் கேட்டபோது மக்கா சென்று வந்து சொல்லுகிறேன் என்று சொன்னார். திரும்பி அவர் வரவில்லை. இப்படி அறம் பாடக்கூடிய புலவர்கள் இங்கு வாழ்ந்து இருக்கிறார்கள். இவருடைய "**மங்கையருக்கு வாழ்வளித்த மகான் நபி (ஸல்) அவர்கள்**" என்னும் கவிதைத் தொகுப்பு நூல் உள்ளது. 50 கவிதைகள் அடங்கியுள்ளது. **"முஸ்லீம் மாதர் மறைப்பும் திறப்பும்"** என்னும் அரபு மொழி நூலை மொழிபெயர்ப்புச் செய்தவர். அவருடைய நூல்கள் எனது கைவசம் இருக்கின்றன. இவர் 1992ல் எனது ***"தவறிய தவறுகள்"*** என்னும் கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவில் தலைவராக இருந்து ஆற்றிய உரைகளும் என்னிடம் உண்டு. சிறந்த பேச்சாளன். மார்க்கத்தை நன்கு அறிந்தவர். நான் நேசிக்கும் நல்ல மனிதர். அவருடைய நற்செயலுக்கு எடுத்துக்காட்டாக அவருடைய பிள்ளைகளில் இருவர் யூசுப் உபைதுல்லாஹ், யூசுப் சைபுல்லாஹ் ஆகியோர் டாக்டர்களாகவும், மற்றுமொருவரான யூசுப் விசுறுல்லாஹ் பொறியிலாளராகவும் மகள் முபிதா இஸ்சதீன் ஆசிரியராகவும் இருக்கின்றனர். இவர்களும்

தந்தையைப்போல் மார்க்கப் பற்றுடையவர்களாக விளங்குகின்றனர். யூசுப் விசுறுல்லாஹ் தற்பொழுது கவிதைகள் படைத்து வருவதாக அறிகிறேன்.

அடுத்து சில அறக்கவிகளைப் பார்ப்போம்.

விட்ட விடியச் சாமத்தில
குஸ்ரம் பிடித்தவன்
பிட்டுக்கு மாபிசையிறான்
அவன் மகன் - சீனா
வெண்காயம் வெட்டுகிறான்.

பாடியவர் SS. அலியார்

இந்நிகழ்வு தேனீர்க் கடைக்காரர்களான வாப்பாவும் மகனும் அங்கு வரும் வழிப்போக்கனான ஒரு கவிஞன் காலை வேளையில் தேனீர் கேட்கிறான். தேனீர் கிடைக்கவில்லை. தொடர்ந்து கேட்கிறான் எவரும் தேனீர் கொடுக்கவில்லை. கவனிக்கவும் இல்லை. ஆத்திரம் கொண்ட கவிஞன் மேலே சொன்ன பாடலைப் பாடினான். வெண்காயம் வெட்டிக் கொண்டிருந்த மகனுடைய கையில் வெட்டிப் பிளந்து விட்டது. கடையைப் பூட்டிவிட்டு வார்ட்டுக்குப் போக வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதேபோன்று இன்னுமொரு சம்பவம் சுலையுமாலெவ்வைப் போடி என்பவர் தன்னுடைய மாட்டுப்பட்டிகளை சாய்த்துக்கொண்டு பிட்டி ஆற்றினால் சென்று காட்டுப் பிரதேசமான சொறிக்கல்முனை பிரதேசத்தில் மேய்த்து வருவது வழக்கம். இப்படி ஒருநாள் மேய்ப்பதற்காக காட்டுப்பகுதிக்கு மாடுகளை விட்டுவிட்டு வீட்டுக்கு வந்து காலை உணவை உண்ணுகிறார். அப்போது போடியாருடைய மாடுகளை சொறிக்கல்முனையைச் சேர்ந்த ஆனையன் சீனி என்பவன் சாய்த்துக்கொண்டு அடைத்துவிட்டான் எனற செய்தி கிடைத்ததும் மிகவும் வேதனைப்பட்டு விட்டார். போடியார் என்னும் சொல் அப்போதைய பணக்காரர்களை குறித்து நிற்கும் சொல்லாகும். உடனே பாடல் ஒன்றைப்பாடி துஆ ச் செய்கிறார்.

மாடுகட்டிக் காசுழைக்கும்
மாயவனாம் ஆனையனை
தூளி கட்டிக் கொண்டுவர
தூயோனே அருள் புரிவாய்.

இவ்வாறு பாடிவிட்டு போடியார் ஓடிச்செல்கிறார் மாட்டடிக்கு. அவ்வேளையில் அதே ஆனையன் சீனியை தூளியில் கட்டி தூக்கி வருகிறார்கள். மாட்டைச் சாய்த்து காலையில் அடைத்துவிட்டு ஆனையன் சீனி என்பவன் காட்டுவழியால் அவனுடைய வீட்டிற்குச்சென்றபோது காட்டுக்குள் நின்ற காட்டுப்பன்றி கால்கள் இரண்டுக்கும் இடையில் பாய்ந்து வெட்டிவிட்டது. (தூளி என்பது சாக்குக்குள் இரண்டு பக்கங்களில் இரு கம்புகளை துளையிட்டு தூக்கிச் செல்வதாகும்.)

**அறக்கவியின் பாணியிலே இன்னுமொரு கவியை அவதானிப்போம்.**

ஒரு தந்தை வாடியில் மகனை விட்டுவிட்டு ஊருக்கு வந்து உணவுப்பண்டங்கள் வாங்கி திரும்பிப்போகும்போது வாடியில் தனிமையில் இருந்த மகனை பொலிசார் கைதுசெய்து அழைத்துச் செல்கிறார்கள். அந்த சந்தர்ப்பத்தில் தந்தையும் வந்துவிட்டார். தந்தை என்ன நடந்தது என விசாரிக்கின்றார். சிங்கள மொழியில் பதில் கிடைக்கின்றன. எதுவும் புரியாத அந்த தந்தை உருக்கமாக ஒரு பாடலைப் பாடுகிறார்.

மாடு கலப்ப இருக்கா - மகனே
வாடியில யாரிருக்கார்
சோட்டுக் கிளி மகனே
உனக்கிந்த சூதாரு செய்தாண்டா

பாடியவர்:- மஹூலாப் போடி
மகன்:- சேகு முகையதீன்

என்று பாடி அழுகிறார்கள். சிறிது நேரத்தின் பின்னர் தனது மகன் வாடிக்கு திரும்பி வந்துவிட்டார். அக்காலப் பாடல்களுக்கு உயிரோட்டம் இருந்தது. அவர்களுடைய பாடல்களில் சக்தி இருந்திருக்கிறது. அதனால் அப்பாடல்கள் பேசின. இன்று எவ்வளவோ பாடல்கள் கவிதைகள் பாடப்படுகின்றன. எதிலும் உயிரோட்டத்தைக் காணவில்லை.

ஒரு தந்தை மரணத்தறுவாயில் இருக்கின்றார். அச் சந்தர்ப்பத்தில் உறவினர்கள் கூடியிருக்கிறார்கள். ஓதப்போன மகன் கொழும்பில் இருந்துவர செய்தி அனுப்பியிருக்கிறார்கள். இளையமகன் வந்து சேரவில்லை. எல்லோரும் கவலையோடு இருக்கிறார்கள். மரணத்தறுவாயில் இருக்கும் தந்தை “மகன்!”, “மகன்!” என்று உரைத்துக்கொண்டு இருக்கிறார். இந்தச் சந்தர்ப்பத்தில் இளையமகன்

வந்து சேர்கிறார். வாப்பா! வாப்பா! என்று அழைக்கிறார். வாப்பா கண்ணை விழித்துப்பார்க்கிறார். ஏதோ பேச நினைக்கிறார்; முடியவில்லை. மகன் லாயிலாஹ இல்லல்லாஹு" என்று சொல்லிக் கொடுக்கிறார். வாயால் முணுமுணுத்துச் சொல்கிறார். உயிர் பிரிகிறது. இக்காட்சியைப் பார்த்து நின்ற மூத்தாக்கா வாயில் இருந்து கண்ணீரோடு பாடல் வருகிறது.

ஆசை இளைய மகன்
அரிய கொழும்பிருந்து
தாவியே ஓடி
தந்தையை நாடி
தங்கக் கலிமா ஷஹாதத்தும் ஓத
ஓசைக் கலிமாவுடன் - தந்தை
ஊர்பயணம் போய் சேர்ந்தார்.

பாடியவர்:- சுலைமாலெவ்வை முகம்மதனிபா (மூத்தமகன்)
மகன்:- சுலைமாலெவ்வை யூசுப் மௌலவி (இளையமகன்)
தந்தை:- சுலைமாலெவ்வை (புளிச்சர் ஓடாவி)

ஒருதாய் தனது பிள்ளை கீழக்கரைக்கு ஓதுவதற்கு அனுப்புகிறாள். மகனை அனுப்பிவைத்த தாய் மகனை நினைத்து அழுகிறாள். அழும்போது இவ்வாறான பாடல்களைப் பாடுகிறாள். கீழக்கரை என்பது தென்னிந்தியாவிலுள்ள ஓர் ஊர். அக்காலத்தில் வெளியிடங்களுக்கு செல்வதென்றால் தாய்மார் பயப்படுவதுண்டு. காரணம் அக்காலத்தில் வெளியூர்களுக்கு செல்வது மிகவும் கடினம்; போவது குறைவு. வாகனப்போக்குவரத்துக் குறைவு. இதன் காரணமாக பிரயாணிகள் மிகவும் சிரமப்பட்டனர். பெற்றோர்கள் பயப்பட்டார்கள். அதன் காரணமாக மேற்சொன்ன தாய் பாடிய பாடல் வருமாறு:

தாயார் வயிற்றில்
தரிக்கும் அந்த வேளையிலே
வாதாடிக் கேட்ட
வரந்தானோ வல்லவனே

ஆரக்கழுத்தும் அழகான தாடியும் - உண்ர
மையிட்ட கண்ணும் - மகனார்
மறந்திருக்கக் கூடுதில்ல

காலி கொழும்போ - மகனார்
கண்காணா ராச்சியமோ
ஈழக்கரையோ - மகனார்
இருந்தோதப் போனவிடம்

நல்ல பிள்ளை என்று
நடுச்சபையில் கொண்டு வைச்சி
வெண்சாமரை யெடுத்து
வீசுவாங்க கூறாணி மார்

எல்லோரும் போற கப்பல்
இன்று வரும் நாளை வரும் - என்ற
பரதேசி போன கப்பல்
பகுத்திரம் யாறபியே

பாடியவர்:- TS. மரியம் வீவீ

அக்காலத்தில் கூலிக்கு வண்டில் ஓட்டுவது சிலரது தொழிலாகும். சிலவேளைகளில் தவறாக கூலிக்காரர்கள் நடக்கும் போது ஏசுவதும் தண்டிப்பதும் உண்டு. அந்தவகையில் பாதிக்கப்பட்ட ஒருவன் பாடும் பாடல் இது.

வண்டிலையும் மாட்டையும்
வளர்த்த பெடியனையும்
பொண்டிலையும் திண்டிடுவான் - என்னை
போட்டடிச்சுப் போட்டான் கா

வண்டில் குடையடிக்க
மாடு ரெண்டையும் புலி பிடிக்க - அவனை
கரடி தின்ன - ஒரு
உதவி செய்வாய் வல்லவனே

புளியைக்குக் கீழ புள் புடையன்
கொத்திடுவாய்
கொல்லாத் தெறித்திடுவாய்
என்னைக் கொண்டுபோடா ஊர்முனைக்கு

தோடம் பழம் போல
தொண்டையில கட்டிடுவாய்
நாவத்துறந்து - நீ ஒரு
நல்ல கதை சொன்னாயடா.

அக்காலத்து மனிதர்கள் மந்திர தந்திர மாய வேளைகளில் பெயர் போனவர்கள். வைத்தியம் செய்வது என்றாலும் மந்திரத்தை பயன்படுத்துவார்கள். பெண்களை வசப்படுத்துவதற்கு வசியம் பண்ணுவார். இறக்க வைப்பதற்கு சூனியம் செய்வார்கள்; அல்லது அங்கம் விடுவார்கள். சேர்த்தி மருந்து அரைத்து பூசுவார்கள். மாடுகள் கூட கன்றுக்குட்டியை சேர்க்கவில்லையென்றால் சேர்த்தி மருந்து பூசுவார்கள். இப்படி எடுத்ததுக்கெல்லாம் மந்திரம் மூலம் பயன் காண்பார்கள்.

அந்தவகையில் கீழ்வரும் கவிகளை நோக்குவோம். தாம் நினைத்த பெண்ணை அடைந்து கொள்வதற்காக இவ்வாறு செய்வார்கள். இல்லாது போனால் நோயால் பீடிக்கவைத்து சாகடிப்பார்கள்.

ஆலம் விழுதெடுத்து
ஆக்காண்டிப் பித்தெடுத்து
கோரக் கிழங் கெடுத்து - உனக்கு
கூட்டுவண்டி கைமருந்து

கரையாக்கன் பூவெடுத்து
கன்னிமார் குள்ளால செய்து
மடையில் உருப்பண்ணி - உன்னை
வரவழைப்பேன் காலடிக்கு

அரிசியைப் பரவி வைத்து
அச்சிரத்தை கீறி வைத்து
சன்னாசி மந்திரத்தால் - உன்ர
தலை குழப்பிப் போடு வண்டி

## பள்ளுக்கவி (வசைக்கவி)

கவிகள், காவியங்கள், பாடல்கள், விடுகதைகள், பஜனை, (பாடலுடன் இசை) கச்சேரி இவைகளிலெல்லாம் போட்டி போட்டுக் கொள்வார்கள். குழுக்களாகப் பிரிந்து போட்டி போடுவார்கள் அல்லது பக்கத்து ஊருக்குச் சென்று அவர்களோடு போட்டியிடுதல், பக்கத்து தெருவில் உள்ளவர்களோடு போட்டியிடுதல் இப்படிப் போட்டியிடுவதில் அவர்களுக்கு அலாதியான இன்பம். பத்துப் பதினைந்து வண்டில் பூட்டி 30, 35 ஏற்றிச் செல்வார்கள். அதிகமாக இரவு நேரங்களில்தான் போட்டிகள் நடைபெறும், திருமணங்கள்கூட அவ்வாறுதான் செய்திருக்கிறார்கள். பகல் வேளைகளில் தொழில்களில் ஈடுபட்டுவிட்டு இரவு நேரங்களை பொழுதுபோக்கிற்காக கழிப்பார்கள். இவ்வாறு ஒருநாள் மருதமுனைக்கு சென்றிருக்கின்றார்கள். கவிப்போட்டி நடைபெறுகிறது. போட்டி உசாராகிறது. மருதமுனை மக்கள் சோர்ந்து போகிறார்கள். இப்படி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது மருதமுனையைச் சேர்ந்த ஒருவர் "நாய்பட்டிமுனையான் பீப் பொட்டித் தலையான்" என்று சொல்லிவிட்டார். அப்பொழுது அதற்குள் இருந்தவருக்கு எழுந்தது கோபம். உடனே பள்ளுப்பாடல் ஒன்றைப் பாடினார். பின்னர் நிசப்தம் நிலவுகிறது. ஒருவருக்கு ஒருவர் வாக்குவாதப்பட்டுக் கொண்டு வெளியேறிவந்த வரலாறும் இருக்கிறது. இதை மக்காவில் காலம் சென்ற அல்ஹாஜ் S. யூசுப் மௌலவி அவர்கள் சொன்னார்கள். அவருடைய உரை என்னிடம் இருக்கிறது.

ஊத்தப் பிணத்தை உண்ணும் உடும்பு
உறக்கம் பிடித்த ஊசல் உடும்பு
செத்த நாத்த செடி உடும்பு
சீக்கிமம் கெட்ட கவறு உடும்பு

மண்ணுடும்பு மரஉடும்பு
புண்ணுடும்பு போர் உடும்பு
சீறிவருகுது சினத்து வருகுது
கூடிவருகுது குறைஞ்சுபோகுது

## பொதுக் கவிகள்

சந்தர்ப்பத்துக்கு ஏற்றவகையில் பொதுவாகப் பாடுவார்கள். எதை எடுத்துக் கொண்டாலும் கவியிலே பதில் சொல்லுவது வழக்கமாக இருந்தது. வேற்றுச்சிந்தனைகள் குறைவு. எடுத்ததுக்கெல்லாம் கவியே பாடுவார்கள், போட்டிக்குப் பாடுவார்கள், மனதில் தாக்கங்கள் ஏற்படும் போது பாடுவார்கள். இப்படி எல்லாவற்றிற்கும் பாடல்களாலேயே பதில் கொடுத்து வந்தார்கள். மேலும் காதல் வயற்படும்போதும், காதலிலே தோல்வி, கவியிலே தோல்வியைப்பாடி வேதனையைப் போக்கி வருவார்கள். இது அக்கால மக்களுக்கு கைவந்த கலையாகும். சில கவிதைகளைப் பார்ப்போம்.

சம்மாந்துறை யிருந்து
சம்மந்தி வந்திருக்கா
பாயெடுத்துப் போடு புள்ள - நம்மிட
பாவனையை பார்த்திட்டும்

மாமிர மக்களெல்லாம்
மகின் பழத்தால் போலிருக்க
வண்ணாண்ட சோறு தின்னி
வாழவரச் சொன்னாக் கா

காட்டுக் கரையாக்கள்
கண்ணிகட்டிப் பூத்தாந் போல் - உன்ர

கையில் மருதவெண்டி
கனத்ததினால் செப்பமில்லை

விடிய எழும்பி
பிஸ்மிச் சொல்லி துவக்கெடுத்து
போறார்கா மச்சான் - ஒரு
பொட்டமர சுட்டுவர

மச்சானே மாம்பழமே
மாமிபெத்த பாலகரே
ஏலம் கராம்பே - உன்ன
என்ன சொல்லிக் கூப்பிடட்டும்

மாமி மகளே
மதுரங்கிளி நங்கணமே
கூடப்பறப்பேன் - உன்ர
கூட்டாளிமார் செப்பமில்லை

வேலிக்கு மேலால - உன்ர
வெள்ளமுகம் காணாமல்
பாலேறிச் செத்த
பதக்கட போல் ஆனேன் கா

கூவாத கோழி
குளாறாத பட்சியரே
அழாத சிலந்தியரே
அவர் எழும்பிப் போகுமட்டும்.

என்ற குறி மாடுமில்ல
என்னுருத்து மாடுமில்ல
சாய்ந்த மருதாண்ட - அல்லாஹ்
தனிக்குறியும் மாடுமாக்கும்.

அல்லாஹ் இருக்கான்
அவுந்ரத்துப் பாம்பிருக்கு
கடிக்கும்கா உம்மா - என்ன
கண்குறையப் பார்த்தாயென்றால்

கண்டுக்கிளியே
கடவலடித் தோரணமே
கும்பா குடமே - உன்ர
குரல் மதிக்கக் கூடுதில்ல.

நல்ல பிள்ளை யென்று
நாடி வந்தேன் உன்புறக - உன்ர
ஈமான் பறிபோனதை - நான்
என்ன என்று மட்டிடுவேன்.

கோபத்தை அடக்கி
கொஞ்சம் சபூர் செய்து
ஆராய்ந்து பார்மகளே
ஆர்மேல குற்றமென்று

அறுகு படருது கா
ஆடேறி மேயுது கா
கொவ்வை படருது கா - நீ
குடியிருந்த கோயிலில

நாலுகால் வெள்ள
நடுவே இரு சிவப்பு
ஆசைக்கிளியே - என்ர
ஆடுசெத்துப் போச்சுது கா

மாடு கழுவ
மரவண்டிக்குத் தார் அடிக்க
சேனை வெளிசாக்க - நாங்க
சேர்த்தெடுத்த மாப்பிள்ளை கா

பட்டு உடுத்து
பலவர்ணம் தான் அணிந்து
நான் ஆசனத்தில் மேலிருந்து
அதுவுமொரு கைமாறோ

வாசலில தென்னமரம்
வளச்சிவர பப்பாசி
இருப்பதுமே ஆசையுரு
என்னை எழும்பவுமே சொல்லுதில்ல

மாமிட்ட போனேன்
மாங்கண்டைப் பாப்பமென்று
மாமி புடுங்கி
மறு விடத்தில் நாட்டிருக்கா

குடியிலையும் நல்ல குடி
குலத்திலையும் நல்ல குலம்
வமி சத்தில் நாங்கள் திறம் - எங்களை
வடுக் கதைக்கப் போறதில்லை

அல்லை யில பண்புடுங்கி
ஆபரணம் பாய் இழைத்து
போட்டுப் படுக்க - ஒரு
போடி மகன் இல்லையா கா

உடையும் நடையும் - உன்ர
உட்கருத்தும் வாசிவையும்
வடிவும் எழுதி
வாகடத்தில் போட்டிருக்கு

கொண்டை அறுப்பேன்
கொஸ்சகத்தைப் பிச்செறிவேன்
மானம் குறைப்பேன் - உன்ர
மாமா காக்க பாத்திருக்க.

ஆணில் அழகா
அழகில் பிறையழகா
பூவிலிங்க ராசாவே - நீங்க
போகுறதோ நிந்திறதோ

உன்னிலையும் நின்று
உசந்ததொரு தாமரைப்பூ
தேடி யெடுப்பேன்
தேவையில்லை போராசா

உன்னிலையும் நின்று
உசந்ததொரு மல்லிகைப்பூ
தேடி எடுப்பேன்
தேவையில்லை போவேச

பளபளத்த நடையழகி
பவளமணித் தாராவே
பண நிறைவுக் குணமுடைய
பாவமென்ன செய்தாயோ

நடையழகி தொடையழகி
நாகசித்தர வடிவழகி
கடையழகி கதிஜா உம்மா - என்ற
கைலேஞ்சை ஏன் பறித்தாய்

கைலேஞ்சை நான் பறிச்சி
காசுக்கு விற்கவில்லை
அரை அறப்பு வைத்திருக்கேன்
ஆட்சி பண்ண வேண்டு மென்று

இரும்புக் கதவும்
இருபுறமும் தாழ்பாழாம்
மறியஞாடு கட்டிருக்கு
மயங்காதடி பாத்துமுத்து

வாடயில்ல சோறயில்ல
வயசு நாலு போகவில்ல
பட்டத்து ராசாவை
பறிகொடுத்துப் போட்டோம் அல்லாஹ்

குத்து விளக்கை
கொளுத்திவைத்தேன் பத்துமென்று
பொறாமை என்னும் புயலடித்து - என்ற
விளக் கொழிந்து போனதாக்கும்

அல்லாஹ்வின் ஆண
ஆக்கின சோறறிய
பிள்ளை அறிய
போகவணா மாடறுக்க

என்ர கிளிக்கு
என்னோட இரக்கமென்றா
இழணி வெட்டி முழ்திறந்து
எடுத்துக்கொண்டு நான் வருவேன்

சாமவிளக்கே - நீ
சரிந்துழுந்த சந்திரனே
ஏழுவடிவான வண்டே
ஏமாந்ற நானிருக்கன்

ஆழிக்கடலில மகளார்
அலையொழும்பி வாற செப்பம்
நேரம் ஒருக்கா
நினைவு வந்து போகுதாக்கும்

கல்லூட்டைக் கட்டி
கனகாலம் பாழ்போட்டு
இணக்கி எடுமகளே - நாம
இந்தாள வேண்டுமென்று

கல்லூடு கேக்காரு கா
கதவு நில கேக்காரு கா
ஆதினமும் கேக்காரு கா
அவருமொரு மாப்பிள்ளையா?

போகட்டா என்று - என்
பொற்கொடியே நீ கேட்காய்
இடுப்புச் சுமையோ
இடவழிக்குக் கொண்டுவர

காட்டுக்கு போய் மச்சான்
கரும் கம்பு வெட்டி வந்து
கூர்போட்டு நாட்டினாலும் - உன்ர
கூன் நிமிரப் போறதில்ல

தாயாரைப் பிள்ள
தாவிப் பிடித்தது போல்
போகவந்த பொடியனை - உம்மா
புடிச்சடக்கிப் போட்டாவாம்

சந்தண மரத்தை
சந்திக்க வேண்டு மென்றால்
அவ்லல் கௌதர் என்னும்
ஆற்றடிக்கு வா கிளியே

மாமி மகளே - நீ
மறுபேருக்கு வாழ்வியெண்டா
உச்சு மலை யேறி
உழுவேன் தலை சிதற

உச்சியில கொண்ட கட்டி
ஒரு சுறங்கப் பூப்புறக்கி
வாறாள்கா மாறுகண்ணி - நம்ம
மாப்பிள்ளையைக் கொண்டு போக

கண்டுமகளார் - நீங்க
காலால் நடத்தை யென்றால்
நின்று மௌலத்து
நிர்ணயமாய் ஓதிடுவன்

வஞ்சிக் கொடியே - உன்ர
வயிற்றிலையும் ஒன்றுமில்ல - என்ர
ஈரல்ல பாதி நான்
ஈந்து தந்தால் தின்பாயாகா?

பொட்டி நல்ல பொட்டி
பொன்னான வாய் வளையம்
வில்லங்கப் பொட்டி - உனக்கு
விலைமதிக்க யார் மகளே?

மறியலுக்கு போறனெண்டு
மனக்கவலை படாதே
மறியல் நின்று வந்து
மனக்கவலை நான் தீர்ப்பேன்.

மாமிக்கும் மாமாக்கும்
மற்றும் சபையோர்க்கும்
கையெடுத்து கண்ணில் வைத்து
கடிய சலாம் சொன்னனென்று

பழபழத்த நடையழகி
பவள மணித் தாறாவே
பண நிறைவுக் குணமுடைய
பாவமென்ன செய்தாயோ

குத்து விளக்கெரிய
குமிழ் நிறைய எண்ணெய் ஊத்தி
பற்றி ஒழியும் மட்டும் மகளார் - நான்
பாத்திருப்பேன் உன் ஒளியை

மாசி பருப்பு மலையோரம்
சவ்வரிசி
வேலிப்பருத்தி இனி
வேணாங்கா உன்னுறவு

வாழப்பழச் சீரா
வாப்பா வோட சொல்லிடுங்க
சீனி திண்டு பெற்றமகள் - இப்ப
சீரழிஞ்சி போறாரென்று

கறுத்த கரும்பே
கணியாளி மோதிரமே
எருக்கிலம் பூவாயாயே - நீங்க
போனா வர நாளாகுமோ

பாக்கு செருக்கா
பழைய உறவு மாறுதுகா
என்ற எப்பு கைக்குதுகா
இனி வேணா உன் உறவு.

பாடியர்கள்:- A. சூறா உம்மா
TS. மரியம் வீவீ
AM. அலிமா உம்மா
M. சின்னம்மா
MI. சக்கிறாத்து

கீழே வருகின்ற பாடல் ஒரு வித்தியாசமானது. ஆணும் முறைகாறப் பெண்ணும் நேருக்கு நேர் நின்று ஒருவருக்கு ஒருவர் தர்க்கித்துப் பாடுகின்றனர். இவ்வாறான பாடல்களும் அக்காலத்தில் பாடப்பட்டிருக்கின்றது என்பதற்கு இப்பாடலை உதாரணமாகக் கொள்ள முடியும். அதிகமாக காதல் வயப்படுகின்ற பாடல்களே பிரபல்யம் பெற்றிருக்கின்றன. ஊரார் அறியாமல் உதவிசெய் என்று ஆண் கேட்டதற்கும், தட்டான் சமையாத தாலி கொண்டு வருவேன் என்று சொன்னதற்கும் பெண, அடுப்பு இல்லாமல் சமைப்பேன் என்கிறாள்.

அதற்கு அவன், வண்ணான் வெழுக்காத மாற்றுக் கொண்டு வருவேன் என்கிறான். அதற்கு அவள், மேனி படாமல் விளையாட நான் வருவேன் என்கிறாள். மேனி படாமல் எவ்வாறு விளையாடுவது?

*ஆண்:-* ஆற்றிலே தலை முழுகும்
அன்பான என் மதினி
ஊரார் அறியாமல்
உதவி செய்தால் ஆகாதோ.

*ஆண்:-* ஊரார் அறியாமல்
உதவு ஒன்று செய்தால்
தட்டான் சமையாத
தாலியொன்று கொண்டு வருவேன்

*பெண்:-* தண்டான் சமையாத
தாலியொன்று கொண்டுவந்தாயானால்
மூன்று கல்லு கூட்டாமல்
சோறு கொண்டு வந்திடுவேன்

*ஆண்:-* மூன்று கல்லு கூட்டாமல்
சோறு கொண்டு வந்தையானால்
வண்ணான் வெழுக்காத
மாற்று ஒன்று கொண்டருவேன்

*பெண்:-* வண்ணான் வெழுக்காத
மாற்று ஒன்று கொண்டு வந்தாயானால்
மேனி படாமல்
விளையாட நான் வருவேன்.

சங்ககாலப் புலவர்களைப்போல அக்காலத்துப் புலவர்கள் இருந்திருக்கிறார்கள். போட்டியும், போரும், காதலும், அன்பு வயப்படுவதும் சங்ககால புலவர்களின் வழக்கமாகும். அவ்வகையில்

இவர்கள் நெருங்கி இருக்கிறார்கள். இப்படி இன்னுமொரு புலவருடைய பாடலை எடுத்து நோக்குவோம்.

இரண்டு குழுக்களுக்கிடையே கருத்து முரண்பாடு எற்படுகிறது. ஒருவருக்கு ஒருவர் ஏசிப்பேசிக் கொள்கிறார்கள். இறுதியில் அவரவர் தொழில்கள் பற்றி தொடர்கிறார்கள். அதில் ஒருவன் ஓடாவி(தச்சு)த் தொழில் கீழ்தரமானது, மரத்தை வெட்டிக் குடைந்து காசு சம்பாதிக்கிறாயே என்று தாறுமாறாகப் பேசிவிடுகிறான். அந்த வார்த்தையைக் கேட்ட தச்சுத்தொழில் செய்பவனுக்கு ஆத்திரம் பொங்குகிறது. அவ்வேளையில் கீழ்வரும் பாடலைப் பாடி சத்தமிட்டு உறுக்கி• விடுகிறார். அதைக்கேட்ட மற்றைய குழுவினர் வாயடைத்து அடங்கிப் போகிறார்கள்.

காசுவைக்கும் அலுமாரியும்
இராசர் கவனமுரைக்கும்
சிம்மாசனமும்
வாசம் பொருந்திய
உங்க உம்மாட வீடும்
வலிய முளைத்ததாடா - மகனே

• உறுக்கி – ஆவேசத்தோடு சத்தமிட்டுப் பேசுவது

**வான வேடிக்கை**

வான வேடிக்கை நிகழ்வுகளை வேடிக்கை பார்ப்பதிலும், விளையாடுவதிலும் வல்லவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். களியாட்ட காலங்களில் இந்நிகழ்வுகளில் இன்பம் காண்பது அவர்களின் இயல்பாக இருந்தது. இளநீரை வெட்டி அதில் வானத்தை தயாரித்து அதிலே வேடிக்கையைச்செய்து காட்டுவார்கள். பொதுமக்கள் கூடியிருக்கும் நேரத்தில் இந்நிகழ்வுகள் நடைபெறும். பொதுவாக பெருநாள் காலங்களிலும், கொடியேற்ற நிகழ்வுகளின்போதும், கல்யாண சந்தர்ப்பங்களிலும் போட்டிக்காகவும் விடுவார்கள். அதற்கென்று சிலர் பிரபல்யம் பெற்றிருந்தனர். குழுவினர்களுக்கிடையே போட்டிகள் ஏற்பட்டு விடுவதும் உண்டு. அந்த சந்தர்ப்பத்தில் வண்ணவண்ணமாக வானத்திலே திருமண நிகழ்வுபோல் வித்தியாசமான உருவங்களில் செய்து காட்டுவார்கள். சிலவேளைகளில் மந்திரவாதிகளால் தாக்குப்படுவதும் உண்டு. மந்திரவாதிகள் மந்திரத்தை செபித்து, மேலெழும்புவதைத்

தடுப்பார்கள். அதனால் வேதனை அடைந்தவர்கள் மனம் பாதிப்படைவதும் உண்டு. இந்நிகழ்வு குறிப்பாக ஜும்மாப் பள்ளிவாயல் பெரிய முற்றத்திலேதான் பெரும்பாலும் நிகழ்த்துவர். மந்திரவாதிகளின் மந்திர செயற்பாட்டை கட்டுப்படுத்துவதற்கு அடுத்த மந்திரவாதி மற்றவருடைய மந்திரத்தைக் கட்டுவான். இப்படி போட்டிகள் அதிகரித்துக்கொண்டே போகும்.

## இளம் விஞ்ஞானி

விஞ்ஞானியெனப் பெயர் பெற்றவர் S. முகம்மது ஹனிபா ஓடாவியார் ஆவார். இவர் விமானம் ஒன்றைத் தயாரித்து அதில் மிகச் சக்திவாய்ந்த வானவெடிகளைப் பொருத்தி நீண்ட தூரத்திற்கு கம்பியைக்கட்டி கம்பியில் விமானத்தை நிறுத்தி நீண்ட திரி கொண்டு வெடியைக் கொளுத்தும்போது விமானம் கம்பியில் ஓடிச்சென்று இறுதியில் வெடித்துச்சிதறும். இதைச்செய்து காட்டி மக்களை மகிழ்வித்திருக்கிறார். இவருடைய தந்தை புளிச்சர் ஓடாவி என்பவர் மரத்தினால் புஸ் சைக்கிள் தயாரித்து ஓடிக்காட்டியவர் என்பதை இந்த இடத்தில் குறிப்பிட்டுக் கூற வேண்டியிருக்கிறது.

## கொடியேற்ற நிகழ்வு

வழமைபோல் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கல்முனை கொடியேற்ற நிகழ்வுபோல் பெரும்பான்மையான தென்கிழக்கு முஸ்லீம்களின் ஒவ்வொரு ஊர்களிலும் முன்னொரு காலத்தில் கொடியேற்றி விழாக் கொண்டாடுவது வழமையாக இருந்து வந்திருக்கிறது. காலப்போக்கில் அவையெல்லாம் தூர்ந்து போய்விட்டன. இவ்வூரில் இவ்விழாக்காலங்களில் கலை, கலாச்சார நிகழ்வுகளும் கோலாட்டம், வாணவேடிக்கைகள், தொட்டில் ஊஞ்சல் கட்டி ஆடுவது போன்ற நிகழ்வுகள் மக்களை மகிழ்வித்தன. தொட்டில் ஊஞ்சல் என்பது தொட்டில்களைக்கட்டி வண்டிச்சில்லு போல் அமைத்து ஆட்கள் ஏறியிருக்க ஒருவர் நடுவில் நின்று சுழன்றுவார். தொட்டில்கள் உயரத்திற்குப்போய் திரும்பிவரும். இப்படி மகிழ்வுறக்கூடிய நிகழ்வுகள் மூலம் மக்கள் ஒன்றுகூடுவதற்கு பஞ்சமேயில்லை இதேபோன்று வண்டில்கள் கட்டி ஓட்டப்போட்டியும் வைப்பார்கள். போட்டியில் இளைஞர்கள் கொம்புடன் தலை நிமிர் மாடுகளை சலங்கை பூட்டி

சோடித்துக்கொண்டு வருவர். வண்டிகள் ஓடும்போது கலகல என்ற ஓசையுடன் ஓடிக்கொண்டிருப்பதைப் பார்ப்பதற்கு உணர்ச்சியாக இருக்கும். இப்படி ஏகப்பட்ட நிகழ்ச்சிகளோடு கொடியேற்ற விழா நடைபெறும். பின்னர், கந்தூரி வழங்கி கொடி இறக்கப்பட்டு நிகழ்வு முற்றுப் பெறும்.

## பூப்படைதல் அல்லது சாமத்தியம் அடைதல்

அந்தக்காலத்தில் பெரியபிள்ளையாதல் என்பது ஒருசடங்காக செய்யப்பட்டு வருவது வழக்கம். பருவவயதுப் பெண்கள் சாமத்தியம் அடைந்துவிட்டால் விழாவுக்கான ஆயத்தம் தொடங்கி உறவினர்களுக்கும் சொல்லப்படும். கிணற்றடியில் குப்பைகள் எரித்து குத்துவிளக்கேற்றி செப்புக் குடத்துள் தென்னம்பாளை வெட்டி வைத்து குளிக்கும் இடத்தில் பலகைபோட்டு வெள்ளைச்சீலை விரித்து அதன்மேல் வெற்றிலையும் பாக்கும் வைத்து, அந்தப்பாக்குகளில் மஞ்சள் பூசி உடலிலும் மஞ்சள் பூசி தேங்காய்ப்பால் ஊற்றி நீராட்டுவர். நீராட்டிய பின் சாரி உடுத்து ஏழு நாட்கள் வெளியில் செல்லாமல் இருத்தல் வேண்டும். அந்த ஏழு நாட்களும் காலையிலும், மாலையிலும் முட்டையும், நல்லெண்ணையும், கோப்பியும் அருந்தக்கொடுத்து இடுப்பில் பிட்டு ஒத்தடம் கொடுத்தல், அதிகளவு பிட்டு அவித்து சீனி தேங்காய் சம்பல் தயாரித்து உறவினர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும். ஏழாம் நாளன்று மீண்டும் மஞ்சள் பூசி தேங்காய்ப்பால் ஊற்றி நீராடி முகத்தை மூடி அழைத்துவந்து ஆராத்தியெடுத்து புத்தாடை அணிவித்து பாற்சோற்றில் முழித்து அதை உண்ணவைத்து உண்ட மீதியை நாற்சந்தியில் வைப்பர். மஞ்சள் அரைத்து கிடாரத்துள் வைத்து முறைகாரர்களுக்கு ஊற்றுவர்; அல்லது பூசிவிடுவர். இது இந்து மக்களிடம் இருந்து வந்த செயற்பாடாகும்.

தற்காலத்தில் மேற்சொன்ன முறைகள் எல்லாம் முற்றாக மாறிவிட்டன. உறவினர்கூட சற்றும் அறியாத அளவில் தாய் மாத்திரம் பிள்ளைக்குரிய கடமைகளைச் செய்வதுடன் முற்றுப்பெறுகிறது. உறவினர்கள் அறிந்தால் கோபப்படுவார்கள் என்பதற்காக மிக இரகசியமாக செய்து முடிப்பர். உறவினர் அறிந்தால் பெட்டி கட்டிக்கொண்டு அதனுள் முட்டை, அரிசு, வெற்றிலை, புகையிலை, பாக்கு, உணவுப்பண்டங்கள், தேயிலை, சீனி எனப் பல பொருட்கள் இருக்கும். இவற்றைச் சம்மந்தக்காறர் உறவுமுறையினர் செய்வார்.

## தாலாட்டுப் பாடல்

பிள்ளைகளைத் தூங்கச் செய்வதற்காகவும் அழுகையை நிறுத்துவதற்காகவும் பெண்கள் பாடுவார்கள். வீட்டுக்குள்ளோ அல்லது வெளியிலோ ஊஞ்சல் கட்டி பிள்ளையை வைத்து பாட்டுப்பாடி உணவு கொடுப்பார்கள்; அல்லது மரங்களை மிருகங்களை பறவைகளை சுட்டிக்காட்டிப் பாடுவார்கள். உறவுகளைச் சொல்லிப்பாடுவார்கள். அதனால் பிள்ளை பிஞ்சுப் பராயத்திலே உறவுகளைத் தெரிந்து கொள்கிறது. தற்பொழுது அது இல்லாமல் A for Apple. B for Ball என்று சொல்லிக் கொடுக்கிறார்கள். அல்லது மமா, டடா என்று சொல்லிக் கொடுக்கிறார்கள். அதனால் பிள்ளை முதலில் அறிவது மமா, டடாவைத்தான். வேறு உறவுகள் பற்றித் தெரியாத அளவுக்கு இன்று பிள்ளைகள் வளர்ந்து வருகின்றனர்.

*ஆராரோ அரிவரோ யாரடித்து நீ அழுதாய்*
*பாட்டி அடித்தாளோ பாலூட்டும் கையாலே*
*மாமன் அடித்தானோ மல்லிகைச் செண்டாலே*
*அத்தை அடித்தாளோ அலரித் தண்டாலே*

*தம்பி அழுத கண்ணீர்*
*தரைதாண்டிப் பெருக்கெடுத்து*
*ஆறாய் ஓடிக் குளமாய்த் தேங்கி*
*யானை குளிப்பாட்டி குதிரை குளிப்பாட்டி*
*இஞ்சி மஞ்சள் செடிகள் ஓடி*
*வாழை மரங்களோடு வற்றிப் போனதடா*

*என்ன தம்பி அழுகின்றான் யாரடித்தது (கணவன் கேட்கிறான்)*
*யாரும் அடிக்கவில்லை எவரும் தொடவுமில்லை*
*தம்பி விளையாட தம்பியொன்று கேட்கிறான்*

என்று கணவனுக்கு அன்பையூட்டுகிறாள் ஏடு, எழுத்தறியாத அந்தத் தாய்.

தங்கத்தால் ஏரெடுத்து

தடம் பதியா எருது பூட்டி உழுது

வெள்ளிகள் கொண்டு விதைத்து

அள்ளித் தருவாயடா அன்பே

நீ நித்திரை செய்

இவ்வாறு பாடி உறவுகளைச் சுட்டிக் காட்டுகின்றனர். பிள்ளைகள் மகிழ்ச்சி அடைகின்றனர். இப்பொழுது மமா, டடாவையும் அப்பில், போல் (Ball) பிள்ளை புரிகிறது. இதனால், பிள்ளை இதுதான் உலகம்; இதுதான் சூழல்; இதுதான் வாழ்க்கை என புரிந்து கொள்கிறது. இறைவன்தான் எங்களைப் பாதுகாக்க வேண்டும்.

## நோன்புகாலச் செயற்பாடுகள்

நோன்புகாலம் வரப்போகிறது என்றால் ஊர் திருவிழாபோல் காணப்படும். தலைநோன்புக்கு கறிவகை சேகரிப்போரும், உணவுப் பண்டங்கள் தேடுவோரும், சிறுவர்கள் நாளைக்கு நோன்பு என்று தெரு ஓரங்களில் ஓடித்திரிவதும் ஒரு சந்தோசமாக இருக்கும். எங்கு பார்த்தாலும் நோன்பு என்ற பேச்சே இடம்பெறும். இவ்வாறு றமழான் மாதத்திற்கான பிறை தென்பட்டதும் அதிகாரியார் றமழான் மாத பிறை தென்பட்டதால் நாளை நோன்புநோற்க வேண்டுமென்று தெருத்தெருவாக சென்று கூ... கூ... கூ... என்று கூப்போட்டு அறிவிப்பார். இச்செயற்பாடு முற்காலத்தில் வானொலி, தொலைபேசிகள் இல்லாதபோது ஏற்படுத்தப்பட்ட அறிவிப்பு முறை.

அக்காலத்தில் நோன்பு பிடிப்பதற்கு ஸஹர் நேரத்தில் பக்கீர்பாவா அதிகாலை 2.30 மணியில் இருந்து 3.30 மணிவரை அரிக்கன் லாம்பு தூக்கி பாட்டுப்பாடி சைத்தூன் கிஸ்ஸா. ஐந்து படைப்போர், அலிபாத்திஸா போன்ற சரித்திரப் பாடல்களைப்பாடி ரபான் அடித்து தெருத்தெருவாக செல்வார். மக்கள் அதுகேட்டு எழுந்து விடுவார்கள். பக்கத்து வீட்டாரையும் எழுப்புவார்கள். பல்லுத்துலக்கி வுளூ செய்து தஹஜ்ஜத் தொழுவார்கள். பக்கத்து வீட்டில் சாச்சியின் பிள்ளைகள் இருந்தால் பெரியம்மாவின் வீட்டுக்கு சாப்பாட்டுடன் வருவார்கள். எல்லோரும் கலந்து சாப்பிடுவார்கள். விழாபோல் இருக்கும். சந்தோசமாகவும் இருக்கும். சாப்பாட்டில் பிரதானமானது கறையல்.

இது தயிர் கொண்டும், தேங்காய் பாலுடன் பழங்கள் கலந்தும் உண்பதாகும். அந்தவேளையில் மிகவும் சுவையாக இருக்கும். எல்லாப் பிள்ளைகளும் பெற்றோரும் தொழுதுவிட்டு தூங்குவர். கரையல்சாதம் நீர்த்தன்மை வாய்ந்தது. தாகத்திற்கு நின்று பிடிக்கக் கூடியது என்ற காரணத்தினால் அதிகமாக நோன்பு நோற்பவர்கள் கரையல் சாப்பிடுவதை வழக்கமாகக் கொள்வர்.

இவ்வாறு முழு நோன்பு நாட்களும் நகர்ந்து போகும். 27ம் கிழமை வந்ததும் பெருநாள் ஆரம்பித்துவிடும். இருபத்தேழாம் கிழமை இரவு முழுக்கமுழுக்க விழித்திருந்து திக்ர், தொழுகை போன்ற அமல்கள் செய்யப்படும். தறாவிஹ் தொழுகை தொழுவிக்கப்படும். சிறுவர்கள் பள்ளிவாயலுக்கு வருவார்கள். பெண்கள்கூட தறாவிஹ் தொழுகைக்காக வருவார்கள். இருபத்தேழு ரக்கஅத்துக்கள் தொழுவிக்கப்படும். நார்ஸா கொடுக்கப்படும். அதைப் பெறுவதற்காக பிள்ளைகள் முண்டி அடித்துக்கொண்டு முன்வருவார்கள். எல்லோருக்கும் நார்ஸா கொடுக்கப்படும். எல்லோரும் அதை சாப்பிடுவார்கள். பின்னர் குடிபானம் கொடுக்கப்படும். அதையும் அருந்துவார்கள். இவ்வாறு சந்தோசமாக அமல்களைச் செய்வார்கள். பெண்களும், சிறுவர்களும் தூக்கக் களைப்பால் சோர்வடையும்போது ஒரு சிறுவன் எப்படியோ சிரிப்பாட்டி விடுவான். எல்லோரும் வாய்க்குள் மெதுவாகச் சிரித்துக் கொள்வார்கள். தூக்கம் கலைந்துவிடும். தொழுகை மற்றும் அமல்கள் எல்லாம் நிறைவடைந்த பின்னர் நள்ளிரவுக்கு அண்மிய சுமார் 11.30 மணியளவில் வீட்டுக்கு வந்து தூங்குவார்கள். மூன்று மணிக்கு மீண்டும் பக்கீர் பாவா அடிக்கத் தொடங்கி விடுவார். மீண்டும் எழுந்து கடமைகளைச் செய்வார்கள். இது அக்காலச் செயற்பாடாகும்.

இன்று அவ்வாறில்லை. பள்ளிவாயல் ஒலிபெருக்கிகளில் குர்ஆன் மற்றும் ஹதீதுகள் ஒலிபரப்பப்படும். தூக்கம் கலைந்து எழுந்து விடுவார்கள். வானொலியிலும் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படும். தொலைபேசி ஊடாகவும் உறவினர் எழுப்பப்படுவார்கள். இருபத்தேழு ரக்அத்துக்களுக்குப் பதிலாக பதினொரு ரக்கஅத்துக்கள் தொழுவிக்கப்படும். நார்ஸா நடைமுறை குறைவாகும். வீட்டுத்தலைவரும் அவர்களுடைய குடும்பமுமே ஸகர் செய்வார்கள். உறவுகள் வருவது குறைவு. மகிழ்ச்சி குறைவு. இரவு 10.30 மணியோடு தொழுகை முடிந்துவிடும். அக்காலத்தைப்போல் உறவுமுறைகள் ஒன்று சேர்வது குறைவாகும். ஸகர் செய்துவிட்டு படிப்பில் கவனம் செலுத்துவார்கள்.

சிறுவர்கள் நோன்போடு ரியூசன் வகுப்புகளுக்குச் செல்வார்கள். இப்பொழுது தனியார் கல்விக்கே முக்கிய இடம் கொடுக்கப்படுகிறது.

## ஆடை அணிகலன்கள்

அக்காலத்து மாணவர்களுக்கென்று சீருடைகள் இருக்கவில்லை. ஆண்கள் சாரன், சேட் அணிந்து பாடசாலை செல்வார்கள். எழுத்தாணியும் ஏடும் கொண்டு படித்த காலத்திற்குப் பின்னர் பேனைத்தடி, மைக்குளிசை இதை கடையில் வாங்கி நீரில் கரைத்து போத்தலில் ஊற்றிக்கொண்டு கொப்பி ஒன்று அல்லது இரண்டு கொண்டு மாணவர்கள் பாடசாலை செல்வார்கள். தலை மொட்டை அடிக்கப்பட்டிருக்கும். ஆண்களில் பெரியவர்கள், சிறுவர்கள் உட்பட எல்லோரும் மொட்டை அடித்திருப்பார்கள். சேட்டுக்குப் பதிலாக பெனியன் அணிந்திருப்பார்கள். சாறன் கட்டியிருப்பார்கள். உள்ளாடையாக "சிறுவால்" போட்டிருப்பார்கள். சிறுவால் என்பது நீளக்காட்சட்டை போல் முழங்காலுக்குக் கீழ் கண்டைக்காலுக்கு மேல் இருக்கும். நாடா கொண்டு இடுப்பில் கட்டியிருப்பார்கள். மிகவும் வயது போனவர்கள் கோவணம் கட்டியிருப்பார்கள். கோவணம் என்பது ஆண் உறுப்பை மறைத்துக் கட்டப்படும் கச்சையாகும். வேலைகள் செய்வதற்கு சாறத்தை உயர்த்தி இடுப்பில் கட்டிவிட்டு சிறுவாலோடு நின்று தொழில்கள் செய்வார்கள். பெரும்பாலும் எல்லோரும் "அச்சிரம்" போட்டிருப்பார்கள் அல்லது "அறணாக்கொடி" கட்டியிருப்பார்கள். இடுப்பில் கச்சை கட்டுவதற்கும் காவல் பண்ணி அச்சிரம் கட்டுவதற்கும் அது துணையாக இருந்தது.

சிறுவர்கள் அம்மணமாகத் திரிவார்கள். "தம்பித்துணையான்" இடுப்பில் கட்டியிருப்பார்கள். தம்பித்துணையான் என்பது வெள்ளியினால் செய்யப்பட்ட சிறுவர்களுடைய அபத்தை மறைப்பது. அதேபோன்று சிறுபெண் பிள்ளைகள் அரைமடிச் சதங்கை கட்டியிருப்பார்கள். அதுவும் வெள்ளியால் அல்லது செம்பால் செய்யப்பட்டது. அரச இலைபோல் அவர்களுடைய அபத்தை மறைத்து நிற்கும். அதேபோன்று பெண்கள் இருபது முழப்பிடவை கட்டியிருப்பார்கள். மேற்சட்டை, பாவாடை என்பன அணிய மாட்டார்கள். காறை கழுத்தில் போட்டிருப்பார்கள். பூமணிக் கோர்வை, சவுக்குமணிக் கோர்வை, அச்சுமணிக் கோர்வை என்பன அணிந்திருப்பார்கள். கைக்கட்டு, காப்பு, அல்லிக்குத்து தண்ட, கொலிசம் கால்களில் போட்டிருப்பார்கள். அல்லிக்குத்து காதில் அணிந்திருப்பார்கள்.

பூமணி, சவுக்குமணி, அச்சுமணி என்பன கழுத்தில் அணிவது; காறை கழுத்தில் அணிவது; கைக்கட்டு கையில் மேற்பாகம் அணிவது. இவ்வாறு அக்காலப் பெண்களின் அணிகலன்களாகும். இவையெல்லாம் வெள்ளியினால் அல்லது பித்தளையினால் அல்லது செம்பினால் செய்யப்பட்டிருக்கும். பணக்காரப் பெண்கள் தங்கத்தினால் செய்து போடுவதும் உண்டு.

ஆண்களைப் பொறுத்த வகையில் மொட்டத்தலை, சிறுவால், சாரம், வெனியன், சால்வை என்பவற்றை அணிவார்கள். பின்னர் இவ்வூரில் முதன்முதலாக தலையின் ஓரப்பகுதியில் மயிர்வளர்ப்பதை காட்டியவர், வளர்த்தவர் மீராமுகையதீன் (சிலிவாவர்) ஆவார். அவரைத் தொடர்ந்து ஆண்கள் முடி வளர்க்கத் தொடங்கினர். முதலில் சிலிப்பா முடிவளர்த்தவர்கள் காலம் செல்லச்செல்ல முற்றாக முடி வளர்த்தனர். முடிவளர்த்தது போல் கல்வியும் வளரத்தொடங்கியது. அதன்பின்னர் சேர்ட் அணியத் தொடங்கினார்கள். பெண்கள் சட்டை அணியத் தொடங்கினார்கள். சிறுவர்களுக்கு சட்டை, பாவாடை, காற்சட்டை என்று மாறியது.

## வதிவிடமும் உணவுப் பழக்கமும்

ஆரம்ப காலத்தில் இலுக்குப்புல்லு, வைக்கோல், கிடுகு என்பவற்றைப் பயன்படுத்தினார்கள். மண் குடிசைகளே வீடுகளாக இருந்தன. தனிக் களிமண்ணையும், நாணற் கம்புகளையும் (குழல்கள்) பயன்படுத்தி களிமண்ணால் சுவர் எழுப்பி அறைகள் வராந்தா சேர்த்து முன்பகுதி பன்னாங்கால் மறைத்துக் கட்டப்பட்டிருக்கும். முன்பகுதி பணிந்ததாகக் காணப்படும். சுவர்கள் களிமண் கொண்டு மொழுகி இருப்பார்கள். தளத்திற்கு மாட்டுச்சாணம் கலந்து பூசியிருப்பார்கள். இந்த இரண்டறையும் வராந்தையும் உள்ள வீட்டுக்குள்ளே சகல செயற்பாடுகளும் நடைபெறும். ஒரு தாய்க்கு எட்டு அல்லது பத்து பிள்ளைகள் பிறக்கும். வீட்டிலேயே பிரசவம் நடைபெறும். துணையாக மருத்துவிச்சி இருப்பார். இவரே அப்போதைய VOG அதாவது மகப்பேற்று வைத்திய நிபுணர். இவரே பிள்ளையை பிறக்கச் செய்வதற்கு காரண கர்த்தாவாகவும் இருப்பார். பிள்ளை பிறந்ததும் கழுவிக் குளிப்பாட்டி சகல காரியங்களும் செய்து முடிப்பார். பின்னர் மருத்துவ மாதுக்கு அன்பளிப்புகள் கொடுத்து அனுப்புவார்கள்.

அக்காலங்களில் தொடர் மழை பெய்யும். ஆறு மாதங்கள் தொடர்ந்து மழையாகவும், பெளவலாகவும் இருக்கும். அதற்காக மக்கள் முன்னாயத்தங்களை செய்திருப்பார்கள். மழைக்காலத்துக்கான உணவு வகைகள் காய வைக்கப்பட்ட (உலர) நெல், சோளம், இறுங்கு, குரக்கன் முதலிய தானிய வகைகளும் மட்டைகள், குற்றிகள், விறகுகள் என்பனவும் உறியில் இடப்பட்டு வீட்டின் பின்பக்கம் கட்டித் தூக்கியிருப்பார்கள். குரக்கன் கூழ், இறுங்குப் பொரி, சோழன் பொரி என்பன மாரி வேளைகளில் உப உணவுகளாக உண்பார்கள். சிலவேளைகளில் பிரதான சாப்பாடாகவும் அதைப் பயன்படுத்துவார்கள். குரக்கன் களி ஒரு பிரதான உணவாகக் கொள்வார்கள். நெல்லை உரலுக்குள் இட்டு குற்றி அரிசாக்குவார்கள். சோறு சமைத்து உண்பார்கள். கால்களுக்கு மிதிவடிக்கட்டை அணிந்து கொள்வார்கள். பலகையால் அறுக்கப்பட்டு இறப்பர் முன்பகுதியில் வளைத்து வைத்துப் பயன்படுத்துவார்கள். மிதிவடிக்கட்டை அணியாதவர்களுக்கு நீர்ப்புண் கால் விரல்களுக்கு இடையில் ஏற்படும். அவற்றிற்கு மருதோன்றி மூலிகைகள் கொண்டு குணப்படுத்துவார்கள்.



நெல்லை அரிசாக்கும் காட்சி.
இது நெல்லுக் குத்துதல் எனப்படும்.

இப்படிக் காலம் கழித்தவர்கள் கல் வீடுகள் கட்டத் தொடங்கினார்கள். ஓடுகள் பயன்பாட்டிற்கு வந்தன. ஓடுகள்

எல்லோராலும் இடமுடியாது. அதனால் கிடுகு கட்டுவார்கள். கிடுகுகள் கட்டுவதற்கு அக்கம் பக்கத்தில் உள்ளோரை அழைப்பார்கள். பலர் வந்து ஒன்று கூடுவார்கள். கிடுகு நொடிப்பொழுதில் கட்டி முடிக்கப்பட்டுவிடும். தேனீர், வாழைப்பழம், அப்பம், இடியப்பம், கூழ் முதலியன வழங்கப்படும். சந்தோசமாக கலைந்து செல்வார்கள். இந்நடைமுறை இற்றைக்கு சில வருடங்களுக்கு முன்னர்கூட நிகழ்ந்ததை நான் கண்டிருக்கிறேன். இந்த குழு முயற்சித்தன்மை இந்த ஊர்மக்களின் சிறந்த பண்பை எடுத்துக்காட்டுகிறது. தற்பொழுதுகூட மையவாடியில் கபுர்குழி வெட்டுவதற்கு முன்வந்து செய்யும் இளைஞர்கள் இன்றும் இருக்கிறார்கள். இவர்களுக்கு இறைவன் நற்கூலி வழங்குவானாக! ஆமீன்!!

2004-12-26ம் திகதி நடந்த ஆழிப்பேரலை அழிவின்போது மருதமுனை மக்களின் நூற்றுக்கணக்கான ஜனாஸாக்களை குளிப்பாட்டி கபனிட்டு அடக்கினார்கள் என்பது சிறந்த பண்புகளுக்கு எடுத்துக் காட்டாகும். மேலும், பெண் ஜனாசாக்களில் அணிந்திருந்த மோதிரம், மாலை, காப்பு, தோடு முதலிய நகைகளை பதுகாப்பாக கழற்றி உரியவர்களின் உறவினர்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். இவை யெல்லாம் அல்லாஹ்வுக்காக செய்தார்கள் என்பதையும் குறிப்பிட்டுக் கூறமுடியும். தற்பொழுது கல்வீடுகள் மாடிவீடுகளாக மலர்ந்து வருவதை அவதானிக்க முடிகிறது.

## சுன்னத்துக் கல்யாணம் (கத்னா)

அக்கால சுன்னத்துக் கல்யாணம் (கத்னா) வெகு விமர்சையாகக் கொண்டாடப்படும். வீடுகள் மெழுகப்பட்டு பந்தல் இடப்பட்டு வண்ணான் மாற்று மூலம் சீலைகளால் அலங்கரிக்கப்பட்டு முற்றத்துக்கு குருத்து மணல் போடப்பட்டு அலங்கரிக்கப்படும். இலாம்புகள் வெளிச்சங்கள் போட்டு சோடனை செய்யப்படும். மருதோண்டி போடுவதற்கு முறைகாரர்கள் முந்திக்கொண்டு வருவார்கள். அத்தோடு பாக்கு, வெற்றிலை வைத்து முறைகாரர்கள் சுன்னத்து மாப்பிள்ளைக்கு தண்ணீர் வார்த்து பால், பழம் பருகக் கொடுப்பார்கள். மாப்பிள்ளை நன்றாக சோடிக்கப்பட்டு குதிரையில், யானையில் ஏறி றப்பான் அடிக்கப்பட்டு ஊர்வலம் போவார்கள். மற்றும் சிலர் கால்நடையாகவும் செல்வார்கள், மாட்டு வண்டில்களிலும் ஊர்வலம் போவார்கள்.

ஜும்ஆ பள்ளிவாயலுக்குச் சென்று காணிக்கை போட்டுவிட்டு முஅத்தினின் துஆவின் பின் அவருக்கும் காணிக்கை கொடுத்துவிட்டு வருவார்கள். வெடில், குரவையென்று ஏகப்பட்ட வரவேற்புகள் நிகழும். கத்னாவுக்கு முதல்நாள் ஊரவருக்கும் உறவினர்களுக்கும் சாப்பாடு கொடுக்கப்படும். மாடறுத்து சமையல் பண்ணுவார்கள். தூர இடங்களில் உள்ள உறவினர்கள் வருகை தந்திருப்பர்கள். அவர்கள் ஐந்து, ஆறு நாட்கள் தங்கியிருந்து வேலை வெட்டிகளில் ஈடுபடுவார்கள். தொதல், பலகாரம், முறுக்கு முதலியன சுடப்படும். ஒரே கலாதியாக கல்யாண வீடு காட்சிதரும். பேய், பிசாசுகளுக்கு காவல் பண்ணப்படும். உறவினர்கள், முறைகாரர்கள் குரவை ஒலியுடன் வட்டாக் கொண்டு வருவார்கள். மாப்பிள்ளைகளுக்கு ஆராத்தி எடுக்கப்படும்.

பின்னர், ஒஸ்தா மாமாவுக்கு வட்டா கொண்டு செல்வார்கள். அதில் வெற்றிலை, பாக்கு, இன்னும் சில பொருட்கள் வைத்து கொடுக்கப்படும். தேதி தீர்மானிக்கப்பட்டு ஒஸ்தா மாமா வருவார். அவர் கத்திக்கூடு, மருந்துப்பையுடன் வருவார். மந்திரம் சொல்லி சாம்பல் ஓதி வளவை காவல் செய்வார். பின்னர் உரல் ஒன்று கவிழ்த்து வைக்கப்பட்டிருக்கும். அதில் வெள்ளைத்துணி போட்டிருப்பார்கள். மாப்பிள்ளை வெள்ளைத்துணி உடுத்து வருவார். பின்னர் உரலில் இருப்பாட்டப்படுவார். அப்போது பெண்கள் குரவையிடுவார்கள். ஆண்கள் தக்பீர் சொல்லுவார்கள். பாவா ரபான் அடிப்பார். கண்மூடி முடிப்பதற்குள் கத்னா செய்யப்பட்டுவிடும். மருந்துபோட்டு (ஸ்காட்டின் பவுடர்) கட்டப்படும். அதன் பின்னர் இருப்பவர்களுக்கு இனிப்புப் பண்டங்கள் வழங்கப்படும்.

இரவானதும் பஜனை வைப்பதற்கு ஆட்கள் தயாராகி விடுவார்கள். இரவு முழுக்க பாட்டுக்கச்சேரி நடைபெறும். விடிந்ததும் எல்லோரும் தூங்கிவிடுவார்கள். ஏழு நாட்களுக்கு சுன்னத்து வைத்தவர்களுக்கு தண்ணீர் குறைவாகக் கொடுக்கப்படும். சாப்பாடும் கொடுக்கப்படும். அடுத்தநாள் ஒஸ்தா மாமா வந்து பார்த்து மருந்து போடுவார். இவ்வாறு ஏழு நாட்கள் தொடர்ந்து நடக்கும். மறுநாள் இரவு பாவா பைத் இடம்பெறும். வரலாற்றுப் பாடல்கள், இஸ்லாமியக் கீதங்கள் விடியும் வரைக்கும் பாடப்படும். இரவு வேளைகளில் விழித்திருப்பதற்காக தேனீர், புட்டு முதலியன பரிமாறப்படும்.

இதன் பிறகுள்ள காலத்தில் தென்னை மரத்தில் ஸ்பீக்கர் கட்டப்பட்டிருக்கும். அக்காலத்தைவிட சற்று முன்னேற்றமாக நிகழ்வுகள் நடைபெறும். விறைக்க வைப்பதற்கு ஊசி ஏற்றப்பட்டு கத்னா

செய்யப்படும். ஏழு நாட்களுக்குள் மருந்துடன் சீலை கழன்றுவிடும். அத்தோடு குணமடைந்துவிடும். தற்பொழுது யாருக்குமே தெரியாமல் பக்கத்து வீட்டிற்குக்கூட தெரியாமல் பிறந்து 40 நாட்கள் கழியும்முன் வைத்தியர்களிடம் கொண்டுசென்று இலகுவாக கத்னா செய்யப்படுகிறது.

## வாழ்வு கல்யாணம் (திருமணம்)

திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர். ஆற, ஃமர, பேசி பெத்து என்று நன்றாக சிந்தித்து முடிவு எடுக்கப்பட்டு பேச்சுவார்த்தை தொடங்கும். அந்தக்கால திருமணங்கள் இரவு வேளைகளிலேதான் நடைபெறும். திருமணம் நடைபெறுவதற்கு சில மாதங்களுக்கு முன்பிருந்தே பேச்சுவார்த்தைகள் நடைபெறத் தொடங்கும். பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டுக்குச்சென்று பெண்ணைப் பற்றிய புகழ்ச்சியான நல்ல செயற்பாடுகள் பற்றி சொல்லி ஆசையை வளர்ப்பார்கள். பெண்ணிடம் இருக்கும் சொத்துகள் பற்றியும் பேசப்படும். ஆயிரம் பொய்யைச்சொல்லி திருமணம் முடிப்பதைப் போன்று கதைகள் பரிமாறப்படும். இவ்வாறு பேசியபின்பு மாப்பிள்ளை தரப்பாருக்கு விருப்பு இருக்குமாயிருந்தால் மூன்று பெட்டி கட்டி வெற்றிலை, பாக்கு ஒரு பெட்டியிலும் 101 பலகாரம், 101 வாழைப்பழம் ஒவ்வொரு பெட்டியிலும் வெள்ளைச் சீலையால் கட்டிக்கொண்டு செல்வார்கள்.

பெண்வீட்டார் வருகைக்காக ஒதுக்கப்பட்ட இடத்திற்கு அழைத்துச் சென்று, உள்ளே வாருங்கள் என்று கூட்டிச்சென்று பாயில் அமரச் சொல்வார்கள். இருதரப்பினரின் மரைக்கார்மாரும் வந்திருப்பார்கள். கலகலத்து கதைத்துப் பேசிக்கொண்டிருப்பார்கள். மாப்பிள்ளைவீட்டின் முக்கியமான ஒருவர், 'நீண்ட நேரமாகக் கதைத்துக் கொண்டிருக்கிறீர்கள். வந்த விடயத்தை கூறவில்லையே' என்பார். அதற்கு, ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட பெண்வீட்டு முக்கியஸ்தர் ஒருவர் 'இன்னார் மகள் இன்னாருக்கு உங்களுடைய இன்ன மகனை திருமணம் கேட்டு தேதி குறிக்க வந்திருக்கிறோம்' என்பார். இவ்வேளை இருபக்க மரைக்கார்மார்கள் தலையிட்டு உங்களுக்கிடையில் கொடுக்கல் வாங்கல்கள் பேசி முடித்துவிட்டீர்களா எனக் கேட்பார்கள். அப்பொழுது முடித்துவிட்டோம் எனக் கூறப்படும். பின்னர், பிறைக்கணக்கு பார்க்கப்பட்டு திகதி தீர்மானிக்கப்படும். பள்ளிவாசலிலா வீட்டிலா என்று கேட்கப்பட்டு, அதுவும் தீர்மானிக்கப்படும். அதன்பிறகு புதிய உடுப்புடுத்து தொப்பி போட்டுக்கொண்டு ஸலாம் கூறிக்கொண்டு மாப்பிள்ளை உள்ளே

வருவார். அவரிடமும் திகதி பேசப்பட்டு முடிவாக்கப்பட்டதும் பெண்ணின் சகோதரர் ஓர் அன்பளிப்புப் பொருளை மாப்பிள்ளையிடம் கொடுப்பார். மாப்பிள்ளை அதை மச்சானிடம் கொடுப்பார். பெண்ணின் வாப்பா சபையோர் முன்னே ஸலாம் கொடுத்து ஒருவரை ஒருவர் ஆரத்தழுவுவர். இதன்பிறகு தேனீர் உபசாரம் வழங்கப்படும். பிறகு கலைந்து செல்வார்கள்.

இற்றைக்கு 50 வருடங்களுக்குமுன், தீர்மானித்த திகதி வந்ததும் கல்யாணத்துக்குரிய ஆயத்தங்கள் அனைத்தும் முடிக்கப்பட்டிருக்கும். மாப்பிள்ளை அவர் தொழிலுக்குத் தக்கவாறு சாரம், சேர்ட், கோட், தொப்பி என்பன அணிந்து வருவார்; அல்லது கோட், சூட், துருக்கித் தொப்பி அணிந்து ராணிமார்க் கறுத்தக் குடைக்கு மேல் வெள்ளைச் சீலை போடப்பட்டு மச்சினன் பிடித்துவர, மச்சான் மாப்பிள்ளை வீதிவலம் வருவார். அவரைத்தொடர்ந்து மாப்பிள்ளையின் குடும்பத்துப் பெண்கள் வருவர். வரும்போது பைத் பாடியபடி வருவர். பெண்வீட்டு முற்றம் வந்தவுடன் வந்தவர்களுள் ஆண்களில் ஒருவர் மாப்பிள்ளையை மறித்து கட்டியம் கூறத் தொடங்குவர். அவர் மாப்பிள்ளையை உள்ளே செல்ல அனுமதிக்க மாட்டார். மறித்துவைத்து பாடிக்கொண்டு இருப்பார். பெண் வீட்டார் ஏதாவது கொடுக்கும் வரை நடக்க விடமாட்டார். பிறகு தொல்லை தாங்காத பெண்வீட்டுப் பெரியார் சால்வை, சாரம் முதலியன கொடுக்கும் வரை பாடிக்கொண்டிருப்பார். கொடுக்கப்பட்டதும் விட்டுவிடுவார்.

துரோண் என்பது அப்போது கிடையாது. இரவுக்கல்யாணமாக இருப்பதால் பந்தங்கள் கொழுத்தி குரவை, வெடி சத்தத்துடன் தீப்பந்தங்கள் முன்னே செல்ல பொல்லடி, சீனடி, சிலம்படி வீரர்கள் செய்துவர ஊர்வலத்தில் மாப்பிள்ளை சென்றடைவார். மாப்பிள்ளை பெண்வீட்டின் கேற்றடிக்கு வந்ததும் மாப்பிள்ளை உறவுக்காரர் ஒருவரால் "கட்டியம்" பாடப்படும். கட்டியம் என்பது மாப்பிள்ளையை புகழ்ந்து பாடுவது. தொடர்ந்து பாடிக்கொண்டே இருப்பார். பெண்வீட்டார் ஏதாவது பரிசு கொடுக்கும்வரை பாடல் தொடரும். கொடுக்கப்பட்டதும் மாப்பிள்ளை உள்ளே போக அனுமதிக்கப்படுவார். செங்கம்பளம் விரிக்கப்பட்ட விரிப்பில் நடந்து சென்று சேவிரக்காலில் மாப்பிள்ளையும் பெண்ணும் இருந்து தாலி கட்டப்படும். சேவிரக்கால் என்பது உரலைப் போன்ற அமைப்புடையது. அதற்கு முன்னால் செப்புக்குடத்தில் மாவிலை, தென்னம் பாளை வைக்கப்பட்டிருக்கும். அறுகம் புல்லும் தேங்காய்ப்பாலில் போட்டு திரி கொழுத்தி தலையைச் சுற்றப்படும்.

இது கண்ணூறு கழிப்பதற்கு செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இவையெல்லாம் முடிந்தபின்பு அக்காலத்தில் கட்டில் இருக்கவில்லை. பாய் விரித்து, போர்வை விரித்து தலையணை போடப்பட்டிருக்கும். அதில்தான் உறங்குவார்கள். திருமணத்தின் மறுநாள் மச்சினன் மாப்பிள்ளையை வாகனத்தில் அல்லது வண்டியில் ஏற்றிச்சென்று தாய்வீட்டில் விடுவார். தாய், சகோதரர்களுக்கு இனிப்புப்பண்டம் மாப்பிள்ளையால் வழங்கப்படும். பின்னர் மச்சினனோடு வீட்டுக்குத் திரும்பி விடுவார்.

மூன்றாம்நாள் கால் மாறுதல் நிகழ்வு நடைபெறும். மாப்பிள்ளை வீட்டார் வாகன வசதி செய்திருப்பார்கள். பெண்ணுக்கு பிடவை, சட்டை முதலியன கொண்டுவந்து அணிவித்து அழைத்துச்செல்வது போல் பெண்வீட்டார் மாப்பிள்ளைக்குரிய ஆடைகளை வாங்கி அணிவிப்பர். இவ்வாறு இருதரப்பினரும் மாப்பிள்ளை வீட்டுக்குச் செல்வார்கள். பின்னர் அங்கு உறவினர்களால் சீர்கள் செய்யப்படும். சாப்பாடுகள், இனிப்பு வகைகள் வழங்கப்படும். பின்னர், மாப்பிள்ளையின் தாயார் பாவனைப் பொருட்கள், பாய், பீங்கான், தலையணை, அலுமாரி முதலியன கொடுப்பார். அவையெல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு மாப்பிள்ளை வீட்டார் இருவரையும் அழைத்துக்கொண்டு பெண்வீட்டிற்கு வருவார்கள். இப்படி வரும்போது பெண்வீட்டார் குரவையொலி எழுப்பி வெடிகள் இட்டு வரவேற்பார்கள். சிலவேளைகளில் ஆராத்தி எடுத்தும் வரவேற்கப்படுவர். பின்னர் இனிப்புப் பண்டங்கள், தேனீர் பரிமாறப்படும். இருதரப்பினரும் சந்தோசமாகப் பேசிக் கதைத்திருந்து கலைந்து செல்வார்கள்.

இதன்பிறகு உறவுக்காரர் தத்தமது வீடுகளுக்கு அழைத்துச் சென்று விருந்து படைப்பார்கள். கோழி இறைச்சிக்கறி, மீன்கறி போன்றவை பரிமாறப்படும். விசேடமாக தயிர்சாதமும் வழங்கப்படும். பரிசுப்பொருட்கள் அல்லது பணம் அன்பளிப்பாகக் கொடுக்கப்படும். இவ்வாறு பலநாட்கள் ஒவ்வொருவராக அழைத்துச் சென்று பரிமாறுவார்கள். சிலவேளைகளில் ஆறு மாத காலம் பெண்வீட்டார் சாப்பாடு வழங்குவதும் வழக்கமாயிருந்தது.

இது இவ்வாறிருக்க, இக்காலத் திருமணங்களை நோக்கும் போது இரவு நேரங்களில் திருமணங்கள் நடைபெறுவதேயில்லை. கல்யாண மண்டபங்களில்தான் நடைபெறும். பிற்பகல் 4.00 - 6.00 மணிக்குள் யாவும் நிறைவு பெற்றுவிடும். பின்னர் கால்மாறிச் செல்வதென்றால் காரில் போவார்கள். நெருங்கிய உறவுகள் மட்டும்

இணைந்திருக்கும். இரண்டு மூன்று நாட்களுள் எல்லாமே முடிந்துவிடும். சீதனம் கொடுப்பவர்களும் உண்டு. காதலித்துவிட்டு பின்னர் பேசியும் சீதனம் கொடுத்தும் முடிக்கப்படுகிறது. குறிப்பாக டாக்டர், என்ஜினியர் என்றால் 50 இலட்சத்துக்கு மேல் ரொக்கமாகக் காசு, கொழும்பில் வீடு, இங்குமொரு வீடு. அதேபோன்றுதான் ஏனைய அரச உத்தியோகத்தர்களுக்கு மேற்சொன்னதைவிட சற்றுக் குறைவாக கொடுக்கப்படும்.

தற்பொழுது சீதனத்தை எதிர்ப்பவர்களும் உண்டு. சிலர் பெற்ற சீதனத்தை திரும்பிக் கொடுத்தும் வருகின்றனர். இக்காலத்தில் காதல் திருமணங்கள் நிறைய நடைபெறுகின்றன. இன்டர்நெட் மூலமும் திருமணம் நடைபெறுகிறது. தொலைபேசி மூலமும் நடைபெறுவதை அவதானிக்க முடிகிறது. எமது இஸ்லாமியச் சமூகம் இந்தவகையில் விழிப்படைய வேண்டும். வலிமாச் சாப்பாடு இப்பொழுது பிரபல்யம் பெற்று வருகிறது. வலிமா இன்றி திருமணம் இல்லை என்ற அளவுக்கு பிரபல்யம் பெற்று வருவது சிறப்பம்சமாகும். சில திருமணங்கள் இடையில் முறிவடைவதும் பின்பு சேர்வதும் இக்காலத்தில் நடைபெற்றுத்தான் வருகின்றன.

## மாப்பிள்ளை வாழ்த்து (கட்டியம் கூறல்)

மாப்பிள்ளை வாழ்த்து என்பது பெண்வீட்டுக்கு மாப்பிள்ளை வந்து சேர்ந்தவுடன் அங்கு முன்வாசலில் அமைக்கப்பட்டுள்ள பந்தலின்கீழ் ஓர் ஆசனத்தில் அமர்ந்த பின்னர் புலவர் ஒருவர் வாழ்த்துப் பாட ஆரம்பிப்பார். இது சில இடங்களில் தாலி கட்டுவதற்கு முன்னரும் வே சில இடங்களில் பின்னரும் நடைபெறும். இம்மரபே பிற்காலத்தில் வாழ்த்துப் பத்திரம் வாசித்தளிக்கும் வழக்கமாக மாறுதலடைந்துள்ளது.

பந்தல் என்பது மரத்தாலான கணுக்கள் நட்டு கயிறு இழுத்து அதன் மேல் வெண்ணிறச் சேலை பரப்பப்பட்டிருக்கும். பந்தல் கால்களும் பல் வர்ண பட்டுப் புடவைகளினால் அலங்கரிக்கப்பட்டு தென்னங்குருத்து, இளநீர்க்குலை, தென்னம் பூவரி என்பனவும் சோடனைக்காகத் தொங்கவிடப்பட்டிருக்கும்.

## மரணம் ஏற்படும் போது

அக்காலத்தவர் மரணமடைந்தால் பேய் அடித்தது அல்லது செய்வினை செய்யப்பட்டது அல்லது ஏதோ ஒரு காரணத்தை கூறி

இதனால்தான் இந்த மரணம் ஏற்பட்டதென்று சொல்லிக்கொள்வார்கள். மரணம் ஏற்பட்ட உடனே நெல்லு குத்தப்பட்டு மா இடிக்கப்பட்டு பலகாரம் சுடுவார்கள், மையித்தைப் பார்ப்பதற்கு சனங்கள் வந்து போய்க்கொண்டிருக்கும். தூரத்தே இருக்கின்ற உறவினர்களுக்கு செய்திகள் பறந்து போகும். இவ்வாறு நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கும் வேளையில் கதவைக் கழட்டி உரல்வைத்து அதற்கு மேல் மையித்தை வைத்து அடித்தட்டுக்கழுவி கை, வாய் கட்டி வெள்ளைப் போர்வையால் போற்றப்பட்டு இருக்கும். ஆண் மையித்தோ, பெண் மையித்தோ என்ற வேறுபாடில்லாமல் எல்லோரும் பார்ப்பார்கள். இக்காலத்தைப் போல் ஒலிபெக்கியிலோ அல்லது வானொலியிலோ அறிவிக்கும் வழக்கமில்லை. அவைகள் இல்லாத காலமாகும். எப்படியோ ஊர் முழுக்கத் தெரிந்துவிடும். சொந்தபந்தங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து விடுவார்கள். வந்தவர்களுக்கு தேனீர் வழங்கப்படும். வெற்றிலை, பாக்கு, பீடி, சிகெரட் என்பனவும் வழங்கப்படும்.

பின்னர் குளிப்பாட்டப்படும். அதற்கிடையில் பலகாரம் தயாராகிவிடும். பலகாரத்தை பெட்டியில் கட்டி வாழைப்பழமும் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கும். குளிப்பாட்டி முடிந்தவுடன் கபன் இடப்பட்டு சந்தூக்கில் வைக்கப்பட்டு முஸல்லாக்கள், வெள்ளைச் சீலைகள் கொண்டு சந்தூக்கு போர்த்தப்படும். நெருங்கிய உறவினர்கள் சந்தூக்கை தூக்கிய வண்ணம் செல்லத் தயாராவார்கள். அந்தநேரத்தில் கோ.... என்ற சத்தத்துடன் ஏனைய பெண் உறவினர்கள் அழத்தொடங்குவார்கள். மையித்தை தூக்கிச்செல்லும்போது பைத் ஓதிச் செல்வார்கள். பின்னால் மையத்து வரும். பள்ளிவாயலுக்குள் அல்லது வெளியில் வைத்து ஜனாஸாத் தொழுகை நடாத்தப்படும். உறவினர்களில் தொழுவிக்கக் கூடியவர்கள் இருந்தால் தொழுவிப்பர். இல்லாதுபோனால் உலமா ஒருவர் தொழுவிப்பார். கூட்டுத்துஆ செய்யப்படும். பின்னர் மையித்தை தூக்கிச்சென்று அடக்கம் செய்வார்கள். அடக்கிய பின்னர் தல்கீன் ஓதப்படும். மையித்தின் தலைமாட்டில் இருந்து இவையெல்லாம் முடிந்தபின்பு மையித்திற்கு மேல் குழை, கொத்து என்பன நாட்டப்பட்டு தண்ணீர் ஊற்றப்படும். இறுதியில் துஆ செய்யப்படும். அதன்பின்னர், அவ்விடத்திலேயே கொண்டுவந்த பெட்டி அவிழ்க்கப்பட்டு பலகாரம், வாழைப்பழம் என்பன வழங்கப்படும்.

அதனைத் தொடர்ந்து உறவுக்காரர்கள் மையித்து வீட்டிற்கு சாப்பாடு கொண்டு வருவார்கள். எல்லோரும் பகிர்ந்து சாப்பிடுவார்கள். அதைத்தொடர்ந்து மூன்றாம் கத்தம் ஓதப்படும். மாடு அறுத்து

சமைப்பார்கள். ஊருக்கு சொல்லப்பட்டு எல்லோரும் சேர்ந்து சாப்பிடுவார்கள்.

கணவன் மவுத்தாகியிருந்தால் மனைவி விதவையாக் கப்படுவார். பச்சை ஓலைகளை வீட்டை வளைத்து கட்டி வேலி அமைப்பார்கள். அவருடைய பெண் சகோதரிகள் மற்றும் உறவுகாரப் பெண்கள் அப்பெண்ணோடு தங்குவர். ஏழாம் கத்தம் முடியும் வரையும் உறவினர்கள் அவ்வீட்டிலேயே தங்கியிருப்பார்கள். ஏழாம் கத்தம் தயாராக்கப்படும். குர்ஆன் ஓதப்படும். பல ஊரவர்கள், லெப்பை, முஅத்தின்மார் மற்றும் ஓதக்கூடியவர்கள் குழுவாகச் சேர்ந்து குர்ஆன் ஓதுவார்கள். பின்னர் யாசீன் சூறா ஓதப்படும். தொடர்ந்து கத்தம் ஓதப்படும். கத்தச்சாப்பாடு சாப்பிடுவார்கள். லெப்பை, முஅத்தின், ஆலிம்களுக்கு பணம் கொடுக்கப்படும். பின்னர் கலைந்து செல்வார்கள். இதன்பிறகு தூரத்தில் வசிப்பவர்கள் சென்றுவிடுவார்கள். ஏனையவர்கள் மரண வீட்டிலே தங்கியிருப்பார்கள். ஆபத்துரொட்டி சுடப்பட்டு மாலை நேரத்தில் பிள்ளைகளுக்குப் பகிர்ந்து கொடுப்பார்கள். குடும்ப உறவுக்காரர்கள் அடிக்கடி மையித்து வீட்டுக்கு வருகை தந்து சுகம் விசாரிப்பார்கள்.

இப்படி காலம் கடந்து கொண்டிருக்கும். நற்பதாம் கத்த தினம் நெருங்கும்போது தூர இடங்களில் இருக்கும் உறவுக்காரர்கள் மீண்டும் வந்து விடுவார்கள். ஊருக்கு அழைப்பு விடப்படும். வழமைபோல் ஆலிம்கள், முஅத்தீன்கள், லெப்பைமார் ஒன்று சேர்வார்கள். குர்ஆன் ஓதப்படும். எல்லோருக்கும் சாப்பாடு வழங்கப்படும். இவ்வாறு நாற்பதாம் கத்தம் முடிவடைந்துவிடும்.

ஆனால், இன்று மையித்து வீடுகளில் வெற்றிலை, பாக்கு பறிமாறப்படுவதில்லை. மையித்தை அடக்கியபின்பு வீட்டுக்கு வருபவர்களுக்கு சோடா அல்லது குளிர்பானம் கொடுக்கப்படும். கத்தம் பாத்திஹா என்பது இடம்பெறுவதில்லை. மாடு இருக்குமானால் பள்ளிவாயலுக்கு கொடுத்து விடுவார்கள். சிலர் நாற்பதாம் நாள் யாஸீன் சூராவினை அச்சிட்டு மக்களுக்கு வழங்குவார்கள். பள்ளிவாயலுக்கும் கொடுப்பார்கள். அத்தோடு எல்லாம் முடிந்துவிடும். கணவன் இறந்தால் மனைவி நான்கு மாதமும் பத்து நாட்களும் இத்தா இருக்க வேண்டும். நோய் ஏற்படும் சந்தர்ப்பங்களில் இத்தாவில் இருக்கும் பெண் டாக்டரிடம் பாதுகாப்பான மறைப்புக்களுடன் சென்றுவர முடியும்.

# முதலாவது ஆசிரியை

## ஹாஜியானி மர்ஹூமா

### சின்னலெவ்வை மீராஉம்மா ஆசிரியை



நெற்பிட்டிமுனையில் முதலாவது ஆசிரியையான இவர் 1930-01-09ம் திகதி பிறந்தார். பெண்கள் கல்வி கற்பது கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருந்த காலத்தில் துணிந்து நின்று கல்வி கற்றவர். தமிழ் சகோதரிகளுடன் சேர்ந்து படித்தார். ஆரம்பகால நெற்பிட்டிமுனை அரசினர் தமிழ், முஸ்லீம் கலவன் பாடசாலையில் கல்வி பயின்று க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்து 1952ம் ஆண்டில் ஆசிரியர் நியமணம் பெற்று மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சி பெற்ற பின்பு அக்கரைப்பற்று அரசினர் கலவன் பாடசாலை (நரிப்பிட்டி பாடசாலை) யில் முதல் நியமனத்தைப் பெற்றார். பின்னர், ஐந்து வருடங்கள் சேவையை முடித்துவிட்டு 1960ம் ஆண்டு கமு/அல் அக்ஸா மகா வித்தியாலயத்தில் தொடர்ச்சியாக கடமையாற்றி வந்தார். 1994ம் ஆண்டு புனித ஹஜ் கடமையை முடித்த இவர் SH. முகமட் ஆசிரியரைத் திருமணம் செய்தார்கள். இவர்களுக்கு நான்கு ஆண் பிள்ளைகளும் ஒரு பெண் பிள்ளையும் பிறந்தனர்.

பெண்கள் கல்விக்காக பாடுபட்ட இவர், பல பெண் பிள்ளைகளை ஊக்கப்படுத்தி வழிப்படுத்தினார். இவரைத் தொடர்ந்து பெண்கள் கல்வி கற்பதில் ஆர்வம் காட்டினர். இதன் காரணமாக பெண் ஆசிரியர்கள் தோற்றம் பெற்றனர். அந்தவகையில் MC. கதீஜா உம்மா ஆசிரியை, CB. நஜீமா ஆசிரியை, KL. மதினா ஆசிரியை, ML. சம்சுநஹார் ஆசிரியை உட்பட பலர் ஆசிரியர் பணிக்கு தெரிவாகினர். 1990ம் ஆண்டு ஓய்வு பெறும்வரை கமு/அல் அக்ஸா மகா வித்தியாலயத்தில் பணி செய்தார். இவர் ஓய்வு பெற்ற பின்பும் தனது கணவரோடு சேர்ந்து சமூகப் பணிகளிலும் அரசியல் பணிகளிலும் ஈடுபட்டு பல முன்னேற்றகரமான சேவைகளைப் புரிந்துள்ளார்.

இவருடைய மூத்த புதல்வர் HM. நாஸீர் தபாலகத்தில் பணி புரிந்தவர். HM. நதீர் பூச்சியியலாளராக கடமையாற்றி வருகிறார்.

HM. நபீர் கடலோடியாக கடமையாற்றிவிட்டு ஓய்வு எடுத்திருக்கிறார். கடைசி மகன் HM. நளீர் தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளராக இருக்கிறார். 2013ல் University of Beijing சீனா நாட்டில் கலாநிதிப்பட்டம் பெற்றுள்ளார். மகள் திருமணம் முடித்து கணவனோடு வாழ்கின்றார். இவருடைய கணவன் AL. ஜ.ஃபர் இலங்கை வங்கியில் பணிபுரிந்து வருகின்றனர். ஹாஜியானி சின்னலெவ்வை மீராஉம்மா ஆசிரியை 2003.01.09ம் திகதி இறையடி சேர்ந்தார். இவரிடம் கற்றவர்கள் இவரை நினைத்து துஆச் செய்ய வேண்டும். இச்செயல் நன்றியுள்ள மாணவர்களுக்குக் கடமையாகும்.

## முதலாவது ஆசிரியர்

### மர்ஹூம் S. முகம்மது அப்துல்லாஹ் (பயில்வான்)



இவர் 1925.07.25ம் திகதி நெற்பிட்டிமுனை சின்னத்தம்பி ஹாஜியார் - மரியம் கண்டு ஆகியோருக்கு மூத்த மகனாகப் பிறந்தார். இவர் நெற்பிட்டிமுனை அரசினர் தமிழ் முஸ்லீம் கலவன் பாடசாலையில் கல்வி கற்றார். திரு KS. வைரமுத்து அவர்களும் திரு S. சாமித்தம்பி இவருடைய ஆசிரியராவர். க.பொ.சா. பரீட்சையில் சித்தி பெற்றதன் விளைவாக இந்த ஊரில் முதன்முதல் முஸ்லீம் ஆசிரியராக தெரிவு செய்யப்பட்டார். இவருடைய முதல் நியமனம் காத்தான்குடி காங்கேயன் ஓடை பாடசாலையாகும். பின்பு காத்தான்குடி பாலமுனையில் கற்பித்துவிட்டு கல்முனைக்கு இடமாற்றம் பெற்று வந்தார். இவர் சிறுவயதிலிருந்தே துடிப்பான சிறுவனாக காணப்பட்டார். நிறைந்த நெஞ்சுவலு கொண்டவராக இருந்தார். எடுத்த காரியத்தை முடிக்காமல் ஓயமாட்டார். நெற்பிட்டிமுனையில் இருந்து மருதமுனைக்குச் சென்று முகம்மது அபூபக்கர் ஹபீறத் வீவியை திருமணம் செய்து நெற்பிட்டிமுனையில் வாழ்ந்து வந்தார். இவர்களுக்கு ஐந்து பிள்ளைகள். இதில் மூன்று ஆண்களும், இரண்டு பெணகளுமாகும்.

இவர் ஒரு பிரச்சனையில் பொலீஸாரோடு சண்டையிட்டு பொலீஸாருக்கு அடித்ததன் காரணமாக தன்னுடைய ஆசிரியர் தொழிலை இழந்தார். பின்னர் மல்யுத்தப் பயிற்சிகளில் ஈடுபட்டார்.

சகல விளையாட்டுப் பயிற்சிகளிலும் தேர்ச்சி பெற்றார். மல்யுத்தப் பயிற்சிகளில் களமிறங்கி 57 சந்தர்ப்பங்களில் வெற்றி பெற்றனர். இதன் காரணமாக நெற்பிட்டிமுனை மக்கள் கீழ்வரும் பாடலைப்பாடி வாழ்த்தி இருக்கிறார்கள்.

வாதாம் பருப்பும்
வளர்த்த ஆட்டிறச்சியும்
கோழியிடும் முட்டையும்
அப்துல்லாவை
கொழுக்க வைச்சுப் போட்டுது கா!

எந்தவொரு மல்யுத்தமானாலும் இலகுவாக வெல்லக்கூடிய வல்லமை அவரிடம் இருந்தது. அந்தவகையில் சீக்கியர்களான உலகப் புகழ்பெற்ற பயில்வான்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கல்முனை வந்தபோது நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது கோதாவுக்குள் இறங்கி தாறாசிங், சிங்சொங் ஆகியோருக்கு கைகொடுத்து மல்யுத்தம் செய்ய தயாரானார். துரதிஷ்டவசமாக அந்த நிகழ்வை அத்தோடு முடித்துவிட்டனர். அப்படி எதையும் துணிந்து செய்யக்கூடிய சிறப்பம்சம் அவருடைய பிறவியிலே கூடப்பிறந்தது எனக் கூறலாம்.

அதனைத்தொடர்ந்து இந்தியாவைச் சேர்ந்த திரு ஞானரெத்தினம் என்னும் ஆசிரியரிடம் இசைப் பயிற்சியைக் கற்றார். அந்நாட்களில் இந்திய நாடகக் கம்பனிகளுடன் இணைந்து ஹார்மோனிய இசைக்கலை பயின்று இசைக்கலைஞராகவிருந்து இலங்கைக்கு திரும்பி வந்தார். அதன்பிறகு கிழக்கிலங்கையில் முதன்முதலாக திரைப்படம் ஒன்றை தயாரித்தார். இதன் கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள், தயாரிப்பு என்பனவற்றை அவரே செய்து கதாநாயகன் பாத்திரம் ஏற்று நடித்தார்.

- படத்தின் பெயர்:- "வல்லவ மல்லன்"
- கதை, வசனம், தயாரிப்பு, பாடல்கள்:- SM. அப்துல்லாஹ் (நெற்பிட்டிமுனை)
- கதாநாயகன்:- SM. அப்துல்லாஹ் (நெற்பிட்டிமுனை)
- கதாநாயகி:- ஆசா சம்சுத்தீன் (திருகோணமலை)

♦ வில்லனாக I:- V. நெயினா முகமட் (நெற்பிட்டிமுனை)

♦ வில்லனாக II:- M. நூஹுலெப்பை (ஒலுவில்)

♦ சிறுவனாக:- A. கயஸ் (நெற்பிட்டிமுனை)

♦ ஹாசிய நடிகன்:- S. ஜொஹார் (கொழும்பு)

♦ இசையமைப்பு:- R. முத்துஸ்வாமி

♦ ஒளிப்பதிவு:- SPM ஸ்ருடியோ (கத்தான கொழும்பு)

♦ பாடல்கள்:- முகையதீன் பேக்

டோனி ஹசன்

நாராயணன்

நிர்மலா தேவி



"வல்லவன் மல்லன்"
வில்லன்
V. நெயினா முகமட்

இவ்வாறு நடிப்பில் தனது துறையை செலுத்தி தோல்வி கண்ட பின்னர் ஆன்மீகத்துறையில் தன்னை மாற்றிக்கொண்டு "தரீக்கத்துல் முப்லிஹீன்" என்னும் பெயரில் ஸ்தாபித்தார். இவை சம்மந்தமாக கீழ்வரும் நூல்களை எழுதினார்.

1. ஈமானின் உண்மையை நீ அறிவாயா?
2. பித்அத்துக்கு உண்மையின் சவுக்கடி (பாகம் I)
3. பித்அத்துக்கு உண்மையின் சவுக்கடி (பாகம் II)
4. திருக்குர்ஆன் தீர்ப்பு (பாகம் I)
5. திருக்குர்ஆன் தீர்ப்பு (பாகம் II)
6. சுன்னத் வல் ஜமாஅத்தினரை தெரிந்து கொள்வது எப்படி? (தமிழ்)
7. சுன்னத் வல் ஜமாஅத்தினரை தெரிந்து கொள்வது எப்படி? (ஆங்கிலம்)
8. ஏகத்துவம் பற்றி அல்குர்ஆன்
9. பகுத்தறிவின் நீதிமன்றம் (தமிழ்)
10. பகுத்தறிவின் நீதிமன்றம் (ஆங்கிலம்)

11. ஏகத்துவப் பாடல்கள் (மொத்தம் 180 பாடல்கள்) இவை நூல் வடிவிலும் இசைத்தட்டிலும் வெளிவந்தன.

இவ்வாறு பல நூற்களையும் பாடல்களையும் வெளியிட்டமையால் பலவகைப்பட்ட சவால்களை எதிர்நோக்கினார். இவருடைய "தரீக்கத்துல் முப்லிஹீன்" என்னும் பெயரில் காத்தான் குடியில் ஒரு நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது. இந்நிறுவனம் மக்கள் புரட்சியினால் தகர்க்கப்பட்டு மீண்டும் சீர்திருத்தப்பட்டுள்ளது. இப்பெயருடைய கொள்கைவாதிகள் இலங்கையின் பலபாகங்களிலும் கிளைகளை நிறுவியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பின்னர் இவருடைய இறுதிக்காலத்தில் நோய்வாய்ப்பட்டிருந்தார். அதன்காரணமாக கொழும்பில் தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மரணமானார். இந்நிகழ்வு 2006.12.06ம் திகதி நடைபெற்றது.

## விடுகதைகள்

ஒருவர் விடுகதை வினாவைக் கேட்க மற்றையவர் அவ்வினாவுக்கு விடை கூறவேண்டும். பின்னர் மற்றையவரில் ஒருவர் வினாவைத் தொடுப்பார். தலையைப் பிய்த்துக்கொண்டு விடைகாணத் துடிப்பார். இவ்வாறு மாறிமாறி விடுகதை வினாக்கள் கேட்பதும் விடை கூறுவதுமாக இருப்பார்கள். இது இரவு நேரங்களில் ஒன்றுகூடி பொழுதைப் போக்கி வந்தார்கள். இது ஒரு சுவாரஸ்யமான நிகழ்ச்சியாகும். பண்டைக்காலம் தொட்டு இன்றுவரை இவ்வினாவிடைப் போட்டி நடைபெற்று வருகின்றது. பண்டைய காலத்தில் அரசர்கள் ஆட்சிசெய்து வந்தமையால் அரசன்-அரசி என்ற சொற்கள் அவ்விடுகதைகளில் சேர்க்கப்பட்டிருக்கும். பிற்பட்ட காலங்களில் அச்சொற்கள் இல்லாது ஒழிந்து போய் உள்ளதையும் அவதானிக்க முடிகிறது. உதாரணமாக -

1. காய்க்கும். பூக்கும். கலகலக்கும். காகம் இருக்கக் கொப்பில்லை. அது என்ன?

   ***விடை :- திராய்***

2. எள்ளிலும் சிறிய இலை. என்ன இலை?

   ***விடை:- விடத்தை இலை***

3. ஒருபட்டி மாட்டுக்குள் ஒருகட்டிச் சாணம் அது என்ன?

**விடை :- பனம் பழம்**

4. தண்டீரம் பச்சை. தலை கருகி நிற்போரை கண்டீரோ மந்திரியே. இல்லைகான் ராஜாவே. அது இலை இல்லாப் பக்கத்துக்காய். அது என்ன?

**விடை :- விப்பிலி செடி (தண்ணீரில் நிற்பது)**

5. சிமிட்டாமல் முழிப்பதென்ன ராஜாவே. சிறகு தட்டாமல் பறப்பதென்ன மந்திரியே?

**விடை :- தும்பி**

6. எள்ளுலே பிறந்து எள்ளுலே வளர்ந்து என்னெண்ணையில் உதித்த இளையான் மகளே. எள்ளுலும் சிறிய இலை. என்ன இலை?

**விடை :- விடத்தல் இலை**

7. பூமியிலே பிறந்து பூமியிலே வளர்ந்து பூலோகம் ஆளும் ராஜாவே. பூவிலும் சிறியது என்ன பூ?

**விடை :- விடத்தல் பூ**

8. எட்டுக்கால் ஊன்றி இருகால் படமெடுத்து வட்டக்கொம்பு இரண்டு. வாய்நாலு. தலை மூன்று. அது என்ன?

**விடை :- பசுமாடு, கன்று, பால்கறப்பவன், பால்பானை**

9. நாக்கு நான்கு. நடகால் பத்து. மூக்கு மூன்று. முறுகத்தின் பெயர் என்ன?

**விடை :- உழவு மாடுகள் இரண்டு உழுபவன் ஒன்று கலப்பை ஒன்று**

10. கடலிலே சினை கரைத்து கரையிலே சிறகுணர்த்தி முதுகிலே மூட்டை கட்டி வரும் முறுகத்தின் பெயர் என்ன?

**விடை :- வண்ணான்**

11. சொண்டிருக்கும். தொப்பியிருக்கும். தூங்கும். பறக்கமாட்டா. அது என்ன?

**விடை :- கிண்ணம் பழம்**

12. சட்டை கழட்டும். முட்டையிடும். மூன்று மாதம் அடைகாக்கும். நாகம் நீட்டும். படம் எடுக்கும். நாயன் அறிய பாம்பல்ல. அது என்ன?

**விடை :~ பனங்கொட்டை பாத்தி**

13. வானம் பார்க்கும். சிறகு விரிக்கும். மாதம் 900 முட்டையிடும். நீரும் அதுக்குள்ள. நிலாவும் அதுக்குள்ள. காளை கட்டிடும் கயிறும் அதுக்குள்ள. வண்ணான் வெளுக்காத வெள்ளையும் அதுக்குள்ள. குயவன் பண்ணாத பாண்டமும் அதுக்குள்ள. அது என்ன?


**விடை :~ தென்னை மரம்**

14. இலை பலகைபோல. பூ சிங்காரம் போல. காய் கசறு. பழம் இனிப்பு. அது என்ன?

**விடை :~ வாழை மரம்**

15. தாய் பரட்டச்சி. மகள் உருட்டச்சி. தையல் நல்லாள். ஏறி அடிக்க கொட்டை பிதுங்குது. கோது பிதுங்குது. அல்லாஹ்வின் ஆணை அபத்தயமல்ல

**விடை :~ அம்மியில் கொச்சிக்காய் அரைப்பது**



## ஒரு கிராமத்தின் கதை

முன்னொரு காலத்தில்
முத்த சகோதரர்கள் வாழும் கால்
தன்னத்தே தனி நிகரொத்த கிராமம்
இல்லையென்று சொல்லக்கூடியளவு
தனிச்சிறப்போடு வாழ்ந்தது
நெற்பிட்டிமுனைக் கிராமம்.

மூன்று பக்கங்களும்
ஆற்றம் கரைகளை அடையாளப்படுத்தி
அழகுசேர்த்த கிராமமது
கரையோரப் பகுதியிலே
பசும்தளிர் நெல்வயல்கள்
நிறைந்திருந்ததால்
சொல்லொண்ணா நிகர் அதற்கு

நெற்குவியல் களால்
நிறையப் பெற்றதற்காக
நெற்பிட்டிமுனை யெனும்
நாமத்தைச் சூடிக்கொண்டது.

காத்திரமாக காணிகளில்
ஏர்கொண்டு உழுதும் உழவர்கள்
ஏகப்பட்டோர் வாழ்ந்தனர்
சார் கண்டுபோடா தம்பிரானே
சரித்திரத்தைப் பிடிப்போம்

ஏர்பூட்டிப்போடா தம்பிரானே
எடுத்ததை சாதிப்போம்
வியர்வைத் துளிகளை
நெல்மணிகளாக்கி விளைவித்து
பயன்கொள்வோம் தம்பிரானே

என்ற பாடல் வரிகளோடு
சார்வரிகள் சீரமைக்கப்பட்டு
கச்சிதமாக பயிர்செய்கை கையாளப்படும்

களைகட்டி
விளை நெல்லறுத்து
கூட்டிக் குவித்து
எருமைக் கடாக்களைக் கொண்டு
மிதிக்கும் போது

வாரிக்காலா வளைத்த கொம்பா
வைக்கலைத் தின்று பொலிபொலி
என்ற கவிவரிகளோடு விளைவித்த
நெற்குவியல் இல்லை என்று சொல்லலாம்

புதுநெல்குற்றி புதுப்பானை யெடுத்து
எருமைப்பால் கொண்டு புக்கை சமைத்து
பாத்திஹா துவாவுடன் பங்குவைத்து
உறவுகள் நண்பர்கள் ஒன்றுசேர்ந்து
உண்டுமகிழ்ந்த தெல்லாம் ஒருகாலத்தில்

ஏழை எளியோர் களவெட்டி சென்று
பாத்திரத்தை நீட்டி புதுநெல்பெற்று
குழந்தைகள் பசியாற கொடுத்து மகிழ்வதும்
அக்காலத்தில் தான்

இப்போது யஃஜுஜ் மஃஜுஜ் கூட்டம்போல்
இரும்பால் அமையப்பெற்ற
இயந்திரக் கூட்டங்கள்
இரவு வருவதற்குள் நெல்லறுத்து
விடிவதற்குள் வீடுவந்து சேர்கிறது

நெல் மூட்டைகளாய்
ஏழைகள் பெறுவதுமில்லை
இறைவனை நினைப்பதுவுமில்லை
மூட்டைகள் அனைத்தும்
சாலைகள் சென்று அரிசாக்கப்பட்டு
அயல் ஊர்களுக்கு வயல் அரிசு
விலைக்குப் போகிறது

பாவம் அந்தக்கிராமத்து ஏழைகள்
பசிதீர்க்க வழியின்றி பரிதவிக்கின்றனர்
இந்த இழிசெயலால் ஏகப்பட்ட
கிராமத்து மக்கள் வெளிநாடுகளுக்கு
தொழில்தேடி அலைகின்றனர்

பலர் ஏஜென்சுகளால் ஏமாற்றப்பட்டு
ஈடுவைத்த வீடுவளவு பறிபோக
இருப்பதற்குக் கூட இடமின்றி
ஈனப்படுகின்றனர்.

பாவப்பட்ட ஏழைகளில்
பரிதாபக் கண்ணீரால்
ஏகப்பட்ட வயல்கள் தண்ணீரால்
நாசப்பட்டு போகின்றன.

இதை ஏறெடுத்துப் பார்ப்பதற்கும்
நெல் மூட்டைகளை
எண்ணிக் கணக்கெடுக்கும்
முதலாளிக்கு நேரமில்லை.

ஸகாத்தை கணக்குப்பார்த்து
கொடுப்பதுவுமில்லை
சந்தையிலே விற்ற பணத்தை
இருப்புப் பெட்டியிலும்
இலங்கை வங்கியிலும் போட்டு
கணக்கை முடித்துக் கொள்கின்றனர்.
இன்றைய விவசாயப் போடிமார்

இந்த இழிநிலை மாறவேண்டும்
இயற்கையின் சீற்றத்தைத் தடுக்க
இறைவனின் கோபப் பார்வையிலிருந்து
பாதுகாப்புப் பெற
ஏழை வரிகளை உரியவேளை
வழங்க வேண்டும்
அல்லாஹ்வின் அன்பையும்
நல்விளைவையும் பெறவேண்டும்.

தேசமானி, கல்வித்தீபம், கவிஞர் அல்ஹாஜ் MLA. கையூம்

# கிராமிய விளையாட்டுக்கள்

## தற்காப்புக்கலை சீனடி, சிலம்படி

இக்கலையானது 1960ம் ஆண்டுகளுக்கு பிற்பட்ட காலங்களில் மேலோங்கிக் காணப்பட்ட கலையாகும். இக்கலையை வளர்ப்பதில் அல் ஹாஜ் டாக்டர் ALM. இப்றாகிம், சாமித்தம்பி சடாசி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். இக்கலையை பயின்று மாணவர்களுக்கு பயிற்றுவித்தனர். அந்தவகையில் அக்காலப்பகுதியில் வாழ்ந்த இளைஞர்கள் பெரும்பாலானோர் இக்கலையைக் கற்றுத்தேறினர். விழாக்களின்போதும் அதிதிகளை வரவேற்கும்போதும் சீனடி, சிலம்படி, வாள்வீச்சு, பொல்லடி போன்றவைகள் முன்னே செல்ல ஊர்வலமாக அழைத்து வரப்படுவார்கள். பார்ப்பதற்கு அழகாக இருக்கும். சிலவேளைகள் தீப்பந்த வீச்சுக்களும் இடம்பெறுவதுண்டு. இரவு வேளைகளில் மிகவும் அழகாக இருக்கும். சீனடி என்பது கைகளாலும் கால்களாலும் விளையாடுவதாகும். எதிரிகள் தாக்கும்போது தடுத்து இலகுவாக தாக்குவார்கள். எதிரி தாக்கப்பட்டு நிலத்தில் விழும் வரைக்கும் தாக்குதல் தொடரும்.

சிலம்படி என்பது ஒரு ஆள் உயரக்கம்பை அல்லது பிரம்பைக் கொண்டு விளையாடுவதாகும். இந்த வீச்சின்போது எத்தனை எதிரிகள் முன்நின்றாலும் தாக்குப்பிடியாமல் ஓட்டம் பிடிப்பார்கள். அவ்வளவு வேகமாகவும், ஆவேசமாகவும் வீசுவார்கள். வீசும்போது ஒருவகை சத்தம் கேட்கும். அச்சத்தத்தை கேட்டால்கூட பயம் வரும். அந்தளவுக்கு விரைவாகவும், வேகமாகவும் வீசுவார்கள். இவ்வீச்சில் படைசீச்சு என்று ஒருபகுதி இருக்கிறது. அது எதிரிகளை விரசி விரசித் தாக்கும் முறையாகும். அதேபோன்று வாள்வீச்சும் மிகப் பயங்கரமானது. வேகமாக வீசுவார்கள். வீசுபவர் முன்னே எதிரி நிற்க முடியாது. பார்ப்பதற்கு அச்சமாக இருக்கும். வீசும்போது வீசுபவரின் மேனியில் பட்டால் சதையோ அல்லது உடல் உறுப்போ துண்டாகிவிடும். அப்படிப் பயங்கரமாக இருக்கும். இக்கலைகளில் ஈடுபாடு கொண்டவர்கள் நம் ஊரில் இப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சிலர் மரணித்துவிட்டாலும்

பலர் உயிருடன் உள்ளனர். அந்தவகையில் கீழ்வருவோரை குறிப்பிட முடியும்.

- அல் ஹாஜ் ALM. இப்றாகிம் வைத்தியர்
- அல் ஹாஜ் AL. முகம்மதுத்தம்பி ISA
- அல் ஹாஜ் MH. ஜலால்தீன் பிரதி அதிபர்
- AA. கபூர் அதிபர்
- மர்ஹூம் அபூபக்கர்
- மர்ஹூம் A. மான்குட்டியர்
- மர்ஹூம் பீர் முஹம்மது

## மல்யுத்தம் (Wrestling)

மல்யுத்தம் என்பது சண்டையிட்டு மல்லுக்கட்டும் விளையாட்டாகும். இவ்விளையாட்டு தற்பொழுது சர்வதேச விளையாட்டுக்களில் ஒன்றாகும். இவ்விளையாட்டை எமதூர் இளைஞர்கள் விரும்பி கற்பதற்கு காரணகர்த்தாவாக இருந்தவர் எமதூர் MS. அப்துல்லாஹ் பயில்வான் ஆவார். இவர் வாலிபப் பராயத்தில் மிகவும் ஈடுபாடு காட்டினார். அவரைத்தொடர்ந்து M. அலியார் அதிபர், V. நெயினா முகமட் போன்றோர் கற்றுத் தேர்ந்தவர்கள். மேலும் பல இளைஞர்களும் கற்றுக் கொண்டார்கள். ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலத்திற்கு முதல் இவ்விளையாட்டை இந்தியாவிலிருந்து வந்த மல்யுத்த வீரர்களான தாராசிவ், கிங்கொங், சித்தீக், வடியூசுப், தோராசிங், அஜித்சிங் ஆகியோர் கல்முனைக்கு வருகைதந்து கோதாவில் ஏறி இவ்விளையாட்டை காண்பித்து வந்தார்கள். அதில் ஆர்வம் கொண்ட இளைஞர்கள் மல்யுத்தப் பயிற்சியைக் கற்றுக்கொள்வதற்கு தூண்டுகோலாக அமைந்தது எனக் கூறலாம். இன்னும் தம்பிலெப்பை, நூருலெப்பை ஆகியோரும் இக்கலையைப் பயின்றிருக்கிறார்கள். பிற்காலத்தில் S. அப்துல்லாஹ் பயில்வான், நூருலெப்பை ஆகியோர் மருதமுனைக்கு திருமணம் முடித்துச் சென்றுவிட்டனர். தற்காலத்தில் அக்கலையை பயிலக்கூடியவர்கள் இல்லை என்றுதான் கூறமுடியும்.

## கராத்தே (Karate)

கராத்தே விளையாட்டு தேசிய விளையாட்டாகக் கொள்ளப்படுகிறது. இவ்விளையாட்டு தற்பொழுது பாடசாலை மட்டத்திலும் அறிமுகமாகியுள்ளது. பாடசாலை மட்டத்தில் தெரிவாகி கோட்ட மட்டத்தில் தெரிவாகி வலய, மாகாண மட்டங்களில் தெரிவுசெய்யப்பட்டு தேசிய மட்டத்தில் நடைபெறுகிறது. அதில் வெற்றி பெறுபவர்கள் தங்கப் பதக்கங்களைப் பெறுகின்றனர். இக்கலை சர்வதேச மட்டத்திலும் நடாத்தப்படுகிறது. இக்கலை ஊடகங்கள் மூலமும் பிரபல்யப்படுவதை நாம் அறியக்கூடியதாக உள்ளது. இக்கலையில் தேர்ச்சி பெற்றவர்களில் பொனிறொபாட் குறிப்பிடத்தகவராவார். இவர் இலங்கையின் பல பாகங்களில் கிளை நிறுவனங்களை நிறுவி தமது மாணவர்களைக் கொண்டு பயிற்றுவித்து வந்தார். அதனைத்தொடர்ந்து இராமச்சந்திரன் அவர்களும் பயிற்றுவித்து வந்தார். ஆசிரியர்களும் பல்வேறு தரப்பினரும் இக்கலையை பயின்றுள்ளார்கள். இது சிறந்ததொரு தற்காப்புக் கலையாகும். இக்கலையை நமதூர் வாசியான ALM. சாஹீர் சப்கின்ஸ் பெக்ரர் பயின்று பல மாணவர்களுக்கு பழக்கி வந்தார். மேடை நிகழ்ச்சிகளில் பல சாதனைகளைச் செய்துகாட்டி விருதுகள் பல வென்றுள்ளார். அவரைத் தொடர்ந்து ACM. மாஹிர் பட்டதாரி ஆசிரியர் பயின்றுள்ளார். இவரும் கறுப்புப்பட்டி வரை பயிற்சி பெற்றவர். இவர் தற்பொழுது மாணவர்களுக்கு இக்கலை பற்றி பயிற்சி வழங்கி வருகிறார். அவரிடம் பயின்ற சில மாணவர்கள் ஊதாப்பட்டி வரை பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வாரோட்டம்

இவ்வாட்டம் நீண்டகாலமாக விளையாடப்பட்டு வருகிறது. மைதான வசதிகளற்ற மணற்பாங்கான இடங்களில் ஆடப்பட்டு வந்த இவ்வாட்டம் உடலை திடப்படுத்துவதற்குரிய சிறந்த முயற்சியாகக் காணப்படுகிது. ஆட்டவீரர்கள் இரு அணிகளாகப் பிரிந்து ஏறக்குறைய 100 மீற்றர் இடைவெளியில் எதிரெதிராக நிற்பர். விளையாட்டு ஆரம்பமானதும் ஒரு அணியைச் சேர்ந்த வீரர் ஒருவர் எதிரணியின் பக்கம் சென்று அங்குள்ள ஒருவரின் கையை தன்கையால் தொட்டுவிட்டு தனது அணியை நோக்கி வேகமாக ஓடிவிடுவார். முன்னால் ஓடுபவர் பின்னால் வருபவரின் கைகளால் அடிபடாமல் தனது அணியைச் சென்று

அடைந்துவிட்டால் தனது அணிக்கு ஒரு புள்ளி பெற்றுக்கொடுத்தவராக கருதப்படுவார். இவ்வாறு போட்டி நடைபெற்ற வண்ணமே காணப்படும்.

இவ்விளையாட்டில் ஈடுபடுவோர் தனது கட்டுப்பாட்டையும் மீறி முழு சக்தியையும் ஓடுவதற்கு பயன்படுத்துவதனால் உடலும், உளமும் புதுப்பொலிவினை அடைகிறது. நிரந்தர வசதிகளுடைய மைதானம் இல்லாத காரணத்தினால் ஊரின் நடுப்பகுதியில் உள்ள களப்பாங்கான பகுதிகளில் விளையாடப்படுகிறது.

## மட்டைப்பந்து

மட்டைப்பந்து விளையாட்டை "றவுண் பந்து" என்றும் அழைக்கப்படுகிறது. இவ்வாட்டம் நீண்ட காலமாக நமது பிரதேசத்தில் ஆடப்பட்டு வந்த ஒரு விளையாட்டாகும். படிப்படியாக இவ்விளையாட்டு நமது சிறுவர்களிடம் இருந்து விடைபெற்றுப் போய்யுள்ளது. இதற்குக் காரணம் எல்லே, கிரிக்கட் விளையாட்டுக்களில் ஆர்வம் காட்டத் தொடங்கியதாகும். ஏறக்குறைய 100 மீற்றர் கொண்ட பரப்புக்குள் இரு குழுக்களாகப் பிரிந்து இவ்வாட்டம் ஆடப்படுகிறது. ஆட்டம் ஆரம்பமானதும் மத்திய இடம் தவிர ஏனைய அடையாளப்படுத்தப்பட்ட நான்கு இடங்களில் தரித்துச்செல்ல வேண்டும். அதன் முன்பகுதியில் உள்ள இரு இடங்களுக்கு மத்தியில் நிற்கும் பந்துவீச்சாளர் தன்முன்னால் மட்டையோடு நிற்கும் வீரரை நோக்கி பந்தை வீசுவார். இவ்வாறு பந்தை அடிப்பவருக்கு மூன்று சந்தர்ப்பங்கள் மட்டுமே வழங்கப்படும். எனவே மைதானத்தில் நிற்கும் எதிராளியினரின் கைகளில் பந்து பிடிபடாத வண்ணம் மைதானத்தை நோக்கி அடிப்பார். அடித்த பந்து தூரத்திற்குச் சென்றுவிட்டால் தனது முழு பலத்தையும் பிரயோகித்து நான்கு தரிப்பிடங்கள் ஊடாகவும் ஓடி ஆரம்ப மையப்புள்ளியை சென்றடைவார். அப்போது அவருடைய அணி ஒரு ஓட்டத்தைப் பெற்றதாகக் கணிக்கப்படும். பந்தானது மைதானத்தில் நிற்கும் எதிரணியினரால் பிடிக்கப்பட்டாலோ அல்லது ஆட்டக்காரன் தரிப்பிடங்களினூடாக ஓடும்போது பந்தினால் எறியப்பட்டாலோ அவர ஆட்டத்தில் இருந்து நீக்கப்பட அவருடைய அணியைச் சேர்ந்த மற்றொருவரால் ஆட்டம் ஆடப்படும்.

## நொண்டி அடித்தல்

உடலின் சகல உறுப்புக்களுக்கும் சமகாலத்தில் பயிற்சியை வழங்கும் சிறந்த ஆட்டம் இதுவாகும். ஒரு காலினை நிலத்தில் ஊன்றிய வண்ணம் மறுகாலினை உயரத் தூக்கிய நிலையில் மைதான வட்டத்திற்குள் நிற்கும் எதிரணியினரை தாக்கி வெற்றி பெறுவதனாலே இவ்வாட்டம் நொண்டி அடித்தல் என்னும் பெயரைப் பெற்றுள்ளது. வீரர்கள் இரு அணிகளாகப் பிரிந்து ஒருபிரிவினர் வட்டமாக வரையப்பட்டுள்ள கோட்டில் நிற்பர். மறுபிரிவினர் ஒவ்வொரு ஆளாக ஒற்றைக்காலால் நொண்டிய வண்ணம் மைதானத்திற்குள் புகுந்து அங்கு நிற்பவர்களைத் தாக்கி அவர்களை வெளியேற்ற (out) முயற்சிப்பார். வட்டத்துள் நிற்பவர்கள் வெளியில் இருந்து நொண்டி வருபவர்களினால் தாக்கப்படாமல் தப்புவதற்காக வட்டத்தினுள் ஓடித்திரிவார். ஈற்றில் நொண்டியவர் களைப்படைந்து தனது இயலாமையை வெளிக்காட்டி பூமியில் காலை ஊன்றிய வண்ணம் மைதானத்தில் இருந்து வெளியேறுவார். இவ்வாறான ஆட்டம் மாறிமாறி தொடர்ந்து கொண்டே செல்லும். எமது பிரதேசத்தில் மருவிப்போன ஆட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

## கட்டைப்பந்து (கட்டை எறிதல்)

கட்டை எறிதல் ஆடுவதற்கும் பார்த்துக் கொண்டிருப்போர் இரசிப்பதற்கும் சிறந்ததோர் ஆட்டமாகும். ஆட்டக்காரர்கள் இரு குழுக்களாகப் பிரிந்து குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் நிற்பார். அவர்களுக்கு மத்தியில் 7 டப்பாக்கள் (Tins) ஒன்றன் மேல் ஒன்றாக உயரத்திற்கு அடுக்கப்பட்டிருக்கும். கையில் இருக்கும் இறப்பர் பந்தினால் இரு அணியினரும் மாறிமாறி எறிவர். டப்பா அடுக்கில் பட்டதும் டப்பாக்கள் சிதறி மைதானத்தில் பரவி கிடக்கும். மற்ற அணியினர் டப்பாக்களை அடுக்கும் பணியில் ஈடுபடுவர். அதனை தடுக்கும் நோக்கில் மற்றைய அணியினர் துரத்தித் துரத்தி எறிவர். அடுக்கி முடித்ததும் ஆட்டம் தொடரும். இவ்வாட்டம் சில பகுதிகளில் இன்றும் வீதி ஓரங்களிலும் வளவுகளிலும் ஆடப்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

## கொத்திருக்கோ கொத்து

நீண்டகாலமாக எமது பிரதேசத்தில் நிலைத்திருந்த இவ்விளையாட்டு இன்று முற்றாக வழக்கொழிந்து போய் விட்டதெனக் கூறலாம். நிலத்தில் வரையப்பட்ட ஒருவட்டத்தில் ஆட்டக்காரர்கள் முன்பக்கம் பார்த்தவாறு இருப்பார்கள். அவர்களில் ஒருவர் கையில் கொத்துக்களை (மரத்தில் இலைகள் சேர்ந்த கொப்பு) எடுத்துக் கொண்டு வட்டத்தை வளைத்து

கொத்திருக்கோ கொத்து

என்ன கொத்து

மாங் கொத்து

போட்டிற்றுப் போங்க

என்றதும் வட்டத்தைச் சுற்றிக் கொத்தைக்கொண்டு செல்பவர் தான் விரும்பும் ஒருவர் பின்னால் போட்டுவிட்டு ஓடுவார். அவர் வட்டத்தை சுற்றி ஓட வேண்டும். ஆள் இல்லாத இடத்தில் அமர்ந்துவிட வேண்டும். அவ்வாறு அமரும் வரைக்கும் துரத்தி ஓடுபவர் கொத்துக்களால் அவரைத் துரத்துவார். அவர் உரிய இடத்தில் இருக்கும் வரைக்கும் தாக்குவார். இருந்ததும் மற்றையவர் கொத்துக்களைத் தூக்கிக்கொண்டு மீண்டும் 'கொத்திருக்கோ கொத்து' என்று பாடிக்கொண்டு வட்டத்தைச்சுற்றி ஓடுவார். 'போட்டுற்றுப் போங்கோ' என்னும் சொல் கிடைத்ததும் மீண்டும் அவர் யாரோ ஒருவருக்குப் போட்டுவிட்டு ஓட மீண்டும் விளையாட்டுத் தொடரும்.

இவ்விளையாட்டு பாடசாலைகளில் அதிகமாக விளையாடப்பட்டு வருகின்ற ஒரு விளையாட்டாகும். இவ்விளையாட்டை நானும், எனது சக மாணவர்களுடன் விளையாடியிருக்கிறேன். இது சிறந்த மகிழ்ச்சி தரக்கூடிய விளையாட்டாகும். இவ்விளையாட்டினால் ஓட்டப்பயிற்சி, அவதானம் என்பனவற்றை சிறுவர்களுக்கு அளிக்கக்கூடியதாக இருக்கிறது.

## சறுக்குமரம் ஏறுதல்

சறுக்குமரம் ஏறும் நிகழ்ச்சி கிராமப்புறங்களில் மிகவும் பிரபல்யம்பெற்ற விளையாட்டாகும். இவ்விளையாட்டை இரசிப்பதற்கென்று ஒரு கூட்டம் கூடும். இவ்விளையாட்டு சுவாரஷ்யமானது என்பதால்

உற்றுநோக்கி இரசிப்பார்கள். சிரித்துக்கொண்டே இருப்பார்கள். காரணம் ஒருவர் அல்லது ஒருசிலர் சேர்ந்து முயற்சியில் ஈடுபடுவார்கள். ஒவ்வொருவராக ஏறிச் சறுக்கி கீழே விழுவது பார்ப்பதற்கு சிரிப்பையும் சந்தோசத்தையும் ஏற்படுத்தும். 21 அடி உயரமான சீவப்பட்ட மரத்தில் எண்ணெய்க் குழம்பு (Grease Oil) பூசப்பட்டிருக்கும். இதை முற்றாகப் பூசியிருப்பார்கள். அதற்கு உரிய நேரம் கொடுக்கப்பட்டிருக்கும். அந்த நேரத்திற்குள் மர உச்சியில் கட்டப்பட்டுள்ள பெறுமதியான பரிசுப் பொருளைத் தட்டிக்கொள்வதற்காக எடுக்கப்படும் முயற்சியே இவ்விளையாட்டின் பயனாகும். சாறன், வெனியன் போன்ற உடுப்புக்களை முற்றாகப் பழுதாக்கிக் கொண்டு முயற்சிப்பார்கள். முயற்சி திருவினையாகும் என்பதற்கு அமைய இறுதியில் வெற்றி பெறுவார்கள். சிலர் தோற்ற வரலாறும் உண்டு.

இதேபோன்று தினந்தோறும் மாலை நேரங்களில் விளையாடும் சிறிய ரக விளையாட்டுக்களும் உண்டு. கிட்டிப் பொல்லடித்தல், இலந்தை மாறுதல், குளம் கரை, யாரடா இந்த கோயிலுக்குள்ளால, கண்ணாம் பொத்தி போன்ற விளையாட்டுக்களும் உள்ளன. இவையெல்லாம் மங்கி மறைந்து போய்க்கொண்டிருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. இதற்கு காரணம் பிள்ளைகளுக்கு நேரம் இல்லை. காலையில் தொடங்கி இரவு வரும்வரை புத்தகப் பைகளுடன் பிள்ளைகள் அலைவதும் கையடக்கத் தொலைபேசிப் பாவனையும், பரபரப்பான வாழ்க்கை முறையுமே இவ்விளையாட்டுக்கள் அழிந்துபோக காரணம் என்று கூறலாம்.

## கிட்டிப் பொல்லு

கிட்டிப் பொல்லு விளையாட்டின்போது சிறுகுழி தயாரித்து அதன் குறுக்கே கிட்டியை வைத்து பொல்லால் கிட்டியை கிண்டி எறிவார்கள் முன்னே நிற்கும் வீரர்கள் அதை நிலத்தில் விளாமல் பிடிக்க வேண்டும். பிடிக்காவிட்டால் ஆட்டக்கார வீரர் தொடர்ந்து ஆடுவார. குழிக்குப் பின்னால் ஒரு அடிக்குப்பின் பொல்லை வைக்க வேண்டும். வீரர்கள் கிட்டியை எடுத்துப் பொல்லில் போடுவார். பொல்லில் பட்டால் அவுட் ஆகுவார். படாவிட்டால் பொல்லை எடுத்து கிட்டியின் நுனியில் பொல்லால் அடிக்கும்போது கிட்டிகிழம்பி மேலே எழும். அந்தவேளை பொல்லால் உரத்து அடித்தபோது கிட்டி தூரே சென்று விழும். அதன்பின்பு பொல்லால் அளந்து குழிவரைக்கும்

கணக்கிடுவார்கள். 100க்கு மேல் கணக்கு வருமென்றால் கிட்டியை பொல்லில் வைத்து தூர அடிப்பார்கள். ஒரே அணி வீரர்கள் பின்னர் அடித்துமுடித்த இடத்தில் இருந்து கீழ்வரும் பாடலை பாடிக்கொண்டு மற்றைய அணியினர் ஓடிவருவர்.

காவடி நாவடிக்கட்ட
கம்பளி மயிலைக்கட்ட
பறப்ப இழுப்பக்கட்ட
பாடிவா தும்புக்கட்ட

காவடி நாவடி
காழுக்கு இரண்டடி
சோலைப்பறையடி
சொக்கட்டான் சொக்கட்டான்

என்று மூச்சுவிடாமல் சொல்லிக்கொண்டு ஓடுவார்கள். இவ்விளையாட்டு பிள்ளைகளுக்கு மகிழ்ச்சியை ஊட்டும். மிகவும் கவனம் செலுத்தி விளையாடிக் கொண்டிருப்பார்கள். அக்காலத்து மனிதர்கள் உடல் பெரிதாகவும், ஆரோக்கியமாகவும், உயரமாகவும் இருந்ததற்கு இவ்விளையாட்டுக்கள் காரணமாக இருக்கலாம் எனக் கருதக்கூடியதாக இருக்கிறது. இப்போதைய பிள்ளைகள் குன்றியவர்களாகவும், வெதும்பலாகவும் காணப்படுவதற்கு இக்காலச் செயற்பாடுகளும் உடற்பயிற்சி இன்மையும் காரணமாக இருக்கலாம். இக்காலத்தில் பிரபல்யம் பெற்ற விளையாட்டுக்களாக கால்பந்தாட்டம் (Foot ball), கரப்பந்தாட்டம் (Volly ball - over game), கிரிக்கட் (Cricket) போன்ற விளையாட்டுக்களைக் கூறமுடியும். கிரிகட் விளையாட்டைப் பார்த்திருந்து பரீட்சை எழுதாமல் விட்ட மாணவர்களும் ஊரில் உலாவுகின்றனர் என்றால் நாம் இதை மிகவும் ஆழமாக சிந்திக்க வேண்டியிருக்கிறது.

# விளையாட்டுக் கழகங்கள்

## இலவன் இஸ்ரார் விளையாட்டுக் கழகம்

1976ம் ஆண்டுக் காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இக்கழகம் நெற்பிட்டிமுனையில் தோற்றுவிக்கப்பட்ட முதற் கழகமாகும். அக்காலப்பகுதியில் மிகவும் பிரபல்யம் பெற்று விளங்கிய இக்கழகம் உதைப்பந்தாட்டத்தில் சிரத்தை காட்டியது. பல்வேறுபட்ட சவால்களுக்கு முகம் கொடுத்து முன்னேறியது.

1. MM. இப்றாகீம் ஆசிரியர், தலைவர்
2. VT. சலிம்கான், செயலாளர்
3. AL. அமானுல்லாஹ் FA, பொருளாளர்

**நிர்வாக சபை உறுப்பினர்கள்**

MI. றியாஸ் SA

ALM. சாஹிர் SI

MLA. கையூம் அதிபர்

A. உதுமாலெவ்வை

MI. மஃமூது

M. உதுமான்

A. பரீட்

MS. பரீட் CTB

போன்றோர் முன்னணி வீரர்களாக காணப்பட்டனர். இவர்கள் சமூக சேவைகளிலும் பல முன்னேற்றகரமான செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வந்தனர். உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியை நடாத்தி வெற்றிக்கேடயங்கள் பெற்றிருக்கின்றனர். காலம் செல்லச் செல்ல இவ்விளைஞர்கள் தொழில்வாய்ப்புகள், பல்கலைக்கழகங்கள் சென்ற

காலப்பகுதிகளில் சற்று வளர்ச்சி குன்றிக் காணப்பட்டது. பின்னர் வளர்ச்சி பெற்று மேலும் பலபடிகள் முன்னேறி உயர்ந்து காணப்படுகின்றனர்.

## ஹீறோ விளையாட்டுக் கழகம்

நெற்பிட்டிமுனை ஹீறோ விளையாட்டுக் கழகம் 1980ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதன் ஸ்தாபகத் தலைவர் K. றஷீட் அவர்களும், செயலாளராக மர்ஹும் VT. சலீம்கான் அவர்களும், பொருளாளராக AL. அகமட் லெப்பை அவர்களும், தவிசாளராகவும் செயற்பாட்டாளராகவும் மர்ஹும் லெப்பைக்கனி உதுமாலெப்பை செயற்பட்டதுடன் இக்கழக வளர்ச்சிக்காக சகல வழிகளிலும் அயராது பாடுபட்டதுடன் தனது சொந்த நிதியை செலவு செய்து நெற்பிட்டிமுனையிலே புகழபூத்த கழகமாக மாற்றியமைத்தார். அவர் ஹீறோ விளையாட்டுக் கழகத்தை ஸ்தாபித்தது மட்டுமல்லாமல் பொது பணிகளிலும் கழக உறுப்பினர்களை பங்குபெறச் செய்து மக்கள் மத்தியில் இக்கழகத்தின் நன்மதிப்பை உயரச்செய்து வைத்தார்.

இக்கழகத்தை பதிவு செய்வதில் ASM. ஜ∴பர், AS. இஸ்ஹாக், NM. நிஸாத் ஆகியோர் அதீத ஆர்வம் காட்டி பதிவுசெய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். கடந்த காலங்களில் இக்கழகத்தின் தலைவராக AL. உமறுகத்தா, UL. தௌபீக், KL. ம∴றூப் ஆகியோர்களும் செயலாளர்களாக ASM. ஜ∴பர், IM. சூபி, M. அன்வர் ஆகியோர்களும் பொருளாளர்களாக MI. ஜாக்கூப், H. ஹாறூன், L. சகீல் ஆகியோரும் செயற்பட்டனர்.

இக்கழகமானது கடந்த காலங்களில் அல் மஸ்ஜிதுல் ஹுதா பள்ளிவாசலுக்கான முன்பக்க மதில்களை அமைத்தமை, மர்ஹும் UL. உதுமாலெப்பை ஞாபகார்த்தமாக ஆலையடிச்சந்தியில் பயணிகள் பஸ் தரிப்பிடத்தை அமைத்தமை, கமு/ லாபிர் வித்தியாலயத்திற்கு ஒலிபெருக்கிச் சாதனங்களை வழங்கியமை அத்துடன் நெற்பிட்டிமுனை பொது மைதானத்திற்கு மண் நிரப்பியதுடன் விளையாட்டு மைதானத்தின் உருவாக்கத்திக்கும் காரணமாக இருந்தது.

1989, 2010ம் ஆண்டுகளில் பாரிய மின்னொளியிலான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகளை நடாத்தினர். இதில் முப்பதுக்கு மேற்பட்ட கரப்பந்தாட்ட குழுவினர் கலந்து கொண்டனர். கிழக்கு

மாகாணத்திலே புகழ்பூத்த கழகமாக விளங்குகின்றது. பெருநாள் காலங்களில் விளையாட்டு விழாக்கள், கலை கலாச்சார நிகழ்வுகளை நடாத்தி மக்களின் அபிமானத்தை வென்றிருந்தது.

நெற்பிட்டிமுனை ஹீறோ விளையாட்டுக் கழகம் 2005ம் ஆண்டில் 25வது நிறைவை (வெள்ளி விழா) நடாத்தியதோடு கலை கலாச்சார இசை நிகழ்ச்சியுடன் கொண்டாடியது. தற்பொழுது புதிய தலைவராக AR. இம்தியாஸ் அவர்களும், செயலாளராக ASM. ஜ.்.பர் அவர்களும், பொருளாளராக ASM. முஜாஹித் அவர்களும், அமைப்பாளராக UL. தௌபீக் அவர்களும் ஆலோசகர்களாக K. றஷீட், KL. ம.்.றூப் அவர்களும் செயற்பட்டு வருகின்றனர்.

## அக்ஸா விளையாட்டுக் கழகம்

இக்கழகம் 1999ம் ஆண்டு காலப்பகுதியில் கட்டுரு பயிலுனராகவிருந்த ML. சமீர் (மாநகரசபை உறுப்பினர்) அவர்கள் பாடசாலையின் சிரேஷ்ட மாணவர்களைக் கொண்டு உருவாக்கினார். இக்கழகத்தின் ஆலோசகர்களாக AM. ஜமால்தீன் (முன்னாள் அதிபர்), V. சலீம்கான் (மாநகரசபை இலிகிதர்) ஆகியோரும் பயிற்றுவிப்பாளர்களாக MM. நஹீப், KL. சுஹீட், KL. கபூர், ML. சமீர் போன்றோர் செயற்பட்டு வந்தனர். இக்கழகம் ஊரிலுள்ள கழகங்களோடு போட்டிபோட்டு வெற்றி பெற்றதோடு வெளியூர்களுக்குச் சென்று வெற்றிக் கேடயங்கள் பெற்றுவந்த ஒரு முற்போக்குக் கழகமாகும்.

2000ம் ஆண்டு அம்பாறை மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மைலோ கிண்ணப்போட்டியில் அல்-அக்ஸா பாடசாலை மாணவர்கள் பங்கு கொண்டு வெற்றியீட்டித் தந்ததோடு மட்டுமல்லாமல் மாகாண மட்ட மைலோ கிண்ணப்போட்டிக்கு இக்கழகம் சார்பாக AM. றிலாஸ், MT. சம்சித் ஆகிய இரு வீரர்கள் தெரிவு செய்யப்பட்டு யாழ்ப்பாணம் சென்று ஊருக்கு பெருமை சேர்த்துத் தந்தனர். அத்துடன் இக்கழகமானது கலை கலாச்சார நிகழ்வுகள் மட்டுமல்லாமல் சமூக சேவைகளிலும் ஈடுபட்டுவரும் ஒரு கழகமாக திகழ்கிறது. மேலும் ஊர் மக்களின் நல்லபிப்பிராயத்தை பெற்ற ஒரு சிறந்த கழகமாகும்.

### இக்கழகத்தின் உறுப்பினர்கள்

1. AM. றிலாஸ் (ஆசிரியர்)

2. MT. சம்சீத்
3. AR. நஹீப்
4. MM. சறூக்
5. AHHM. நபார் (மாநகரசபை உறுப்பினர்)
6. AM. ஹப்றத்
7. ARM. ஜமீன்
8. MSM. மன்சூர்
9. A. இர்சாத்
10. UKM. ஹமீர்
11. JM. அயாஸ்
12. SM. ஹாறூன்
13. JM. அஸீஸ"ல்லாஹ்
14. A. லாபிர்
15. J. கமால்
16. ULM. நவாஸ்

ஆகிய முன்னணி வீரர்களை உருவாக்கிய கழகமாகும்.

## Steel Boys விளையாட்டுக் கழகம்

இக்கழகம் 2008.01.01ம் திகதி ACM. மாஹீர் BSc அவர்களின் அயராத முயற்சியின் பயனாக உருவாக்கப்பட்டது. அல் ஹாஜ் SLA. கரீம் DDE (நெக்கோட் திட்டப்பணிப்பாளர்), அல் ஹாஜ் MLA. கையூம் அதிபர், YAK. தாஸீம், STH. முகமட் (நெக்கோட்), MI. முஸ்தபா முதலுதவித் திட்ட ஆணையாளர் ஆகியோரின் ஆலோசனைக்கு அமைய ஆரம்பிக்கப்பட்டது. ஊரிலுள்ள பெரிய கிரிக்கட் கழகங்களுக்கு சவாலாக விளங்கும் இக்கழகம் 2010ம் ஆண்டு கல்முனை பிரதேச கழகங்களுக்கு இடையிலான மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்று முன்னணியில் திகழ்கின்றது. 2012ம் ஆண்டு இடம்பெற்ற கழகங்களுக்கு இடையிலான மெய்வல்லுனர் போட்டியில்

MHM. நவாஸ் ஈட்டி எறிதல் போட்டியிலும், AC. காமில் நீண்டதூர ஓட்டத்திலும் மாவட்ட மட்டத்திற்கு தெரிவானது குறிப்பிடத்தக்கது. மேலும் இக்கழகம் சிரமதானம், சமூக சேவைப்பணிகளிலும் முன்னின்று உழைத்து வருவது குறிப்பிட்டுக்கூற முடியும்.

### இக்கழகத்தின் உறுப்பினர்கள்

1. MS. ஆசிக் உதவி அரசாங்க அதிபர்
2. RT. சுஜா
3. MM. நிஸ்மி
4. HM. அஸாம்
5. MHM. நவாஸ்
6. A. அன்பாஸ் (பொறியியலாளர்)
7. AA. ஆசிம்
8. R. திறிஸான்
9. S. சமான்

ஆகிய உறுப்பினர்களைக் கொண்டு இயங்குகின்றது.

## Braver விளையாட்டுக் கழகம்

1985.09.25ம் திகதி குழுவாக ஒன்றுசேர்ந்த நண்பர்களினால் அடிச்சாண்ட வட்டை என்னும் இடத்தில் உதித்ததுதான் Braver விளையாட்டுக் கழகம். அன்று நெற்பிட்டிமுனை கிரிக்கட் கழகம் (NCC) என்னும் பெயரில் 12 அங்கத்தவர்களை மாத்திரம் கொண்டு சிறியதொரு முளையாகத் தோற்றம் பெற்றது.

இக்கழகத்தின் முதல் தலைவராக HMM. நழீர் (விரிவுரையாளர்) தெரிவு செய்யப்பட அவருக்கு உறுதுணையாக Dr. YL. உபைதுல்லா, A. றிஸாம் (தாதி - UK), Dr. சைபுல்லாஹ், Dr. MI. முஹ்ஜிஸாத், A. லியாக்கத்கான் (தாதி - பஹ்ரைன்), AI. தௌபீக் (பொறியியலாளர்), CBM. கிபார் (மிருக வைத்தியர் காரியாலயம்), MT. றம்சீன் (Tr), KA. கபூர் (பிரதேச சபை, கல்முனை), மர்ஹூம்

MS. அன்சார் (பொலிஸ் உத்தியோகத்தர்) ஆகியோர் ஆரம்பகால அங்கத்தவர்களாக கழகத்தை உருவாக்குவதில் முன்னோடிகளாகத் திகழ்ந்தனர்.

அக்காலத்தில் கரறிக்கட் விளையாட்டில் பரிட்சயமில்லாத இக்கழகம் பெரும்பாலான போட்டிகளில் மோசமான தோல்விகளைச் சந்தித்தது. அப்போது ஏற்பட்ட தோல்விகள்தான் தற்போது தேசிய ரீதியில் நமது மண்ணின் பெருமையைப் பறைசாற்றுகின்ற அணியாக மாறுவதற்குத் தூண்டுகோலாக அமைந்தது.

1987ம் ஆண்டு பெரும்பாலான உறுப்பினர்கள் ஓய்வுபெற தலைமைப் பொறுப்பினை MT. றம்சீன் பொறுப்பேற்றார். அதன்பின்னர் பல திறமையான புதுமுகங்கள் உள்வாங்கப்பட்டதுடன் கழகம் மிக வேகமாக வளர்ச்சியடையத் தொடங்கியது. அன்றைய கால கட்டங்களில் எமதூரில் நிலவிய வட்டாரப் பாகுபாடுகளுக்கப்பால் நெற்பிட்டிமுனை என்ற ஒரே நாமத்தின்கீழ் ஊரின் அனைத்துப் பாகங்களிலுமுள்ள வீரர்களை ஒன்றுசேர்த்து பாகுபாடுகள் களையப்பட்டு வெற்றியும் பெற்ற ஒரேயொரு கழகம் இக்கழகமாகும். அது மட்டுமல்லாது நெற்பிட்டிமுனைக்கு கிரிக்கட் விளையாட்டை அறிமுகப்படுத்திய பெருமை இக்கழகத்தை மட்டுமே சாரும் என்பதில் பெருமை அடையலாம்.

1989ம் ஆண்டு மணற்சேனை விவேகானந்தா விளையாட்டு கழகத்தினால் சித்திரை புத்தாண்டை சிறப்பிக்குமுகமாக பிரமாண்டமாக நடாத்தப்பட்ட கிரிக்கட் சுற்றுப்போட்டியிலே MT. றம்ஸீனுடைய தலைமையில் தனது கன்னிக் கிண்ணத்தை இக்கழகம் வெற்றிகொண்டது. அதே வருடம் கல்முனை டொல்பின் விளையாட்டுக் கழகம் நடாத்திய மற்றுமொரு சுற்றுப்போட்டியில் தனது இரண்டாவது கிண்ணதையும் சுவீகரித்தது. அதனைத் தொடர்ந்து இன்றுவரை தொடர் வெற்றிகளைப் பெற்று எமது பிரதேசத்தில் பலம்மிக்க ஒரு கழகமாக முத்திரை பதித்துள்ளது.

கிரிக்கட் விளையாட்டினை மட்டுமே மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட NCC 1993ம் வருடம் மர்ஹூம் ALM. பழீல் (பிரதேச செயலாளர்) அவர்களின் அறிவுரைக்கமைய BRAVER விளையாட்டுக் கழகம் எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டு விளையாட்டுத்துறை அமைச்சில் பதிவும் செய்யப்பட்டது. மர்ஹூம் AM. ஜமாலுடீன் (அதிபர்) அவர்களினால் பெயர் சூட்டப்பட்ட இக்கழகம் அவரை என்றென்றும் நினைவுகூர்ந்த வண்ணமே உள்ளது.

வீரம் மிக்கவர்கள், துணிச்சல் மிக்கவர்கள், தன்னம்பிக்கை உடையவர்கள், பிரகாசமானவர்கள் எனப் பல பொருள்களைத் தன்னகத்தே கொண்ட இக்கழகம் வெறுமனே விளையாட்டுடன் மட்டும் நின்றுவிடாது தனது கழக உறுப்பினர்களின் கல்வியிலும் அக்கறை செலுத்துவதில் பின் நிற்கவில்லை. எமதூரைப் பொறுத்த வரையில் 100% அரசாங்க உத்தியோகத்தர்களைக் கொண்ட ஒரேயொரு கழகம் BRAVER விளையாட்டுக் கழகம் என்றால் அது மிகையாகாது.

1991ம் ஆண்டு மற்றுமொரு மைல்கல்லை எட்டுமுகமாக எமது மக்களின் பாரிய ஒத்துழைப்புடன் முதன்முறையாக கடின பந்து கிரிக்கட்டை ஆரம்பித்தனர். 1992ம் ஆண்டு மருதமுனை மெரிடியன் விளையாட்டுக்கழகம் நடாத்திய கடினபந்து கிரிக்கட் சுற்றுப்போட்டியில் பங்குபற்றி முதல் சுற்றுப் போட்டியிலே கிண்ணத்தை வெற்றி கொண்டனர். அப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக் தலைவர் மர்ஹூம் அல்ஹாஜ் MHM. அஷ்ரப் அவர்கள் கழக வீரர்களின் திறமையைக் கண்டு 1994ம் ஆண்டு தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து 25,000 ரூபாய் நிதியினை வழங்கி மேலும் ஊக்குவித்தார். அதனைத் தொடர்ந்து ALM. அதாஉல்லா (தலைவர் - தேசிய காங்கிரஸ்), YLS. ஹமீட் (செயலாளர் - ACMC), ML. சாலித்தீன் (மாநகரசபை உறுப்பினர்) ஆகியோரும் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்து மேலும் வலுப்படுத்த உதவினர்.

பிரதேச ரீதியில் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருந்த இக்கழக வீரர்களின் திறமை தெசிய மயமாக்கப்பட்டது 2002ம் ஆண்டாகும். அகில இலங்கை ரீதியிலான ஆசிரிய கலாசாலைகளுக்கு இடையிலான தேசிய விளையாட்டுப் போட்டியில் அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலை சார்பாக கழகத்தின் தலைவர் MT. றம்ஸீன் பங்கேற்றார். அப்போட்டித் தொடரில் அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலை தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்ததுடன் இறுதிப்போட்டியின் ஆட்டநாயகனாகவும், போட்டித்தொடரின் சிறந்த வீரராகவும் தெரிவு செய்யப்பட்டு எமது மண்ணிற்கும் கழகத்திற்கும் பெருமை சேர்த்தார்.

அதனைத் தொடர்ந்து 2010ம் ஆண்டு MT. பிர்னாஸ், AM. றிலாஸ் ஆகியோர் பிரதேச செயலகங்களுக்கு இடையில் தேசிய ரீதியில் நடாத்தப்பட்ட கிறிக்கட் சுற்றுப்போட்டியில் கல்முனை பிரதேச செயலகத்தைப் பிரதிநிதிப்படுத்தி தங்கப்பதக்கத்தையும் பெற்றுக் கொடுத்தனர். அதற்காக கல்முனை பிரதேச செயலகம், கிழக்கு

மாகாணம் அத்துடன் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் ST. சந்திரகாந்தனாலும் பரிசில்கள் வழங்கி பாராட்டிக் கௌரவப்படுத்தப்பட்டனர்.

அதனைத்தொடர்ந்து வருடாவருடம் கல்வி வலயங்களுக்கிடையில் தேசியரீதியில் நடைபெறும் கிரிக்கட் சுற்றுப்போட்டியில் கல்முனைக் கல்வி வலையத்தை பிரதிநிதிப்படுத்தி MT. பிர்னாஸ், AM. றிலாஸ், MM. ஆஸிக் பர்வின், IM. உபைதுல்லா, UKM. நஜீப் ஆகியோர் பங்குபற்றி 2010ம் ஆண்டு வெண்கலப் பதக்கத்தையும், 2011ம் ஆண்டு வெள்ளிப் பதக்கத்தையும், 2012, 2013, 2014ம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக தங்கப்பதக்கத்தையும், 2015ம் ஆண்டு வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுக் கொடுத்து BRAVER விளையாட்டுக் கழகத்திற்கும், கல்முனைக் கல்வி வலயத்திற்கும், எமதூருக்கும் பெருமை சேர்த்தனர். அதுமட்டுமல்லாது KALMUNAI PRIEMIAR LEAGUE (KPL) போட்டிகளுக்காக முதன்முறையாக உள்வாங்கப்பட்ட ஒரேயொரு முஸ்லிம் விளையாட்டுக் கழகம் BRAVER விளையாட்டுக் கழகம் மட்டும்தான் என்றால் அது மிகையாகாது.

வெறுமனே விளையாட்டுத் துறையில் மட்டும் நின்றுவிடாது சமூக சேவையிலும் தனது கால் தடத்தை ஊன்றிப் பதித்துள்ளது. கழகத்தின் ஆரம்பம் தொடக்கம் இன்றுவரை பல சமூகப்பணிகளில் ஈடுபட்டாலும் குறிப்பிடத்தக்கதாக 2004ம் ஆண்டில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின்போது அல்லல்பட்ட மக்களின் துயரில் பங்குபற்றியதுடன் அவர்களுக்கு உணவு, உடை, உறையுள் வழங்கி அரவணைத்த பெருமை இக்கழகத்துக்கு உண்டு. மூன்று குடும்பங்களை சுமார் ஆறு மாதங்களுக்கு மேலாக அல்-மத்ரஸதுல் ஸமதானியாவில் வைத்து அவர்களுடைய அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்து பராமரித்த வரலாறும் உண்டு. அத்தோடு 2012ம் ஆண்டு அல் - உம்றா பாலர் பாடசாலை மாணவர்களுக்கு பெருந்தொகையான கற்றல் உபகரணங்களை வழங்கி அவர்களின் கல்விக்கு ஊக்கமளித்தனர். மேலும் வருடாவருடம் நெற்பிட்டிமுனை 01ல் அமைந்துள்ள அனைத்துக் கிணறுகளுக்கும் குளொறின் இட்டுச் சுத்தப்படுத்துவதையும் வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். 2013ம் ஆண்டு நெற்பிட்டிமுனை கமு/லாபிர் வித்தியாலய அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க அங்கு பாரிய சிரமதானப் பணியொன்றினையும் மேற்கொண்டனர். அதே வருடம் நெற்பிட்டிமுனை கமு/அல் அக்ஸா மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற சிறுவர் தினக் கொண்டாட்டங்களில் சிறுவர்களைக் கௌரவிக்கும்

முகமாக அவர்களுக்கு பரிசில்கள், இனிப்புப் பண்டங்கள், குளிர்பானங்களை வழங்கி அவர்களைக் கௌரவித்தனர். இவ்வாறு இவர்களின் சமூகப்பணிகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

BRAVER விளையாட்டுக் கழகம் தற்போது ஆலவிருட்சம் போல் வெற்றிநடை போடுவதற்கு கழகத்தலைவர் MT. றம்ஸீனுடன் இணைந்து தோளோடு தோள் கொடுத்தவர்களில் மர்ஹூம் IL. அனிஸ் (பொலிஸ் சார்ஜன்) மனதை தொட்ட, மறக்க முடியாதவராக உள்ளார். அத்தோடு கழகத்தின் முன்னோடித் தலைவரான MT. றம்ஸீன் (Tr), CM. நஜாஸ் (Manager CO{OP), IM. முந்தஹார் (Tr), VM. அன்வர் (Tr), DKM. மௌஸீன் (Tr), MI. யாகூப் (LA), CM. நஜீப் (Tr), IL. றஊப்டீன் (Water Board), M. ஜமீல் (Courts), CBM. ஸியாம் (SLRC), MM. ஆஸிக் பர்வீன் (Tr), AM. இஸ்மத் (PC), A. நிஹாஸ் (SL) போன்றோர் கழகத்தைச் செதுக்கிய சிற்பிகளாவர். மேலும் இக்கழகத்திற்கு மகுடம் சூட்டியவர்களாக MT. பிர்னாஸ் (Tr), AM. நிலாஸ் (Tr), BM. லிஹாஸ் (GS), UKM. நஜீப் (Tr), UKM. கமீர், AM. ஹப்றத், SL. ஜமீன் போன்றோர் பாராட்டத்தக்கவர்களாவர்.

## BRAVER விளையாட்டுக் கழகம் 1985ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை நிகழ்த்தப்பட்ட சாதனைகள் பின்வருமாறு

| ஆண்டு | வெற்றிகொள்ளப்பட்ட கிண்ணத்தின் பெயர்கள் | தலைவர |
|---|---|---|
| 1989 | விவேகானந்தா கிண்ணம் (மணற்சேனை) | MT. றம்ஸீன் |
| 1990 | மர்ஹூம் UL. உதுமாலெவ்வை கிண்ணம் (நெற்பிட்டிமுனை) | MT. றம்ஸீன் |
| 1991 | சுஸா கேடயம் (நெற்பிட்டிமுனை) | MT. றம்ஸீன் |
| 1992 | பஷர் கேடயம் (நெற்பிட்டிமுனை) | MT. றம்ஸீன் |
| 1993 | மர்ஹூம் UL. உதுமாலெவ்வை கிண்ணம் (நெற்பிட்டிமுனை) | MT. றம்ஸீன் |
| 1994 | மெரிடியன் கிண்ணம் (மருதமுனை) | MT. றம்ஸீன் |
| 1995 | சுப்ப ஸ்டார் கிண்ணம் (சாளம்பைகேணி) | MT. றம்ஸீன் |
| 1996 | UNP கிண்ணம் (மருதமுனை) | MT. றம்ஸீன் |
| 1997 | விசேட அதிரடிப்படையின் சித்திரைப் புத்தாண்டு கிறிக்கட் சுற்றுப்போட்டி (கல்முனை சந்தாங்கேணி மைதானம்) | MT. றம்ஸீன் |

| | | |
|---|---|---|
| 1998 | மர்ஹூம் UL. உதுமாலெவ்வை கிண்ணம் (நெற்பிட்டிமுனை) | MT. றம்ஸீன் |
| 1999 | மர்ஹூம் UL. உதுமாலெவ்வை கிண்ணம் (நெற்பிட்டிமுனை) | MT. றம்ஸீன் |
| 2000 | மர்ஹூம் ILM. அனிஸ் கிண்ணம் (நெற்பிட்டிமுனை) | MT. றம்ஸீன் |
| 2001 | மர்ஹூம் MHM. அஷ்ரப் கிண்ணம் (நெற்பிட்டிமுனை) | MT. றம்ஸீன் |
| 2002 | மர்ஹூம் MHM. அஷ்ரப் கிண்ணம் (சம்மாந்துறை) | MT. றம்ஸீன் |
| 2003 | விஜிதா கிண்ணம் (சேனைக்குடியிருப்பு) | MT. றம்ஸீன் |
| 2004 | ஸாஹிறா கிண்ணம் (சாய்ந்தமருது) | MT. றம்ஸீன் |
| 2005 | டொல்பின் கிண்ணம் (மணற்சேனை) | MT. றம்ஸீன் |
| 2006 | மர்ஹூம் ALM. பழீல் (DS) ஞாபகார்த்த கிண்ணம் (நெற்பிட்டிமுனை) | MT. றம்ஸீன் |
| 2007 | கிறிஸ்மஸ் கிண்ணம் (கல்லாறு) | MT. றம்ஸீன் |
| 2008 | மர்ஹூம் MHM. அஷ்ரப் கிண்ணம் (இறக்காமம்) | MT. றம்ஸீன் |
| 2009 | தலைவர் MHM. அஷ்ரப் ஞபகார்த்த கிண்ணம் (சந்தாங்கேணி, கல்முனை) | MT. றம்ஸீன் |
| 2010 | சாந்தகுறூஸ் கிண்ணம் (சொறிக்கல்முனை) | AM. றிலாஸ் |
| 2011 | தயா கேடயம் (சந்தாங்கேணி, கல்முனை) | MMA. பர்வீன் |
| | Friends கிண்ணம் (மருதமுனை) | AM. றிலாஸ் |
| 2012 | தமிழ்வாணன் கிண்ணம் (சேனைக்குடியிருப்பு) | UKM. நஜீப் |
| | மர்ஹூம் சித்தீக் கிண்ணம் (சொறிக்கல்முனை) | AM. றிலாஸ் |
| | NYR கிண்ணம் (நெற்பிட்டிமுனை) | MT. பிர்னாஸ் |
| 2013 | NPL (நெற்பிட்டிமுனை) | AM. றிலாஸ் |
| | விஜிதா கிண்ணம் (சேனைக்குடியிருப்பு) | |
| 2014 | தமிழ்வாணன் கிண்ணம் (சேனைக்குடியிருப்பு) | AM. றிலாஸ் |
| | ஸ்டீபன் மத்திய கிண்ணம் (கார்மேல் பாத்திமா கல்லூரி), | |
| | My Hope கிண்ணம் (சொறிக்கல்முனை) | |

## MANS சமூகசேவை அமைப்பு

நெற்பிட்டிமுனையில் 2004ல் புனித நோன்பு மாதத்தில் மிஹிலார், அயாஸ், நபார், சப்றூஸ் ஆகிய நால்வரினால் ஜும்ஆ பள்ளிவாசலுக்குள் அமர்ந்து நமதூரில் சமூகசேவை செய்வதற்கான இளைஞர்கள் இல்லாமையும் அதற்குள் தங்கியிருக்கும் கல்வி நடவடிக்கைகளில் எமதூர் மாணவ மணிகள் பின்தங்கியிருப்பதையும் கருத்திற்கொண்டு க.பொ.த. (சா.தர) எழுதும் மாணவர்களின் நலன் கருதி ஒரு அமைப்பாக உருவாகி முதலாவதாக தனது கன்னிச் செயற்பாட்டினை கல்விப் பயணத்தின் ஊடாக ஆரம்பித்தது.

இந்த அமைப்புக்கு பெயர் ஒன்றினைச் சூட்டவேண்டுமென்று சிந்தித்தவேளையில் இந்த அமைப்புக்கு வித்திட்ட சமூகசேவை மனப்பாங்கு கொண்ட நான்கு நபர்களினதும் பெயர்களின் முதலெழுத்துக்களான M,A,N,S என்ற நான்கு ஆங்கில எழுத்துக்களையும் இணைத்து மென்ஸ் என்ற நாமம் இடப்பட்டது.

2004ல் கமு/ அல் அக்ஸா மகா வித்தியாலயத்தில் அவ்வருடம் க.பொ.த. (சா.த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி விஞ்ஞானம், சமூகக்கல்வி, கணிதம், தமிழ், இஸ்லாம் ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்குகளை நடாத்தியதன் மூலமாக தனது கன்னிப் பணியைத் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து வந்த காலங்களில் தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடமும் தங்களால் இயன்ற கல்விச்சேவைகளை வழங்கிக்கொண்டிருந்த வேளையில் 2005ம் ஆண்டுக்காலப் பகுதியில் நிரோஸ், நிப்ராஸ் போன்று சமூகப்பணிகளில் அக்கறைகொண்ட இன்னும் பல இளைஞர்கள் அமைப்பில் இணைந்து கொண்டதுடன் மென்ஸ் சமூக அமைப்புக்கென்று புதிதாக நிர்வாக அமைப்பொன்றும் உருவாக்கப்பட்டது.

இந்நிர்வாக அமைப்பின்

தலைவராக JM மிஹ்லார் அவர்களும்

செயலாளராக J சப்றோஸ் அவர்களும்

பொருளாளராக AHHM நபார் அவர்களும்

உபதலைவராக JM அயாஸ் இவர்களும்

உப செயலாளராக மிப்றாஸ் அவர்களும்

உப தலைவர்களில் ஒருவராக நிரோஸ் அவர்களும் நியமிக்கப்பட்டு இச் சமூக சேவை அமைப்பின் நடவடிக்கைகள்

முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் 2007 காலப்பகுதியில் மென்ஸ் சமூக மறுமலர்ச்சி அமைப்பானது மென்ஸ் சமூகசேவைகள் அமைப்பாக பெயர் மாற்றம் செய்யப்பட்டு சிரமதானப் பணிகள், மைய வாடி துப்பரவுப் பணிகள், பள்ளிவாசல் உள்ளகப் பகுதிகளைத் துப்பரவு செய்தல், புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மற்றும் பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டிகளில் சிறப்புப் பெற்ற மாணவர்களைப் பாராட்டுதல் போன்ற இன்ன பிற சமூகசேவைப் பணிகளை பிறந்த மண்ணுக்கு வழங்கி ஊரில் காணப்படும் ஏனைய சமூகசேவைகள் அமைப்புகளுக்கு சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்கின்றது.

2010 மற்றும் 2011ம் ஆண்டுகளில் ஏராளமான அங்கத்தவர்கள் உள்வாங்கப்பட்டதுடன் கல்விக் கருத்தரங்குகளை முன்னைய காலங்களை விடவும் சிறப்பாக நடாத்திக் காட்டியது.

2012ல் இவ்வமைப்பு ஒரு அரச சார்பற்ற நிறுவனமாகவும், தன்னலம் சாரா அமைப்பாகவும் வியாபித்ததுடன் தனது நிர்வாகத்தையும் மாற்றியமைத்துக் கொண்டது.

அவ்வகையில் 2012 ஆண்டு காலப்பகுதியில் றுஸ்வின் தலைவராகவும், தவிசாளராக நபார் அவர்களும் செயலாளராக சினாஸ் அவர்களும் பொருளாளராக றிப்ஸாத் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இக்காலப்பகுதியில் கல்முனைப் பிரதேச செயலகத்தினால் அதிகூடிய சேவைகள் செய்த சிறந்த முதன்மை வாய்ந்த சமூகசேவை அமைப்பாக தேர்வுபெற்று முன்னாள் பிரதேச செயலாளர் நவ்பல் அவர்களினால் விருதும் பெற்றுக் கொண்டது.

அதனைத் தொடர்ந்து 2013ன் இறுதிக் காலப் பகுதியில் நிர்வாகம் மாற்றியமைக்கப்பட்டு அயாஸ் அவர்கள் ஆயுட்காலத் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். அவ்வகையில் இவ்வமைப்பு பன்னிரெண்டு வருட கால வரலாற்றைக் கொண்ட ஒரு சமூக சேவை அமைப்பாகத் திகழ்கின்றது.

இந்த அமைப்பின் உள்ளகப் பிரிவுகளாக -

கல்வி அபிவிருத்திக் குழு

சுற்றுச் சூழல் அபிவிருத்திக் குழு

அனர்த்த முகாமைத்துவக் குழு என்பன காணப்படுகின்றன.

அதுமட்டுமல்லாமல் நெற்பிட்டிமுனையில் மட்டுமன்றி கல்முனைப் பிரதேசத்தை முழுவதுமாக உள்ளடக்கி எதிர்காலத்தில் தமது சமூகசேவைகளை பாரியளவில் முன்னெடுத்துச் செல்வது என குறிக்கோளாகக் கொண்டு இன்றுவரை மும்முரமாகச் செயற்பட்டு வருகின்றது.

## விளையாட்டு மைதானத்தின் வரலாறு

இவ்வூரில் விளையாட்டு, கல்வி, கலாச்சார நிகழ்வுகளில் சிறந்து விளங்கியவர்கள் அனேகர். குறிப்பாக M அலியார் ஆசிரியர் அல் அக்ஸா மகா வித்தியாலயத்திற்கு வருகை தந்து உடற்கல்விப் பாடத்தைப் பொறுப்பெடுத்த பின்னர் மாணவர்கள் கல்வியிலும் கல்வி, இலக்கியத்துறையிலும் விளையாட்டிலும் சிறந்து விளங்கினார்கள். அப்போதைய காலங்களில் விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவதற்கும் பயிற்சிகளில் ஈடுபடுவதற்கும் தனியார் காணிகளே பயன்படுத்தப்பட்டன. அத்துடன் ஜும்ஆ பள்ளிவாசல் முன்றலிலும் கலை, கலாச்சார நிகழ்வுகளை நடாத்தினர். பிற்பட்ட காலங்களில் குடிசனப் பெருக்கம் அதிகரிக்கத் தொடங்கியதும் மணவர்கள், இளைஞர்கள் தங்கள் விளையாட்டு மற்றும் பயிற்சிகளை மேற்கொள்வதற்கு இடப் பற்றாக்குறையை எதிர்கொண்டனர்.

இவ்வேளை மாணவர்கள், இளைஞர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபை என அனைவரும் ஒன்றுசேர்ந்து அல் அக்ஸா மகா வித்தியாலய அதிபராகவிருந்த AMA சமது அவர்களை நாடி இல்ல விளையாட்டுப் போட்டியினை நடாத்த வேண்டும் என வேண்டி நின்றனர். இவர்களின் ஆதங்கத்தினைப் புரிந்து கொண்ட அதிபர் அவர்கள் விளையாட்டு மைதானம் இல்லாத குறையை எடுத்துக் கூறினார்.

இந்தப் பேச்சோடு சபையில் சலசலப்பு ஏற்பட்டு மரைக்காயர் சபையின் அனுமதியோடு மையவாடியை இல்ல விளையாட்டுப் போட்டியை நடாத்துவதற்குப் பயன்படுத்தலாம் என்ற கருத்தை அனைவரும் ஏற்றுக் கொண்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. மரைக்காயர் சபையோடு இது சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடாத்தி அவர்களின் பூரண சம்மதத்தோடு மையவாடியில் போட்டியினை நடாத்த அனுமதி வழங்கப்படுகின்றது. இச்செய்தி ஊர் மக்கள் அனைவர் மனங்களிலும் மிகவும் மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது.

1992-06-04ம் திகத PTM அபூபக்கர் (கனி) அவர்களின் தலைமையில் மைதான துப்பரவுப் பணிகள் ஆரம்பமாகின. மூன்று நாட்களுக்குள் துப்பரவுப் பணிகள் நிறைவுபெற்று மைதானம் தயாராகியது.

பாடசாலையில் மூன்று இல்லங்களாகப் பிரிக்கப்பட்டு போட்டிக்கான ஆயத்த நிகழ்வுகள் நடைபெற்றன. 8ம், 9ம் திகதிகளில் இல்ல விளையாட்டுப்போட்டி நடைபெற ஏற்பாடாகியது. நாளும் வந்தது. நெற்பிட்டிமுனை மக்களே ஒன்றுதிரண்டனர். விளையாட்டுப் போட்டி ஆரம்பமாகியது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வர்த்தக வாணிப அமைச்சர் அல்ஹாஜ் AR மன்சூர் அவர்களும் கல்முனை மாவட்ட கல்விப்பணிப்பாளர் அல்ஹாஜ் MPH முஹம்மத், கல்முனைக் கோட்டக்கல்வி பிரதிப் பணிப்பாளர் அல்ஹாஜ் IM இஸ்ஸதீன், உதவிக் கல்விப் பணிப்பாளர்களான மருதூர் மஜீத், MC ஆதம்பாவா, MH காதர் இப்றாஹீம் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் ALM பழீல் ஆகியோரும் கலந்து கொண்டனர். இவ்வைபவத்தில் அதிபர் அவர்களால் விளையாட்டு மைதானத்தின அவசியம் பற்றி எடுத்துக் கூறப்பட்டதிலிருந்து மைதானத்தின் வரலாறு ஆரம்பமாகின்றது.

இவ்வைபவத்தின்போது உரைநிகழ்த்திய அமைச்சர் மன்சூர் அவர்கள், பொருத்தமான இடத்தை அடையாளப்படுத்தினால் மைதானத்துக்கான ஏற்பாடுகளை தான் உடன் செய்து தருவதாக வாக்குறுதி வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து அல் அக்ஸா மகா வித்தியாலய அதிபர் AMA சமது அதிபர் அவர்கள் தலைமையில் பிரதேச செயலாளர் ALM பழீல், பிரதி அதிபர் AM ஜமால்தீன் ஆகியோருடன் PT அபூபக்கர் (கனி) அவர்களின் தலைமையில் இளைஞர் அணியினரும் இணைந்து மைதானத்துக்கான இடம் பற்றிய கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு இறுதியாக மாங்குளம் தெரிவு செய்யப்படுகின்றது. ஆலையடி வடக்கு வீதிக்கும் MHM அஸ்ர.்.ப் சதுக்க வீதிக்கும் இடைப்பட்ட பதினைந்து ஏக்கர் காணியை பெறுவதென முடிவாகிறது.

நெற்பிட்டிமுறை இளைஞர் அணியில் PTM அபூபக்கர் (கனி) கிராமசேவை அலுவலர் - தலைவர்

MM ஹஸன் (மாஸ்ரர்) - செயலாளர்

MJM ஹாரிஸ் (மாத்தையா) பொருளாளர் ஆகியோருடன் ஊரின் அனைத்து இளைஞர்களும் அங்கத்தவர்கள் எனத் தெரிவாகினர்.

## குளம் நிரப்பும் பணி

### கட்டம்-01

1993ல் ஊரிலுள்ள சகல உழவு இயந்திரங்களும் பெறப்பட்டன அதற்கான டீசலுக்கான செலவுகளை அதிபரும் பிரதி அதிபரும் பொறுப்பேற்றனர். பிரதேச செயலாளர் ALM பழீல் அவர்களின் வேண்டுதலின்பேரில் ஜனசக்தி பெறும் குடும்பத்தினர் சிரமதானப் பணிகளை அர்ப்பணிப்போடு பங்கேற்றனர். மதிய உணவினை PT சாலிதீன் (கொபேகடுவ), அல்ஹாஜ் உதுமார் (தாடி) ஆகியோர் பொறுப்பேற்றனர். பணிகள் துரிதமாக நடைபெற்றன. குளம் நிரப்பப்படுகின்றது. வீதியெல்லாம் விழாக்கோலம். மக்கள் வெள்ளம். சிறுவர்கள் அங்குமிங்கும் ஓடி விளையாடுகின்றனர். நெற்பிட்டிமுனையே சந்தோச வெள்ளத்தில் மூழ்கியது.

விளையாட்டு மைதானம் மிக விரைவாக உருவாகிவிடும் என்ற ஆதங்கம் மக்கள் அனைவர் மனங்களிலும். மாலையாகியதும் வேலைகள் ஒருவாறு ஓய்கின்றன.

### கட்டம்-02

விளையாட்டுக் கழகங்கள் ஒன்றுசேர்கின்றன. தங்களின் பங்களிப்பு என்ன? என ஆராய்கின்றன. ஒவ்வொரு கழகமும் மண்ணினை கொட்டி நிரப்ப வேண்டும் என முடிவாகின்றது. அதனைத் தொடர்ந்து போட்டிபோட்டுக் கொண்டு பணிகள் நடக்க வேண்டும் எனவும் அதிகளவான பங்களிப்பு வழங்கும் கழகம் பாராட்டப்படும் என்ற முடிவுடன் அடுத்தடுத்த நாட்கள் பணிகள் ஆரம்பமாகின்றன. மீண்டும் வீதியெங்கும் உழவு இயந்திரங்கள். நெற்பிட்டிமுனை மீண்டும் விழாக்கோலம். மக்கள் மனங்களில் சந்தோசம். பணிகள் மிக உற்சாக நடைபெறுகின்றன. ஒன்றையொன்று முந்திக் கொண்டு மண் நிரப்பப்படுகின்றது. முடிவின்போது -

K றசீட் (பெயா டீல்) தலைமையிலான ஹீரோ விளையாட்டுக் கழகம் 63 லோட்

ML சபீர் (சாலிதீன்) தலைமையிலான வின்னர்ஸ் விளையாட்டுக் கழகம் 101 லோட் என முடிவாகி பாராட்டப்படுகின்றனர்.

### கட்டம்-03

மீண்டும் கூடுகின்றார்கள். அரச உத்தியோகத்தர்களிடம் தலா 100.00 ரூபா அறவீடு செய்தல் என முடிவாகிறது. ஒவ்வொரு வீட்டிற்கும் இளைஞர்கள் அரச உத்தியோக்தரை நாடிச் செல்கின்றனர். 3-4 நாட்களாக பணிகள் மிகக் கச்சிதமாக நடைபெறுகின்றது. அனைவரும் மிகவும் மனமுவந்து தமது பங்களிப்புக்களை வழங்குகின்றனர். அதிலும் குறிப்பாக அல்ஹாஜ் MI அஸீஸ் சட்டத்தரணி அவர்கள் மிகவும் உவப்புடன் அள்ளி வழங்கினார்கள். இது இளைஞர்களுக்கு மீண்டும் உத்வேகத்தைக் கொடுத்தது. மண் நிரப்பும் பணிகள் மீண்டும் ஆரம்பமாகின. சிறுவர் தொடக்கம் அனைவர் முகங்களிலும் மீண்டும் குதூகலம். வானத்தில் பறக்கும் பட்சிகள்கூட இக்காட்சிகளைக் கண்டு, சிறகடிப்பதை மறந்து சற்றுநேரம் பார்த்து மகிழ்ந்து பறக்கின்றன. இயற்கை அன்னையும்கூட இளைஞர்களின் பணிகளுக்கு ஊக்கமளிப்பது போன்று மப்பும் மந்தாரமுமாகக் காட்சியளித்தது. இவ்வூரவர் அனைவரினதும் வியர்வைத்துளிகளும் இம்மைதானத்திற்காகக் கட்டியம் கூறின.

### 1994ல்

பிரதேச சபைத் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் காரணமாக இக்கால கட்டத்தில் சற்று தளர்வு ஏற்படுகின்றது. இளைஞர்களின் கவனம் தேர்தல்களில் குவிகின்றது. பல்வேறு கூறாகப் பிரிந்து செயல்படுகின்றனர். பிரதேச சபைத் தேர்தலில் அல்ஹாஜ் SPM இஸ்மாயில் (ஆசிரியர்) தெரிவாகினார். பாராளுமன்ற தேர்தலில் MM அஸ்ர.்.ப் அவர்களும் ULM முஹைதீன் அவர்களும் தெரிவாகினர்.

மீண்டும் இளைஞர்கள் ஒன்றுகூடுகின்றனர். MHM அஸ்ர.்.ப அவர்கள் கப்பல்துறை, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சராகப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து இவ்விளையாட்டு மைதானத்திற்கு ஏழரை இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்கின்றார்கள்.

அத்துடன் காணி கொள்வனவுக்கான வேலைகளும் தொடர்கின்றன. மேட்டு வட்டையிலுள்ள காணியைப் பெறுவதற்காகக் காணிச்சொந்தக்காரர்களைச் சந்திக்கின்றார்கள். பிரதேச சபை உறுப்பினர்

அல்ஹாஜ் SPM இஸ்மாயில் அவர்களின் தலைமையில் இளைஞர்கள் அணிதிரள்கின்றனர். முன்னர் மண்ணிட்டு நிரப்பப்பட்ட குளம் கிழக்கு மேற்காக அறுபது (60) பாகங்கள். இதில் இருபது (20) பாகங்கள் புதிய பாடசாலைக்கும் இருபது (20) பாகங்கள் பள்ளிவாயலுக்கும் சிறுவர் பூங்காவுக்கு இருபது (20) பாகங்களும் பிரிக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதேவேளை, பிரதேச சபை உறுப்பினர் SPM இஸ்மாயில் அவர்களின் உறவுக்காரர்களான காணிச் சொந்தக்காரர்கள் அல்ஹாஜ் TS அக்பர் அவர்களின் மகன் அல்ஹாஜ் AM மதானி, ஆதம்கண்டு விதானையாரின் மகன் A அஹமத் ஆசிரியர், சாஹிபு முதலாளி ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியதற்கு அமைய AM மதானி, A அஹமத் ஆகியோர் மிகவும் குறைந்த பணத்தொகையைப் பெற்றுக்கொண்டு தலா இரண்டு ஏக்கர் வீதம் வழங்கினார்கள். சாஹிபு முதலாளி ஒரு ஏக்கர் காணியை இலவசமாக வழங்கினார்கள்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய தலைவர், அமைச்சர் அல்ஹாஜ் அஸ்ர.ஃப் அவர்களினால் வழங்கப்பட்ட ஏழரை இலட்ச ரூபா நிதிக்கான வேலைகள் தொடர்ந்து நடைபெற்றன.

## 1995-1996களில்

கல்முனை பிரதேச செயலாளர் ALM பழீல் அவர்கள் விசேட ஆணையாளராக நியமனம் பெறுகின்றமையைத் தொடர்ந்து அவர்களால் 50,000/= நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இளைஞர் ஒன்றியத்தினால் 35,000/= ஒதுக்கப்படுகின்றது. இந்நிதிகள் மைதானத்துக்கான மண் இட்டு நிரப்புவதற்குப் பயன்படுத்தப்பட்டது. பிரதேச சபை உறுப்பினர் அல்ஹாஜ் SPM இஸ்மாயில் அவர்களின் முயற்சியினால் சிறுவர் பூங்கா அமைக்கப்படுகின்றது. இளைஞர்களினதும் பொதுமக்களினதும் பங்களிப்பும் அவர்களின் நற்சிந்தனையும் இப்பாரிய விளையாட்டு மைதானம் உருவாவதற்குக் காலாக அமைந்தன.

## 2000 ஆண்டில்

அடுத்த கட்டப் பணிகளுக்காக இளைஞர்களினாலும் ஊர் மக்களாலும் விடுத்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட அமைச்சர் அஸ்ர.ஃ.ப் அவர்கள் 15 இலட்சம் ரூபாவினை ஒதுக்கினார்கள். அதனைத் தொடர்ந்து பிரதேச செயலாளர் ALM பழீல் தலைமையில் பணிகள்

மிகத் துரிதமாக்கப்படுகின்றன. "கொட்டிக் குவியுங்கள்; நான்வந்த பின் கலைக்கும் பணியைத் தொடரலாம்" என்ற அமைச்சர் அஸ்ர.்.ப் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மணல் குவிக்கப்படுகின்றன. இவ்வாறு நடந்து கொண்டிருக்கும் கட்டத்தில் பொதுத் தேர்தல் ஏற்பாடாகி நாடு அதற்கான முஸ்தீபுகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் தறுவாயில் கொழும்பிலிருந்து கல்முனைக்கு உலங்கு வானூர்தியில் வரும் வழியில் வானூர்தி விபத்துக்குள்ளாகி அகால மரணம் ஏற்படுகின்றது. இந்நிகழ்வு 2000-08-16ம் திகதி நடைபெற்றது.

## 2004ல்

அஸ்ர.்.ப் அவர்களுக்கு ஏற்பட்ட திடீர் இழப்பின் காரணமாக நாடு தழுவிய ரீதியில் சோகம் ததும்பியது. குறிப்பாக முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் ஒருவித சோர்வு ஏற்பட்டது. உலக வாழ்க்கை அற்பமானது என எண்ணி விரக்தியுற்றநிலையில் இருந்தவர்கள் மீண்டும் உயிர்பெற்று எழுகின்றனர். அவ்வேளை ரஊப் ஹக்கீம் தலைமைப் பொறுப்பேற்கிறார். நுஆ கட்சியினை பேரியல் அஸ்ர.்.ப் அவர்கள் பொறுப்பேற்கின்றார்கள். அதேவேளை தேசியப்பட்டில் பாராளுமன்ற உறுப்பினராகவும் பிரதி உயர்கல்வி அமைச்சராகவும் மையோன் முஸ்தபா நியமிக்கப்படுகின்றார். இதனைத் தொடர்ந்து ஒரு லட்சம் ரூபா நெற்பிட்டிமுனைக்கு தையல் பயிற்சி நிலையத்திற்கு ஒதுக்கீடு செய்கின்றார்கள். SL ஜமால்தீன் அவர்கள் தையல் பயிற்சி நிலையத்தின் தலைவராக இருந்தவேளை இந்நிகழ்வு இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து மாநரக சபை உறுப்பினர் UL தௌபீக் அவர்கள் மேற்கொண்ட முயற்சியின் காரணமான அமைச்சர் ரஊப் ஹக்கீம் அவர்களின் 15 இலட்ச ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் பெறப்பட்டு சுற்றுமதில் அமைக்கப்பட்டது.

## 2006க்குப் பின்

கிராமத்துக்கு ஒருவேலைத்திட்டம் என்ற அடிப்படையில் இவ்வூரின் ஐந்து பிரிவுகளுக்கான நிதியினைப் பொதுவாக மைதானத்திற்கு பயன்படுத்த வேண்டும் என்பதற்கமைவாக அரைகுறையாகக் கிடந்த சுற்றுமதில் அத்திவாரம் இடப்பட்டது. கேற் இடப்பட்டது. மண் நிரப்பப்பட்டது.

மாநகரசபை உறுப்பினர்களான I றஹீபுத்தீன், UL தௌபீக், CM முபீத் ஆகியோர் இருந்தவேளை, அமைச்சர் ALM அதாவுல்லாஹ்

அவர்களிடம் I றஹீபுத்தீன் அவர்கள் ஊரின் தேவைகளை எடுத்துக்கூறி மைதானத்துக்கான பார்வையாளர் அரங்கினை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டு காரியங்கள் முடுக்கி விடப்பட்டன. பார்வையாளர் அரங்கமும் நிர்மாணிக்கப்பட்டது.

**2001க்குப் பின்னர்**

CM முபீத், ML சமீர், AHHM நபார் ஆகியோர் மாநகர சபை உறுப்பினர்களாகவிருந்தவேளை, கிராமத்திற்கோர் வேலைத்திட்டத்தின் மூலம் இரண்டு பிரிவுகளுக்கான நிதி ஒதுக்கீட்டில் ML சமீர் (சாலிதீன்), CM முபீத் இருபது இலட்சம் பணம் பூரணமாக சுற்றுமதில் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு நிறைவுபெற்றது.

கல்முனை மாநகர சபையில் பட்ஜெட்டுக்கு கொண்டு வரப்பட்டு CM முபீத், ML சமீர், AHHM நபார் மூவரும் சேர்ந்து திண்மக்கழிவுகள் போடப்பட்டு அதற்கு மேல் 1219 லோட் மண் போடப்பட்டு செப்பனிடப்பட்டிருக்கின்றது. இதற்கான நிதி ஒதுக்கீடு ரூபா ஐம்பது (5,00,000.00) இலட்சம் ஆகும்.

மேலும் திண்மக்கழிவுகளால் மைதானத்தின் அருகே அமைந்துள்ள பள்ளிவாயல், பாடசாலை, குடியிலுருப்பு வீடுகள் என அனேகர் மிகவும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து பொறுமை காத்தனர். தற்போது அவை சீர்செய்யப்பட்டு செப்பனிடப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. இதற்கு மாநகர பிரதம வைத்திய அதிகாரி டாக்டர் MC மாஹிர் ஆலோசனை வழங்கியதாகவும் அறிகின்றேன். அத்துடன் மைதானத்திற்கான குடிநீர் வசதிகளை முஹம்மது காசீம் இம்றான் தனது தாயாரின் ஞாபகார்த்தமாக வழங்கியுள்ளார்.

சுமார் கால் நூற்றாண்டுகளாக இம்மைதானம் அமைப்பதற்காக அர்ப்பணிப்புச் செய்தோர் பலர் அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் மரணித்து விட்டாலும் அவர்கள் என்றும் ஞாபகத்துக்குரியவர்கள். நன்றிக்குரியவர்கள்.

அத்துடன் மாநகர சபை உறுப்பினார்களான ML சமீர் (சாலிதீன்), UL தௌபீக், CM முபீத், AHHM நபார், I றஹிபுத்தீன் ஆகியோரையும் ஊரின் அனைத்து விளையாட்டுக் கழகங்களையும் அதன் வீரர்களையும் மற்றும் இளைஞர்களையும் மறக்கக் கூடாது; மறக்கவும் முடியாது என்பது எனது தாழ்மையான வேண்டுதலாகும்.

தகவல்: ML சமீர் (சாலிதீன்) முன்னைநாள் மாநகரசபை உறுப்பினர்

## ஒலி, ஒளிபரப்புத் துறையும் ஊடகத்துறையும்

நெற்பிட்டிமுனை மக்கள் சிறிய ஊராகவிருந்தாலும் சகல துறையிலும் பெரும்பெரும் ஊர்களோடு போட்டி போடக்கூடிய அளவுக்கு ஈடுபட்டு தத்தமது திறமைகளைக் காண்பித்திருக்கின்றார்கள். அந்தவகையில் ஆரம்ப காலத்தில் ஒலிபரப்புத்துறையிலும் ஊடகத்துறையிலும் சேவைகள் ஆற்றி வந்திருக்கிறார்கள். ஒலிபரப்புத்துறையை எடுத்துக்கொண்டால் முஸ்லீம் சேவைக் கட்டுப்பாட்டாளராக இருந்த ஜனாப் இர்பான் அவர்களோடு இணைந்து முஸ்லீம் நிகழ்ச்சியில் பங்குகொண்டு முதல்முதலில் இவ்வூரிலிருந்து செயற்பட்டவர் ஜனாப் MI. பதுறுத்தீன் அவர்களாவர். நல்ல பல நிகழ்ச்சிகளை நடாத்தி வந்திருக்கின்றார். இது 1970ம் ஆண்டுக்குப்பின் பல வருடங்கள் தொடர்ந்தன.

அதற்கு முற்பட்ட காலத்தில் MI. தாவூத் அவர்கள் தினபதி, சிந்தாமணி, தினகரன் போன்ற பத்திரிகைகளுக்கு விசேட நிருபராகக் கடமையாற்றியிருக்கிறார். இவர் சுவாரஸ்யமாக எழுதக்கூடியவர். பல நாடகங்களை எழுதியதுடன் அவற்றை மேடை ஏற்றியமையும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் சிறந்ததொரு கலைஞராகவும் திகழ்ந்தார். இவருடைய செய்திகள் உடனுக்குடன் வெளிவந்து கொண்டிருந்தன. தற்பொழுது இவருடைய மகன் DM. றிஸ்வி, மருமகன் ஜனாப் S. சிறாஜ்ஜுடீன் போன்றோரும் நிருபர்களாக விளங்குகின்றனர்.

மேலும் நெற்பிட்டிமுனையைச் சேர்ந்த I. முஸாதிக் விஞ்ஞான பட்டதாரி. இலங்கை ஒலிபரக்புக் கூட்டுத்தாபனத்தில் பகுதிநேர அறிவிப்பாளராகக் கடமையாற்றி வந்தவர். பிற்காலத்தில் அதனைத் தொடராமல் விட்டுவிட்டார். இவர் தற்பொழுது மல்வானையில் திருமணம் செய்து வாழ்ந்து வருகிறார்.

### அல் ஹாஜ் CBM. சியாம் (ரூபவாஹினி பணிப்பாளர்)

இவர் நெற்பிட்டிமுனையில் காசீம்பாவா பரீதா உம்மா தம்பதிகளுக்கு இளைய மகனாக 1977.01.01ல் பிறந்தார். தனது

ஆரம்பக்கல்வியை கமு/அல் அக்ஸா மகா வித்தியாலயத்தில் கற்று க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்திபெற்று கமு/ஸாஹிறாக் கல்லூரியில் விஞ்ஞானப்பிரிவில் உயர்கல்வியை தொடர்ந்தார். விஞ்ஞானப்பிரிவில் சித்தியடைந்த இவர், குறைந்த புள்ளிகளால் விஞ்ஞானமானிப் பட்டத்தை இழந்ததன் காரணமாக கலைமானிப் பட்டத்தை வெளிவாரியாக கலைத்துறையில் பயின்று BA பட்டத்தை 2009ல் பெற்றார்.

பின்னர் இலங்கைக் கூட்டுத்தாபனத்தின் அறிவிப்பாளராக 1999ல் கடமை ஏற்று பணிசெய்தார். பின்னர், 2006ம் ஆண்டு ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் செய்தி வாசிப்பாளராக தெரிவாகி 2010ம் ஆண்டு செய்தித் தயாரிப்பாளராக பதவி உயர்வு பெற்றார். தொடர்ந்து ரூபவாஹினிக் கூட்டுத்தாபன தமிழ் பிரிவு செய்தி வாசிப்பாளராக கடமை ஏற்ற இவர், தற்பொழுது வரை அப்பதவியில் நீடித்து வருகிறார். அத்தோடு கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஊடகவியற்துறை டிப்ளோமாவில் 2008ல் சித்தி அடைந்ததோடு புலமைப்பரிசில் பெற்று டெல்லி, குவைத், மும்பாய் போன்ற பல இடங்களுக்குச் சென்று வந்துள்ளார். அகில இலங்கை சமாதான நீதவானாக 2007ல் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

மேலும் "தேசமானி" பட்டம் ஜனாதிபதி செயலகத்தால் 2010ம் ஆண்டு பெற்றுக்கொண்டார். தற்பொழுது சட்டமானிப் பட்டப் படிப்பை மேற்கொண்டு வருகிறார். பல்வேறுபட்ட ஊடக அமைப்புக்களில் முக்கிய பதவிகள் வகித்துவரும் இவர், கிழக்கு மாகாணத்தில் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன பணிப்பாளர் பதவி வகித்த பெருமை இவரையே சாரும். அத்தோடு உலக நாட்டில் உள்ள 200 ஊடகவியலாளர்களில் சஊதி மன்னரின் விசேட பிரதிநிதியாக இலங்கையில் இருந்து சென்ற ஊடகத்துறை சார்ந்தவர் இவரே ஆவார் என்பதை குறிப்பிட்டுக் கூறமுடியும்.

### C. தௌபீக் (பட்டதாரி ஆசிரியர)

இவர் நெற்பிட்டிமுனையில் காதர் சக்கையும்மா தம்பதிகளுக்கு இளைய மகனாக 1979.11.04ம் திகதி பிறந்தார். ஆரம்பம் முதல் இறுதிவரை கமு/அல் அக்ஸா ம.வி கல்வி பயின்று பட்டப்படிப்பை மேற்கொண்டு கலைப்பட்டதாரியானார். பின்னர் பொது நிர்வாகத்தில்

MA பட்டம் முடித்த இவர் 2000ம் ஆண்டில் தினக்கதிர் பத்திரிகையின் ஊடகவியலாளராக கடமையாற்றினார். 2004ம் ஆண்டில் பகுதிநேர அறிவிப்பாளராக தேசிய சேவை, முஸ்லிம் சேவை, தென்றல் போன்ற வானொலிகளில் ஈடுபட்டு வந்தார். அதனைத் தொடர்ந்து பிறை FM வானொலியில் இன்றுவரை அறிவிப்பாளராக இருந்து வருகின்றார். மேலும் க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு ஊடகவியல் கற்கை, தமிழ் பாடங்களை கற்பித்து வருகிறார்.

## UM. இஸ்ஹாக் (முகாமைத்துவ உதவியாளர)

உமர் கத்தாப் - ஆசியாத் தம்பதிகளுக்கு நெற்பிட்டிமுனையில் 1965.08.20ம் திகதி பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை கமு/அல் அக்ஸா ம.வி கல்வி பயின்று உயர்கல்வியை கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையில் பயின்ற இவர், 1995.01.31ல் இலிகிதராக தனது முதற்கடமையை மூதூரில் தொடங்கினார். பல்வேறுபட்ட அமைச்சுக்களில் கடமையாற்றி தற்பொழுது கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகப் பொறுப்பேற்று கடமையாற்றி வருகிறார். அத்தோடு கல்வி அலுவலக நலன்புரி அமைப்பின் தலைவராகவும் பணிபுரிகிறார். 2004ம் ஆண்டு தொடக்கம் தினகரம், வீரகேசரி, தினக்குரல், சுடர்ஒளி, ரூபவாஹினி, ITN போன்ற ஊடகங்களுக்கு செய்திகள் வழங்கிவரும் ஒருவராக திகழ்கிறார்.

1994ம் ஆண்டு நடைபெற்ற பிரதேச சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் போட்டியிட்டு சொற்ப வாக்குகளால் உறுப்பினர் தெரிவிலிருந்து தவிர்க்கப்பட்டவர். அத்தோடு கிராமோதய சபைத் தலைவராகவும் இருந்திருக்கிறார். மேலும் சமாதான நீதவானான இவர் 2010ல் மக்கள் சேவை ஊடக விருதைப் பெற்றுக்கொண்டார். இன்னும் சாமசிறி கலாஜோதி விருது, ரத்தின தீப விருது போன்றவற்றையும் பெற்றுக் கொண்டார்.

1990ம் ஆண்டு நோன்பு காலத்தில் பாவா பக்கீர் சாஹிபு ரபான் கொட்டி நோன்பு பிடிப்பதற்காக விழிக்கச் செய்வது வழக்கம். அக்காலம் யுத்த சூழல் காரணமாக மக்கள் விழித்து வெளியே செல்ல முடியாத நிலை ஏற்பட்டபோது தைரியமாக முன்வந்து மக்களை விழிக்கச் செய்வதற்காக அல் ஹதீஸ்களைச் சொல்லி விழிக்கச் செய்து வந்தார். இப்பணி அக்காலத்தில் மிகவும் கடினமான பணியாக இருந்தது. அப்பணியைச் செய்ததால் ஊர் மக்களால் பாராட்டுப் பெற்றவர். இவர்

தற்பொழுது கல்முனைக்குடியைச் சேர்ந்த AB. ஜென்னத்துல் யுமீறா என்பவரை திருமணம் செய்து மூன்று பெண்பிள்ளைகளுக்குத் தந்தையாக இருக்கிறார்.

## DKM. றிஸ்வி (துறைமுக நிறைவேற்று அதிகாரி)

இவர் நெற்பிட்டிமுனையில் 1971.11.01ல் தாவூத் - மாலியா உம்மா தம்பதிகளுக்கு இளைய மகனாகப் பிறந்தார். ஆரம்பக் கல்வியை கமு/அல் அக்ஸா மகா வித்தியாலயத்திலும், உயர் கல்வியை கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையிலும் பயின்றவர். 1999ம் ஆண்டிலிருந்து தினக்குரல் பத்திரிகையின் ஊடகவியலாளராக கடமையாற்றி வருகிறார். 'எக்கோ' இணையத்தள பிரதம ஆசிரியராகவும் கடமையாற்றி வருகிறார். கொலன்னாவ நிருபராக தொடர்ந்து கடமையாற்றி வருகிறார். தேசமானிய விருதை 2004ம் ஆண்டில் பெற்றுக் கொண்டார். அகில இலங்கை சமாதான நீதவானாக விளங்கும், இவர் ஸ்ரீலங்கா மீடியா பவுண்டேசனின் பொருளாளராகவும் இருக்கின்றார். கொழும்பு துறைமுக நிறைவேற்று அதிகாரியாக பணியாற்றும் இவர் சம்மாந்துறையைச் சேர்ந்த ஆயிசாவை திருமணம் செய்திருக்கிறார். இவர்களுக்கு மூன்று பிள்ளைகள் உண்டு. இதில் இரண்டு ஆண் பிள்ளைகளும் ஒரு பெண் பிள்ளையும் உண்டு. இவர் தற்போது கொழும்பு வெல்லம்பிட்டியில் வசித்து வருகிறார்.

## S. சிறாஜுதீன ISA

சீனிவாப்பு சம்சுதீன் - சகர்பான் வீவீ தம்பதிகளுக்கு 1962.09.02ல் மகனாகப் பிறந்த சிறாஜுதீன் அவர்கள் ஆரம்பக்கல்வியை தோப்பூர் அல் அம்றா ம.வி பயின்று உயர்கல்வியை மூதூர் மத்திய கல்லூரியில் கற்றார். பின்னர் ஆசிரியர் தொழிலில் ஈடுபட்டு ஊடகத்துறையில் நாட்டம் கொண்டதன் காரணமாக தினகரன், தினக்குரல் பத்திரிகைகளில் எழுதிவந்தார். 15 வருடங்களுக்கு மேல் அனுபவம் வாய்ந்த இவர் பல விருதுகளையும் தேசியநிலைப் போட்டிகளிலும் வெற்றியீட்டி பரிசுகளும் பெற்றிருக்கின்றார்.

சுாமசிறி தேசியகீர்த்தி விருதை இரத்தினபுரி அகில இன நல்லுறவு ஒன்றியம் வழங்கப்பட்டது. ரத்தினதீப விருதை மலையக கலை கலாச்சார சங்கம் வழங்கியது. அகஸ்தியர் விருதை சாய்ந்தமருது தடாகம் கலை இலக்கிய வட்டம் வழங்கியது. ராஜேஸ்வரி சண்முக

நினைவு விருதையும் பெற்றுக் கொண்டார். நெற்பிட்டிமுனை இளைஞர் கழகம் நன்முனையூர் சிறாஜுதீன் என்னும் பட்டத்தை வழங்கி கௌரவித்தனர். கலைமாணி விருதை சாய்ந்தமருது லஸ்ரோ சிறிலங்கா வழங்கியது. ஊடகச் செம்மல் அட்டாளைச்சேனை இன்போட் மெறர் வழங்கியது.

தேர்தல் விஞ்ஞாபன யோசனைப் போட்டி ஐக்கிய தேசியக்கட்சி நடாத்தியது. இந்நிகழ்வு 1994ல் நடைபெற்றது. இதில் பத்தாயிரம் ரூபா பரிசை பெற்றுக் கொண்டார். மகாத்மா காந்தி விருதை மலையக கலை கலாச்சார சங்கம் வழங்கியது. நதியைப்பாடும் நந்தவனம் நிகழ்வில் ஹிஸ்புல்லாஹ் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. அல் அமீன் சமூக அபிவிருத்தி நிலையத்தால் வழங்கப்பட்ட விருது மானிடநேயம் வாழ மகோன்னத பணிபுரியும் மானிடர்க்கு என்பதையும் பெற்றுக் கொண்டார்.

இவர் தாவூத் மாலியா உம்மா தம்பதிகளின் புதல்வி DM. றிஸானா ஆசிரியை அவர்களைத் திருமணம் செய்து இரண்டு பெண் பிள்ளைகளுக்கு தகப்பனாக விளங்குகிறார். தற்பொழுது நற்பிட்டிமுனையில் வசித்து வருகிறார். இவர் கவிதை, கட்டுரை எழுதும் ஆற்றல் கொண்டவர். இவருடைய மூத்தமகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விவசாய பீடத்தில் இருக்கிறார். இளைய மகள் கவிதை எழுதும் ஆற்றல் உள்ளவர். இவர் தோப்பூர் ருஸ்தா நெற்பிட்டிமுனை என்னும் பெயரில் கவிதை எழுதி வருகிறார்.

## ASM. முஜாஹித் (முகாமைத்துவ உதவியாளர)

இவர் நெற்பிட்டிமுனையைச் சேர்ந்த அப்துல் சதார் - ஆசியாத் தம்பதிகளின் புதல்வனாவார். 1972.03.14ம் திகதி பிறந்தார். ஆரம்பக்கல்வி கமு/ கார்மேல் பாத்திமா கல்லூரியில் பயின்றதோடு உயர்கல்வியையும் அப்பாடசாலையிலே முடித்துக்கொண்டார். 2000ம் ஆண்டிலிருந்து ஊடகத்துறையில் ஈடுபாடு கொண்டு இணையற்ற சேவைகள் ஆற்றி வருகின்றார். தினகரன், வீரகேசரி, தமிழ் மிரர், ரூபவாஹினி (நேத்ரா அலைவரிசை) போன்றவற்றிற்கு செய்திகளை வழங்கிவருகின்றார். நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும் இவர், நாவிதன்வெளி நிருபர் என்று பத்திரிகைகளில் எழுதுகின்றார். இதன் காரணமாக நாவிதன்வெளி பிரதேச கலாசார விழாவில் பாராட்டுப் பெற்றவர். அதனைத் தொடர்ந்து அம்பாறை மாவட்ட

ஊடகவியலாளர் சம்மேளனம் 15வது ஆண்டு நிறைவில் இவரைப் பாராட்டிக் கௌரவித்தனர்.

மேலும் இவர் தேசிய கணக்கியல் தொழினுட்பவியலாளர் கற்கைநெறி, ஆங்கில டிப்ளோமா கற்கைநெறி, விசேட கணிணிப் பயிற்சிநெறி, ஊடகத்துறைப் பயிற்சிநெறி போன்ற பயிற்சிகளைப் பெற்று தம்மை மேலும் மேலும் வளப்படுத்திக் கொண்டிருக்கின்றார். கல்முனை சமாதான அமைப்பின் நெற்பிட்டிமுனை சேனைக்குடியிருப்பு ஆலோசனைக்குழு உறுப்பினராகவும், அகில இலங்கை முஸ்லீம் லீக் வாலிப முன்னணியின் நற்பிட்டிமுனை இணைப்பாளராகவும், இலங்கை சமூக மேம்பாட்டு அபிவிருத்தி ஒன்றியத்தின் ஊடக இணைப்பாளராகவும், சமூக மறுமலர்ச்சி ஒன்றியத்தின் பிரதம செயலாளராகவும், நெற்பிட்டிமுனை-02 கிராம அபிவிருத்தி சங்கம் பொருளாளராகவும், அகில இலங்கை சமாதான நீதவானாகவும் இருந்து வருகின்றார்.

இவரது AL. ஹஸ்பியாவை திருமணம் செய்துள்ள இவருக்கு ஒரு ஆண்குழந்தை உண்டு M. சைபுல் ஸிஹாம் என்பது இவருடைய பெயராகும்.

## F. சிஹான் ஹசன

இவர் பாறுக் - பல்கீஸ் தம்பதிகளின் புதல்வன். நெற்பிட்டிமுனை மதுரிஸா வீதியில் வாழ்ந்து வருகிறார். தினக்குரல் பத்திரிகை நிருபராகக் கடமையாற்றி கொண்டிருக்கிறார்.

## இலக்கியம் வளர்த்த இவ்வூரவர்

ஆரம்ப காலத்தில் பாடல்களையும், கவி இலக்கியங்களையும், காவியங்களையும் பாடியிருக்கிறார்கள். அவைகளுள் பெரும்பான்மையானவை ஏடறியாதவை. சிலவற்றை ஏடுகளில் பதித்தும் வைத்திருக்கிறார்கள். அதற்கடுத்த சந்ததியினர் ஏடுகளில் பதிக்க முயன்று தோல்வியும் கண்டிருக்கிறார்கள். 1882ல் "கடக்காறன் மகள்" காவியம் வெளிவந்தது. அக்காவியத்தின் கதாநாயகனைக் காண முடியவில்லை. காரணம் ஏட்டில் பதியப்படவில்லை. இந்த ஊரைப் பொறுத்தவரையில் கல்வியின் தாக்கம் மிகக் குறைவாக இருந்திருக்கிறது. 1920ம் ஆண்டிற்குப் பின்னர்தான் கல்வித்தாகம் கொண்ட சிலர் கற்கத்தொடங்கி இருக்கிறார்கள். அதனைத் தொடர்ந்து பாடசாலை உருவாக்கப்பட்டது. கல்வியில் மறுமலர்ச்சி தொடங்கிய காலப்பகுதி எனலாம்.

அந்த வகையில் கவிஞர் S. யூசுப் (கபூரி) அவர்களால் எழுதப்பட்ட "மங்கையருக்கு வாழ்வளித்த மகான் நபி (ஸல்) அவர்கள்" என்னும் மரபுக்கவி நூலை எழுதியுள்ளார். இவர் மிகவும் மார்க்கப் பக்தியுள்ள ஒரு மகான். மரபுக்கவி வடிவில் வடித்த இந்த நூல் இன்றும் என் கைவசம் உள்ளது. அவரைத் தொடர்ந்து பலர் கவிகளையும் கட்டுரைகளையும் எழுதியுள்ள போதிலும் ஏட்டினில் பதியப்படாதது பெரும் குறையாகும். அதேகாலத்தில் பால பண்டிதர் கவிஞர் TS. அக்பர் அதிபர் அவர்கள் கர்நாடக சங்கீதப் பாடல்களை எழுதியிருக்கிறார். அப்பாடல்களில் சில கலாபூசணம் சாய்ந்தமருதூர் அப்துல் ஜப்பார் அவர்களால் பாடப்பட்டு வானொலியகத்தில் பேணப்பட்டிருக்கின்றது. சிலவேளைகளில் அப்பாடல்கள் ஒலிபரப்பப்படுவதை நாம் கேட்டு மகிழ்ந்திருக்கின்றோம்.

இது இவ்வாறிருக்க, நெற்பிட்டிமுனை பளீல் என்னும் பெயரில் முன்னாள் கல்முனை பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய ALM. பளீல் அவர்கள் 1980ம் ஆண்டுக் காலப்பகுதியில் இருந்து கவிதை,

சிறுகதை, கட்டுரைகள் தொடர்ச்சியாக பத்திரிகைகளில் எழுதிவந்தார். சிறந்த இலக்கியவாதி என பட்டம் பெற்ற இவர் சிறந்த கட்டுரைகளையும் சிறுகதைகளையும் தினகரன், மித்திரன், தினபதி போன்ற பத்திரிகைகளுக்கு எழுதியதோடு மட்டுமல்லாமல் தினகரன் வாசகர் மன்றம் ஒன்றையும் நடாத்தி வந்தார். அவரோடு பல இலக்கியவாதிகளும் சேர்ந்து கொண்டனர்.

ALM. பளீல் உடைய சமகாலத்தில் இருந்து எழுதத் தொடங்கிய நன்முனையூர் கையூம் என்னும் புனைப் பெயரில் MLA. கையூம் அதிபர், அல் அக்ஸா ம.வி. நெற்பிட்டிமுனை அவர்கள் அதாவது நானும் கவிதை எழுதத் தொடங்கினேன். என்னுடைய கவிதைகள் மரபுக்கவிதை சார்ந்ததாகவும், புதுக்கவிதை சாயலிலும் அமைந்ததாகும். பல பத்திரிகைகளுக்கு எழுதினேன். தினகரன், வீரகேசரி, தினபதி, ஈழநாதம் போன்ற பத்திரிகைகளில் கவிதைகள் வெளிவந்த வண்ணம் இருந்தன. 1992ம் ஆண்டு இக்கவிதைகளை யெல்லாம் ஒன்றுசேர்த்து "தவறிய தவறுகள்" என்னும் தலைப்பில் புத்தகமாக வெளியிட்டேன். அனைவரும் இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டனர்.

கவிஞர் S. யூசுப் மௌலவி அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ் வெளியீட்டு விழாவில் கவிஞர் பாவலர் பளீல் காரியப்பர் அவர்கள் சிறப்புரை வழங்கினார்கள். மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத், நெற்பிட்டிமுனை பளீல் ஆகியோர் ஆசி உரை வழங்கினார்கள். தொடர்ந்து நயத்தல் உரை மருதூர் கொத்தன் VM. இஸ்மாயில் வழங்கினார். சிறப்பு பேச்சாளர்களாக AA. கபூர் அதிபர், A. சமது அதிபர் அவர்களும் உரையாற்றினர்.

**1. ALM. பளீல்**

"மடிக்குள் விழுந்த வெள்ளிகள்" - கவிதைத் தொகுதி

"மெல்லச்சாகும் வாலிபம்" - சிறுகதைத் தொகுதி

"சொந்தமில்லாத நினைவுகள்" - தொடர்கதை தினகரன் நாவல்

**2. MLA. கையூம்**

"தவறிய தவறுகள்" - கவிதைத் தொகுதி

3. **AGM. கிஷோர்**

"மரணித்த மனம்" - கவிதைத் தொகுதி

"ஒன்றிலும் ஒன்றுமில்லை" - சிறுகதைத் தொகுதி

"கலை அமுதம்" - சஞ்சிகை - இதழாசிரியர்

- இவர் பெற்ற விருதுகள் - சாமசிறி தேசமானிய - 2014
  ரத்தின தீபம் - 2015
- சிறந்த ஆசிரியருக்கான ஜனாதிபதி விருது 3 வருடங்கள் 2013, 2014, 2015

4. **SJ. ஸமான்**

"நகுலனின் வளர்ப்புப் பூனை" - கவிதைத் தொகுதி

இவைகள் நூலுருப் பெற்றவைகள். இன்றும் பலர் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அவை நூலுருப் பெறவில்லை.

# நாட்டுவைத்தியமும் நம்மவர்களும்

1. MH. தம்பிசாஹிபு போடியார் - விச வைத்தியர்

2. அல்ஹாஜ் TS. அக்பர் அதிபர் - விச வைத்தியர்

3. ஜனாப் TS. கரீம் வைத்தியர் - முறிவு வைத்தியம், மனநோய்

4. அல்ஹாஜ் ALM. இப்றாகிம் வைத்தியர் - யூனானி வைத்தியர்

5. ஜனாப் S. அபூபக்கர் (கிண்ணியா கொட்டர்) - விச வைத்தியர்

6. அல்ஹாஜ் MM. இப்றாகீம் (தேசிக்காய் வைத்தியர்) - சித்த ஆயள்வேதம், மனநோய்

7. அல்ஹாஜ் ML. நாஸர் (சமூர்த்தி) - பொது வைத்தியர்

8. அல்ஹாஜ் AM. அகமதுலெப்பை(வைத்தியர் - சித்த ஆயள்வேதம்

9. ஜனாப் ST. கரீம் (ஜமால்தீன்) (தேங்காய் வைத்தியர்) - பொது வைத்தியர்

10. ஜனாப் MH. இத்ரீஸ் (வீடமைப்பு) - விச வைத்தியர்

11. ஜனாப் அப்துல் றகீம் (வைத்தியர்) - சித்த ஆயள்வேதம்

12. ஜனாப் முனியர் (வைத்தியர்) - மாந்திரீகம்

13. ஜனாப் S. முகம்மது ஹனிபா (வைத்தியர்) - மாந்திரீகம்

## ஜம்மியதுல் உலமா சபை நெற்பிட்டிமுனை

1. அஷ்ஷெய்க் அல்ஹாஜ் UL. அப்துல் கபூர் (பலாஹி), தலைவர்
2. அஷ்ஷெய்க் AL. நாஸிர் கனி (ஹாமி), உப தலைவர்
3. அஷ்ஷெய்க் MTA. முனாப் (ஹாமி), உப தலைவர்
4. அஷ்ஷெய்க் AM. சாலிதீன் (ஹாமி), உப தலைவர்
5. அஷ்ஷெய்க் MCA. றஊப் (ஹாமி), உதவிச் செயலாளர்
6. அஷ்ஷெய்க் ILM. அனீஸ் (ஹாமி), பொருளாளர்
7. அஷ்ஷெய்க் அல்ஹாஜ் ALM. ஜஹாங்கிர் (ஹாமி), உறுப்பினர்
8. அஷ்ஷெய்க் அல்ஹாஜ் KL. நஸ்பர் (ஹாமி), உறுப்பினர்
9. அஷ்ஷெய்க் IM. முத்தஹார் (ஹாமி), உறுப்பினர்
10. அஷ்ஷெய்க் I. முஸம்மில் (ஹாமி), உறுப்பினர்
11. அஷ்ஷெய்க் AR. அஸ்ரப் (சஹாபி), உறுப்பினர்
12. அஷ்ஷெய்க் MBM. நிஸ்பர் (ஹாமி), உறுப்பினர்
13. அஷ்ஷெய்க் MM. றியாஸ் (ஹாமி), உறுப்பினர்
14. அஷ்ஷெய்க் JM. றிஸான் (ஹாமி), உறுப்பினர்
15. அஷ்ஷெய்க் I. காமில் (ஹாமி), உறுப்பினர்
16. அஷ்ஷெய்க் AH. ஜிஹாத் (ஹாமி), உறுப்பினர்
17. அஷ்ஷெய்க் AR. முர்ஸலீன் (ஹாமி), உறுப்பினர்
18. அஷ்ஷெய்க் AM. ஹய்தர் ஹம்ஸத் (ஹாமி), உறுப்பினர்

19. அஷ்ஷெய்க் AR. ஹப்றத் (ஹாமி), உறுப்பினர்

20. அஷ்ஷெய்க் AM. கியாஸ் (ஹாமி), உறுப்பினர்

21. அஷ்ஷெய்க் AR. ஜ.ஃபர் (ஹாமி), உறுப்பினர்

22. அஷ்ஷெய்க் T. அஸ்மிர் (ஹாமி), உறுப்பினர்

23. அஷ்ஷெய்க் AC. இம்தாத் (ஹாமி), உறுப்பினர்

24. அஷ்ஷெய்க் I. றிகாஸ் (ஹாமி), உறுப்பினர்

25. அஷ்ஷெய்க் AMM. பர்ஸாத் (ஹாமி), உறுப்பினர்

26. அஷ்ஷெய்க் MT. பிரசாத் (ஹாமி), உறுப்பினர்

27. அஷ்ஷெய்க் AHHM. நௌபர் (ஹாமி), உறுப்பினர்

28. அஷ்ஷெய்க் N. நபீர் (ஹாமி), உறுப்பினர்

29. அஷ்ஷெய்க் MF. பஸ்மீர் (சஹாபி), உறுப்பினர்

30. அஷ்ஷெய்க் AL. றிகாப் (சஹாபி), உறுப்பினர்

31. அஷ்ஷெய்க் KM. தானிஸ் (றசீதி), உறுப்பினர்

32. அஷ்ஷெய்க் IM. யசீர் கமால் (ஜமாலி), உறுப்பினர்

## உறவைத்தேடும் உதிரம்

சொந்தமண் மறந்தோ மடா
சுதந்திரங்கள் இழந்தோமடா
பந்தமண் நாடி - நாம்
பறந்ததே! ஏனடா!

அந்தரத்தில் நாமமர்ந்தோம்
ஆத்திரங்கள் தாமடைந்தோம்
சொந்த பந்தமும்
சூழவே இல்லையென
கவலையே கொண்டுள்ளோம்.

பிறந்த உறவை யாம் மறந்தோம்
பெற்றவரைத் தாம் மறந்தோம்
கற்றவர் என்ற திமிர்
கருத்தினில் கொண்டு வாழ்ந்தோம்.

ஏகன் எழுதிவைத்தான்
பிறந்த ஊரில் - அதை
எடுக்கவே மறந்து விட்டோம்
பாவம் செய்துவிட்டோம்
பரிதாபப்பட நேரமில்லை

உம்மா ஊரிலே நோயால்
சுழலுகிறாள்
வாப்பாவோ இருமிக்கொண்டு

கட்டிலிலே தூங்குகிறார்
பாவம் அந்த டாக்டருக்கு
பார்க்கவே நேரமில்லை.

ஒருமாதம் கழித்து
ஊருக்கு வருகிறார்
உம்மா வென்றழைத்து
உணவு கூடக் கொடுக்கிறார்

தளதளத்த குரலில் தாயவள்
பேசுகிறாள்
உன்னை எந்தநேரமும் பார்க்கனும் மகன் - நீ
வந்தால் போதும் - நோய்
பஞ்சாய்ப் பறந்திடுமே!

உம்மா நேரம் இல்ல உம்மா
அவட வாப்பாவுக்கு வருத்தம்
அத்தோட அவளுக்கும் தான் வருத்தம்
பிள்ளை கூட பால் குடிக்குதில்ல
என்ன செய்வது அவைகளையும்
பார்க்கத்தானே வேணும்.

டேட தம்பி நீ சிறுவனாய்
இருந்தபோது பால் குடிக்காததை
கண்ட நான்
அழுததற்கே கணக்கில்லையடா

தம்பிமுத்து வைத்தியரிடம் - உன்னை
எத்தனை நாள் தூக்கிச் சென்றேன்
பஸ்ஸில் செல்லும் போது - நீ

கக்கா அடித்து விட்டாய்
பக்கத்தில் இருந்தவர்கள் - என்னை
ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள் - நான்
வெட்கத்தில் சோர்ந்துவிட்டேன்
அது இன்னைக்கு ஞாபகம் வருகுதிடா!

பழைய கதையெல்லாம்
வேண்டாம்மம்மா - நான்
போயிட்டு வாறேன் - உடம்ப
பத்திரமாய் பார்த்துக்க
நானாடா பார்ப்பது
நீயாடா பார்ப்பது
அநியாயம் செய்திட்டேன்டா
அரைக்கோடி வாங்கி - உன்னை
விற்றதுதான் குற்றமடா!

இருமல் ஒலியோடு ஒருசத்தம்
அவண்ட ஊரடி அவனுக்கு
அவண்ட பொண்டாட்டி பிள்ளைகள்
மாமினார் மாமியா
பெரிசாச்சிடி க்கு.......க்கு
இருமல் சத்தத்தோடு தூங்குகிறார்
இருள் படருகிறது.....
முனகல் சத்தம் தொடருகிறது......

தேசியமானி, கல்வித் தீபம்,
கவிஞர், அல்ஹாஜ் MLA. கையூம்
நெற்பிட்டிமுனை




## நெற்பிட்டிமுனை இளைஞர் வள நிலையம்

## (தட்டச்சுப் பிரிவு)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அனுசரணையுடன் 1992.04.02ம் திகதி நெற்பிட்டிமுனையில் மிகப் பிரமாண்டமான முறையில் இளைஞர் வள நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இந் நிலையம் கரைவாகு மேற்கு உப அலுவலக கட்டடத்தில் இயங்குவதற்கான அனுமதியை அப்போதைய பிரதேசச் செயலாளரும் விசேட ஆணையாளருமான மர்ஹூம் ALM. பளீல் அவர்கள் வழங்கியிருந்தார்.

நெற்பிட்டிமுனை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் வள நிலையத்தில் இப்பிரதேச வாழ் தமிழ், முஸ்லிம் இளைஞர் யுவதிகளுக்கு தொழிற்பயிற்சியை உருவாக்கும் நோக்கில் அப்போதைய வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் மாண்புமிகு AR. மன்சூர் அவர்களின் 1992ம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அம்பாறை மாவட்ட காரியாலயத்தினூடாக இவ்விளைஞர் வள நிலையத்திற்கு இரண்டு தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

1992.10.16ம் திகதி இந்த நிலையத்தில் தமிழ், முஸ்லிம் இளைஞர் யுவதிகள் 72 பேரைக் கொண்டு தட்டச்சுப் பயிற்சிநெறி (6மாதம்) ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாரம்ப நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரிகள், தமிழ் - முஸ்லிம் சமயப் பெரியார்கள், ஊர் பிரமுகர்கள், நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். முதல் கட்டமாக ஆறு மாத காலத்தில் நடந்து முடிந்த தமிழ், ஆங்கில தட்டச்சுப் பயிலுணர்கள் 72 பேர்களுக்காக சான்றிதழ்கள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அம்பாறை மாவட்டக் காரியாலயத்தின் அனுசரணையில் 1993.04.23ம் திகதி நெற்பிட்டிமுனை இளைஞர் வள நிலையத்தில் முன்னாள் அமைச்சர் AR. மன்சூர் அவர்களை பிரதம அதிதியாகக் கொண்டு வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உயர் அதிகாரிகள் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் A. அப்துல் கபூர் ஓய்வுபெற்ற அதிபர், காசுபதி தெய்வநாயகம் உட்பட சமயப் பெரியார்கள், நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர். இச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வோடு இரண்டாம் கட்டத்தில் தட்டச்சுப் பயிற்சி நெறிக்காக தெரிவுசெய்யப்பட்ட 56 தமிழ் முஸ்லீம் இளைஞர் யுவதிகளுக்கு அவர்களுக்கான அனுமதிக் கடிதங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

ஆறுமாத கால இரண்டாம் கட்ட தட்டச்சு பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த 56 இளைஞர், யுவதிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கமு/கமு/அல் அக்ஸா மகா வித்தியாயல மண்டபத்தில் முன்னாள் அமைச்சர் AR. மன்சூர் அவர்கள் பிரதம அதிதியாகவும் இளைஞர் வள நிலைய முகாமைத்துவப் பணிப்பாளர் VM. ஸம்ஸம் அவர்களின் தலைமையில் 1993.12.31ம் திகதி இடம்பெற்றது. இதில் கல்முனை பிரதேச செயலாளர் மரஹூம் ALM. பளீல், MI. அமீர் அவர்களோடு ஊர்ப் பிரமுகர்கள், சமயப் பெரியார்கள், நலன் விரும்பிகள் என அதிகமானோர் பங்கேற்றனர். அன்றைய இரண்டாம் கட்டப் பயிலுனர்களின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வோடு மாண்புமிகு அமைச்சர் AR. மன்சூர் அவர்களால் மேலும் ஒரு தட்டச்சு இயந்திரம் கையளிக்கப்பட்டதால் இந்த நிலையத்துக்கான தட்டச்சு இயந்திரங்கள் இரண்டு தமிழ், ஒரு ஆங்கிலமாக அதிகரிக்கப்பட்டது. இரண்டாம் கட்ட தட்டச்சு பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த இளைஞர் யுவதிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வோடு மூன்றாம் கட்டமாக ஆரம்பிக்கப்படவிருந்த தட்டச்சுப் பயிற்சி நெறிக்காக தெரிவு செய்யப்பட்ட 94 தமிழ், முஸ்லிம் பயிற்சியியலாளர்களுக்கான அனுமதிக் கடிதங்களும் வழங்கப்பட்டன.

மேலும் நெற்பிட்டிமுனை இளைஞர் வள நிலையத்தில் சாய்ந்தமருது, பாண்டிருப்பு, மணச்சேனை, சேனைக்குடியிருப்பு 4ம், 5ம், 11ம், 12ம் கொளணிகள், மத்தியமுகாம் போன்ற பிரதேசங்களிலிருந்து பயிற்சி நெறிக்காக வருகை தந்த தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ இளைஞர் யுவதிகளுக்கு மிகச்சிறந்த முறையில் AR. சமியுன், MS. பாயிதா, MS. சுனிதா, E. பத்மினி ஆகியோர்களைக் கொண்டு இதுவரையில் மூன்று கட்டங்களில் 226 இளைஞர் யுவதிகளுக்கு தமிழ், ஆங்கில தட்டச்சுப் பயிற்சிநெறி வழங்கப்பட்டது.

இந்த நிலையில் நெற்பிட்டிமுனை இளைஞர் வள நிலைய ஈராண்டு பூர்த்தியினை முன்னிட்டு பயிலுனர்களால் இரண்டாம் கட்ட சான்றிதழ் வழங்கும் நிகழ்வை ஒட்டியதாக "பூவிதழ்" என்னும் மலரும் வெளியிடப்பட்டது. இம்மலரின் ஆசிரியராக ML. நௌசாத் செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

மூன்றாம் கட்ட பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்த 94 இளைஞர், யுவதிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அப்போதைய கப்பல்துறை, துறைமுகங்கள், புனர்வாழ்வு, புனரமைப்பு துறை அமைச்சரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவருமான மர்ஹூம் MHM. அஸ்ர∴ப் அவர்கள் கலந்து கொண்டதோடு அமைச்சர் அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஆறு தட்டச்சு இயந்திரங்களும் கையளிக்கப்பட்டன. இதன்படி இந்த நிலையத்தின் தட்டச்சு இயந்திரங்களின் தொகை ஒன்பதாக அதிகரிக்கப்பட்டது.

நான்காம் கட்ட தட்டச்சு பயிற்சி நெறிக்காக 126 இளைஞர், யுவதிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான பயிற்சியின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வுக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றப் பணிப்பாளர் A. நாகேந்திரன் பிரதம அதிதியாகக் கலந்து சான்றிதழ்களை வழங்கிவைத்தார்.

ஐந்தாம் கட்டப் பயிற்சி நெறிக்காக 102 இளைஞர், யுவதிகள் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி முடிவின்போது அவர்களுக்கான சான்றிதழ்களை தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப்பணிப்பாளர் ஹார்வின் ஹீனிட்டிகல அவர்களால் வழங்கி வைக்கப்பட்டது.

இவ் ஐந்து கட்டங்களில் 454 தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ இளைஞர் யுவதிகள் தட்டச்சு பயிற்சியைப் பூர்த்தி செய்து சான்றிதழ்களை பெற்றதோடு இவர்களில் பலர் இன்று துறைசார் தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். பின்னர் இந்த நிலையத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் VM. ஸம்ஸம் திருமணப் பந்தத்தில் ஈடுபட, இளைஞர் என்ற அந்தஸ்தை

இழக்க பலரின் வேண்டுகோளின் பேரில் “அந்-நுஸ்ரத்” கிராமிய மன்றத்தின் அனுசரணையோடு மூன்று கட்டங்களில் 6 மாதகால தமிழ், ஆங்கில தட்டச்சு பயிற்சியை பூர்த்தி செய்த 174 இளைஞர் யுவதிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டதுடன் “அந்-நுஸ்ரத்” அமைப்பினால் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இதற்கான இரண்டு தட்டச்சு இயந்திரங்களை EHED அமைப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த தட்டச்சுப் பயிற்சி வகுப்பு தனியார் இடத்தில் இடம்பெற்று வந்தமையால பொருளாதார நெருக்கடி ஏற்றபட்டதன் காரணமாக தொடர முடியாமல் போனது.

*தகவல்:- VM. ஸம்ஸம் (SLPS 2)*

*நெற்பிட்டிமுனை*

# விதி

- *விதி விருப்பமுள்ளவரை அழைத்துச் செல்கிறது: விருப்பமில்லாதவரை இழுத்துச் செல்கிறது.*
- *ஒருவன் தன் விதியின் நுனியைப் பார்க்க விரும்பினால் அவன் உயர்ந்து நிற்க வேண்டும்.*
- *விதிக்கு பணிந்து விடுதலே அறிவுடமையாகும்.*
- *தான் தவிர்க்க முயலும் வழியில் தான் ஒருவன் தன் விதியைச சந்திக்கிறான்.*

## நெற்பிட்டிமுனை (கரைவாகு மேற்கு) அரசினர் வைத்தியசாலை



இவ்வைத்தியசாலை நெற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு ஆகிய இரு கிராமங்களின் மத்தியில் அமைந்துள்ள காரணத்தினாலும் எந்த ஊருடைய பெயர் பொறிப்பது என்ற சர்ச்சையினாலும் இரு ஊர் மக்களும் பயன்பெறுவதாலும் பொதுவாக "கரைவாகு மேற்கு அரசினர் வைத்தியசாலை" என நாமம் பொறிக்கப்பட்டுள்ளது. இவ்வைத்தியசாலையை அமைப்பதற்கு அக்காலத்தில் முல்லைத்தீவு மாவட்ட அமைச்சரும் கல்முனைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான AR. மன்சூர் அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் அக்காலகட்ட கரைவாகு மேற்கு உப அலுவலக அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தராகக் கடமையாற்றிய A. அப்துல் கபூர் அவர்களின் வேண்டுதலின் பேரில் அமைக்கப்பட்டது.

இவ்வைத்தியசாலையின் திறப்பு விழா 1985.03.15ம் திகதி அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் (RDHS) டாக்டர் N. பத்மநாதன் அவர்களின் அழைப்பின் பேரில் முல்லைதீவு மாவட்ட அமைச்சரும் கல்முனைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான AR. மன்சூர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இவ்வைத்தியசாலையின் முதலாவது டாக்டராக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த டாக்டர் K. ரகுநாதன் கடமையாற்றினார். தற்பொழுது டாகடர் புஸ்பலதா லோகநாதன் கடமையாற்றி வருகிறார். கடந்த வருடம் சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் இவ்வைத்தியசாலை புனரமைப்பு செய்யப்பட்டு நவீன உபகரணத் தொகுதியும் கிடைக்கப்பட்டுள்ளது. இந்த அரசினர் வைத்தியசாலையை நெற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு மக்கள் நன்கு பயன்படுத்தி வருகின்றனர்.

*தகவல்:- VM. ஸம்ஸம் (SLPS 2)*

*நெற்பிட்டிமுனை*

# சொந்தமண் மறந்து பந்தமண் தேடியோர்

ஊரை நேசிக்க வேண்டும்; உறவை நேசிக்க வேண்டும். பிறந்த தாயகத்தை மறத்தல் பெற்றோரை இழப்பதற்குச் சமனாகும். இன்று இளைஞர்கள் தனது முற்காலத்தை மறந்து பிறந்த மண்ணையும் மறந்து உறவுகள் உரிமைகளை மறந்து பல வகைப்பட்ட தேவைகளைக் கருத்தில் கொண்டு ஊர்விட்டு ஊர் சென்று திருமணம் முடித்து வாழ்வைத் தொடங்குகிறார்கள். இது நாகரீகமா அல்லது பணத்தின் மீது கொண்ட பேராசையா என்பதை புரியாதுள்ளது. உலகத்தில் எப்படித்தான் உயரப் பறந்தாலும் 70 வயதைத் தாண்டி விட்டால் பாய், படுக்கை தொடங்கிவிடும் நோய் விட்டுவிடாது. எவ்வளவுதான் பணம் செலவு செய்து வைத்தியங்கள் செய்தாலும் இறுதியில் பயனற்றுப் போய்விடும் மரணத்தைத் தந்திடும். அவற்றையெல்லாம் மறந்து நாம் எவ்வாறு வாழ்கின்றோம் என்று சற்று சிந்தித்துப் பார்ப்போமாயின் ஊரைப்பற்றி சிந்தித்த நன்மை தமக்கு கிடைக்கும் என்பதை நினைக்கத் தவறி வாழ்கிறோம்.

அன்புக்குரிய இளைஞர்களே! நன்றாகச் சிந்தியுங்கள். எமது ஊரின் முதியவர்கள் படித்த உயர்பதவிகளை பிடித்தவர்கள் பலர் எங்கள் ஊரை வெறுத்து வேறு ஊர்களில் திருமணம் முடித்துச் செல்வது எமது ஊருக்குச் செய்யும் துரோகமாக பார்க்க வேண்டியிருக்கிறது. ஊரின் எதிர்காலத்தை நேசிக்காது எதிர்கால சந்ததியினரை பாழ்கிணற்றில் தள்ளிவிடுவது போன்று வெறுத்துச் செல்வதென்பது பாரதூரமான குற்றமாகப் பார்க்கவேண்டியிருக்கிறது. ஊருக்காக அல்லாஹ் தந்த அருட்கொடைகளே கற்றவர்கள் கற்று பயன்பெற்று வேற்றூரில் திருமணம் முடித்து சென்ற எமது சொந்தங்கள் எதிர்கால எமது ஊர் சந்ததிகளுக்காக எதை விட்டுச் சென்றார்கள். இன்று கற்ற சமூகம் எதிர்கொள்ளும் சவால்களை நம் முன்னோர்கள் செய்திருந்தால்

எமது ஊர் இந்த நிலைக்கு வந்திருக்குமோ சிந்தித்து பார்ப்போர் பிறந்த மண்ணை மறந்து வாழ்வதால் எதனைச் சாதித்துவிட்டார்கள்.

இன்று எமதூர் பாடசாலைகள் வளர்ச்சி குன்றிக் காணப்படுகின்றன. மாணவர்கள் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள். கல்வியில் கடைசி நிலையில் இருக்கிறோம். கவலைப்படுவதற்கு யாரும் இல்லை. நல்லதைச் சொல்வதற்குக்கூட நாதியற்றுப்போய் இருக்கிறோம். நல்லவை செய்தால்கூட ஆயிரம் விமர்சனங்கள். இதனால் நல்லது செய்ய முன்வருவோர்கூட நடுநடுங்கி வீடுகளில் அடைபட்டுக் கிடக்கிறார்கள். நல்ல நிகழ்வுகள் நடக்கும்போது பாராட்டுக்கள் கிடைக்க வேண்டும்; உட்சாகப்படுத்த வேண்டும். இவ்வாறு செய்து ஊக்கப்படுத்தும் போது மேலும் முன்னேறுவதற்கு தூண்டுகோல் ஏற்படும் அல்லவா. அதைவிடுத்து விமர்சிப்பதாலும் வீண்பேச்சுப் பேசுவதாலும் ஆன பலன் ஒன்றும் இல்லையே. அதனால் பாதிப்புக்குள்ளாவது நல்லவையே.

பாடசாலைக்குப் பிள்ளைகளை சேர்க்கும் விதத்தில் பெற்றோர் காட்டும் கரிசனைகளை அவதானிக்கும்போது மிகவும் கவலைப்பட வேண்டியிருக்கிறது. ஏறக்குறைய 823 ஆண், பெண் மாணவர்கள் வேறு பாடசாலைக்கு செல்கின்றனர். கடந்த ஆண்டுகளை கணக்கெடுத்துப் பார்க்கும்போது ஒவ்வொரு வருடமும் நமதூர் பாடசாலைகளில் சேரும் பிள்ளைகளைப் பார்த்தால் வேதனைப்பட வேண்டிய விடயமாக இருக்கிறது. அல் லாபீர் வித்தியாலயத்தை நோக்கும்போது 2013ம் ஆண்டு சேர்ந்த பிள்ளைகள் தொகை 30 பிள்ளைகளாக இருந்தது 2014ம் ஆண்டு 22 பிள்ளைகளாக குறைந்துள்ளது. 2015ம் ஆண்டில் 17 பிள்ளைகள் முதலாம் தரத்தில் சேர்ந்துள்ளார்கள். 2016ம் ஆண்டில் 11 பிள்ளைகள் சேர்ந்திருக்கிறார்கள். இப்படிப் பார்க்கும்போது 2017ம் ஆண்டில் 5 அல்லது 6 பிள்ளைகள் சேரலாம். 2018ல் ஒரு பிள்ளைகளும் சேராது போகலாம். அதன் காரணமாக பாடசாலையை மூட வேண்டிய நிலை ஏற்படலாம். அதேபோன்றுதான் அல் அக்ஸாவுடைய நிலையும் இருக்கிறது. 2013ல் 41 பிள்ளைகளும் 2014ல் 38 பிள்ளைகளும் 2015ல் 35 பிள்ளைகளும் 2016ல் 31 பிள்ளைகளும் சேர்ந்திருக்கிறார்கள். 2017ல் 25 பிள்ளைகளும் 2018ல் 19 பிள்ளைகளும் 2019ல் 10 பிள்ளைகளாகக் குறைந்து 2020ல் முற்றாகச் சேராது போனால் அல் அக்ஸாவின் நிலை என்னவாகும். பாடசாலையை மூடுவதா என்ற கேள்விக்குறியோடு நோக்கவேண்டி இருக்கிறது.

நன்றாகச் சிந்தித்து பாருங்கள். வேற்றூர்கள் பத்துப் பன்னிரெண்டு பாடசாலைகளை வைத்திருக்கும்போது நாம் மட்டும் இரண்டு பாடசாலைகளோடு இருந்தும் அவைகளையும் இழப்பதென்றால் எந்தளவுக்கு நமது ஊர் இருக்கிறது என்பதை நான் சொல்லி நீங்கள் அறிய வேண்டிய விடயமல்ல. இன்னும் சொல்லப் போனால், ஓர் ஊரின் இரு கண்கள் என வர்ணிக்கப்படுவது பள்ளிவாயல்களும் பாடசாலைகளுமேயாகும். அவற்றுள் ஒன்றை இழந்தால் ஒரு கண்ணை இழப்பதற்குச் சமனாகும். "மங்கை சூதகமானால் கங்கையில் கழுவலாம்; அந்த கங்கையே சூதகமானால் எங்கே கழுவலாம்?" சிந்தித்து பாருங்கள். இன்று மற்றைய ஊரவர்கள் தங்கள் ஊருக்கு வைத்தியசாலை, வங்கிகள், அபிவிருத்தித் திட்டங்கள், கலாச்சார மண்டபங்கள், வேறு எதுவெல்லாம் தேவையோ அவற்றையெல்லாம் வரவழைக்கத் திட்டம் தீட்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது எமதூர் மக்களுக்கு மட்டும் என்ன நேர்ந்தது? இன்னும் இன்னும் அடுத்த ஊரை நாடி வாழலாமா? நன்றாக சிந்தித்துப் பாருங்கள். அயலவனின் பல்லைவிட நமது முரசு சிறந்ததல்லவா. சொந்தக்காலில் நிற்கப்பழக வேண்டாமா? மற்றவர்கள் உயரப்பறக்க நினைக்கும்போது நாம் மாடிப்படியிலாவது ஏறுவதில்லையா?

அந்தக்காலத்தில் நமதூர் பாடசாலைக்கு வேற்றூர்களில் இருந்து வந்து பலர் கற்றுச்சென்று பயன் பெற்றிருக்கிறார்கள். இன்று நாம் வேற்றூருக்குச் சென்று கற்கும் நிலை ஏற்பட்டிருக்கிறதே என்பதை எண்ணிப்பார்க்க நேரமில்லையா? சில பெற்றோர்களை அணுகி ஏன் வேற்றூர் பாடசாலைகளில் சேர்க்கிறீர்கள் என வினவியபோது புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்பதற்காக என்று பதில் கூறுகிறார்கள். அப்படித்தான் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைவதற்காகவென்றால் நமதூரில் சித்தியடைய மாட்டார்களா? அங்கே படிப்பு நல்லதென்றால் இங்கிருந்து செல்லும் எல்லோரும் அல்லவா சித்தியடைய வேண்டும். 2015ம் ஆண்டில் வேற்றுப் பாடசாலைகளில் கல்விகற்கச் சென்ற ஐந்தாம் தர மாணவர்கள் 92 பேரில் 4 பேர்தான் சித்தியடைவதா? 92 பேரும் அல்லவா சித்தியடைந்திருக்க வேண்டும் அந்த 4 பேரும் அல் அக்ஸாவில் அல்லது அல் லாபிர் வித்தியாலயத்தில் கற்றிருந்நதால்கூட சித்தியடைந்துதான் இருப்பார்கள். வேண்டுமென்று விதண்டாவாதத்தில் செய்யும்போது நாம் என்னதான் செய்வது.

"தாய் நாட்டை நேசிக்காதவன் தாயை நேசிக்க மாட்டான். பிறந்த ஊரை நேசிக்காதவன் சொந்த உறவை நேசிக்கமாட்டான்". இந்த முதுமொழிக்கு ஒப்ப இன்று எம்மில் பலர் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாடென்ன செய்தது நமக்கு எனக் கேள்விகள் கேட்பது எதற்கு? நீ என்ன செய்தாய் அதற்கு என நினைத்தால் நன்மை இருக்கு என்பது ஒரு பாடல் வரியாகும். இதே போன்றுதான் எமது நிலை இருக்கின்றது என்பதை நாம் உணர வேண்டும். எமது ஊரைவிட்டு பிரிந்து வாழும் உத்தியோகத்தர்கள் ஏறக்குறைய 75 பேர் உள்ளனர். இவர்கள் இந்த ஊரில் இருந்திருந்தால் எவ்வளவு சிறப்பாக இருந்திருக்கும். 5 டாகடர்கள், 2 பொறியியலாளர்கள். இதில் 2 டாக்டர்கள் மாத்திரம் ஊரில் திருமணம் முடித்துள்ளார்கள். அவர்களும் வெளிநாடுகளுக்குச் சென்று உழைக்கிறார்கள்.

ஒரு ஊரில் டாக்டர் இருப்பது பர்ளாகும். இதை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். இதைக்கூட நமது சமூகம் மறந்துவிட்டது போலும். எமது பக்கத்து கிராமங்களைப் எடுத்துப் பாருங்கள் கிழக்கு மாகாணத்திற்கே சவால் கூறும் அளவுக்கு அவைகள் மாறியிருக்கின்றன. பொன்கொழிக்கும் பூமிகளாகவுள்ளன. தெருவுக்குத்தெரு டாக்டர்களும் உயரக் கற்றவர்களும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு வீட்டிலும் பட்டம் முடித்த பட்டதாரிகள் நூற்றுக்கணக்கில் வாழ்கிறார்கள்.

பல்கலைக்கழகங்களில் ஒவ்வொரு ஊரும கூட்டங் கூட்டமாக இருக்கிறது. அப்படி தனித்துவத்தோடு வாழும் அவர்களைப்போல் ஒருபடியாவது முன்னேற வேண்டும் என்ற எண்ணம் தோன்றுவதில்லையா? அம்மாணவர்கள் எங்கு சென்று படிக்கிறார்கள்? அவ் இளைஞர்கள் எந்த ஊருக்கு திருமணம் முடித்துச் செல்கிறார்கள்? ஆயிரத்தில் ஒன்று வித்தியாசப்பட்டவர்கள் இருக்கிறார்கள்தான். அதற்காக எல்லோரும் சென்றுவிட்டால் இங்கு ஏழைகளும், வயது முதிர்ந்தவர்களும், குழந்தைகளும்தான் மிஞ்சுமல்லவ.ா ஆகவே, எமதூரை வளப்படுத்துவதற்கு முன்வருமாறு நமதூர் இளைஞர்களையும் படித்தவர்களையும் அழைக்கின்றேன்" அன்புக் கட்டளை இடுகின்றேன்.

எமதூர் எடுப்பார் கைப்பிள்ளையாக மாறிவிட்டது. தடி எடுத்தவர்களெல்லாம் வேட்டைக்காரர்களாக மாறிவிட்டார்கள். அரசியல் வாதிகளைப் பொறுத்த வரையில் அரசியல் தேவைக்காக எம் ஊரைப் பயன்படுத்திவிட்டு அப்படியே கைவிட்டு விடுகிறார்கள். 'குலைக்கும் நாய்க்கு ஒரு தேங்காய் கட்டி' என்னும் வகையில் ஒரு றோட்டுப்

போடுவதற்குக் கொந்துராத்து கொடுத்துவிட்டால் அடங்கிவிடுகிறோம். பின்னர், அடுத்த தேர்தலில் சந்திப்போம். இது எமதூருக்கு பழக்கப்பட்ட செயல். யாரும் சிந்தித்து செயல்படாமல் விடுவோமேயானால் எமதூரின் நிலை அதள பாதாளத்திற்கு சென்றுவிடும். படித்தவர்களும் பணம் படைத்தவர்களும் மிகைத்து வாழும் வேற்றூர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்ற நிதிகளின் அளவை தெரிந்தால் எம்மை நாம் மறந்து போய்விடுவோம். அவ்வூரவருக்கும் எமதூருக்கும் கிடைக்கும் நிதி ஒதுக்கீட்டில் பாரிய வித்தியாசம் காணப்படுகிறது என்பதை அறிந்திருக்க வேண்டும். இதற்கெல்லாம் காரணம் அறிவாளிகள், புத்துஜீவிகள்,

## சாதனையாளர்கள்

1. 1997ம் ஆண்டு அகில இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்று அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களினால் றுகுணு பல்கலைக்கழகத்தில் ஜனாதிபதி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர் **வசீர் முகம்மது மக்பூல்.**

2. 2002.07.15ம் திகதி குண்டெறிதல் நிகழ்வில் மாகாண மட்டத்தில் சாதனை நிலைநாட்டி எமது ஊருக்கு பெருமை சேர்த்தவர் **சுலைமாலெப்பை ஜெமீன்**.

3. 2007ம் ஆண்டு நடைபெற்ற பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுனர் போட்டியில் மாகாண மட்டத்தில் 100மீற்றர், 75மீற்றர், நீளம் பாய்தல் நிகழ்வுகளில் முதல் இடம் பெற்று சாதனை புரிந்தவர் **உபைதுல்லாஹ் வஸீம**.

கல்விமான்கள், சமூகத்தொண்டர்கள் இவ்வூரில் இல்லை. கேட்பதற்கு யாரும் இல்லை என்ற அளவுக்கு எமதூர் நிலைமை இருக்கிறது.

## ஊர்விட்டுச் சென்ற உத்தியோகத்தர்கள்

### 1. MSM. மரைக்கார் தம்பி

இவர் இவ்வூரின் முதல் விஞ்ஞானப் பட்டதாரி. சாய்ந்தமருதூரில் திருமணம் முடித்துள்ளார். வாழ்ந்த காலத்தில் அவருடைய மனைவி மரணித்ததால் சம்மாந்துறையில் இரண்டாவது திருமணம் செய்தவர். சம்மாந்துறை தொழினுட்பக் கல்லூரியில் அதிபராக நீண்ட நாட்கள் கடமையாற்றிவிட்டு தற்பொழுது ஓய்வு பெற்றிருக்கிறார். இவருடைய மகன் பொறியியலாளராக ஓமான் நாட்டில் இருக்கிறார்.

### 2. A. அகமட்

இவர் ஆலையடி வடக்கு வீதியில் வசித்தவர். ஆதம்கண்டு விதானையாரின் மூத்த ஆண்மகன். இந்தியாவுக்குச் சென்று படித்தவர். நாடுவந்து ஆங்கில ஆசிரியாகக் கடமையாற்றியவர். தற்பொழுது மரணித்துவிட்டார். சாய்ந்தமருதூரில் OM. அலியார் என்பவரின் மகளை திருமணம் செய்தவர்.

### 3. S. யூசுப்

இவர் நெற்பிட்டிமுனையில் பிறந்தவர். நெற்பிட்டிமுனை தமிழ், முஸ்லீம் கலவன் வித்தியாலயத்தில் கல்வி பயின்றவர். இவரொரு ஆசிரியர். சன்மார்க்கத்தில் சிறந்த ஈடுபாடு கொண்டவர். சாய்ந்தமருதூரில் திருமணம் முடித்து வாழ்ந்தார். தற்பொழுது மரணித்துவிட்டார். இவருடைய மகன் Y. பைஸால் ஆசிரியர் MJ. ஹாரிதா ஆசிரியரை திருமணம் செய்து நெற்பிட்டிமுனையில் வாழ்கிறார்.

### 4. TS. றசூல்

இவர் நெற்பிட்டிமுனை 1ம் கட்டைச் சந்தியில் தற்பொழுது S. குத்தூஸ் அவர்களின் கராஜ் இருக்குமிடத்தில் வாழ்ந்தவர். TS. அக்பர் அதிபரின் கடைசித்தம்பி. மருதமுனையில் வாழ்கிறார். ஓய்வுபெற்று இருக்கிறார். கடைசியாகச் செய்த தொழில் L.O (Land Officer) மக்கள் கனடாவில் வாழ்கின்றனர். மூத்தமகன் R. ஹுமைட் என்பவர் பொறியியலாளராவார்.

### 5. MP. முகையதீன்

இவர் நெற்பிட்டிமுனையை பிறப்பிடமாகக் கொண்டவர். இவ்வூரில் படித்து ஆசிரியர் நியமனம் பெற்று மருதமுனைக்கு திருமணம் முடித்துச் சென்றவர். இறுதியாக அதிபராக இருந்து ஓய்வு பெற்றவர். தற்பொழுது மருதமுனையில் நியுஸ் பேப்பர் கடை வைத்திருக்கிறார். இவருடைய பிள்ளைகளில் ஒருவர் ஆயுள்வேத டாக்டராக இருக்கிறார். மற்றைய மகன் M. அரபாத் கல்விப்பணிப்பாளராக கல்முனையில் கடமையாற்றி வருகிறார். இன்னும் பிள்ளைகள் உண்டு.

### 6. MC. முகம்மது அலி

இவர் நெற்பிட்டிமுனையைச் சேர்ந்த முகம்மது காசிம் வட்ட விதானையின் மகனாவார். இவர் பொது சுகாதார வைத்திய அதிகாரியாவார். சம்மாந்துறையில் திருமணம் முடித்திருந்தார். பிள்ளைகளும் உண்டு. 2014ம் ஆண்டு விபத்தில் அகால மரணமானார்.

### 7. AL. ஐபின் லாயிஸ்

இவர் நெற்பிட்டிமுனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். S. அகமது லெப்பை அதிபர் அவர்களின் மூத்த மகனாவார். இவர் சம்மாந்துறையில் திருமணம் முடித்து வாழ்கிறார். ஆசிரியர் தொழில் செய்து தற்பொழுது ஓய்வு பெற்றிருக்கிறார்.

### 8. MM. முனாப்

இவர் நெற்பிட்டிமுனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கடைசியாக அதிபராக இருந்து ஓய்வு பெற்றவர். சம்மாந்துறையில் திருமணம் முடித்துள்ளார். இவர் மாநகரசபை உறுப்பினர் ML. சமீர் அவர்களின் மாமன் ஆவார்.

### 9. AL. ஹிதாயதுல்லாஹ்

இவர் நெற்பிட்டிமுனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சம்மாந்துறையில் திருமணம் முடித்து வாழ்கிறார். இவருடைய மனைவி

ஒரு ஆசிரியை. இவருடைய மகன் டாக்டராக கடமையாற்றுகிறார். இவர் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் முக்கிய பதவி வகித்தவர். பின்னர் மாதுரு ஓயா நீர்த்தேக்கத் திட்டத்தில் தொழில்நுட்ப உதவியாளராக பணிபுரிந்தவர். மும்மொழிகளில் பாண்டித்துவம் பெற்றவர். இவர் தற்பொழுது ஓய்வு பெற்றிருக்கின்றார்.

## 10. MM. இப்றாகீம்

மௌலவியான இவர் ஆசிரியராகத் தொழில் புரிகின்றார். நெற்பிட்டிமுனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சம்மாந்துறையில் திருமணம் முடித்து வசித்து வருகிறார். சம்மாந்துறை பாடசாலை ஒன்றில் ஆசிரியராகக் கடமையாற்றி வருகிறார்.

## 11. CBM. ஹனிபா

இவர் நெற்பிட்டிமுனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தற்பொழுது பொது சுகாதார வைத்திய அதிகாரியாக தொழில்புரிந்து வருகிறார். சம்மாந்துறையில் திருமணம் முடித்திருக்கிறார். இவருடைய மனைவி சம்மாந்துறை வைத்தியசாலையில் தாதியாக கடமையாற்றுகிறார். இவருக்கு இரண்டு பிள்ளைகள் உண்டு.

## 12. DKM. றிஸ்வி

இவர் நெற்பிட்டிமுனையில் மதுரிஸா வீதியில் பிறந்தவர். சம்மாந்துறையில் திருமணம் முடித்து தற்பொழுது கொழும்பு வெல்லம்பிட்டியில் வசித்து வருகிறார். இவரொரு ஊடகவியலாளராவார். கொழும்பில் துறைமுக அதிகாரசபையில கடமைபுரிகிறார். இவருடைய மனைவி இலிகிதராக கடமையாற்றியவர். தற்பொழுது அத்தொழிலை இராஜினாமா செய்துவிட்டார். மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர். DKM. மௌசீன் ஆசிரியரின் மூன்றாவது சகோதரர் ஆவார்.

## 13. அஷ்ஷெய்க் S. காதர்

இவர் நெற்பிட்டிமுனையில் பிறந்தவர். மாவடிப்பள்ளியில் திருமணம் முடித்து வாழ்கிறார். இவர் ஒரு ஆங்கில ஆசிரியராவார். கல்முனை அல் ஹாமியா அரபுக்கல்லூரியில் மௌலவிப்பட்டம் பெற்றவர்.

## 14. CB. கிபார்

இவர் நெற்பிட்டிமுனையில் மதுரிஸா வீதியில் பிறந்து வளர்ந்தவர். உயர் கல்வியை முடித்துவிட்டு வெலிசற மிருகவைத்திய டிப்ளோமா

முடித்து மிருக வைத்தியசாலையில் கடமைபுரிந்து வருகிறார். அக்கரைப்பற்றில் திருமணம் முடித்து வாழ்கிறார். இவருக்கு மூன்று குழந்தைகள் உண்டு. பார்மசி CBM. கியாஸ் ஆசிரியரின் மூத்த சகோதரனாவார்.

### 15. SM. இப்றாகீம

இவர் நெற்பிட்டிமுனையில் VH றோட்டில் பிறந்தவர். கரடியனாறு விவசாயக் கல்லூரியில் விவசாய டிப்ளோமா முடித்தவர். KVS ஆக தொழில் செய்து மிருக வைத்திய துறையில் இணைந்து பணிபுரிந்தவர். பொத்துவிலில் திருமணம் முடித்து வாழ்ந்தவர். தற்பொழுது மரணித்துவிட்டார்.

### 16. S. அபூபக்கர்

இவர் நெற்பிட்டிமுனையில் பிறந்தவர். இவ்வூர் பாடசாலையில் கல்விகற்று தேறியவர். இலங்கை போக்குவரத்துச் சபையில் தொழில் புரிந்தவர். தற்பொழுது அக்கரைப்பற்றில் திருமணம் முடித்துள்ளார். நொத்தாரிசுவாக மட்டக்களப்பில் பணியாற்றுகிறார். இவர் முன்னாள் சின்னலெவ்வை வட்ட விதானையின் மூத்த மகனாவார்.

### 17. AL. அஸ்ரப்

இவர் நெற்பிட்டிமுனை பூமரத்தடி வீதியில் பிறந்தவர். மர்ஹூம் அகமதுலெப்பை ஆசிரியரின் மூன்றாவது மகனாவார். தொழில்நுட்ப உதவியாளராக பணியாற்றி வருகிறார். அக்கரைப்பற்றில் திருமணம் முடித்து வாழ்ந்து வருகிறார்.

### 18. SL. அப்துல் கபூர்

இவர் நெற்பிட்டிமுனை ஜாசின் வீதியில் பிறந்தவர். க.பொ.த சா/த வரை கமு/அல் அக்ஸாவில் கல்வி கற்று சதோச நிறுவனத்தில் பணிபுரிந்தார். அக்கரைப்பற்றில் திருமணம் முடித்து வாழ்ந்து வந்தார். இவருடைய மனைவி ஒரு ஆசிரியை. இவர்களுக்கு குழந்தைப் பாக்கியம் இல்லை. இவர் YAK. தாசீம் ஆசிரியரின் மனைவியின் மாமா ஆவார். இவர் தற்பொழுது மரணித்துவிட்டார்.

### 19. SH. கரீம்

இவர் நெற்பிட்டிமுனையில் பூமரத்தடி வீதியில் பிறந்தவர். நெற்பிட்டிமுனை அல் ஹாஜ் மதார் சாஹிபு அவர்களின் புதல்வி பரிதாவை திருமணம்

முடித்தவர். பின்னர் அத்திருமண வாழ்வு முறிந்த பின்னர் பாலமுனையில் திருமணம் முடித்தவர். கல்முனை பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தில் இலிகிதராக பணியாற்றியவர். தற்பொழுது மார்க்கப் பணியில் ஈடுபட்டு வருகிறார்.

## 20. A.L. றிஸாம்

இவர் நெறற்பிட்டிமுனை தச்சர் தெருவில் பிறந்தவர். முன்னாள் பிரதேச செயலாளர் மர்ஹூம் ALM. பளீல் அவர்களின் சகோதரர் ஆவார். இவர் வைத்தியசாலை தாதியாக பணியாற்றியவர். பாலமுனையில் திருமணம் முடித்துள்ளார். தற்பொழுது தாதியாக இங்கிலாந்தில் பணியாற்றுகின்றார். அங்கேயே தனது வாழ்விடத்தையும் கொண்டுள்ளார்.

## 21. CB. சுபின்

இவர் நெறற்பிட்டிமுனையில் பிறந்தவர். துறைமுக அதிகாரசபையில் பணிபுரிந்தவர். தற்பொழுது ஒலுவிலில் திருமணம் முடித்துள்ளார். இலிகிதராக பணிபுரியும் சனுஜா என்பவரை கரம்பிடித்து மூன்று குழந்தைகளுக்கு தந்தையாக இருக்கிறார். தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகின்றார்.

## 22. AL. சல்மான்

இவர் அகமது லெவ்வை ஆசிரியர் அவர்களின் மகனாவார். குண்டகசாலை விவசாயக்கல்லூரியில் டிப்ளோமா பட்டம் முடித்துவிட்டு கிழக்குப் பல்கலைக்கழகத்தில் விவசாய விஞ்ஞானப்பட்டம் முடித்தவர். நெறற்பிட்டிமுனையைச் சேர்ந்த இல்முனா என்னும் பெண்ணை திருமணம் செய்த பின்னர் சம்மாந்துறையில் மறுதிருமணம் முடித்து வாழ்ந்து வருகிறார். தற்பொழுது AI ஆக பணிபுரிகிறார்.

## 23. DM. உவைஸ்

இவர் நெறற்பிட்டிமுனை மதுரிஸா வீதியில் வசித்து வந்தவர். தோப்பூரில் திருமணம் முடித்து வாழ்கிறார். விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றும் இவரின் மனைவியும் ஒரு ஆசிரியராவார். இவருடைய மூத்த புதல்வி கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டப்படிப்பை தொடர்கிறார். DKM. மௌசீன் ஆசிரியரின் மூத்த சகோதரனாவார்.

## 24. VM. அன்வர்

நெற்பிட்டிமுனை பிரதான வீதியில் வசித்துவந்த இவர் ஆசிரியராவார். இவர் ஓட்டமாவடியில் திருமணம் முடித்து வாழ்கிறார். இவருடைய மனைவி ஒரு ஆசிரியையாவார். இவர் பிரதிஅதிபர் VM. ஸம்ஸம் அவர்களின் சகோதரனாவார்.

### 25. MLA. றசீட்

இவர் நெற்பிட்டிமுனையில் மத்திய வீதியில் பிறந்தவர். மருதமுனையில் திருமணம் முடித்துக் கொண்டார். தற்பொழுது முகாமைத்துவ உதவியாளராக கல்முனை பிரதேச செயலகத்தில் பணியாற்றி வருகிறார். இவருக்கு நான்கு குழந்தைகள் உண்டு.

### 26. V. தையுப்

இவர் நெற்பிட்டிமுனை பூமரத்தடி வீதியில் பிறந்து வளந்தவர். கமு/ அல் அக்ஸா மகாவித்தியாலயத்தில் கல்விகற்று உயர்தரத்தில் சித்தியெய்து பேராதனைப் பல்கலைக்கழகம் தெரிவாகி புவியியல் பாடத்தில் பட்டம் முடித்தவர். கல்முனைக்குடியில் திருமணம் முடித்துள்ளார். இவரது மனைவி ஒரு ஆசிரியையாவார். தற்பொழுது கமு/ சாஹிறாக் கல்லூரி தேசிய பாடசாலையில் புவியியல் பாடம் கற்பித்து வருகிறார். புவியியல் பாட வளவாளராகவும் இருக்கிறார்.

### 27. AC. ஹமீட்

இவர் ஒரு கிராம உத்தியோகத்தவராவார். நெற்பிட்டிமுனை VH வீதியில் பிறந்து வளந்தவர். தற்பொழுது கல்முனைக்குடியில் ஒரு ஆசிரியை மறுதிருமணம் முடித்துள்ளார். இதற்கு முன்னர் நிந்தவூரில் ஒரு திருமணம் முடித்துள்ளார். அங்கு அவருக்கு ஓர் ஆண் மகனும் உண்டு. தற்பொழுது ஓய்வு பெற்றுள்ளார்.

### 28. ML. ஜஹாங்கிர்

இவர் நெற்பிட்டிமுனை மதுரிஸா வீதியில் பிறந்தவர். அளவையியல் உதவியாளராகப் பணிபுரிந்து QS பட்டம் முடித்தவர். தற்பொழுது ஓமானில் QS பொறியியலாளராகப் பணிபுரிந்து வருகிறார். இவர் கல்முனைக்குடியைச் சேர்ந்த ஸம்ஸம் ஹாஜியாரின் மூத்த புதல்வி றொசானா என்பவரை திருமணம் முடித்துள்ளார். இவருக்கு இரண்டு குழந்தைகள் உண்டு. முகமட் என்பவர் மூத்த மகனாவார். இரண்டாவது பெண். மல்லீஹா என்பது அவரது பெயராகும்.

### 29. அனஸ் M. இஸ்மாயில்

இவர் நெற்பிட்டிமுனை தச்சர் தெருவில் பிறந்து வாழ்ந்தவர். முன்னாள் நகரசபை உறுப்பினர் SPM. இஸ்மாயில் (கண்ணாடி வாத்தியார்) அவர்களின் மூத்தமகன். முதலாவது பொறியியலாளராக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர். சம்மாந்துறையில் திருமணம் முடித்து தற்பொழுது கொழும்பில் வசித்து வருகிறார். இவர் கொழும்பில் துறைமுக அதிகாரசபையில் பொறியியலாளராக பணிபுரிந்து வருகிறார்.

### 30. DKM. மௌசீன்

இவர் நெற்பிட்டிமுனையில் பிறந்து வாழ்ந்தவர். தற்பொழுது நெற்பிட்டிமுனை கமு/அல் அக்ஸா ம.வி கல்வி கற்பிக்கிறார். சாய்ந்தமருதூரில் திருமணம் முடித்துள்ளார். மர்சுபானா ஆசிரியையை கரம்பிடித்துள்ளார். மூன்று ஆண் குழந்தைகள் உண்டு. தமிழ் பாடத்தை உயர்தர, சாதாரண தர மாணவர்களுக்கு கற்பித்து வருகிறார். சிறந்த தமிழ்ப் பாட ஆசிரியர் என கமு/மஹ்மூத் மகளிர் கல்லூரியில் பிரபல்யம் பெற்றவர்.

### 31. AM. றிலாஸ்

இவர் நெற்பிட்டிமுனை பிரதான வீதியில் வசித்து வந்தவர். தேசிய கல்விக்கல்லூரிக்கு உடற்கல்வி ஆசிரியராகத் தெரிவுசெய்யப்பட்டவர். நிந்தவூரில் திருமணம் முடித்துள்ளார். இவரது மனைவி ஒரு ஆசிரியை. ஒரு குழந்தை உண்டு. இவர் சிறந்த விளையாட்டுத்துறை ஆசிரியராவார்.

### 32. K. இஸ்ஸதீன்

இவர் நெற்பிட்டிமுனையில் பிறந்து கமு/அல் அக்ஸா மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்று மொறட்டுவப் பல்கலைக்கழகத்தில் NTD பட்டம் பெற்றவர். NTD பொறியியல் துறையில் பிரபல்யம் பெற்று விளங்குகிறார். சாய்ந்தமருதுவில் திருமணம் முடித்துள்ளார். தற்பொழுது வெளிநாட்டில் பணிபுரிந்து வருகிறார்.

### 33. M. சரிபுத்தீன்

இவர் நெற்பிட்டிமுனையில் பிரதான வீதியில் பிறந்து கமு/அல் அக்ஸா மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்று ஆசிரியர் தொழில் பெற்றவர். காத்தான்குடியில் திருமணம் முடித்து வாழ்கிறார். தற்பொழுது ஓய்வு பெற்றுள்ளார்.

### 34. YL. விசுறுல்லாஹ்

இவர் நெற்பிட்டிமுனை தச்சர் தெருவில் பிறந்தவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியலாளர் பட்டம் பெற்றவர். கவிஞர் அல்ஹாஜ் S. யூசுப் மௌலவி ஆசிரியர் அவர்களின் கடைசி மகனாவார்.

இவர் கல்முனைக்குடியைச் சேர்ந்த முஸ்பிறா BSc அவர்களைத் திருமணம் செய்து வாழ்கிறார். இவருகசு ஒரு ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் உள்ளனர்.

### 35. AL. லியாக்கத் அலி

இவர் நெற்பிட்டிமுனை தச்சர் தெருவில் பிறந்தவர். உயர்தரக்கல்வி விஞ்ஞானப்பிரிவில் பயின்று ஆண் தாதிப் பதவியைப் பெற்றவர். சில காலம் இலங்கையில் கடமை செய்துவிட்டு தற்பொழுது வெளிநாட்டில் பணிபுரிகின்றார். கம்பளையில் வாழ்ந்து வருகிறார்கள்.

### 36. Dr. YL. ஸைபுல்லாஹ்

இவர் நெற்பிட்டிமுனையில் பிறந்தவர். கவிஞர் அல்ஹாஜ் S. யூசுப் மௌலவி ஆசிரியர் அவர்களின் இரண்டாவது மகனாவார். இவர் ஒரு டாக்டர். மருதமுனை மருதூர்கனி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் மகள் ஆசிரியை றொசானாவை திருமணம் முடித்துள்ளார். இவருக்கு ஒரேயொரு மகள் உள்ளது. பெயர் காணியா. தற்பொழுது அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வருகின்றனர்.

### 37. Dr. YL. உபைதுல்லாஹ்

இவரும் கவிஞர் அல்ஹாஜ் S. யூசுப் மௌலவி ஆசிரியரியரின் மூத்த மகனாவார். இவர் ஒரு டாக்டர். நெற்பிட்டிமுனை மண்ணில் பிறந்தவர். இவர் ரேடியோலஜிஸ் முடித்துள்ள சிறப்பு மருத்துவர். இலங்கையில் தலைசிறந்தவர்களில் இவரும் ஒருவர். அனுராதபுரத்தில் திருமணம் முடித்திருக்கிறார். இவருடைய மனைவியும் ஒரு டாக்டராவார். தன்ஸீலா என்பது அவரது பெயராகும். தற்பொழுது கொழும்பில் வாழ்கிறார்கள்.

### 38. IM. முஸாதிக்

இவர் நெற்பிட்டிமுனையை பிறப்பிடமாகக் கொண்டவர். முன்னாள் பகுதிநேர வானொலி அறிவிப்பாளர் டாக்டர் அல்ஹாஜ் ALM. இப்றாஹிம் அவர்களின் மூத்த புதல்வன். மல்வானையில் திருமணம் முடித்துள்ளார். இவருடைய மனைவி ஒரு ஆசிரியர். சமீனா என்பது அவரது பெயராகும். இவருக்கு மூன்று பிள்ளைகள் உண்டு. விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராவார்.

### 39. முஜிப் M. இஸ்மாயில்

இவர் நெற்பிட்டிமுனையில் பிறந்தவர். இவர் ஒரு டாக்டர் ஆவார். சாய்ந்தமருதூரில் திருமணம் முடித்துள்ளார். அஷ்ஷெய்க் I. முனாஸ் மௌலவி ஆசிரியரின் இரண்டாவது சகோதரராவார்.

### 40. MC. மாஹிர்

இவர் நெற்பிட்டிமுனையில் பிறந்தவர். முதல் டாக்டரும் இவர்தான். MSM. காசீம் அதிபரின் மகனாவார். கல்முனைக்குடியில் திருமணம் முடித்து வாழ்கிறார். 2015ம் ஆண்டு புனித ஹஜ் கடமையை முடித்துக் கொண்டவர். ஊரில் தனது கடமையை செய்யவேண்டும் என்பதற்காக ஊரில் Dispensary அமைத்து வைத்தியம் பார்த்து வருகிறார்.

### 41. KMS. நஜ்ஜாஸ்

இவர் நெற்பிட்டிமுனையில் திருமணம் முடித்து வாழ்ந்து வந்தார். திருமணத்தில் முறிவு ஏற்பட்டதன் காரணமாக சம்மாந்துறையில் மறு திருமணம் செய்தவர். தற்பொழுது உடற்கல்விப்பாட ஆசிரிய ஆலோசகராக சம்மாந்துறை வலையத்தில் பணிபுரிந்து வருகிறார். இவருடைய தற்போதைய மனைவி ஆசிரியையாக பணியாற்றி வருகிறார்.

### 42. AL. ஜபின் நிஸார்

இவர் நெற்பிட்டிமுனையில் பிறந்தவர். பொதுச் சுகாதார பரிசோதகராக (PHI) கடமையாற்றி வருகிறார். இவர் கண்டியில் உள்ள மெதமகநுவர என்னும் ஊரில் பெண் தாதி ஒருவரை திருமணம் முடித்துள்ளார். MS. அகமது லெப்பை அதிபரின் இரண்டாவது மகனாவார்.

### 43. DK. அஜ்மிர்

இவர் நெற்பிட்டிமுனையில் பிறந்து வளர்ந்தவர். பொலிஸ் இன்ஸ்பெக்டராக பணிபுரிந்தவர். தற்பொழுது மல்வானையில் திருமணம் முடித்து வாழ்கின்றார். இவருக்கு மூன்று குழந்தைகள் உண்டு. DKM. மௌசீன் ஆசிரியரின் இரண்டாவது சகோதரராவார்.

### 44. MS. பரீட்

இவர் நெற்பிட்டிமுனையில் பிறந்தவர். இலங்கைப் போக்குவரத்துச் சபையில் கண்டெக்ரராக பணிபுரிந்தவர். அம்பாரையில் திருமணம் முடித்து வாழ்ந்தவர். பிஸ்கால் என்று செல்லமாக அழைக்கப்படும் மீராசாஹிபு அவர்களின் மூத்த புதல்வன். தற்பொழுது மரணித்துவிட்டார்.

### 45. MCM. றகீம்

இவர் நெற்பிட்டிமுனையில் பிறந்தவர். கிராம சேவகராக பணிபுரிந்தவர். கொழும்பில் மாபோளையில் திருமணம் முடித்தவர். தற்பொழுது கொழும்பில் வாழ்ந்து வருகிறார்.

### 46. AL. பஸீர்

இவர் நெற்பிட்டிமுனையில் பிறந்தவர். S. அகமது லெப்பை அதிபர் அவர்களின் கடைசி மகனாவார். இலிகிதராகப் பணியைத் தொடங்கி AO (நிர்வாக உத்தியோகத்தர்) பதவி வகிக்கின்றார். சாய்ந்தமருதூரில் திருமணம் முடித்து வாழ்ந்து வருகிறார்.

### 47. UL. இஸ்ஹாக்

இவர் நெற்பிட்டிமுனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கல்முனைக்குடியில் திருமணம் முடித்துள்ளார். கல்முனை வலயக்கல்விப் பணிமனையில் முகாமைத்துவ உதவியாளராக பணிபுரிகிறார். சிறந்த ஊடகவியலாளர் பணிபுரிந்து வருகிறார்.

### 48. J. ஜெலில்

இவர் நெற்பிட்டிமுனை பிரதான வீதியில் பிறந்தவர். MCM. ஜமால்தீன் ஆசிரியரின் (லொறி) இரண்டாவது மகனாவார். இவர் ஆசிரியர் தொழில் புரிகிறார். தற்பொழுது கல்முனைக்குடியில் வாழ்ந்து வருகிறார்.

### 49. S. சதக்கத்துல்லாஹ்

இவர் நெற்பிட்டிமுனை ஜும்ஆ பள்ளிவாயல் வீதியில் பிறந்து வாழ்ந்தவர். ஒரு ஆசிரியராவார். கல்முனைக்குடியில் திருமணம் முடித்துள்ளார்.

### 50. U. சித்தீக்

இவர் நெற்பிட்டிமுனையில் பிறந்தவர். வீடமைப்பு அதிகாரசபையில் தொழில் புரிந்தவர். காட்டுவாபா என்பவரின் நான்காவது மகனாவார். ஏறாவூரில் திருமணம் முடித்தவர். தற்பொழுது மரணித்து விட்டார்.

### 51. B. ஜெறோஸ்

இவர் நெற்பிட்டிமுனையில் தச்சர் தெருவில் பிறந்தவர். வணிகப்பிரிவில் தெரிவுசெய்யப்பட்டு பல்கலைக்கழகம் சென்று பட்டம் முடித்துள்ளார். ஆசிரியராகத் தொழில் புரிந்த இவர், போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து

Audit Supernatant ஆக மன்னார் மாவட்டத்தில் பணியாற்றி வருகின்றார். தற்பொழுது மருதமுனையில் திருமணம் முடித்துள்ளார். ஒரு குழந்தை உண்டு.

### 52. M. ஆரிப் (றிஸ்வி)

இவர் நெற்பிட்டிமுனை VH றோட்டில் பிறந்து வாழ்ந்தவர். இவர் ஒரு ஆசிரியர். சம்மாந்துறையில் திருமணம் முடித்துள்ளார். இவரது தந்தை கல்முனைக்குடியைச் சேர்ந்தவர். பெயர் முகையதீன் ஆசிரியராவார்.

### 53. U. அலியார்

இவர் நெற்பிட்டிமுனை ஆலையடி வீதியில் பிறந்து வாழ்ந்தவர். தற்பொழுது திருகோணமலையில் திருமணம் முடித்துள்ளார். பிள்ளைகள் இல்லை. உமர்கத்தாப் (காட்டுபாபா) அவர்களின் மூத்த மகனாவார்.

### 54. IL. சக்காப்

இவர் நெற்பிட்டிமுனை பிரதான வீதியில் வசித்து வந்தவர். துறைமுக அதிகார சபையில் பணியாற்றுகிறார். கொழும்பில் திருமணம் முடித்துள்ளார். இசுமான் ஓடாவியாரின் மகனாவார்.

### 55. AL. சாஹுல் ஹமீது

இவர் நெற்பிட்டிமுனை மதுரிஸா வீதியில் வசித்து வந்தவர். இவர் ஒரு மௌலவியாவார். பஸ்யாலையில் திருமணம் முடித்துள்ளார். AL. முகம்மதுத் தம்பி (ISA சித்திரம்) அவர்களின் தம்பியாவார்.

### 56. AL. தௌபீக்

இவர் நெற்பிட்டிமுனையைச் சேர்ந்த S. அகமதுலெப்பை ஆசிரியரின் கடைசி மகனாவார். இவர் கல்முனைக்குடியில் திருமணம் முடித்துள்ளார். ஓமானில் தொழில் புரிகின்றார்.

### 57. IL. இர்பான்

இவர் நெற்பிட்டிமுனையில் ஜும்ஆ பள்ளிவாயல் வீதியில் பிறந்தவர். ஆண் தாதியாக பணிபுரிகிறார். அட்டாளச்சேனையில் திருமணம் முடித்துள்ளார். இவர் மாலீக் டாக்டரின் சகோதரனாவார்.

### 58. CBM. கியாஸ்

இவர் நெற்பிட்டிமுனையை பிறப்பிடமாகக் கொண்டவர். மருதமுனையில் திருமணம் முடித்துள்ளார். இவர் ஒரு ஆசிரியர். இவரது மனைவியும் ஆசிரியராவார். இவருக்கு ஒரு குழந்தையுண்டு. நெற்பிட்டிமுனை மண்ணில் Pharmacy நடாத்தி வருகிறார்.

### 59. ML. பாயிஸ்

இவர் நெற்பிட்டிமுனையில் பிறந்தவர். டாக்டராக பணிபுரிகின்றார். கல்முனைக்குடியில் திருமணம் முடித்துள்ளார். ML. சரீனா ஆசிரியரின் சகோதரனாவார்.

### 60. ULA. ஸலாம்

மௌலவியான இவர் நெற்பிட்டிமுனையில் பிறந்தவர். பஸறையில் திருமணம் முடித்துள்ளார். ULA. கபூர் மௌலவியின் கடைசித் தம்பியாவார்.

### 61. M. சம்சீர்

மௌலவியான இவர் நெற்பிட்டிமுனையில் பிறந்தவர். தற்பொழுது இறக்காமத்தில் திருமணம் முடித்து வாழ்கிறார்.

### 62. SHM. நளீப்

இவர் நெற்பிட்டிமுனையை பிறப்பிடமாகக் கொண்டவர். கொழும்பு துறைமுக அதிகார சபையில் சேவையாற்றுகிறார். கல்முனைக்குடியில் F. றில்கா என்பவரை மணந்துள்ளார். இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உண்டு. A. சாஹுல் ஹமீது மௌலவியின் மகனாவார்.

### 63. MRM. தமீஸ்

இவர் நெற்பிட்டிமுனையை பிறப்பிடமாகக் கொண்டவர். மாவடிப்பள்ளியில் திருமணம் முடித்துள்ளார். ஜனசக்தி பிரிவில் பணிபுரிந்து வருகிறார். இவருக்கு இரண்டு பிள்ளைகள் உண்டு. இவர் காலஞ்சென்ற MLA. றசீது (மக்கள் வங்கி) அவர்களின் மகனாவார்.

### 64. KM. பாயிஸ்

இவர் நெற்பிட்டிமுனையில் பிறந்தவர். சாய்ந்தமருதூரில் திருமணம் முடித்தவர். துறைமுக அதிகார சபையில் பணிபுரிகின்றார். தற்பொழுது கொழும்பில் வசித்து வருகிறார்.

### 65. IM. கடாபி

இவர் நெற்பிட்டிமுனையில் பிறந்தவர். கொழும்பில் திருமணம் முடித்து வாழ்கிறார். முன்னாள் மாநகரசபை உறுப்பினர் அல்ஹாஜ் SPM. இஸ்மாயில் ஆசிரியரின் மகனாவார். இவர் துறைமுக அதிகார சபையில் பணியாற்றுகிறார்.

## 66. V. ஜ∴பர்

இவர் நெற்பிட்டிமுனையில் பிறந்தவர். நிந்தவூரில் திருமணம் முடித்து வாழ்கின்றார். தற்பொழுது இலங்கை போக்குவரத்துச் சபையில் கடமை செய்கிறார். இவர் V. தையூப் ஆசிரியரின் தம்பியாவார்.

## 67. V. ஹனூன்

இவர் நெற்பிட்டிமுனையில் பிறந்தவர். தற்பொழுது மாத்தறையில் திருமணம் முடித்து வாழ்கிறார். DO வாக தொழில் புரிகிறார். இவர் V. தையூப் ஆசிரியரின் தம்பி ஆவார்.

## 68. A. சம்சுதீன்

மௌலவியான இவர் நெற்பிட்டிமுனையை பிறப்பிடமாகக் கொண்டவர். கண்டி தங்கொல்ல என்னும் ஊரில் திருமணம் முடித்து வாழ்கின்றார். இவர் அலியாரின் மகனாவார்.

## 69. ML. இஸ்ஹாக்

இவர் நெற்பிட்டிமுனையை பிறப்பிடமாகக் கொண்டவர். வாழ்விடத்தை சம்மாந்துறையில் ஆக்கிக் கொண்டவர். பொது நிர்வாகத்தில் முதுகலைமாணிப் பட்டம் பெற்றுள்ளார். அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணிபுரிகிறார். சுகாதார உதவியாளரான சல்மா என்பவரை திருமணம் செய்துள்ளார்.

## 70. MLM. வாஹிட்

இவர் நெற்பிட்டிமுனையை பிறப்பிடமாகக் கொண்டவர். கொழும்பில் திருமணம் முடித்து வாழ்கிறார். இவரது மனைவியின் பெயர் MA. யாஸ்மின். இவர அச்சகத்துறையில் தொழில் புரிந்து வாழ்கிறார்.

## 71. J. லிவாஸ்டீன்

இவர் நெற்பிட்டிமுனை சந்தை வீதியில் வசித்து வந்தவர். முகாமைத்துவ உதவியாளராக பணியாற்றுகிறார். சம்மாந்துறையை சேர்ந்த ஜெனிசாவை திருமணம் முடித்துள்ளார். இவரொரு பட்டதாரியாவார்.

## 72. M. மாஜித்

இவர் நெற்பிட்டிமுனை பிரதான வீதியில் வசித்து வந்தவர். Management முகாமைத்துவப் பட்டதாரியாவார். கல்முனைக்குடியைச் சேர்ந்த றஊப் ஹாஜியாரின் மகளை திருமணம் முடித்து கல்முனைக்குடி அலியார் வீதியில் வசித்து வருகிறார். மனைவி இலிகிதராக பணியாற்றுகின்றார்.

### 73. S. அஜிமல்

இவர் ஒரு மருத்துவ மாணவராவார். இவருடைய திருமணம் கல்முனைக்குடியில் நிச்சயிக்கப்பட்டுள்ளது. நெற்பிட்டிமுனை பிரதான வீதியில் பிறந்து வாழ்ந்தவர். V. சலீம்கான் இலிகிதரின் மகனாவார்.

### 74. MB. லியாஸ்

இவர் நெற்பிட்டிமுனை தச்சர் வீதியில் வாழ்ந்தவர். GS கிராமசேவை அலுவலராகப் பணிபுரிகின்றார். இவர் கல்முனைக்குடியில் திருமணம் முடித்து வாழ்கிறார். இவரது மனைவி தாதியாகப் பணிபுரிகின்றார். MI. பதுறுதீன் SK மகனாவார்.

### 75. MB. பெறோஸ்

இவர் நெற்பிட்டிமுனை தச்சர் தெருவில் பிறந்து வாழ்ந்தவர். கண்டி தெல்தோட்டையில் திருமணம் முடித்துள்ளார். தற்பொழுது கொழும்பு சதோச நிறுவனத்தில் பணிபுரிகின்றார். இவர் MI. பதுறுதீன் SK யின் மகனாவார்.

### 76. A. ஜமால்தீன் (நஜிமுதீன்)

இவர் நெற்பிட்டிமுனை SP காசிம் வாவா வீதியில் வசித்து வந்தவர். தற்பொழுது அவஸ்திரேலியாவில் குடியுரிமை பெற்று தலைநகர் சிட்னியில் குடும்பத்துடன் வாழ்ந்து வருகின்றார். இவருக்கு இரண்டு பிள்ளைகள் உண்டு.

### 77. மௌலவி I.L. லிவாஸ்டீன்

அல்ஹாஜ் அல் ஹாபில் மௌலவி AL. இப்றாலெப்பை தம்பதிகளின் மகனான இவர் நெற்பிட்டிமுனை ஆலையடி வடக்கு வீதியில் வாழ்ந்தவர். கல்முனைக்குடியில் திருமணம் முடித்து அவுஸ்திரேலியாவில் மெல்பர்ண் நகரில் நிரந்தர குடியுரிமை பெற்று வசித்து வருகின்றார். இவருக்கு ஒரு ஆண் மகன் உண்டு.

### 78. மௌலவி I.L. பாபுதீன்

அல்ஹாஜ் அல் ஹாபில் மௌலவி AL. இப்றாலெப்பை தம்பதிகளின் மகனான இவர் நெற்பிட்டிமுனை ஆலையடி வடக்கு வீதியில் வாழ்ந்தவர். திருமணம் முடித்து அவுஸ்திரேலியாவில் மெல்பர்ண் நகரில் நிரந்தர குடியுரிமை பெற்று வசித்து வருகின்றார்.

## ஊருக்கு வந்து பெண் எடுத்து உதவியோர்

### 1. அல்ஹாஜ் அல் ஹாபில் மௌலவி AL. இப்றாலெப்பை

இவர் நெற்பிட்டிமுனையில் முதலாவதாக திருமணம் முடித்து வெளியூரில் இருந்து இவ்வூருக்கு வந்தவர். தற்பொழுது 354B/2 ஆலையடி வடக்கு வீதியில் வசித்து வருகிறார். ஓய்வுபெற்ற மௌலவி ஆசிரியரான இவர் பள்ளிவாயல் இமாமாகவும் சமூகத் தொண்டராகவும், மார்க்கப்பணியில் ஈடுபடுபவராகவும், சிறந்த கல்விமானாகவும் பணிபுரிவதுடன் சிறந்த முன்னோடிகளில் ஒருவராகவும் திகழ்கின்றார். தேவபந் ஹாபிஸ் பட்டத்தை முடித்தவர். ஆதம்லெப்பை ஆசுறா உம்மாவை திருமணம் முடித்து ஆலையடி வடக்கு வீதியில் வாழ்ந்து வரும் இவர் சம்மாந்துறையை பிறப்பிடமாகக் கொண்டவராவார். இவருக்கு ஐந்து உள்ளனர்.

### 2. அல் ஹாஜ் டாக்டர் ALM. இப்றாகீம்

(270ம் பக்கம் பார்க்க)

### 3. SL. நெயினா முகம்மட்

இவ்வூருக்கு ஆரம்பகாலத்தில் வந்து வாழ்ந்தவர்களில் இவரும் ஒருவராவார். கல்முனை தெற்கு ஆதார வைத்தியசாலையில் பணியாற்றியவர். சமூகப் பணிகளில் அதிக ஈடுபாடு கொண்டவர். சாய்ந்தமருதைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நெற்பிட்டிமுனை ஆதம்லெப்பை விதானையாரின் புதல்வி சுபைதா உம்மாவை திருமணம் முடித்தவர். ஆலையடி வடக்கு வீதியில் வாழ்ந்தவர். இவர் சாய்ந்தமருதைப் பிடப்பிடமாகக் கொண்டவராவார்.

## 4. அல் ஹாஜ் SM. முகம்மது மீராசாஹிபு

இவர் நிந்தவூரை பிறப்பிடமாக்க கொண்டவர். நெற்பிட்டிமுனையில் திருமணம் முடித்து வாழ்கிறார். இவர் கல்முனை வைத்தியசாலையில் மருந்து கலவையாளராக பணிபுரிந்தார். தற்பொழுது ஓய்வு பெற்றிருக்கின்றார். நெற்பிட்டிமுனை காரியப்பர் வீதியில் MI. சுபைதாவைத் திருமணம் செய்து இரு பிள்ளைகள் இருக்கின்றனர். இவரது மனைவி வைத்தியசாலையில் பணியாற்றி ஓய்வு பெற்றிருக்கிறார். பிள்ளைகளில் ஒருவர் ஆசிரியர். மற்றையவர் மகள். MT. பிர்னாஸ் ஆசிரியரை திருமணம் முடித்து DO வாக பணியாற்றுகிறார்.

## 5. அல் ஹாஜ் K. மீராசாஹிப்

இவர் சாய்ந்தமருதூரை பிறப்பிடமாகக் கொண்டவர். தற்பொழுது நெற்பிட்டிமுனையில் திருமணம் முடித்து வாழ்கிறார். மின்சார சபையில் உத்தியோகத்தராகக் கடமையாற்றினார். தற்பொழுது ஓய்வு பெற்றுள்ளார். இவரது மனைவி A. பௌசியா வீவி. இவர் ஒரு முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றி ஓய்வு பெற்றிருக்கிறார். இவர்களுடைய மூத்தமகன் M. ஆசிக் உதவிப் பிரதேசச் செயலாளராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார். இவர் தச்சர் தெருவில் வசித்து வருகிறார்.

## 6. அல் ஹாஜ் A. சம்சுதீன்

இவர் சம்மாந்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நெற்பிட்டி முனையில் திருமணம் முடித்து வாழ்கிறார். PROGRAMMER CUM SYSTEM ANALYST (SEUSL) ஆக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகிறார். MSc in IT முடித்தவர். Visiting Lecturer for Computer Science ஆக பணியாற்றுகிறார். எங்கள் ஊருக்கு கிடைத்த அறிவுசார் நிபுணர்களில் ஒருவராக விளங்குகிறார். ஹாஜியானி அஸீஸா ஆசிரியரைத் திருமணம் முடித்துள்ளார்.

## 7. S. சிறாஜுதீன் (191ம் பக்கம் பார்க்க)

## 8. UL. அன்வர்

சாய்ந்தமருதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் நெற்பிட்டிமுனையில் திருமணம் முடித்து வாழ்கிறார். அமானா வங்கியில் பணியாற்றுகிறார். தற்பொழுது VH வீதியில் இல்லத்தரசி I. பானூ என்பவரை திருமணம்

முடித்துள்ளார். மார்க்கப்பணியில் ஈடுபாடு கொண்டவராக இருக்கும் இவருக்கு ஒரு குழந்தை உண்டு.

### 9. AM. றப்சன் ஜானி

இவர் கல்முனைக்குடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நெற்பிட்டிமுனை தச்சர் தெருவில் வசித்து வருகிறார். மக்கள் வங்கியில் கடமையாற்றும் இவர் BA பட்டத்தை காமராஜ் பல்கலைக்கழகத்தில் முடித்துள்ளார். இவருடைய மனைவி AMF. மறூஸா அவர்களும் வங்கியில் கடமையாற்றுகிறார்.

### 10. A. ஆதம் பாவா

இவர் கல்முனைக்குடியை பிறப்பிடமாகக் கொண்டவர். கலைப் பட்டதாரியாவார். 'போபோட்டி ஆதம்பாவா' என அழைக்கப்படுவார். சிறந்த குறுந்தூர ஓட்ட வீரராவார். பல சாதனைகள் படைத்தவர். உயர்தர வகுப்பில் அரசியல் பாடத்தை போதித்து வந்தவர். நெற்பிட்டிமுனை மதுரிஸா வீதியில் வசித்து வந்த ML. சம்சுநஹார் BA ஆசிரியரைத் திருமணம் முடித்து இரு பிள்ளைகளுக்கு தந்தையாக இருக்கிறார். இவரது மகன் A. அன்பாஸ் பொறியியலாளராக கடமையாற்றுகிறார். A. நஸ்லூன் சிதாறா என்ற மகள் ஒருவரும் உண்டு.

### 11. அல் ஹாஜ் SMM. சஹாபி

இவர் பாலமுனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நெற்பிட்டிமுனை தச்சர் தெருவில் திருமணம் முடித்துள்ளார். இவர் ஒரு கணிதப்பாட ஆசிரியராவார். ஹாஜியானி A. நைரோஜா ஆசிரியரைக் கரம்பிடித்து வாழ்ந்து வருகிறார். இவர் ஒரு சமூக சேவையாளராவார். இவருக்கு மூன்று பிள்ளைகள் உண்டு.

### 12. MBM. றிஸான்

இவர் கல்முனைக்குடியை பிறப்பிடமாகக் கொண்டவர். நெற்பிட்டிமுனை தச்சர் தெருவில் திருமணம் முடித்துள்ளார். தேசிய நீர்வழங்கல், வடிகால் அமைப்புச் சபையில் இலிகிதராக பணியாற்றுகிறார். அபிவிருத்தி உத்தியோகத்தரான MI. சர்பின் அவர்களைக் கரம்பிடித்து வாழ்கிறார்.

### 13. PMT. முகமட் ஹலீம்

இவர் கல்முனைக்குடியை பிறப்பிடமாகக் கொண்டவர். நெற்பிட்டிமுனை யாசீன் வீதியில் வசித்து வருகிறார். சுகாதாரத் திணைக்கள சாரதியாகப் பணியாற்றி வருகிறார். குடும்பநல உத்தியோகத்தரான NL. பௌசுல் ஹினாயா திருமணம் முடித்துள்ளார். இவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் உண்டு.

### 14. KP. றாசீக் தம்பி

இவர் தோப்பூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நெற்பிட்டிமுனை மதுரிஸா வீதியில் வசித்து வருகிறார். கிராம சேவகராக பணிபுரிந்த இவர் தற்பொழுது ஓய்வு பெற்றுள்ளார். ML. நயீமாவை திருமணம் முடித்துள்ளார். இவர்களுக்கு மூன்று பிள்ளைகள் உண்டு. மூத்தமகன் கொழும்பில் QS ஆக பணியாற்றி வருகிறார். இன்னும் இரு ஆண் பிள்ளையும் ஒரு பெண் பிள்ளையும் உண்டு.

### 15. அல் ஹாஜ் A. சுல்பிக்கார்

இவர் மருதமுனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நெற்பிட்டிமுனை மதுரிஸா வீதியில் ஹாஜியானி MC. றபினா ஆசிரியரை திருமணம் முடித்துள்ளார். மிருக வைத்தியராகக் கடமையாற்றும் இவர் சமூகப் பணிகளிலும் அதிக ஈடுபாடு கொண்டவராவார்.

### 16. MHM. முகையதீன்

இவர் கல்முனைக்குடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இலங்கைப் போக்குவரத்துச் சபையில் கடமையாற்றி பின்னர் ஆசிரியர் நியமனம் பெற்று பொறுப்பு அதிபராகவும் கடமையாற்றி தற்பொழுது ஓய்வு பெற்றிருக்கின்றார். நெற்பிட்டிமுனை VH றோட்டில் வசிக்கும் அத்துல் கரீம் என்பவருடைய மகளைத் திருமணம் முடித்துள்ளார். மூன்று பிள்ளைகள் உண்டு. ஒருவர் ஆரிப். ஆசிரியராக பணியாற்றுகிறார்.

### 17. MM. ஹனிபா

அதிபரான இவர் சம்மாந்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நெற்பிட்டிமுனை தச்சர் தெருவில் திருமணம் முடித்து வாழ்ந்து வருகிறார். இவருடைய மனைவி மரியம் வீவி ஆசிரியை கமு/அல் அக்ஸா ம.வி. கல்வி கற்பித்துக் கொடுத்துக் கொண்டிருக்கும்போது மரணித்துவிட்டார். இவர்களுக்கு நான்கு பிள்ளைகள் உண்டு. தற்பொழுது ஓய்வு பெற்றிருக்கின்றார்.

### 18. THM. பாறுக் சார்ஜன்ட்

இவர் கொழும்பில் பிறந்தவர். பொலிஸ் சார்ஜண்ட் ஆக கடமை புரிந்தவர். தற்பொழுது ஓய்வுபெற்ற நிலையில் இறையடி சேர்ந்துவிட்டார். இவர் நெற்பிட்டிமுனை மதுரிஸா வீதியில் வசித்து வந்தவர். இவருடைய மனைவி ஆதம்பாவா பல்கீஸ் தாதியாகப் பணியாற்றியவர். தற்பொழுது ஓய்வு பெற்றுள்ளார். இவர்களுடைய மகன் F. சிஹான் ஹசன் பத்திரிகை நிருபராகக் கடமையாற்றுகின்றார்.

## 19. MHM. அமீன்

இவர் மாவடிப்பள்ளியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நெற்பிட்டிமுனையில் திருமணம் முடித்து 395E மத்திய வடக்கு வீதியில் வசிக்கும் இவர் வர்த்தகப் பட்டதாரியாவார். வரவு செலவுத்திட்ட உத்தியோகத்தராக (Budget Officer) கடமையாற்றுகிறார்.

Master in Development Studies – MDS (UOC)

Post Graduate Diploma in Public Administration – Pg Dip PA (PIM)

Post Graduate Diploma in Business Management – Pg Dip BM (UIC) ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ள இவர் M. நுபைரா பாணு ஆசிரியரை மணந்து வாழ்ந்து வருகிறார்.

## 20. ALA. மஜீட்

இவர் கல்முனைக்குடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நெற்பிட்டிமுனையில் திருமணம் முடித்துள்ளார். ADP யாக கடமையாற்றுகிறார். Master of Regional Development & Planning (MRDP) பயிற்சி பெற்றவர். விஷேடமாக MA பட்டம் பெற்றுள்ளார். இவருடைய மனைவி AGS. அனீஸா (WDO) மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணியாற்றுகிறார்.

## 21. அக்றம் அகமட் சப்றி

இவர் பேருவலை மருதானையில் பிறந்தவர். முன்னாள் சபாநாயகர் பாக்கீர் மாக்காரின் பேரனாவார். இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் மருமகன். பிரபல அரசியல் குடும்பத்தில் பிறந்தவர். கொழும்பு றோயல் கல்லூரியில் GCE (A/L) பரீட்சையில் 3A சித்தி பெற்று கொழும்பு மாவட்டத்தில் 5ம் இடம் பெற்று மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் பொறியியல் விஞ்ஞான பீடத்தில் கற்று பொறியியலாளராக

கடமையாற்றுகிறார். றக்பி விளையாட்டின் தலைவராக விளங்கும் இவர், பல நாடுகள் சென்று றக்பி விளையாட்டில் சாதனைகள் புரிந்து பரிசுகள் பெற்றுள்ளார். இவரது தந்தை Charted Accountant ஆக கொழும்பில் பணிபுரிகிறார். இவர் நெற்பிட்டிமுனையைச் சேர்ந்த CB. ஹாலீத் ஹாஜியார் - றுக்கியா தம்பதிகளின் புதல்வி சஜ்ஜினாவைத் திருமணம் முடித்து கொழும்பில் வாழ்ந்து வருகிறார்.

### 22. STM. பாயிஸ்

இவர் சம்மாந்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். முகாமையாளராக தனியார் நிறுவனமொன்றில் கடமையாற்றுகிறார். நெற்பிட்டிமுனையில் அபுல் பஸால் GS அவர்களின் மகள் மர்பீனா என்பவரை திருமணம் முடித்துள்ளார். மர்பீனா DO ஆக பணிபுரிகிறார். இவர்களுக்கு இரு குழந்தைகள் உண்டு.

### 23. YLA. பைஸால்

இவர் சாய்ந்தமருதூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். விவசாய விஞ்ஞான டிப்ளோமா பட்டம் முடித்தவர். நெற்பிட்டிமுனையை பிறப்பிடமாகக் கொண்ட யூசுப் ஆசிரியரின் மகளார் J. ஹாரிதா ஆசிரியையை திருமணம் முடித்து வாழ்கிறார்.

### 24. AM. நஜீம்

இவர் 12ம் கொளணியை பிறப்பிடமாகக் கொண்டவர். தற்பொழுது 2D/2A கரீம் வைத்தியர் வீதி நெற்பிட்டிமுனையில் வசித்து வருகிறார். இவர் ஒரு கிராம சேவையாளராவார். அபிவிருத்தி உத்தியோகத்தரான AG. றிஸானா அவர்களை திருமணம் முடித்து வாழ்ந்து வருகிறார்.

### 25. MHM. றிஸ்னி

இவர் அட்டாளைச்சேனையை பிறப்பிடமாகக் கொண்டவர். LOLC Finance - Bank Manager ஆக கடமையாற்றிக் கொண்டிருக்கிறார். MBA (Reading) Dip in Credit Management ஆக பணிபுரிந்து வருகிறார். இவருடைய மனைவி வெளிவாரி Pharmacist ஆக பயிற்சி பெற்றிருக்கின்றார். மனைவியின் பெயர் CB. றிபானா மூன்று குழந்தைகளுக்கு தாயாக இருக்கிறார். தற்பொழுது மதுரிசா வீதியில் வசித்து வருகிறார்.

## 26. MB. றியாஸ்

இவர் சாய்ந்தமருதூரை பிறப்பிடமாகக் கொண்டவர். நில அளவையாளராக வெளிநாட்டில் பணிபுரிகின்றார். யாசீன் வீதியில் IL. ஜுமையா ஆசிரியரைத் திருமணம் முடித்துள்ளார். பாத்திமா ஹாஜறா, பாத்திமா அல் ஸக்றா ஆகிய இரண்டு குழந்தைகள் உண்டு.

## 27. AL. அப்பாஸ்

இவர் வரிபத்தான் சேனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கல்முனை AMHல் பணிபுரிகின்றார். இவருடைய மனைவி SM. பசறியா இவரும் கல்முனை AMHல் பணியாற்றுகிறார். தற்பொழுது நெற்பிட்டிமுனை ராஜ்சினிமா வீதியில் வாழ்ந்து வருகிறார்கள்.

## 28. A. வஜீப்

**முதன்முதலில் புனித ஹஜ் கடமையை நிறைவு செய்தோர்**

- அல் ஹாஜ் காசீம் பாவாப் போடியார் (அங்கே மரணித்தவர்) - 1885
- அல் ஹாஜ் சின்னத்தம்பி (ஹாஜியார்) - 1926
- அல் ஹாஜ் S. சீனித்தம்பி (ஹாஜியார்) - 1937
- அல் ஹாஜ் SP. மஜீட் (ஹாஜியார்) - 1969
- அல் ஹாஜ் AL. இப்றாலெப்பை (ஹாஜியார்) - 1969
- அல் ஹாஜ் கனியன் போடியார் (ஹாஜியார்) - 1969
- அல் ஹாஜ் S. யூசுப் (கபூரி) (ஹாஜியார்) (அங்கே மரணித்தவர்) - 1998.04.08

இதற்கு பிற்பட்டகாலங்களில் அதிகமானவர்கள் ஹஜ் கடமை முடித்துவரத் தொடங்கினார்கள்.

மத்திய முகாம் 12ம் கொளனியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆசிரியரான இவர், நெற்பிட்டிமுனை கரீம் வைத்தியர் வீதியில் தாஹிர் லஸ்னா என்பவரை திருமணம் செய்து வாழ்ந்து வருகின்றார்.

## நெற்பிட்டிமுனையின் ஆசிரிய முத்துக்கள்

1. CB. பௌசியா
2. Y. நபீஸா
3. M. ஹமீதா
4. A. ஹனூன்
5. ML. மப்றூஹா
6. ML. சரினா
7. A. றூபியா
8. UL. குவானிதா
9. M. சுல்பிக்கா
10. M. நிஹாறா
11. I. திகானா
12. R. றமிஸா
13. M. பர்ஸானா
14. D. பரினா
15. M. லர்சானா பேகம்
16. H. தாரிக்
17. CB. சித்தி ஹன்சா

18. CB. அமீறா
19. Y. ஜனுல் முபீதா
20. YLA. பஸீர்
21. I. ரஜ்மா
22. M. அஸ்றப்
23. A. பரீட்
24. C. பைறோஸ்கான்
25. M. இப்றாஹிம்
26. A. அஸீஸா
27. M. ஜுவைரியா
28. L. றொஸானா
29. H. இனாயா
30. UL. லுதுபியா
31. AL. நைறோஜா
32. IL. நஸ்றின்
33. CM. நஜீப்
34. MT. றமீஸா
35. UK. சிபாறா பானு
36. UK. நஜீப்
37. NM. ஜெரினா
38. C. நிஹாறா
39. C. றபீனா
40. D. சித்தி றிஸானா
41. J. றினோஸ்
42. H. ஜெமீன்

43. ML. சாலித்தீன் (சமீர்)

44. MY. அன்சிலா

45. MT. பிர்னாஸ்

46. A. றெஜினா

47. A. சமீறா

48. C. மாஹிர்

49. M. சுலைஹா

50. HM. நிஸ்பான்

51. U. உபைதுல்லாஹ்

52. U. நிஸ்பானா

53. M. சபினா

54. A. நூர்ஜஹான்

55. I. அனிஸா

56. J. ஹாரிதா

57. U. நுபைறா பானு

58. C. தௌபீக்

59. M. பர்வீன்

60. N. காமிலா

61. IM. சூபி

62. KLA. கபூர்

63. C. கமறூன்

64. A. ஜெசிமா

65. AL. கலீல்

66. I. ஜுமையா

67. N. ஜெசிமா

68. AG.. சபினா

69. AG.. சாஜிதா

70. AG.. ஷர்மிலா

71. AG.. தஸ்லிமா

72. A. பர்வின்

73. MT. றம்சீன்

74. C. கபீறா

75. A. தாஹிறா

76. AG. றிஸாத்

77. AM. நிமெய்ரி

78. C. பலாஹிர்

79. S. சப்றா

80. SH. நபீலா

81. SH. வசீறா

82. SH. றிஹானா

83. J. சிபானா

84. I. நதீறா

85. I. ஷஹிலா

86. I. றினோஸா

87. AC. குவாலுதீன்

88. M. அஜிமா

89. I. மாஜிதா

90. M. தன்சிப்

91. YAK. தாஸிம்

92. A. ஜெஸ்லி

93. A. அர்சானா
94. CB. நைலுபர்
95. MM. அன்சார்
96. AG. கிஸோர்
97. ML. ஹிதாயா
98. M. அப்றோஜ்
99. J. பளீலா
100. NM. நூறுநிஸா
101. W. ஐயூப்கான்
102. ML. சரினா
103. ML. றிபாயா
104. ML. நவாயிறா
105. ILM. ஜெமில்
106. J. சாஹிலா
107. J. ஜெமியா சிறின்
108. A. றியாஸா
109. I. பாயிஸ்
110. S. இனாயா
111. K. குழந்தையும்மா
112. M. ஷாமிலா
113. MS. முனவ்வறா
114. P. பயறோசியா
115. A. ருசூத் மலிக்
116. S. சுஹாஸ்
117. S. றுஸ்வின்

## நெற்பிட்டிமுனையை விட்டும் சென்ற ஆசிரியர்கள்

1. M. ஆரிப் - சம்மாந்துறை
2. M. றூபியா - சம்மாந்துறை
3. DKM. மௌசீன் - சாய்ந்தமருது
4. DKM. உவைஸ் - தோப்பூர்
5. M. சரிபுத்தீன் - காத்தான்குடி
6. A. ஜெனிஸா - நிந்தவூர்
7. A. ஜபின்லைஸ் - சம்மாந்துறை
8. AM. றிலாஸ் - நிந்தவூர்
9. MM. இப்றாஹிம் (மௌலவி) - சம்மாந்துறை
10. MM. முனாப் - சம்மாந்துறை
11. S. சிறாஜுன் - கல்முனைக்குடி
12. S. ஜுமானா - கல்முனைக்குடி
13. A. வசிறா - சாய்ந்தமருது
14. A. பர்கானா - சாய்ந்தமருது
15. S. காதர் (மௌலவி) - சம்மாந்துறை
16. J. ஜெலீல் - கல்முனைக்குடி
17. M. ஷாமிலா - நிந்தவூர்
18. S. அப்துல்லா - மருதமுனை
19. S. அகமட் - சாய்ந்தமருது
20. H. சஜினா - கொழும்பு
21. A. ஜனுல் ஆபிதா - தோப்பூர்
22. CM. கியாஸ் - மருதமுனை
23. S. சதக்கத்துல்லா - கல்முனைக்குடி
24. M. தையூப் - கல்முனைக்குடி

25. M. ஹனூன் - மாத்தறை

26. VM. அன்வர் - ஓட்டமாவடி

27. CM. நஜ்ஜாஸ் - சம்மாந்துறை

28. P. முகையதீன் - மருதமுனை

## நெற்பிட்டிமுனையை நாடிவந்த ஆசிரிய முத்துக்கள்

1. M. முகைதீன் - கல்முனைக்குடி
2. MM. சஹாபி - பாலமுனை
3. M. சுலைமா லெப்பை - கல்முனைக்குடி
4. Y. பைஸால் - சாய்ந்தமருது
5. M. ஹனிபா - சாய்ந்தமருது
6. A. ஆதம்பாவா - கல்முனைக்குடி
7. MH. நஸ்றியா - காலி
8. S. சிறாஜுதீன் - தோப்பூர்
9. MS. ஆயிஷா பேகம் - கொழும்பு

## ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வுபெற்றோர்

1. A. கதீசா உம்மா
2. CB. நஜீமா
3. MY. றுக்கியா
4. MH. ஜலாலுதீன்
5. AA. கபூர்
6. M. சம்சுனா
7. A. ஆதம்பாவா
8. KL. மதினா
9. AL. முஹம்மட் தம்பி

10. ULA. கபூர் (மௌலவி)

11. ALM. இப்றாலெப்பை (ஹாபிஸ்)

12. A. இப்றாலெப்பை (கனி மௌலவி)

13. பௌஸியா இஸ்மாயில்

## ஆசிரிய சேவையிலிருந்து உயர்வு பெற்றோர்.

1. SMA. ஜஹ்பர் - கோட்டக்கல்வி அதிகாரியாக
2. MLA. கையூம் - அதிபராக
3. VM. ஸம்ஸம் - பிரதி அதிபராக
4. AM. சாலித்தீன் - உதவி அதிபராக
5. AM. முனாஷிர் - உதவி அதிபராக
6. MY. ஜெஸ்மினா - அதிபராக
7. ALM. நாஸிர்கனி - விரிவுரையாளராக
8. ML. பதியுதீன் - அதிபராக
9. MTA. சத்தார் - பிரதி அதிபராக
10. YLA. பஸீர் - பிரதி அதிபராக
11. MH. பதியுதீன் - அதிபராக
12. PM. ஜஹாங்கீர் - உதவிக் கல்விப் பணிப்பாளர்
13. CM. நஜீப் - நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர், அதிபர்
14. AGM. நிஸாத் - அதிபராக

## நெற்பிட்டிமுனையின் மௌலவி ஆசிரியர்கள்.

1. MTA. முனாப் (மௌலவி)
2. I. முனாஸ் (மௌலவி)
3. ALM. ஜஹாங்கிர் (மௌலவி)
4. A. இப்றாலெப்பை (மௌலவி)

5. AM. சாலித்தீன் (மௌலவி)

6. M. றஊப் (மௌலவி)

7. S. காமில் (மௌலவி)

8. S. ஜஹ்பர் (மௌலவி)

9. AR. முர்சலீன் (மௌலவி)

10. அல் ஹாஜ் ULA. கபூர் (மௌலவி)

11. அல் ஹாஜ் AL. இப்றாலெப்பை (ஹாபிஸ்)

12. S. நிஸ்பர் (மௌலவி)

13. A. நாஸிர்கனி (மௌலவி)

## நெற்பிட்டிமுனையில் மரணித்த ஆசிரியர்கள்

1. SL. மீரா உம்மா

2. SH. ஹச்சு முஹம்மட்

3. MSM. காசிம் (அதிபர்)

4. AM. ஜமாலுதீன் (அதிபர்)

5. S. அகமட்லெப்பை

6. A. ஆதம்பாவா

7. SPM. இஸ்மாயில்

8. SL. அகமட் லெப்பை (அதிபர்)

9. S. யூசுப் (மௌலவி)

10. MSM. யூசுப் லெப்பை

11. M. அலியான்

12. MC. ஜமாலுதீன்

13. TS. அக்பர் (அதிபர்)

14. AL. சாஹுல் ஹமீட் (மௌலவி)

15. C. காசிம் பாவா

16. MM. முனாப்

17. VM. இப்றாஹிம் (அதிபர்)

18. V. பரீட்

19. M. மீராலெப்பை (மௌலவி)

20. S. அப்துல்லா (பயில்வான்)

21. AL. மரியம் வீவி

22. MSM. யூசுப்

23. M. அபூபக்கர் (மௌலவி)

## நெற்பிட்டிமுனையின் பொறியியலாளர்கள்

1. மர்ஹூம் MC. தாஹிர்

1. IM. அனஸ்

2. MY. விஸ்றுல்லாஹ்

3. A. அன்பாஸ்

4. ஜெஸ்லி சலீம்கான்

## நெற்பிட்டிமுனையை விட்டுப் பிரிந்து சென்ற பொறியியலாளர்கள்.

1. IM. அனஸ் - சம்மாந்துறைக்கு

2. MY. விஸ்றுல்லாஹ் - கல்முனைக்குடிக்கு

## நெற்பிட்டிமுனையின் டாக்டர்கள்

1. MCM. மாஹிர்

2. MY. உபைத்துல்லாஹ்

3. MY. சைபுல்லாஹ்

4. I. முஹ்ஜிஸாத் இஸ்மாயில்
5. I. முஜிப் இஸ்மாயில்
6. IL. மாலிக்
7. ML. பாயிஸ்
8. S. அஜ்மல்
9. FM. நிஹ்றாத்
10. M. சையுள்

## நெற்பிட்டிமுனையை விட்டுப் பிரிந்து சென்ற டாக்டர்கள்

1. MCM. மாஹிர்
2. MY. உபைத்துல்லாஹ்
3. MY. சைபுல்லாஹ்
4. I. முஜிப் இஸ்மாயில்
5. ML. பாயிஸ்
6. S. அஜ்மல்

## ஊர் மண்ணைப் பிரகடனப்படுத்திய டாக்டர்கள்

1. ILM. மாலிக்
2. I. முஹ்ஜிஸாத் இஸ்மாயில்

## திருமணம் செய்யாதோர் – 02 பேர்

1. FM. நிஹ்றாத்
2. M. சைபுல் அக்பர்

## மிருக வைத்தியர்கள் (Vetnary Docters)

1. MC. ஜுனைட் (மேலதிக மாகாண மிருக வைத்தியப் பணிப்பாளர், கிழக்கு மாகாணம்)

2. A. சுல்பிக்கார் (உதவி மாகாண மிருக வைத்தியப் பணிப்பாளர், கிழக்கு மாகாணம்)

3. A. நஸ்லூன் சிதாறா (ஜபீன்) - இரண்டு வருடங்கள் முடித்துவிட்டு விருப்பமின்றி இடைநடுவே விட்டுவிட்டு வந்தவர்.

## நெற்பிட்டிமுனையின் தாதிகள் (Nurses)

1. ML. கனீம்
2. AL. லியாக்கத்
3. A. பல்கீஸ் (ஓய்வுநிலை)
4. A. அஸ்லீன் (ஓய்வுநிலை)
5. AL. றிசாம் (லண்டன்)
6. M. ஜெஸ்றீன்
7. UL. ஜனூபா
8. MM. மர்சுபானா
9. CM. நஜீபா
10. S. தெஸீலா
11. IL. இர்பான்

## நெற்பிட்டிமுனையின் சட்டத்தரணிகள் (Lawyer)

1. MI. அஸீஸ் LLB
2. AM. அபுல் தாஜுர் LLB (2005ல் அகால மரணம்)

## நெற்பிட்டிமுனையின் இரத்தப் பரிசோதகர் (MLT)

1. VM. இப்றாஹிம்

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் (PHI)

1. HM. நதீர் (HEO)
2. AL. கலீல் (SPHI)
3. M. ஜுனைட் (PHI)
4. AL. ஜெரின் (PHI)
5. MC. முஹம்மட் அலி (PHI) (ஓய்வு) - சம்மாந்துறையில் திருமணம்
6. AL. ஜபின் நிஸார் (PHI) - கண்டி மெதமகநுவரவில் திருமணம்
7. CBM. ஹனிபா (PHI)- சம்மாந்துறையில் திருமணம்

## நெற்பிட்டிமுனையின் கிராம சேவையாளர்கள்

1. ஆதம்கண்டு (GS)
2. KL. மஜீட் (GS)
3. S. அபூபக்கர் (GS)
4. PI. அபூபக்கர் (GS)
5. KL. நாகூரும்மா (GS)
6. AC. றஹீம் (GS)
7. KP. றாசிக் தம்பி (GS)
8. UL. பதியுதீன் (GS)
9. AM. பஸால் (GS)
10. AC. அப்துல் ஹமீட் (GS)
11. A. ஆஸாத் (GS)
12. S. மசூனா (GS)
13. A. கைசர் (GS)

14. A. றஹ்னா (GS)
15. A. கியாஸ் (GS)
16. B. லியாஸ் (GS)
17. AM. நஜீம் (GS)

## நெற்பிட்டிமுனையின் நெசவு ஆசிரியர்கள்.

1. M. முஸ்தபா லெப்பை
2. M. சாஹிறா
3. ML. தஸ்மினா
4. I. அப்றோஸ்
5. A. சனூ
6. M. பாத்தும்மா
7. M. பஸ்மா
8. B. நிறோஸா
9. NM. நூறுநிதா
10. M. றொஸ்மி
11. N. சிபானா
12. I. இஹ்சானா

## காணி உத்தியோகத்தர்

1. அல்ஹாஜ் AM. மதானி

## வன பரிபாலன அதிகாரி

1. அல்ஹாஜ் AMA. ஜாயா

## நில அளவையாளர் ( Surveyor)

1. A. சுஹாஸ்

## பிரதேச செயலாளர்கள்

1. ALM. பளீல் DS (2005ல் சுடப்பட்டு மரணமானவர்)
2. MS. ஆசிக் ADS

## கணக்காய்வு அத்தியட்சகர் (Audit Supirintant)

1. B. அஹமட் ஜெறோஸ்

## திட்டமிடல் பணிப்பாளர்

1. ALA. மஜீட் ADP
2. மர்ஹூம் அல்ஹாஜ் SLA. கரீம் ADP

## உள்ளூராட்சி உத்தியோகத்தர்கள் (Local Government Officer)

1. CB. சர்ஜூன் தாரிக் அலி

## கேட்புவியல் தொழிலுனுட்பவியலாளர் (Radiologist)

1. MLM. தாஹிர் (பாயிஸ்)

## நிர்வாக உத்தியோகத்தர்கள்

1. S. அஸீசுல்லாஹ் AO
2. AMA. பஸால் AO
3. அல்ஹாஜ் AL. அமானுல்லாஹ் FA
4. அல்ஹாஜ் MI. றியால் SA

## தற்கொலைகளும், கொலைகளும

1. 1882ம் ஆண்டு சின்னம்மா என்று அழைக்கப்பட்ட பெண்மணியும் அவரது இரண்டு ஆண்குழந்தைகளும் கடலில் மூழ்கி தற்கொலை செய்து கொண்டதாக வரலாறு கூறுகிறது. இவர் தனது கணவனில் வெறுப்புற்றே தற்கொலை செய்ததாக அறியக்கிடைக்கின்றது.

2. செயிலான் என்பவர் தனது மனைவி மீது வெறுப்புக் கொண்டு 1952ம் ஆண்டு காலப்பகுதியில் நமதூர் மையவாடியில் தற்பொழுது நிற்கின்ற ஆல மரத்தில் தூக்கிட்டு இறந்ததாக வரலாறு கூறுகின்றது.

3. 1960ம் ஆண்டுக் காலப்பகுதியில் சக்கரியா லெவ்வை மீராக்குட்டி (ஐயா மாசியர்) நெற்பிட்டிமுனை மேடுவட்டையில் உள்ள பெரிய குளக்கட்டில் அமைந்திருக்கும் துரிசியில் தூக்கிட்டு தற்கொலை செய்ததாக கூறப்படுகிறது.

4. 1966ம் ஆண்டுக் காலப்பகுதியில் சாயுபுப்போடி அல்லாப்பிச்சை என்பவர் வீரச்சோலையில் அமைந்துள்ள வயல் வெளியில் வாடிக்கு அருகில் வயல் வரம்பில் கொலையுண்டு கிடந்ததாக வரலாற்றின் மூலம் அறியக் கிடைக்கிறது.

5. 1969ம் ஆண்டுக் காலப்பகுதியில் லெப்பைக்கனி என்பவர் மாக்கண்டி என்னும் இடத்தில் வயல் வெளிக்கு அருகாமையில் கொலை செய்யப்பட்டு கிடந்ததாக அறியக்கூடியதாக இருக்கிறது.

6. 1972ம் ஆண்டு கைவுத்தம்பி இஸ்மாலெப்பை (மாங்குட்டியர்) வீரக்கொடை என்னும் காட்டுப் பகுதியில் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டார்.

7. 1979ம் ஆண்டு மார்கழி மாதம் நெற்பிட்டிமுனை மேட்டுவட்டை வயல்வெளிப் பிரதேசத்தில் சேற்றுக்குடாப் பகுதியில் கொலை செய்யப்பட்டுக் கிடந்த சின்னலெப்பை முஸ்தபா (றாளாமி) என்பவருடைய சடலம் கைகள், கால்கள், தலை, உடம்பு என்பன வேறுவேறு இடங்களில் சேற்றுக்குள் புதைக்கப்பட்டு 8 நாட்களுக்குப் பிறகு கண்டுபிடிக்கப்பட்டது. இக்கொலை கிழக்கு ஆசியாக் கண்டத்தில்

செய்யப்பட்ட கொலைகளுள் இரண்டாவது கொலையென வர்ணிக்கப்பட்டது. அக்காலப் பத்திரிகைகளில் பிரபலமாக பேசப்பட்டது.

8. 1983ல் ஆதம்வாவா றாசீக் என்பவர் நெறற்பிட்டிமுனை 1ம் கட்டை சந்திக்கு அருகில் உள்ள வளவில் தனக்குத் தானே தீமூட்டி தற்கொலை செய்துகொண்டார்.

9. 1984ம் ஆண்டுக் காலப்பகுதியில் கனிமுத்து என்பவர் பொத்துவில் காட்டுப் பிரதேச வயல் வெளியில் கொலை செய்யப்பட்டுக் கிடந்த இவருடைய ஜனாஸா 2 நாட்களுக்குப் பிறகு மீட்கப்பட்டதாக அறியக் கிடைக்கிறது.

## இன வன்முறையில் படுகொலை செய்யப்பட்டோர்

1. ஜனாப் ஆக்கிமின்
2. ஜனாப் AB. ஜெமில் - புள்ளம்மாவின் .மகன்
3. ஜனாப் AB. நாஸர் - புள்ளம்மாவின் மகன்
4. ஜனாப் றபிக்கான்
5. ஜனாப் MI. இல்யாஸ் - DRO வின் மகன்
6. ஜனாப் F. ஜாபிர் - மர்ஹூம் பரீட் மாஸ்ரர் மகன்
7. ஜனாப் MC. தெளபீக் - வெளவியர் மகன்
8. ஜனாப் தெளபீக் - பதுளையார் மகன்
9. ஜனாப் AL. நிஸார் (மாத்தையா) - DS. பளீலின் காக்கா
10. ஜனாப் AC. காலித்தீன் (சித்தீக்) - விறில் போடியார் மகன்
11. ஜனாப் AR. வாஹிர் - மல்லியின் மகன்
12. ஜனாப் கலீல்
13. ஜனாப் U. கலீல் - தாடி உதுமார் மகன்
14. ஜனாப் A. சல்மான் - அக்பர் அதிபர் மகன்
15. ஜனாப் A. காசீம் - மெளபியாவின் கணவர்
16. ஜனாப் அக்பர் - வெட்டுக்கிளி
17. ஜனாப் வெள்ளையன்
18. ஜனாப் நியாஸ் - புலி
19. ஜனாப் N. அஸீஸ்
20. ஜனாப் மபாஸ்
21. ஜனாப் நெளபர் - யானையர் பேரன்
22. ஜனாப் SI. ஜெலீல் - SI. இக்பால் தம்பி
23. ஜனாப் LK. அஸ்வர்
24. ஜனாப் AK. நாஸ்தின் (ஜெயா) - கரீம் வைத்தியர் மகன்

25. ஜனாப் தௌபீக் - டீரிஸா உம்மாவின் மகன்

26. ஜனாப் UL. வஹாப் - கபூர் மௌலவி தம்பி

27. ஜனாப் AL. தாஹிர் - பஸப்பி தாஹிர்

28. ஜனாப் M. அப்துல்லா - CEB மசூர் தம்பி

29. ஜனாப் தாஹிர் - வெள்ளை தொப்பியர் பேரன்

30. ஜனாப் சபீர்

31. ஜனாப் KL. அப்துல் றகீம்

32. ஜனாப் ஜ.ஃபர் - SM மகன்

33. ஜனாப் IL. சத்தார் - குஞ்சுத்தம்பி ஹாஜியின் தம்பி

34. ஜனாப் I. அனீஸ் - இஸ்மார் மகன்

35. ஜனாப் M. சக்காப் - வடிச்சல் மகன்

36. ஜனாப் ஜெசின் - பிச்சட பேரன்

37. ஜனாப் ஜெமில் - ஜெமினின் காக்கா

38. ஜனாப் MS. சாதிக்கீன் (நதிரா ஆசிரியையின் கணவர்) - பிஸ்கால் மக்கள்

39. ஜனாப் MS. ஜெமில் - பிஸ்கால் மக்கள்

40. ஜனாப் MS. தஸ்தகீர் - பிஸ்கால் மக்கள்

41. ஜனாப் A. ஆலித்தீன் - வெள்ளத்தின் மகன்

42. ஜனாப் LK. உதுமாலெப்பை - ULK முதலாளி மகன்

43. ஜனாப் ALM. பளீல் - DS

44. ஜனாப் முகையதீன் - அலியாண்ட காக்கா

45. ஜனாப் ஜ.ஃபர் - குஞ்சுநானா மகன்

46. ஜனாப் MM. சறூக் - முடிச்சுக்கட்டி மகன்

47. ஜனாப் U. இஸ்மாயில் - கொக்கில்

(யா அல்லாஹ்! இந்த சுஹதாக்களுக்கு சுவர்க்கமளிப்பாயாக! ஆமீன்!!)

## பல்கலைக்கழகத்தில் இருக்கும்போது மரணித்தவர்கள்

1. SL. அபூபக்கர் - 1972 கொழும்பு பல்கலைக்கழகம் 2ம் வருட மாணவர்
2. AMA. தாஜுர் - 2005 கொழும்பு பல்கலைக்கழகம் முடித்துவிட்டு சட்டக்கல்லூரியில் இருந்தபோது

## சேவையில் இருக்கும்போது மரணித்தவர்கள்

1. திருமதி மரியம் வீவீ ஹனிபா - 2016 ஆசிரியர்
2. திருமதி கயறுன்னிஸா நூர்முகமட் - 2016 நூலக உதவியாளர்



மையவாடி இங்கு காணப்படும் ஆலமரம்
சுமார் நூறு வருடங்கள் பழைமை வாய்ந்தது.

## மையவாடியின் வரலாறு

1960ம் ஆண்டுகளுக்கு முன்னர் எமதூரின் பல பகுதிகள் வெறும் காடாக இருந்தது. சனப்பெருக்கம் அதிகரிக்க அதிகரிக்க இடத்தேவை ஏற்பட்டது. அதன்போது காடுகள் அழிக்கப்பட்டு வளவுகள் உருவாக்கப்பட்டன. அந்தவகையில் ஆலையடி றோட்டுக்கும் நமதூர் பிரதான வீதிக்கும், மையவாடி வீதிக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பு வெறும் காடுகளாகவும் புற்றரையாகவும் காணப்பட்டன. தேவையுடைய மக்களால் காடுகள் வெட்டப்பட்டு வளவுகள் உருவாக்கப்பட்டன. சிலர் காடுகள் வெட்டிய மக்களிடமிருந்து காசு கொடுத்தும் வாங்கிக் கொண்டனர்.

அந்தவகையில் S. அப்துல்லாஹ் பயில்வான், ஆதம்கண்டு விதானையார், SP. காசீம் வாவா, ALM. மதார் சாஹிப், M. முகம்மது இஸ்மாயில் வட்டவிதானை, முகையதீன் வாவா (முடிச்சிக்கட்டியர்) ஆகியோரைக் குறிப்பிட்டுக் கூறமுடியும்.

மையவாடிப் பள்ளிவாயல் இருக்கும் இடமிருந்து நேரே பதுளையார் குடும்பம் இருக்கும் இடம் வரைக்கும் உள்ள நீண்ட பெரிய வளவும் M. முகம்மது இஸ்மாயில் (MI. அஸீஸ் சட்டத்தரணியின் தந்தை) அவர்களுடைய வளவாக இருந்தது. அந்த வகையில் முகையதீன் வாவா (முடிச்சிக்கட்டியர்) அவர்களின் ஆலோசனைக்கு அமைய ALM. மதார் சாஹிப் அவர்கள் M. முகம்மது இஸ்மாயில் அவர்களோடு பிரச்சினையில் ஈடுபட்டதோடு அந்தப் பிரச்சினையை நீதிமன்றம் வரைக்கும் கொண்டு சென்றனர். அதனால் நீதிமன்றின் தீர்மானத்திற்கு அமைய அவ்வளவு ALM. மதார் சாஹிப் மற்றும் முகையதீன் வாவா ஆகியோருக்குச் சொந்தமானது. அவ்வேளை தற்பொழுது மையவாடியாக இருக்கும் வளவு M. முகம்மது இஸ்மாயிலுக்கு நீதிமன்றின் தீர்ப்புக்கமைய சொந்தமானது.

இது இவ்வாறிருக்க காடாகவிருந்த மையவாடியில் சில மையத்துக்கள் அடக்கம் செய்யப்பட்டிருந்தன. பக்கத்திலே பாவாப் பிள்ளை ஸியாரம் இருந்ததன் காரணமாக அவ்விடத்தில்

மையத்துக்களை அடக்கம் செய்வது நன்மையெனக் கருதினர். அத்தோடு பள்ளிவாயலில் ஜனாஸாக்கள் அடக்கம் செய்வதனால் பள்ளிவாயல்களுக்கு பணம் செலுத்த வேண்டும். பணம் செலுத்த முடியாதவர்களும் மையவாடியில் ஜனாஸாக்களை அடக்கம் செய்து வந்தனர்.

இதன் காரணமாக M. முகம்மது இஸ்மாயில் வட்டவிதானையார் அவர்கள் நீதிமன்றின் தீர்ப்பால் உரித்தான அவ்வளவை ஜும்ஆ பள்ளிவாயலுக்கு வக்பு செய்துவிட்டார்கள். அத்தோடு ஜும்ஆ பள்ளிவாயல் வளவில் அடக்கம் செய்யப்பட்டு வந்த ஜனாஸாக்கள் பள்ளிவாயல் நம்பிக்கையாளர் சபையின் தீர்மானத்திற்கு அமைய அனைத்து ஜனாஸாக்களும் மையவாடியில் அடக்கம் செய்யும் வழக்கம் உருவானது. பொதுவாக எல்லா ஜனாஸாக்களுக்கும் நிதி அறவிடப்பட்டு வருகிறது. இந்த மையவாடி வளவை "காரக்கண்டுமுனை வளவு" என அப்போதைய மக்கள் அழைத்து வந்தனர்.

*தகவல்:- அல் ஹாஜ் ALM. மதார் சாஹிப்*

✓ **"அறிந்தவர்களும் அறியாதவர்களும் சமமாவார்களா? என நபியே நீர் கூறுவீராக!"** (அல் குர்ஆன்)

✓ **"அல்லாஹ்விடத்தில் மிகச் சங்கைக்குரியவர் உங்களில் மிகப் பயபக்தியுடையவரே."** (அல் குர்ஆன்)

✓ **"எவர் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொள்கிறாரோ அவர் பேசினால் நல்லதைப் பேசட்டும் அல்லது மௌனமாக இருக்கட்டும்."** (அல் ஹதீஸ்)

## இயற்கை அனர்த்தங்களும் எமதூரும

1. 1907ம் ஆண்டுப் பகுதியில் இலங்கையில் கிழக்குப் பகுதி சூறாவளியால் பாதிப்புக்கு உள்ளாகியதாக வரலாறு கூறுகிறது. அக்காலப்பகுதியில் நமதூரில் குடிசை வீடுகளே காணப்பட்டதால் பெரும் பாதிப்புகள் நிகழவில்லை. குறிப்பாக நமது ஜும்ஆ பள்ளிவாயல் முற்றாக அழிந்ததாக கூறப்படுகிறது. அத்தோடு நூற்றுக்கணக்கான குடிசை வீடுகள் சேதமடைந்ததாகவும், மரம், செடி, கொடிகள் என்பன முற்றாக அழிந்ததாகவும் மூதாதையர்களிடமிருந்து அறியக்கூடியதாக இருக்கிறது.

2. 1957ம் ஆண்டு ஏற்பட்ட பெருவெள்ளமும் பெரும் காற்றும் மக்களை அகதிகளாக்கியதோடு உயிர்களையும் காவிச் சென்றுள்ளது. எமதூரில் உயிர்சேதம் ஏற்படாவிட்டாலும் அயல் கிராமங்களில் பல உயிர்கள் பலியானதாகவும், ஆயிரக்கணக்கான மாடாடுகளை வெள்ளம் அடித்துச் சென்றதாகவும், பயிர் பச்சைகள் முற்றாக அழிந்ததாகவும், வீடுகள் சேதமடைந்ததாகவும் தெரிய வருகிறது. அதைத் தொடர்ந்து அரசின் நிவாரண உதவிகளும் அகதி முகாம்களில் வாழ்ந்தோருக்கு வழங்கப்பட்டு உபசரிக்கப்பட்டதாகவும் தகவல்கள் மூலம் அறியக் கூடியதாக இருக்கிறது. இதற்காக காவியங்களும் பாடியிருக்கிறார்கள்.

3. 1978ம் ஆண்டு கிழக்கிலங்கையை சூறாவளி தாக்கி அழித்தது. ஆயிரக்கணக்கான மக்கள் வீடு, வாசல்களை இழந்து அகதிகளாக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் காயப்பட்டு அரச வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் புயல் காற்றில் தாக்குப் பிடிக்காது மரணமடைந்தனர். இலச்சக்கணக்கானோர் வீடுவாசல்கள் இழந்து அகதிகளாக ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் தஞ்சமடைந்தனர். மரங்கள், செடி, கொடிகள் மண்ணோடு மண்ணாயின. மின்கம்பங்களும், மரங்களும் பாதைகளுக்குக் குறுக்கே வீழ்ந்ததால் போக்குவரத்து ஸ்தம்பிதமானது. மீட்புப்பணிகளை சரிவரச் செய்வதற்கு போக்குவரத்துத் தடையாக அமைந்தன. நிவாரண வசதிகூட தாமதமாகின.

வெள்ளப்பெருக்கும், சூறாவளியும் ஒன்றுசேர்ந்து வந்ததால் மக்களின் இயல்பு வாழ்க்கை துண்டிக்கப்பட்டன. அரசு ஹெலிகொப்டர்கள் மூலம் நிவாரண வசதிகளைச் செய்தபோதிலும் போதுமான அளவுக்கு மக்களிடம் போய் சேரமுடியாத நிலை ஏற்பட்டன. ஓடும் ரயில் ஓடமுடியாது நிறுத்தப்பட்டன. பாதசாரிகளுக்கு பல்வகைப்பட்ட துயரங்கள் தொடர்ந்தன. வெளி ஊர்களிலிருந்து கிழக்கு நோக்கி வரவேண்டிய மக்கள் பாதையோரங்களில் நின்று அழுது புலம்பிக் கொண்டிருந்தனர்.

சூறாவளியின் பின் பலநாட்கள் மக்கள் பசியோடும் பட்டிணியோடும் மக்கள் வாடினர். வீடுகள், கடைகள், பொதுக்கட்டடங்கள் பல உடைக்கப்பட்டு கொள்ளையிப்பட்டன. இப்படி சிரமங்களுக்கு மத்தியில் பல நாட்களின் பின்னர் நிவாரண உதவிகள் கிடைத்தன. மக்கள் பயன் பெற்றனர். இந்த இயற்கை அனர்த்த நிகழ்வு எமது கிராமத்திற்கு நீண்ட வடுவை ஏற்படுத்தியுள்ளது என்பதை வரலாற்றிலிருந்து அறியக்கூடியதாக இருக்கிறது.

4. 1978ல் ஏற்பட்ட பெருவெள்ளம், சூறாவளி போன்ற அனர்த்தங்களில் பாதிக்கப்பட்டிருந்த எமதூர் வாசிகளுக்கு இன்னுமொரு சோகம் காத்திருந்தது. அதுதான் அகில உலகத்தையே உலுக்கிய சுனாமிப் பேரலை. உலகத்தையே ஒருகணம் ஸ்தம்பித நிலைக்கு உள்ளாக்கியது.

சுமாத்திரா தீவில் 10,000 மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட புவிநடுக்கம் (9.0 றிச்டர் அளவில்) அசுர பலத்தோடு சுனாமியாக எழுந்து இந்து சமுத்திரப் பிரதேசக் கடற்கரைகளை தாக்கி அழித்தது. இலங்கையைப் பொறுத்தவரை வடக்கு, கிழக்கு மாகாணங்கள் முற்றாக பாதிக்கப்பட்ட போதிலும் தென்கிழக்குப் பிரதேசம் கடும் தாக்குதலுக்கு உள்ளாகியது. அந்தவகையில் மருதமுனை முக்கியமாகக் குறிப்பிட்டுக் கூறக்கூடியது.

கல்முனைக்குடி, சாய்ந்தமருது போன்றவையும் பாதிக்கப்பட்டன. கல்முனைக்குடியில் 3400 பேரும், சாய்ந்தமருதூரில் 2810 பேரும், மருதமுனையில் 2500க்கு மேற்பட்டோரும், கல்முனை, பாண்டிருப்பு கிராமத்தில் 2000 பேரும், காரைதீவில் 240 பேரும் கோரச்சுனாமியால் கொல்லப்பட்டனர். 2004.12.26ம் திகதி ஒரே தினத்தில் இச்சம்பவம் ஏற்பட்டது. அம்பாறையில் மொத்தமாக 10436 பேர் உயிரிழந்தனர். அரச புள்ளி விபரங்களின்படி இதை அறியக்கூடியதாக இருக்கிறது.

| மாவட்டம் | உயிர் இழந்தோர் தொகை |
|---|---|
| 1. யாழ்ப்பாணம் | 1256 |
| 2. முல்லைதீவு | 2902 |
| 3. கிளிநொச்சி | 32 |
| 4. திருகோணமலை | 984 |
| 5. மட்டக்களப்பு | 2975 |
| 6. அம்பாறை | 9051 |
| 7. அம்பாந்தோட்டை | 4500 |
| 8. மாத்தறை | 1061 |
| 9. காலி | 3774 |
| 10. களுத்துறை | 170 |
| 11. கொழும்பு | 65 |
| 12. கம்பஹா | 07 |


| நாடு | தொகை |
|---|---|
| 1. இந்துனோசியா | 184135 |
| 2. இலங்கை | 38195 |
| 3. இந்தியா (அந்தமான் 11000, நாகப்பட்டினம் 7793, கன்னியாக்குமரி 800, கடலூர் 3100, கேரளா 40, ஆந்திரா 36) | 22769 |
| 4. தாய்லாந்து | 5305 |
| 5. கிழக்கு ஆபிரிக்கக் கரை | 137 |
| 6. மலேசியா | 74 |
| 7. மியன்மார் | 59 |
| 8. பங்களாதேசம் | 02 |

இந்தவகையில் பார்க்கப்போனால் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசம் முற்றாகப் பாதிக்கப்பட்ட வகையில் 9051 பேர் உயிரிழந்ததோடு கோடிக்கணக்கான சொத்துக்கள் இழக்கப்பட்டன. ஏனைய மாவட்டங்களைப் பொறுத்தவரையில் அம்பாறை மாவட்டத்திற்கு அடுத்ததாக அம்பாந்தோட்டை மாவட்டம் 4500 பேரை இழந்துள்ளது. இப்படியான கட்டத்தில் எமது சகோதரக் கிராமமான மருதமுனை, கல்முனைக்குடி, சாய்ந்தமருது போன்ற கிராமங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதோடு, அப்பிரதேச மக்களின் ஜனாஸாக்கள் நெற்பிட்டிமுனை, சம்மாந்துறை, மாவடிப்பள்ளி போன்ற கிராமங்களில் அடக்கம் செய்யப்பட்டன. அந்தவகையில் மருதமுனை மக்களின் ஜனாஸாக்கள் நெற்பிட்டிமுனையிலும் கல்முனைக்குடி, சாய்ந்தமருது மக்களின் ஜனாஸாக்கள் சம்மாந்துறை, மாவடிப்பள்ளி போன்ற இடங்களில் அடக்கம் செய்யப்பட்டன.

## மீட்புப்பணியில் நம்மூரவர

சுனாமிப் பேரழிவை அடுத்து நெற்பிட்டிமுனை விளையாட்டுக் கழகங்கள், சமூக அமைப்புக்கள், இளைஞர்கள் ஓடோடிச் சென்று மருதமுனை மக்களை மீட்பதற்காக நமதூர்வாசிகள் நூற்றுக்கணக்கான டிப்பர் வாகனங்கள், உழவுஇயந்திரங்கள் சகிதம் மக்களைக் காப்பாற்றிக் கொண்டிருந்தார்கள். நமதூரில் உறவினர்கள் வீடுகளில் தஞ்சமடையச் செய்தார்கள். கொளணிப் பகுதிக்குக் கொண்டு சென்று பாதுகாப்பான இடங்களில் தங்கச் செய்தார்கள் ஆடைவசதிகள், உணவுப்பண்டங்கள் போன்றவற்றை முன்வந்து அகதிகளாக்கப்பட்டவர்ளுக்கு வழங்கிக் கொண்டிருந்தார்கள். அல் அக்ஸா பாடசாலை, அல் மதுரிஸத்துல் ஸமதானியா ஆகியவைகளில் அகதிகள் தஞ்சமடைந்தனர். அவர்களுக்கான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. அதுமட்டுமல்லாமல் 300க்கு மேற்பட்ட ஜனாஸாக்களை தங்களின் வாகனங்களில் ஏற்றி வந்து எமதூர் மையவாடியில் நீண்டகுழிகள் தோண்டப்பட்டு அடக்கம் செய்யப்பட்டன. ஜனாஸாக்களை குளிப்பாட்டுவதற்காக மக்கள் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். பெண் ஜனாஸாக்களை பெண்கள் குளிப்பாட்டிக் கொண்டிருந்தனர். பெண் ஜனாஸாக்களில் இருந்த ஆபரணங்கள் கழற்றப்பட்டு பள்ளிவாயல் நிர்வாகத்திடம் ஒப்படைத்துக் கொண்டிருந்தனர். பள்ளிவாயல் சபையினர் அவற்றைப் பொறுப்பேற்று மருதமுனை பள்ளிவாயல் நிர்வாகத்தினரிடம் ஒப்படைத்தனர். கபன் சீலைகள் இல்லாதபோது அப்போதைய பாடசாலை

அதிபர்களாக இருந்த AM. ஜமால்தீன் அதிபர், அல்ஹாஜ் MLA. கையூம் அதிபர் போன்றோர் பாடசாலை சீருடைத்துணிகளை கொடுத்து உதவினர்.



சுமார் 200 வருடங்களுக்கு மேற்பட்ட கையேட்டுப் பிரதி.
கடந்த 100 வருடங்களுக்கு முன்பு வரை இவ்வாறான பனையோலையினாலான ஏடுகளே பயன்பாட்டில் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்து சமுத்திரப் பிரதேசத்தில் "சுனாமி" கடற்கோள் புதியவையல்ல

இந்து சமுத்திரத்தில் முன்னர் சுனாமி கடற்கோள் ஏற்பட்டிருக்கவில்லை எனக் கொள்ள முடியாது. பல தடவைகள் நீண்டகால இடைவெளிகளில் ஏற்பட்டிருக்கிறது என்பதற்கு கருத்துக்களும் ஆதாரங்களும் உள்ளன. முன்னோர்கள் அடிக்கடி கூறுவார்கள். ஆண் அலை, பெண் அலையை துரத்திக் கொண்டு இருக்கின்றன. ஆண் அலை பெண் அலையைப் பிடிக்கும்போது கடற் கொத்தளிப்பு ஏற்பட்டு பேரலைகள் உருவாகும். அப்போது உலகம் அழியும் என்று சிறுபிள்ளைகளும் செல்லமாகக் கூறிய வார்த்தைகள் தற்பொழுது நமது அனுபவத்தில் கண் கூடாகக் காணக்கூடியதாக இருந்தது (2004.12.26ம் திகதி). நாம் நம் முதியோரின் அனுபவக் குறிப்புக்களை பெரிதாக எடுப்பதில்லை. அவர்களை அறிவற்றவர்கள் என்றும், வயது முதிர்ந்தவர்கள் என்றும் கணக்கில் எடுக்காமல் இருக்கக்கூடாது என்பதை 2004ம் ஆண்டு பேரழிவை ஏற்படுத்திய "சுனாமி" கடற்கோள் எம் எல்லோருக்கும் ஒரு எடுத்துக்காட்டாக அமைந்தது.

1. புவிச் சரிதவியல் காலத்தில் 120 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் கயினோ சோயிக் யுகத்தின்போது இயோசீன் என்ற காலத்தில் இந்திய தீபகத்பகத்திற்கு தெற்கே அதனையும் உள்ளடக்கி பெரியதொரு நிலப்பரப்பு பரவிக் கிடந்தது. அந்த நிலப்பரப்பு $50^{0}$ கிழக்கு நெடுங்கோட்டிலிருந்து $95^{0}$ கிழக்கு நெடுங்கோடு வரையும் தெற்கே 150 தென் அகலக்கோடு வரை பரந்திருந்தது. அதனை "லெமூரியாக் கண்டம்" என அழைத்தனர். 100 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு ஐரோ ஆசியத்தகடும், இந்திய கவசத்தகடும் ஒன்றினை ஒன்று நோக்கி ஒருங்கின. இரண்டு கவசத்தகடுகளும் மோதியதால் அவற்றின் படிவுகள் மடிப்பு மலைகளாக உயர்ந்தன. அல்ப்பைன் - இமயமலைத் தொகுதி உருவாகிய காலம் அது. அதனை அல்ப்பைன் மலையாக்கம் என்பர். இவ்வாறான மலையாக்க நகர்வால் பெரியதோர் புவிநடுக்கமும் வானை

முட்டும் சுனாமி அலைகளும் தோன்றின. லொமுரியாக் கண்டம் கடற்கோளுக்குள்ளாகியது. மடகஸ்கார், மொரீசியஸ், சீஷெல்ஸ், இலட்சதீவுகள், மாலைதீவுகள், இலங்கை, அந்தமான், நிக்கோபர் தீவுகள் என்பனவற்றை எஞ்சவிட்டு மிகுதி லெமூரியா நிலப்பரப்புக் கடலினுள் சங்கமமாகி அழிந்து போயிற்று.

2. மயோசீன் என்ற காலத்தில் (ஏறத்தாழ 60 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்) யாழ்ப்பாணக்குடா நாடு என்ற சுண்ணாம்புக்கல் பிரதேசம் கடலின் கீழிருந்து மேலெலுந்தது. அவ்வேளை யாழ்ப்பாண குடாநாட்டின் பரப்பு மேற்கே நெடுந்தீவு வரை பரந்திருந்தது. அதாவது யாழ்ப்பாண குடாநாட்டிற்கு தென்மேற்கே பரவியுள்ள காரைதீவு, வேலணை, மண்டைதீவு, அனலைதீவு, எழுவைதீவு, புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு முதலானவை அனைத்தும் ஒருங்கிணைந்த பெரும் பரப்பாக விளங்கியது. அவ்வேளையில் இந்திய நிலப்பரப்பு தனுஸ் கோடியில் இருந்து மன்னார் வரை இராமர் அணை மூலம் இணைக்கப்பட்ட நிலப்பரப்பாக விளங்கியது. காலக்கிரமத்தியில் இப்பகுதியில் ஏற்பட்ட கடற்கோள் தீவுகளை எஞ்சிவிட்டு மிகுதி நிலப்பரப்பினை காவு கொண்டது. இராமரணை எனப்படும் நிலப்பாலம் கடலினுள் இடை இடையே அமிழ்ந்து அழிந்து போனது.

3. கி.மு.150ம் ஆண்டு இலங்கையில் இன்றைய களணி கங்கைக் கரையைச் சூழ்ந்து அமைந்திருந்த கல்யாணி இராச்சியத்தின் கரையோரப்பகுதிகள் பெரும் கடற்கோளுக்கு உள்ளாகி அழிந்து போயின. கல்யாணி இராச்சியத்தின் மன்னனாக கல்யாணி தீசன் என்பவன் விளங்கினான். அவனுடைய சகோதரன் அய்ய உத்திகனுக்கும் தமையனான மன்னனின் மனைவிக்கும் கள்ள உறவு இருந்தது. இந்தக் கள்ள உறவு மன்னனுக்கு தெரிந்தபோது உத்திகன் நாட்டைவிட்டு ஓடிப்போனான். தமையன் மனைவிக்கு பிக்கு வேடம் அணிந்த ஒருவன் மூலம் காதல் ஓலை வரைந்தான். அவன் கல்யாணித் தலைமைப் பிக்குவுடன் இணைந்து உள்ளே சென்று அந்த ஓலையை அரசி முன் நழுவ விட்டான். இந்த ஓலையின் கையெழுத்து தலைமைத் தேரரின் கையெழுத்தினை ஒத்திருந்ததால் வெகுண்டெழுந்த மன்னன் தலைமைத் தேரரையும், தன் மனைவியையும் கணப்பொழுதில் தன் வாளுக்கு இரையாக்கி சமுத்திரத்தில் தள்ளிவிட்டதாக மகாவம்சம் கூறுகிறது. கல்யாணி இராச்சியத்தின் தென்மேற்கின் பெரும்பகுதி கடற்கோளுக்குள்ளாகிப் போனது என மகாவம்சம் கூறுகிறது.

4. 2000ம் ஆண்டுகளுக்கு முன் கடற்கொந்தளிப்பினால் காவிரிப் பூம்பட்டினம் என்ற அழகிய நகரம் கடற்கோளுக்கு உள்ளானதாக சிலப்பதிகாரத்தில் இருந்து அறிய முடிகிறது. இன்றையப் பூம்புகாரை அடுத்துள்ள சமுத்திரப் பரப்பில் கடற்கோளால் அழிந்தமைக்குரிய ஆதாரங்களை இன்றும் காட்டுகின்றன.

5. கி.பி. 900 ஆண்டுகளில் நாகபட்டிணம் பெரும்கடல் அலைத்தாக்குதலுக்கு உள்ளானதென்றும் அங்கிருந்த புத்தமடம் அழிந்து போனதென்றும் வரலாற்று ஆதாரங்கள் கூறுகின்றன. ராஜராஜ சோழர் காலத்தில் நாகன் பட்டிணத்தினைப் பிரமாண்டமான அலைகள் தாக்கி கடற்கொந்தளிப்பினையும் உருவாக்கின என்பதற்கு வரலாற்று ஆதாரங்கள் உள்ளன.

6. கி.பி. 1200ம் ஆண்டில் மகாவலிபுரம் கடற்கொந்தளிப்பின் தாக்குதலுக்கு உள்ளாகியது. கடற்கரையோரத்தில் இருந்த ஒரு கோயிலும் பல்வேறு கலைப்பொக்கிசங்களும் அப்போது கடலில் மூழ்கிப் போயின. 'தவண்டர் தற்வேஸ் இந்தியா' என்ற வரலாற்று நூலில் ஏ.எல். பாஹ்பம் மகாவலிபுரம் கடற்கொந்தளிப்புக்கு உள்ளதென குறிப்பிட்டுள்ளார்.

7. 1881ம் ஆண்டு நிக்கோப்பாரை ஒட்டி உருவாகிய 8.0 றிச்டர் அளவிலான புவிநடுக்கம் ஒரு சுனாமிக் கொந்தளிப்பினை இந்து சமுத்திரப் பிரதேசத்தில் ஏற்படுத்தியுள்ளது.

8. 1883ம் ஆண்டு சுமத்திராவுக்கும் யாவாவுக்குமிடையில் காரக்கற்றோவா எரிமலை வெடித்து பாறைக் குளம்பைக் கக்கியது. அதனால் உருவாகிய சுனாமிப் பேரலை இந்தியா உட்பட இந்தனேசியாப் பகுதிகளைத் தாக்கி 30 ஆயிரம் மக்களின் உயிரைப் பலிகொண்டது.

9. 1941ம் ஆண்டு ஜுன் 26ல் அந்தமான் தீவின் பகுதியில் 7.5 க்கும் 8.5 க்கும் இடையில் ஏற்பட்ட புவிநடுக்கம் சுனாமியாக அந்தமான் தீவுகளின் மேற்குப் புறத்தை மூழ்கடித்தது. இந்திய கிழக்குக் கரையோரப் பகுதிகளையும் தாக்கி ஏராளமான உடமைகளை அழித்தது. ஆயிரக்கணக்கான உயிர்களை குடித்தது.ஸ மட்டக்களப்புப் பகுதியைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் 60, 70 வருடங்களுக்கு முன்னர் பேரலைத்தாக்கம் ஒன்று நிகழ்ந்ததென நினைவுபடுத்தியுள்ளமை இதனையே ஆகும்.

10. 1945 நவம்பர் 27ம் திகதி அராபியக் கடலில் 8.35 றிச்டர் அளவில் ஒரு புவிநடுக்கம் ஏற்பட்டது. அதனால் ஏற்பட்ட சுனாமிப் பேரலைகள் இந்தியாவின் மேற்குக் கரையோரத்தில் பெரும் கொந்தளிப்பினை தோற்றிவித்துள்ளது.

**உங்களில் எவர்கள் ஈமான் கொண்டு, அறிவும் வழங்கப்பட்டுள்ளார்களோ அவர்களின் அந்தஸ்துக்களை அல்லாஹ் உயர்த்துகிறான்.** (அல் குர்ஆன் - முஜாதலா 11வது வசனம்)

**பெருமயுள்ளவனும், வெட்கப்படுபவனும் கல்வியை கற்றுக் கொள்ள மாட்டான்.** (அல் ஹதீஸ் - புஹாரி)

**அறிவைத்தேடிச் செல்பவனுக்கு அல்லாஹ் சுவர்க்கத்தின் பாதையை இலகுபடுத்துகிறான்.** (அல் ஹதீஸ் - புஹாரி)

**அல்லாஹ்வின் அடியார்களில் அவனை அஞ்சியோர்கள் அறிஞர்களே.** (அல் குர்ஆன் - பாதிர் 28வது வசனம்)

## தேர்தல்களும் நெற்பிட்டிமுனையும்

1936ம் ஆண்டுக்குப் பின்னரே கரைவாகு மேற்கு கிராம சபை உருவாக்கப்பட்டு தேர்தல்கள் நடாத்தப்பட்டன. அதில் முதலாம். இரண்டாம், மூன்றாம், நான்காம் கிராம சபைத் தேர்தல்களில் எமதூரைச் சேர்ந்த எவரும் போட்டியிடவில்லை.

5வது, 6வது, 7வது தேர்தல்களிலேயே போட்டியிட்டனர். இதில் S.P. காசிம் பாவா, A.L. சீனிமுஹம்மது சட்டம்பியார், A.L. மையதீன் பாவா, K. மீராமுஹைறயதீன் கிளாக்கர் ஆகியோரே தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றிவாகை சூடினர்.

7வது தேர்தலில் S.P. காசீம் பாவாவோடு போட்டியிட்ட எனது தந்தை அல்ஹாஜ் S.L. மீராலெவ்வைப் போடியார் ஆறு வாக்குகளால் தோல்வியைத் தழுவினார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அதனைத் தொடர்ந்து பிற்பட்ட காலங்களில் "உமர் முக்தார்" என அழைக்கப்பட்ட அல்ஹாஜ் டாக்டர் ALM. இப்றாஹிம் சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸில் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு சொற்ப வாக்குகளால் தோல்வியை தழுவிக் கொண்டார். அதனைத் தொடர்ந்து சுயேட்சைக் குழு சார்பில் HM. நாஸீர் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியைத் தழுவிக் கொண்டார்.

கல்முனை பிரதேச சபையாக இருந்தபோது, அல்ஹாஜ் SPM. இஸ்மாயில் ஆசிரியர் சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டார். அவரோடு தூங்கும் வேட்பாளர்களாக SL. ஜமால்டீன், அல்ஹாஜ் ML. நாஸர் ஆகியோரும் போட்டியிட்டனர். அல்ஹாஜ் SPM. இஸ்மாயில் ஆசிரியர் அதிகளவான வாக்குகளால் வெற்றியீட்டி நெற்பிட்டிமுனை மண்ணுக்கு பெருமை தேடித்தந்தார்.

1994ல் AA. கபூர் அதிபர் அவர்கள் கல்முனை பிரதேச சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றிவாகை சூடிக்கொண்டார். அதே காலப்பகுதியில் UK. இஸ்ஹாக் ஊடகவியலாளர் அவர்கள் பிரதேசசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்டு சொற்ப வாக்குகளால் தோல்வியை தழுவிக் கொண்டார்.

பின்னர் பாராளுமன்ற தேர்தலில் மர்ஹூம் AMA. தாஜுர் LLB அவர்கள் சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் சார்பில் அனுராதபுர மாவட்டத் தேர்தலில் போட்டியிட்டு சொற்ப வாக்குகளால் தோல்வியை தழுவிக் கொண்டார்.

## 2006ம் ஆண்டு நடைபெற்ற

## கல்முனை நகரசபைத் தேர்தலில்

1. CM. முபீத் - முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றுக் கொண்டார்.
2. UL. தௌபீக் - சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றுக் கொண்டார்.
3. I. றஹுபுதீன் - ஐக்கிய மக்கள் தேசிய கூட்டமைப்பு - துவா கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றுக் கொண்டார்.

## 2011ம் ஆண்டு நடைபெற்ற

## கல்முனை மாநகர சபைத் தேர்தலில்

1. CM. முபீத் - அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக போட்டியிட்டு வெற்றி வாகை சூடியவர்.
2. ML. சாலித்தீன் - சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் சார்பில போட்டியிட்டு வெற்றிவாகை சூடிக்கொண்டார்.
3. AHHM. நபார் - ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றிவாகை சூடிக் கொண்டார்.

# தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றவர்கள்



SP காசிம் பாவா
(வ.வி.)



AL சீனி முஹம்மது
சட்டம்பியார்



K மீராமுஹைறயதீன்
(கிளாக்கர்)



AL மையதீன் பாவா
வாட் நம்பர்



SPM இஸ்மாயில்
ஆசிரியர்




AA கபூர் அதிபர்

# தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெறாதவர்கள்



SL. மீராலெவ்வைப் போடியார்



டாக்டர் ALM. இப்றாஹிம்



AM. தாஜுர் சட்டத்தரணி



UK இஸ்ஹாக ஊடகவியலாளர்



SL ஜமால்தீன் (நூலக உதவியாளர்)



ML நாஸர் (சமுர்த்தி)



HM நாஸிர் (றாஜு)

# தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றவர்கள்



CM முபீத்



UL தெளபீக்



I றஉபுதீன்




ML சாலிதீன்



AHHM நபார்

## அல் ஹாஜ் டாக்டர் ALM. இப்றாஹிம்



இவர் மருதமுனையைச் சேர்ந்த அகமட் லெப்பை - செய்னப் தம்பதிகளுக்கு மூன்றாவது புதல்வனாக 1942.04.10ம் திகதி பிறந்தார். ஆரம்பக் கல்வியை கமு/ அல்மனார் மகா வித்தியாலயத்தில் கற்று நான்காம் வகுப்பு வரை கற்றுக் கொண்டிருக்கை யில் ஓர் ஆண்டுக்குள் தாயும் தந்தையும் மரணித்ததால் அனாதையாக்கப்பட்டார். பின்னர் படிப்பை இடைநடுவே விட்டுவிட்டு குடும்பத்தை கவனிக்க வேண்டிய பொறுப்பு ஏற்பட்டது.

பின்னர் திருமண வயதை அடைந்ததும் நெற்பிட்டிமுனையைச் சேர்ந்த சாய்புத்தம்பி செய்னப் தம்பதிகளின் புதல்வியான வெள்ளையும்மா என்பவரைத் திருமணம் முடித்து வாழ்க்கைப் பயணத்தை ஆரம்பித்தார். இவரது மனைவி அக்காலத்தில் SSE பரீட்சையில் சித்தியடைந்திருந்தார். அக்காலப்பகுதியில் அவருக்குத் தொழில் வாய்ப்புக்கள் கிடைத்ததும் அவற்றைப் பெறாது தனது கணவனின் கற்றல் பணிக்கு துணை நின்று அவரை GCE O/L பரீட்சையில் சித்தியடையச் செய்வதற்கு தன்னாலான உதவிகளைச் செய்து ஆறு பாடங்களில் சித்தியடைவதற்கு வழிசமைத்தார்.

அதனைத்தொடர்ந்து ஹோமியோபதி ஆரம்பப் பரீட்சைக்குத் தோற்றி அப்பரீட்சையில் சித்திபெற்று, ஆயள்வேத, யூனானி வைத்தியத்திலும் சித்திபெற்று 1985ம் ஆண்டு பிரபல வைத்தியராக வெளியானார். (ப.இ.இ.8212) இவ்வைத்தியரிடம் நாட்டின் நாலாபாகங்களிலும் இருந்து வைத்திய சேவைக்காக மக்கள் கூடுகின்றனர்.

இவர் சமூக சேவையிலும் ஆர்வம் கொண்டுள்ளதால் சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸின் நெற்பிட்டிமுனையின் ஆரம்பகால போராளியாக இருந்துள்ளார். அப்போது நெற்பிட்டிமுனை கிராமத்தின் அமைப்பாளராகவும், கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளராகவும் விளங்கினார். பின்னர், சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸின் தேசியத் தலைவர் MHM. அஸ்ர.்.ப் அவர்களால் "ஞானத்தாரகை" என்ற பட்டம் சூட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டார். "நெற்பிட்டிமுனையின் உமர் முக்தார்" எனவும் செல்லமாக நாமம் சூடப்பட்டார். அத்தோடு இவ்வூரைச் சேர்ந்த அனேக இளைஞர், யுவதிகளுக்கு அரச தொழில்வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுத்துள்ளார்.

அத்தோடு கிராமோதய சபைத் தலைவராகவும் ஜும்ஆ பள்ளிவாயல் கதீபாகவும், மீனவர் சங்கத் தலைவராகவும் இருந்து அரிய பல தொண்டுகள் ஆற்றிவந்துள்ளார். சமாதான நீதவானாகவும், கல்முனைப்பிரிவு ஆயுள்வேத வைத்திய பாதுகாப்புச் சபையின் தலைவராகவும், சாமசிறி சமூகஜோதி, சாமசிறி தேசமானி, ரத்ன தீபம் போன்ற பாராட்டுக்களையும் பெற்றுள்ளார். தற்போதைய ஸகாத் சபைத் தலைவராகவும் விளங்குகின்றார்.

## அல்ஹாஜ் மௌலவி அப்துல் கபூர் (பலாஹி)

✓ *தோற்றம்*



நெற்பிட்டிமுனை 5ம் வட்டாரத்தில் இரவல் வீட்டில் தாய் உமறுநாச்சி, தந்தை உதுமாலெவ்வை ஆகியோருக்கு முதல் மகனாக 1947.10.09ல் பிறந்தார். மூன்று சகோதரர்களையும் நான்கு சகோதரிகளையும் அருளாகப் பெற்ற இவர் தந்தையின் அயராத முயற்சியால் நெற்பிட்டிமுனை 4ம் வட்டாரத்தில் புதிய வீடுவளவு ஒன்றை வாங்கி தொடர்ந்தும் அங்கேயே தனது குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார். பின்னர் 1962 தொடக்கம் தந்தையின் மரணம் வரை (1973) 7ம் கொளனியில் வாழ்ந்தார்.

✓ *கல்வி*

7ம் கொளனியில் தந்தை பேஷ் இமாமாகவும், கதீபாகவும், முஅல்லிமாகவும் கடமையாற்றி சன்மார்க்கப்பணி செய்து வந்த காலத்தில் தனது மகனையும் ஒரு தலைசிறந்த ஆலிமாக உருவாக்க வேண்டும் என்ற ஆசையும் கனவும் இவரை காத்தான்குடி ஜாமியதுல் பலாஹ் அறபுக் கல்லூரியில் கல்வி கற்பதற்கு வழி சமைத்தது. 1962 முதல் 1969 வரை அங்கு கல்விகற்று மௌலவிப் பட்டம் பெற்று 1969 முதல் 1972 வரை அட்டாளச்சேனை கிழக்கிலங்கை அறபுக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

✓ *குடும்ப வாழ்வு*

1972ம் ஆண்டு நெற்பிட்டிமுனை மதார் ஷாஹிப் ஹாஜியின் மகள் அஹமதுன்னிஸாவை மணந்தார். மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கையில் ஒரு ஆண் மகனையும் மூன்று பெண் குழந்தைகளையும் அல்லாஹ் அருளாக வழங்கினான்.

✓ *சேவை (கல்வி)*

1972 முதல் 2005 வரை அரசாங்கப் பாடசாலையில் பயிற்றப்பட்ட ஆசிரியராக கடமைபுரிந்து ஓய்வு பெற்றதுடன் மட்டுமன்றி தனது வாய்மை, ஆளுமை, நேர்மை, சிறந்த நிர்வாக ஆற்றல் காரணமாக 1978ம் ஆண்டு கல்முனையில் ஸ்தாபிக்கப்பட்ட ஹிமாயதுல் இஸ்லாம் இயக்கத்தின் ஆரம்ப அங்கத்தவராகவும், 1982ம் ஆண்டு தொடக்கம் 2005 வரை கல்முனை அல் ஹாமியா அரபுக்கல்லூரியில் பகுதிநேர விரிவுரையாளராகவும் பணியாற்றி 2005 தொடக்கம் இன்றுவரை மேற்படி கல்லூரியில் மதிப்புக்குரிய அதிபராக காத்திரமான பணிபுரிந்து வருகின்றார்.

✓ *சேவை (சமூக மற்றும் தஃவா)*

நெற்பிட்டிமுனை ஜ"ம்ஆ பள்ளிவாயலின் கௌரவ இமாமாகவும் கதீபாகவும் கடமையாற்றிய இவர், குறித்த ஜ"ம்ஆ பள்ளிவாயலின் கட்டிட நிர்மாணக்குழுவில் வெளிநாட்டு உதவிகள் பெறும் பிரிவுக்கு செயலாளராகவும், நிர்வாகசபை உறுப்பினராகவும் சேவை புரிந்தது போலவே சுமார் 4 வருடங்கள் அப்பள்ளிவாயலின் கௌரவ தலைவராகவும் பணிசெய்து அபிவிருத்திக்கும், மலர்ச்சிக்கும் அயராது உழைத்து சத்தியத்தையும் சிறந்த வழிகாட்டல்களையும் உரக்கச் சொன்ன அறிவும் அனுபவமும் மிக்க மூத்த ஆலிம் (அறிஞர்) இவராகும்.

தற்பொழுது நெற்பிட்டிமுனை ஜம்மியத்துல் உலமாசபைத் தலைவராகவும், விவாக பதிவாளராகவும் ஊரின் உண்மைக்கும் நன்மைக்கும் அன்றும் இன்றும் இதய சுத்தியுடன் பாடுபட்டு தன்னை போன்ற சிறந்த சேவையாளர்களையும், கல்விமான்களையும் ஊருக்கா உருவாக்கி ஆலோசனைகளையும், மதியுரைகளையும் வழங்கிவரு மௌலவி அப்துல் கபூர் (பலாஹி) அவர்கள் அல்லாஹ்வின் அருளா இந்த சமூகம் பெற்ற மிகப்பெறும் கொடையாகும்.

## அஷ்ஷெய்க் AL. நாஸர் கனி MA



அஷ்ஷெக் அகமது லெப்பை நாஸர் கனி அவர்கள் 1967.08.11 நெற்பிட்டிமுனையில் பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியை நெற்பிட்டிமுனை அல் அக்ஸா மகா வித்தியாலயத்தில் தொடர்ந்தார். பின்னர், கல்முனை அல் ஹாமியா அரபுக் கல்லூரியில் பயின்று க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தர பரீட்சைகளில் சித்தி அடைந்ததோடு 1988ல் அல் ஆலிம் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார். பின்னர், அதைத் தொடர்ந்து பேராதனைப் பல்கலைக்கழகம் தெரிவாகி கலைமானிப் பட்டத்தை 1995ல் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து 1997ம் ஆண்டு ஆசிரியராகக் கடமையேற்று கற்பித்தல் பணியில் ஈடுபட்டார். 1999ம் ஆண்டு பட்டப்பின் கல்வி டிப்ளோமாவில் சித்தியடைந்து கலைமுதுமானிக் கல்வியைத் தொடங்கி 2008ம் ஆண்டு MA பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து தேசிய கல்வியியல்க ல்லூரியில் அட்டாளைச்சேனையில் விரிவுரையாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அத்தோடு விட்டுவிடாமல் சமூக அமைப்புக்களிலும், இஸ்லாமிய அமைப்புக்களிலும் சேர்ந்து அரிய பல சேவைகள் செய்து வந்தார். 2006.07.10ம் திகதி நெற்பிட்டிமுனை ஜும்ஆ பள்ளிவாயல் பரிபால சபைச் செயலாளராக தெரிவுசெய்யப்பட்ட இவர், அல் ஜம்மியத்துல் ஹைறியா அல் இஸ்லாமியா நலன்புரி அமைப்பின் தலைவராகவும், தாறுல் இப்னு மசூத் மொடல் நிறுவனத்தின் பணிப்பாளராகவும், தாறுல் இப்னு மசூத் அகதியா நிறுவகத்தின் பணிப்பாளராகவும், அம்பாறை மாவட்ட ஜம்மியத்துல் உலமாசபை உதவிச் செயலாளராகவும், அல் ஹாமியா அரபுக் கல்லூரியின் உதவிச் செயலாளராகவும், நெற்பிட்டிமுனை மஸ்ஜிதுல் ஆசூர் பள்ளிவாயல் தலைவராகவும், நெற்பிட்டிமுனை இளம் பட்டதாரிகள் ஒன்றியம் (Under Graduate Association) ஆலோசகராகவும், தற்பொழுது நெற்பிட்டிமுனை ஜும்ஆ பள்ளிவாயல் நிர்வாகத் தலைவராகவும் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்.

இவர் நெற்பிட்டிமுனை அல்ஹாஜ் MI. தங்கராசா அவர்களின் புதல்வி T. தஸ்னீம் என்பவரை திருமணம் முடித்து சிறப்பாக வாழ்ந்து கொண்டிருக்கிறார். இவர் ஆறு பிள்ளைகளுக்கு தந்தையாவார்.

# கலாநிதி HMM. நழீர் BSc

ஹஜ்முகமட் - மீராஉம்மா தம்பதிகளுக்கு நெற்பிட்டிமுனையில் 1970.05.01ம் திகதி இறுதி மகனாக பிறந்த இவர், ஆரம்பக் கல்வியை கமு/ கார்மேல் பாத்திமா கல்லூரியில் தொடங்கினார். இவர் 1975 தொடக்கம் 1989ம் ஆண்டுவரை கல்வி பயின்று பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு 1993ல் தெரிவாகி கணித, விஞ்ஞான துறையில் பட்டம் பெற்று 2000ம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான முதுமானிப் பட்டம் பெற்றார். பின்னர், 2008ம் ஆண்டில் MPhil in Computer Engineering at Faculty of Engineeringல் கல்வியைத் தொடர்ந்து 1996 - 1998 வரையான காலப்பகுதியில் Assistant Lecturer ஆகப் பணியைத் தொடர்ந்து, 1998ம் ஆண்டிலிருந்து சிரேஷ்ட விரிவுரையாளராக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வருகிறார்.



பின்னர், 2013ல் சீனாவிற்கு புலமைப்பரிசில் பெற்று University of Beijing ல் PhD பட்டத்தை முடித்துக் கொண்டார். நாட்டுக்குத் திரும்பி தன்னுடைய சிரேஷ்ட விரிவுரையாளர் பதவியைத் தொடர்ந்து ஆற்றிவருகிறார். உப வேந்தர் (VC) க்கான பதவித் தேர்வில் குறைவான வித்தியாசத்தில் பதவியை பெற்றுக்கொள்ள முடியாது போய்விட்டமை நாம் அறிந்த விடயமாகும்.

இவர் இவ்வூரில் வாழ்ந்துவந்த தனவந்தர் மீராசாஹிபு முதலாளியின் புதல்வி M. மாஜிதாவைத் திருமணம் முடித்து நான்கு பிள்ளைகளுக்கு தந்தையாக இருக்கிறார். இதில் ஒரு ஆண் பிள்ளையும் மூன்று பெண் பிள்ளையும் உள்ளனர். அத்தோடு சமூக சேவையில் ஈடுபாடுடைய இவர், பல சமூக அமைப்புக்களில் அங்கம் வகிப்பதோடு தற்பொழுது நெற்பிட்டிமுனை கல்வி அபிவிருத்திக் குழுவில் முக்கிய பதவியும் வகித்து வருகின்றார் என்பதும் குறிப்பிடக்கூடியது.

# கனித்தம்பி ஆதம்கனி வட்ட விதானை
## (பழயாத மேதை)



இவர் 1942.03.13ம் திகதி நெற்பிட்டிமுனைக் கிராமத்தில் பிறந்தார். ஆரம்பக் கல்வியை அப்போது தமிழ், முஸ்லிம் கலவன் பாடசாலையாகவிருந்த கமு/ அல் அக்ஸா மகா வித்தியாலயத்தில் 6ம் தரம் வரை கல்வி பயின்றுவிட்டு குடும்ப நிலை காரணமாக கல்வியைத் தொடர முடியாத நிலையில் விவசாயத்துறையில் ஈடுபட்டு குடும்பத்தைக் காத்து வந்தார். இவர் ஒரு கலைஞர், நடிகன், சமூக சேவையாளராவார். இவர் தன்னுடைய வாலிபப் பராயத்தில் ஹாசிய நாடகமொன்றை நடித்திருந்தார். இந்த நாடகத்தின் பெயர் "ஓகோ கோ போடியார்" இதில் கதாநாயகனாக நடித்த இவரோடு MI. பதுறுத்தீன், TS. றசூல், AL. கரீம் (சோடா), MI. பீர்முகமட் ஆகியோரும் துணைப்பாத்திரத்தில் ஏற்று நடித்தனர். இந்நாடகத்தின் கதை, வசனம், தயாரிப்பு மற்றும் அனைத்துப் பொறுப்புக்களையும் MI. தாவூத் அவர்கள் செய்திருந்தார்.

பொதுப் பணிகளில் மக்கள் குழுத்தலைவராக 1976ம் ஆண்டு முதல் அக்காலப் பாராளுமன்ற பிரதிநிதியாக இருந்த MC. அகமது அவர்களால் நியமிக்கப்பட்டிருந்தார். அப்போதைய கட்டத்தில் பலவகைப்பட்ட சிரமதானப் பணிகளையும் ஏனைய சமூகப் பணிகளையும் தமது ஊருக்காக செய்து உழைத்துக் கொண்டவர். பெரும் தலைவர் அல்ஹாஜ் MHM. அஸ்ர.்.ப் M.P அவர்களுக்கு தோளோடு தோள் கொடுத்து உதவியவர். நெற்பிட்டிமுனை ஊருக்கு விளையாட்டு மைதானத்தின் தேவையை எடுத்துக் கூறியவர். அஸ்ர.்.ப் விளையாட்டு மைதானத் தோற்றத்திற்கு முன்னின்று உழைத்தவர். அத்தோடு நில்லாமல் ஏழை எளியவர்களுக்கு வீடமைப்பு வசதிகள் பெற்றுக் கொடுத்தவர். மேலும் இளைஞர்களுக்குத் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தவர். சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சிப்பணிகளில் முன்னின்று உழைத்தவர்.

கல்முனை மத்தியஸ்தர் சபையில் 18 ஆண்டுகள் சேவையாற்றி சிறப்புப் பட்டங்களும் பரிசில்களும் பெற்றவர். "இரத்தின தீபம்" விருதை 2011ம் ஆண்டு கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் திரு மௌனகுரு அவர்களால் பாராட்டப்பட்டு பொன்னாடை போர்த்தப்பட்டார். இவ்வைபவம்

கண்டி இரத்தின தீபம் பவுண்டேசனால் நடாத்தப்பட்டது. 2012ம் ஆண்டில் அகில இன நல்லுறவு ஒன்றியத்தால் நடாத்தப்பட்ட வைபவத்தில் "சாமசிறி" விருதை காத்தான்குடி ஹிஸ்புல்லா அரங்கில் கௌரவ அமைச்சராகவிருந்த MLAM. ஹிஸ்புல்லாஹ் அவர்களால் கௌரவிக்கப்பட்டது. மேலும் மத்தியஸ்தர்களை கௌரவிக்கும் வைபவத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ அவர்களால் ஜனாதிபதி விருதை 2014.12.01ம் திகதி பெற்றுக் கொண்டார்.

மேலும் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவராகவும் நெல் உற்பத்தியாளர் சபைத் தலைவராகவும் அல் அமீன் சிரேஷ்ட பிரசைகள் தலைவராகவும் இருந்து சேவைகள் ஆற்றி வருகிறார்.

## CM. ஹலீம் (சமூக சேவையாளர்)



அஹமட் லெப்பை கரீம் அப்துல் கலீம் சம்சுன் நிஸா ஆகிய தம்பதிகளுக்க 1982 ஒக்டோபர் 18ம் திகதி பிறந்த கரீம் முஹம்மட் ஹலீம் தனது ஆரம்பம் முதல் உயர்தரம் வரை நெற்பிட்டிமுனை கமு/அல் அக்ஸா மகா வித்தியாலயத்தில் கல்விகற்றார். பின்னர் 2005ம் ஆண்டு கிழக்கு மாகாண சபையில் நடைபெற்ற சுகாதார துறைக்கான போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்து 2006ம் ஆண்டு கல்முனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் சுகாதார ஊழியராக கடமையாற்றி அதே ஆண்டின் முகாமைத்துவ உதவியாளராக பதவி உயர்வு பெற்றார். பின்னர் மீண்டும் 2007ம் ஆண்டு மருத்துவ கலவையாளராக பதவி உயர்வுபெற்று மீண்டும் சுகாதார துறையில் மருந்துக் கலவையாளராக 2010ம் ஆண்டு வரை கடமையாற்றினார். பின்னர் பேராதெனிய பல்கலைக்கழகத்திற்கு வெளிவாரியாக தெரிவு செய்யப்பட்டு கலைமானி பட்டப்படிப்பை மேற்கொண்ட இவர் ஒரு பாரிய சமூக சேவையாளராக செயற்பட்டு வருகிறார். அதன் பின்னர் கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் கௌரவ றிஷாட் பதியுதீன் அவர்களின் இணைப்புச் செயலாளராக 2010 ஜனவரியில்

நியமனம் பெற்று நெற்பிட்டிமுனை மண்ணுக்கு அளப்பெரிய சேவைகளையும் தொழில்வாய்ப்புக்களையும் பெற்றுக்கொடுத்து வருகின்றார். அதேவேளை மேற்கூறப்பட்ட அமைச்சின் தலைமையில் இயங்கும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் கல்முனைத் தொகுதி இளைஞர் காங்கிரஸ் அமைப்பாளராகவும் செயற்பட்டு வருகின்றார். இவர் ஒரு இளம் துடிப்புள்ள ஏழைகளை நேசிக்கின்ற ஒருவராவார்.

மேலும் இவரது தந்தையின் மரணத்தின் பின்னர் அல்-கரீம் நெசவாளர் மற்றும் கைத்தொழில் சமூக சேவைகள் எனும் அமைப்பினை உருவாக்கி அதன் பணிப்பாளராகவும், தலைவாகவும் இருந்துகொண்டு பாடசாலைகள், மதரசாக்கள், மட்டுமல்லாது ஏழைகளின் அனைத்துத் தேவைகளுக்கும் தனது சொந்தப்பணத்தில் உதவி செய்து வருகின்றார். இதனால் இவர் அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற சமூக ேவையாளர்களுக்கான உயர் விருதை பெற்ற இளம் சமூக ேவையாளருமாவார்.

## A. அப்துல் கபூர் (ஓய்வுபெற்ற அதிபர்)



மர்ஹூம்களான அமீதுலெவ்வை - குழந்தையும்மா தம்பதிகளின் மகனாக 1950ல் பிறந்தார். கல்முனை கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலையின் பழைய மாணவராவார். தனது மாணவ பருவம் முதல் அரசியலில் ஈடுபாடு காட்டியதுடன் இப்பிரதேச அரசியல்வாதிகளுடன் நெருக்காக இருந்து தனது பிறந்த கிராமத்தை அபிவிருத்தி செய்வதில் அதிக அக்கறையுடன் செயல்பட்டு வந்தார். நீண்டகாலமாக ஆசிரியராகவும், சிலகாலம் அதிபராகவுமிருந்து கல்விப்பணி செய்து 2010ல் ஓய்வு பெற்றார்.

அம்பாறை மாவட்ட அபிவிருத்திச் சபையின் அதிகாரத்தின் கீழ் இயங்கிவந்த கரைவாகு மேற்கு உப அலுவலகத்தின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராக 1984 - 1988 வரை கடமை

புரிந்துள்ளார். 1994ல் நடைபெற்ற கல்முனை பிரதேசசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று 1999ம் ஆண்டுவரை அச்சபையின் உறுப்பினராக இருந்து மக்களுக்கு சேவை செய்தார்.

முன்னாள் அமைச்சர் சட்டத்தரணி MH. சேகு இஸ்ஸதீன் கிராமிய சிறு கைத்தொழில் பிரதி அமைச்சராக இருந்தபோது 2005ல் அவருடைய அமைச்சின் இணைப்பு அதிகாரியாகவும், வீதி அபிவிருத்தி பிரதி அமைச்சராகவிருந்தபோது 2007ல் அவருடைய அமைச்சின் இணைப்பு அதிகாரியாகவும் இருந்துள்ளார்.

அகில இன நல்லுறவு ஒன்றியத்தின் சிபாரிசில் 2009 ஒக்டோபர் 19ல் இரத்தினபுரி நகர மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வின்போது இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி தலதா அத்துக் கொரளையினால் சாமசிறி தேசகீர்த்தி பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். 2015ம் ஆண்டுக்கான தேசியமட்ட சிரேஷ்ட பிரஜைகள் தினத்தை முன்னிட்டு கல்முனை பிரதேச செயலக அதிகார பிரதேசத்தின் 2015ம் ஆண்டின் சிறந்த சிரேஷ்ட பிரஜையாக தெரிவு செய்யப்பட்டு 2015 ஒக்டோபர் 19ல் தெய்யத்த கண்டியில் நடைபெற்ற சிரேஷ்ட பிரஜைகள் தின நிகழ்வின்போது அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் MI. அமீர் அவர்களினால் பாராட்டி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

நெற்பிட்டிமுனை ஜும்ஆ பள்ளிவாயல் 1978ல் வீசிய சூறாவளியினால் முற்றாக பாதிக்கப்பட்டபோது பள்ளிவாயல் மரைக்காயர் சபையினால் புதிய பள்ளிவாயலை கட்டுவதற்காக அமைக்கப்பட்ட கட்டட நிர்மாணக் குழுவின் செயலாளராக 17 ஆண்டுகள் கடமையாற்றி புதிய பள்ளிவாயலைக் கட்டி முடிப்பதற்கு பாரிய பங்களிப்பு செய்தார்.

கல்முனைத் தொகுதி சேனைக்குடியிருப்பு கமநல சேவைகள் மத்திய நிலையத்தின் அபிவிருத்திக்குழு தலைவராக 2011ம் ஆண்டு தொடக்கம் பதவி வகித்து வருகின்றார். கல்முனை அல் ஹாமியா அரபுக்கலாசாலை ஆளுனர்சபை உறுப்பினராகவும், அஸ்ர.்.ப் ஞாபகார்த்த ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினராகவும், அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டு பேரவை நிர்வாகசபை உறுப்பினராகவும் கல்முனை மத்தியஸ்தர் சபை உறுப்பனராகவும் இருந்து வருகின்றார்.

## MM. ஹசன் Bcom, PGD, MPA, ICDL



இவர் முஸ்தபாலெப்பை மீராமுகையதீன் - குழந்தையும்மா தம்பதிகளின் புதல்வனாக 1964.10.13ம் திகதி பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை நெற்பிட்டிமுனை அல் அக்ஸாவில் கற்று உயர்கல்வியை கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையில் கற்றார். வர்த்தகப் பிரிவில் கல்விகற்ற இவர் 1987ம் ஆண்டு கொழும்புப் பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகி ஆங்கில மொழி மூலத்தில் கற்றலைத் தொடர்ந்து வெளியானார்.

பின்னர் சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியில் விரிவுரையாளராக தெரிவாகி பணியாற்றி வந்ததோடு பொதுநிர்வாகத்தில் முதுமானிப் பட்டம் பெற்றார். அத்தோடு நின்றுவிடாமல் மேலும் மேலும் உயர் பட்டங்கள் பெற்று தன்னை உயர்த்திக் கொண்டதன் காரணமாக சிரேஷ்ட விரிவுரையாளராக உயர்வு பெற்றார். பின்னர் அதே தொழில்நுட்பக் கல்லூரியில் பிரதி அதிபராகப் பணியாற்றியதோடு அக்கரைப்பற்று தொழில்நுட்பக் கல்லூரிக்கு அதிபராக நியமனம் பெற்று இடமாறிச் சென்றார். அங்கு சிலகாலம் பணியாற்றி மீண்டும் அங்கிருந்து இடமாற்றம் பெற்று சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரிக்கு வருகை தந்து அதிபராகப் பணியாற்றி வருகிறார். இவர் ஒரு சிறந்த நிர்வாகி. மும்மொழிகளிலும் பாண்டித்துவம் உடையவர்.

இவர் M. அலியார் அதிபர் அவர்களின் மகள் பஸீலாவைத் திருமணம் முடித்து நான்கு பிள்ளைகளுக்கு தந்தையாக இருக்கிறார். இவர் சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியில் நெற்பிட்டிமுனையைச் சேர்ந்த இரண்டாவது அதிபராவார். இவருக்கு முன்னர் இதே ஊரைச் சேர்ந்த அல் ஹாஜ் MSM. மரைக்கார் தம்பி பணியாற்றி வந்தார்.



## ALM. பளீல் பிரதேச செயலாளர்

நெற்பிட்டிமுனை தச்சர் தெருவில் ஆதம்லெப்பை ஆசியாத் தம்பதிகளுக்கு மூன்றாவது ஆண் மகனாக 1965.01.01ல் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை நெற்பிட்டிமுனை அல் அக்ஸா மகா வித்தியாலயத்தில் பயின்று உயர் கல்வியை கமு/ கார்மேல் பாத்திமாக் கல்லூரியில் தொடர்ந்து 1983ல்

கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு விஞ்ஞானப் பிரிவுக்கு தெரிவு செய்யப்பட்டார். அங்கு பயின்று வெளியானதும் விஞ்ஞானப்பட்டதாரி ஆசிரியராக கமு/சாஹிறாக் கல்லூரியில் 1987ம் ஆண்டு கடமையேற்றுக் கொண்டார். அப்பாடசாலையில் சில வருடங்கள் கடமையாற்றிக் கொண்டிருக்கும் போது நிருவாக சேவை போட்டிப் பரீட்சையில் 1990ல் சித்திபெற்று உதவிப் பிரதேச செயலாளராக நியமனம் பெற்று பல பிரதேசங்களில் சேவையாற்றிய பின்பு, கல்முனை பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டு பல வருடங்கள் இப்பிரதேச மக்களுக்கு அரிய பல சேவைகளைச் செய்து வந்தார். தமிழ், முஸ்லீம்கள் என்ற பாகுபாடின்றி சேவையாற்றி வந்தார். அக்காலப்பகுதியில் பிரதேச வாதம் கொண்ட சிலரின் நச்செரிச்சலால் 2003ம் ஆண்டு காத்தான்குடி பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். அங்கு சிலவருடங்கள் நற்பணி செய்து காத்தான்குடி மக்களால் பாராட்டும் நன்மதிப்பும் பெற்றிருந்தார். அக்காலகட்டத்தில் 2005ல் வெள்ளிக் கிழமையன்று இனம் தெரியாதோரால் காத்தான்குடியில் தனது அலுவலகத்தில் கடமை நேரத்தின்போது சுட்டு படுகொலை செய்யப்பட்டார்.

இவர் சிறுவயதிலிருந்தே துடிப்புள்ள இளைஞனாகத் திகழ்ந்தார். அத்தோடு ஆறாம் தரம் கற்கும் வேளையிலிருந்து சிறுகதைகள், சிறுவர் ஆக்கங்கள், நகைச்சுவைகள் போன்றவற்றை பத்திரிகைகளில் எழுதிவரத் தொடங்கினார். பின்னர் கவிதைகளில் ஆர்வம் காட்டி கவிதைகளும் எழுதத் தொடங்கினார். தனது புனைப் பெயரை “நெற்பிட்டிமுனை பளீல்” எனச் சூடிக் கொண்டு பல நூல்களை வெளியிட்டார். அவர் எழுதிய பல நூல்களில் “மடிக்குள் விழுந்த வெள்ளிகள்” எனும் கவிதைத் தொகுதி மூலம் தேசிய ரீதியில் புகழ் பெற்றார். சிறந்த பேச்சும் மற்றவர்களைக் கவரும் முகத்தோற்றமும் அவருடைய சிறப்பம்சமாகக் காணப்பட்டது. புலமைப்பரிசில் மாணவர்களுக்கான பல அரிய நூல்கள் வெளியிட்டதோடு புலமைப்பரிசில் மாணவர்களின் அபிமானத்தையும் பெற்றார்.

அக்காலப்பகுதியில் இவ்வூரில் தனவந்தராக விளங்கிய KLM. இப்றாகீமின் மகள் ஆயிஷா வீவீயைத் திருமணம் முடித்து இரண்டு பிள்ளைகளுக்கு தந்தையானார். MF. நிஹாறாத், MF. சஸ்னி ஆகிய பிள்ளைகளில் MF. நிஹாறாத் மருத்துவ பீடத்தில் கல்வி பயின்று வருகிறார்.

## சட்டத்தரணி அல் ஹாஜ் MI. அஸீஸ் LLB



இவர் முகம்மது இஸ்மாயில் - மீராஉம்மா தம்பதிகளின் இளைய மகனாக 1954.09.26ம் திகதி பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை நெற்பிட்டிமுனை அல் அக்ஸா மகா வித்தியாலயத்தில் பயின்றார். பின்னர் இடைநிலைக் கல்வியை கமு/கார்மேல் பாத்திமாக் கல்லூரியில் பயின்றதோடு உயர்கல்வியை கமு/ ஸாஹிறாக் கல்லூரியில் தொடர்ந்து பின்னர், 1980ல் தொழில்நுட்ப உத்தியோகத்தராக இலங்கை பசளைக் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றினார்.

1981ல் பல்கலைக்கழகம் தெரிவாகி கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் கல்வி பயின்று 1988ல் உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக பதவி ஏற்றார். இவரே இவ்வூரின் முதலாவது சட்டத்துறையில் பட்டம் பெற்றவராவார். அத்தோடு 1990ல் பிரசித்திபெற்ற நொத்தாரிசுவாக நியமனம் பெற்றுக் கொண்டார். 1986 லிருந்து SLIATEல் வருகைதரு விரிவுரையாளராகவும், உயர்தொழில்நுட்பக் கல்லூரியின் வருகைதரு சட்ட விரிவுரையாளராகவும் பணி செய்தார். தொடர்ந்து 1992-1996 வரை ஜும்ஆ பள்ளிவாயல் தலைவராகவும், 2006ல் ஆண்டு பொருளாளராகவும் பணிசெய்துள்ளார். மேலும், 2001ல் இருந்து 2012 வரை ஆஷுர் பள்ளிவாயலின் தலைவராகவும், அல் உம்றா பாலர் பாடசாலையின் பணிப்பாளராகவும், அல் மதுரிஸதுல் ஸமதானியா அரபிக்கல்லூரியின் நீண்டகாலத் தலைவராகவும் சமூகப் பணி செய்து வந்துள்ளார். 2010 இருந்து 2012 வரை தென்கிழக்குப் பல்கலைக்கழக வர்த்தகப்பிரிவு குழுநிலை உறுப்பினராகவும் NECDA அமைப்பின் தலைவராகவும் பணியாற்றி உள்ளார்.

இவர் நெற்பிட்டிமுனையைச் சேர்ந்த மெகர்பான் வீவீ (TS அக்பர் அதிபர் மகள்) என்பவரை திருமணம் செய்து நான்கு பிள்ளைகளுக்கு தந்தையாக விளங்குகிறார். இவருடைய மகன் A. சுகாஸ் நில அளவையாளராக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

## SMA. ஜஃபர் கோட்டக்கல்விப் பணிப்பாளர்



சீனிமுகம்மது - முத்தும்மா தம்பதிகளுக்கு இளைய மகனாக 1955.12.26ம் திகதி நெற்பிட்டிமுனை பிரதான வீதியில் பிறந்த SMA. ஜ.ஃபர் அவர்கள் தனது ஆரம்பக்கல்வியை நெற்பிட்டிமுனை அல் அக்ஸா மகா வித்தியாலயத்தில் பயின்று இடைநிலைக் கல்வியை கமு/ ஸாஹிறாக் கல்லூரியில் தொடர்ந்து உயர் கல்வியை சம்மாந்துறை மத்திய மகா வித்தியாலய தேசிய பாடசாலையிலும் கற்றுத் தேறியவர்.

பின்னர் 1979.06.12ம் திகதி ஆசிரியர் நியமனம் கமு/வீரத்திடல் அல் ஹிதாயாவில் முதல் நியமனம் பெற்று கற்பித்தல் பணியைத் தொடங்கியவர். 1983.02.02ல் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பலாலிக்குச் சென்று இரண்டு வருடங்கள் கற்ற பின்பு கமு/அல் அக்ஸா மகா வித்தியாலயத்தில் 1985.01.01ல் கடமையைத் தொடங்கினார். 1993.01.05ம் திகதி இடமாற்றத்தின் காரணமாக கமு/கார்மேல் பாத்திமாக் கல்லூரியில் சிலகாலம் கடமையாற்றிய பின்னர் மீண்டும் கமு/அல் அக்ஸா மகா வித்தியாலயத்திற்கு உதவி அதிபராக கடமைப் பொறுப்பேற்று சது/ அல் சிராஜ் வித்தியாலயத்தில் அதிபராகக் கடமை ஏற்றார்.

பின்னர் கமு/ மழ்ஹர் ஸம்ஸ் வித்தியாலயத்தில் பிரதி அதிபராக பொறுப்பேற்று 1996.11.11ல் மீண்டும் கமு/அல் அக்ஸா மகா வித்தியாலயத்தில் உதவி அதிபராக பணிசெய்து கமு/இஸ்லாமபாத் முஸ்லீம் வித்தியாலயத்திற்கு அதிபராக பணியை ஆரம்பித்து 2003.06.28ம் திகதி பல சேவைகளைச் செய்தார். NECORD திட்டத்தின் கீழ் அல்ஹாஜ் SLA. கரீம் திட்டமிடல் பணிப்பாளரின் துணையோடு மூன்று மாடிகளை கட்டியதோடு ஆரம்பப்பிரிவில் ஆராதனை மண்டபத்தையும் கட்டுவித்தார், பல சிரமதான நிகழ்வுகளையும் செய்துவித்தார்.

பின்பு ஸம்ஸ் மத்திய கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டு அங்கு பிரதி அதிபராக இருந்து கமு/ லாபீர் வித்தியாலயத்தில் பணிசெய்ய தொடங்கி 2013.09.11ல் கோட்டக்கல்விப் பணிப்பாராக நியமனம் பெற்று செயற்பட்டு வந்து தற்பொழுது ஓய்வு பெற்றிருக்கிறார்.

இவர் அல் ஹாஜ் ALM. இப்றாஹீம் வைத்தியரின் மூத்தமகள் மெஹறுன் நிஸாவைத் திருமணம் முடித்து மூன்று பிள்ளைகளுக்கு

தந்தையாக இருக்கிறார். சிபானா, முகம்மது ஸனாஸ், முகம்மது ஸப்னாஸ் ஆகும்.

## அல் ஹாஜ் மௌலவி ALM. ஜஹாங்கிர் ADE



நெற்பிட்டிமுனையை பிறப்பிடமாகக் கொண்ட சாயுபுலெப்பை - ஆசுறா உம்மா தம்பதிகளின் புதல்வனாக 1966.08.03ம் ஆண்டு பிறந்தார். ஆரம்பக் கல்வியை கமு/அல் அக்ஸா ம.வி பயின்று ஏழாம் தரத்தின் பின், அல் ஹாமியா அரபுக்கல்லூரியில் மார்க்கக் கல்வியை தொடர்ந்து 1987ல் மௌலவி பட்டம் பெற்று 1990ல் பேராதனைப் பல்கலைக்கழகம் தெரிவாகி கலைப்பிரிவில் பட்டம் பெற்று 1994ல் வெளியாகி 1998ல் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயின்று வெளியானார்.

1990ல் ஆரம்பக் கல்வி ஆசிரியர் நியமனம் பெற்று 1994ல் பயிற்றப்பட்ட ஆசிரியரானார். 2001ல் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் நியமனம் பெற்று 2014ல் ஆரம்பக்கல்வி பாட இணைப்பாளரக நியமனம் பெற்று 2015ல் ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் நியமனம் பெற்று பணியாற்றி வரும் இவர் உலமாசபையில் உப தலைவர், செயலாளர், உறுப்பினராக பணியாற்றி நிருவாக சபை உறுப்பினராகவும், கல்வி அபிவிருத்தி உயர் ஆலோசனை சபை உறுப்பினராகவும், பணியாற்றி வருகின்றார். தற்பொழுது ஆரம்பக் கல்வி உதவிப் பணிப்பாளராகக் கடமையாற்றி வருகிறார்.

1994ல் அகமதுலெப்பை அதிபரின் மகள் றூபியா ஆசிரியரை திருமணம் செய்து மூன்று பிள்ளைகளுக்குத் தந்தையாக இருக்கின்றார். நுஸ்ரத் சுஆன், நுஸ்ரத் சுஆத், அத்திலி ஹபின் ஆகியோர் பிள்ளைகள் ஆவர்.

## CM. ஹலீம் (சமூக சேவையாளர்)



அஹமட் லெப்பை கரீம் அப்துல் கலீம் சம்சுன் நிஸா ஆகிய தம்பதிகளுக்க 1982 ஒக்டோபர் 18ம் திகதி பிறந்த கரீம் முஹம்மட் ஹலீம் தனது ஆரம்பம் முதல் உயர்தரம் வரை நெற்பிட்டிமுனை கமு/அல் அக்ஸா மகா வித்தியாலயத்தில் கல்விகற்றார். பின்னர் 2005ம் ஆண்டு கிழக்கு மாகாண சபையில் நடைபெற்ற சுகாதார துறைக்கான போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்து 2006ம் ஆண்டு கல்முனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் சுகாதார ஊழியராக கடமையாற்றி அதே ஆண்டின் முகாமைத்துவ உதவியாளராக பதவி உயர்வு பெற்றார். பின்னர் மீண்டும் 2007ம் ஆண்டு மருத்துவ கலவையாளராக பதவி உயர்வுபெற்று மீண்டும் சுகாதார துறையில் மருந்துக் கலவையாளராக 2010ம் ஆண்டு வரை கடமையாற்றினார். பின்னர் பேராதெனிய பல்கலைக்கழகத்திற்கு வெளிவாரியாக தெரிவு செய்யப்பட்டு கலைமானி பட்டப்படிப்பை மேற்கொண்ட இவர் ஒரு பாரிய சமூக சேவையாளராக செயற்பட்டு வருகிறார்.

அதன் பின்னர் கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் கௌரவ றிஷாட் பதியுதீன் அவர்களின் இணைப்புச் செயலாளராக 2010 ஜனவரியில் நியமனம் பெற்று நெற்பிட்டிமுனை மண்ணுக்கு அளப்பெரிய சேவைகளையும் தொழில்வாய்ப்புக்களையும் பெற்றுக்கொடுத்து வருகின்றார். அதேவேளை மேற்கூறப்பட்ட அமைச்சின் தலைமையில் இயங்கும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் கல்முனைத் தொகுதி இளைஞர் காங்கிரஸ் அமைப்பாளராகவும் செயற்பட்டு வருகின்றார். இவர் ஒரு இளம் துடிப்புள்ள ஏழைகளை நேசிக்கின்ற ஒருவராவார்.

மேலும் இவரது தந்தையின் மரணத்தின் பின்னர் அல்-கரீம் நெசவாளர் மற்றும் கைத்தொழில் சமூக சேவைகள் எனும் அமைப்பினை உருவாக்கி அதன் பணிப்பாளராகவும், தலைவாகவும் இருந்துகொண்டு

பாடசாலைகள், மதரசாக்கள், மட்டுமல்லாது ஏழைகளின் அனைத்துத் தேவைகளுக்கும் தனது சொந்தப்பணத்தில் உதவி செய்து வருகின்றார். இதனால் இவர் அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற சமூக சேவையாளர்களுக்கான உயர் விருதை பெற்ற இளம் சமூக சேவையாளருமாவார்.

## CM. நஜீப்



கலந்தர் லெவ்வை காசிம் - கனிமத்துலெவ்வை ஹயறுன்நிஸா - தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனாக முஹம்மது நஜீப் 13ல் பிறந்தார். இவர் அகமதுலெவ்வை முஹம்மத் தம்பி, இஸ்மாயில் சனீபா வீவி தம்பதியினரின் ஏக புதல்வி றமீஸா ஆசிரியை 2007ல் திருமணம் செய்தார். இவர் தனது ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை கமு/ நெற்பிட்டிமுனை அல் அக்ஸா வித்தியாலயத்திலும் உயர் கல்வியினை கமு/ கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலையிலும் விஞ்ஞான பிரிவில் சிறப்புத் தேர்ச்சிபெற்று 2001/2003 கல்வியாண்டில் அட்டாளைச்சேனை தேசிய கல்விக்கல்லூரியில் விஞ்ஞானப் பாட டிப்ளோமா ஆசிரிய பயிலுனராகப் பயிற்றப்பட்டு 2003ல் கட்டுறு பயிலுனராக கமு/ நெற்பிட்டிமுனை அல் அக்ஸா மகா வித்தியாலயத்தில் பயிற்சியினைப் பூர்த்தி செய்து கொண்டார்.

2004-09-01ல் விஞ்ஞான பாட டிப்ளோமா ஆசிரியராக தனது முதல் நியமனத்தை மட்/ பிறைந்துரைச்சேனை அல் அஷ்ஹர் வித்தியாலயத்தில் கடமையேற்று 2005-01-01 முதல் கமு/ நெற்பிட்டிமுனை அல் அக்ஸா வித்தியாலயத்தில் இணைந்து கொண்டார். இதே காலப் பகுதியில் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் வெளிவாரி கலைமாணிப் பட்டத்தினையும் இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவையும் பூர்த்தி செய்தார்.

2014-09-12 முதல் கல்முனைக் கல்வி வலயத்தின் கல்விசார் உத்தியோகத்தராக இணைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கும்வேளை 2016 போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து அதிபர் சேவையில் இணைந்துள்ளார்.

மேலும் இவர், PSI இணைப்பாளராக கமு/ நெற்பிட்டிமுனை அல் அக்ஸா வித்தியாலயத்திற்கு இணைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றார்.

## Y. அபுல் கலாம் தாஸீம்



இவர் நெற்பிட்டிமுனை யாசீன் வீதியில் பாவாலெப்பை பாத்துமுத்து தம்பதிகளுக்கு கனிஸ்ட புதல்வனாக 1964.03.15ல் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை கமு/அல் அக்ஸா ம.வியில் பயின்று உயர் கல்வியை கமு/உவெஸ்லி உயர்தர பாடசாலையில் பயின்று 1992.02.03ம் திகதி ஆசிரியராக நியமனம் பெற்றார். இவர் தனது முதல் ஆசிரிய நியமனத்தை பொ/தி/ அளிஞ்சிப் பொத்தான முஸ்லீம் வித்தியாலயத்தில் ஆரம்பப் பிரிவு ஆசிரியராக கடமையேற்றுக் கொண்டார். அக்காலப்பகுதியில் அளிஞ்சிப் பொத்தானை ஊர் பயங்கரவாதிகளால் முற்றாக அழிக்கப்பட்ட போது அவ்வூர் மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்தனர். அதன் காரணமாக அப்பாடசாலை மூடப்பட்டதன் காரணமாக 1992.04.25ம் திகதி முதல் பொ/முஸ்லீம் மத்திய கல்லூரிக்கு இடமாற்றப்பட்டார். பின்னர் 1996.03.20ம் திகதி கமு/சது/வீரத்திடல் அல் ஹிதாயா மகா வித்தியாலயத்தில் கடமையேற்ற சில நாட்களில் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை சென்று 2 வருடங்கள் பயிற்சியை முடித்துவிட்டு 1998.01.01ல் மீண்டும் கமு/சது/வீரத்திடல் அல் ஹிதாயா மகா வித்தியாலயத்தில் கடமையேற்று 11 வருடங்கள் 4 மாதங்களும் சிறப்பான பணியாற்றிய அவர் அப்பகுதி மக்களிடத்திலும், மாணவர்களிடத்திலும், அதிபர் ஆசிரியர்களிடத்திலும் நன்மதிப்பைப் பெற்றிருந்தார்.

பின்பு 2009.01.06ல் இடமாற்றம் பெற்று கமு/சது/அஸ்ஸிராஜ் மகா வித்தியாலயத்தில் குறுகிய காலம் பணிசெய்த பின்னர் மீண்டும் கமு/சது/வீரத்திடல் அல் ஹிதாயா மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று வந்து சிறிதுகாலம் சேவையாற்றிவிட்டு 2012.04.04ல் கமு/அல்

அக்ஸா மகா வித்தியாலயத்தில் வலயங்களுக்கு இடையிலான இடமாற்றம் காரணமாக கடமை ஏற்றுக் கொண்டார். இவருடைய நல்ல பண்புகளை அறிந்திருந்த அப்பாடசாலையின் அதிபர் MLA. கையூம் அவர்கள் ஆரம்பப் பிரிவை பொறுப்பளித்ததன் காரணமாக பல முன்னேற்றகரமான செயற்பாடுகளை செய்து வந்தார். நீண்ட காலமாக ஆரம்பப் பிரிவுக்கான அனுபவம் பெற்றவர் என்ற வகையில் 2016.05.23ல் ஆரம்பப் பிரிவுக்கான ஆசிரிய ஆலோசகராக வலயத்தில் நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகிறார்.

இவர் யாசீன் வீதியில் வசித்துவந்த இப்றாலெப்பை ஜமாலியத்தும்மா தம்பதிகளின் புதல்வி ஜெரினாவை திருமணம் முடித்து வாழ்ந்து வருகிறார். இவர்களுக்கு இரண்டு ஆண் மகவுகள் உண்டு. இவர்கள் கமு/அல் அக்ஸா மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

## நெற்பிட்டிமுனை முஸ்லிம் பிரிவு
## மக்கள் தொகை – 2016

| | |
|---|---|
| **மொத்த குடும்பம்** | 1586 |
| **மக்கள் தொகை** | 5326 |
| **அரச தொழில் புரிவோர்** | 425 |
| **வெளிநாடு சென்றோர்** | 254 |

## உசாத்துணை நூல்கள்

1. தென்கிழக்கு முஸ்லிம்களின் பூர்வீக வரலாறு - மணிப்புலவர் மருதூர் ஏ மஜீத்
2. மாண்புறும் மருதமுனை வரலாற்றுப் பதிவுகள் - அல்ஹாஜ் ஏ.ஆர். அப்துல் சத்தார் ஜே.பி.
3. சுனாமி கடற்கோள் - கலாநிதி கந்தையா குணராசா
4. நெற்பிட்டிமுனை ஜும்ஆ பள்ளிவாயல் சட்டக்கோவை - சட்டத்தரணி அல்ஹாஜ் எம்.ஐ. அஸீஸ்
5. கிராமத்து இதயம் - இலங்கை முஸ்லிம்களின் நாட்டுப்புற இயல், எஸ்.எச்.எம். ஜெமீல்
6. இலங்கை நாட்டுப்புற முஸ்லிம்களின் பூர்வீகமும் வாழ்வாதரங்களும் - எஸ். முத்துமீரான்
7. இறக்காமம் வரலாறு, சமூகவாழ்வியல் - லரீப் சுலைமான்
8. கல்முனை மாநகரம் - ஏ. பரக்கத்துல்லாஹ்
9. இலங்கைச் சோனகர் இன வரலாறு - ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் (1907)
10. பொன்விழா சிறப்ப மலர் - சது.்.வீரத்திடல் அல் ஹிதாயா மகா வித்தியாலயம், கே.எம். தமீம் (2003)

## தகவல்கள்: வாய்மொழி மற்றும் எழுத்து மூலம்

வெள்ளத்தம்பி முஹம்மத் ஸம்ஸம், பிரதி அதிபர் SLPS-ii
யாசீன் பாவா லெவ்வை அலிபா (ஓய்வுநிலை விவசாயப் போதனாசிரியர்)
அல்ஹாஜ் ஏ.எல். மதார் சாஹிப் (விவாகப் பதிவுகாரர்)
மீராலெவ்வை ஸாலிதீன் (சமீர், முன்னைநாள் MMC)
பக்கீர்த்தம்பி மீரார் (வயது 88)
சின்னலெவ்வை மீராலெவ்வைப் போடியார் (வயது 93)
தம்பிசாஹிபுப்போடி மரியம் பீவி (வயது 80)
ஆதம்பாவா சூரா உம்மா (வயது 93)
ஏ.எம். அலிமா உம்மா (வயது 85)
மம்முத்தாயிர் சின்னம்மா (வயது 55)
முஹம்மது இஸ்மாயில் சக்கராத்து (வயது 65)
மீராசாகிப் உமர் கத்தா (ஓய்வுநிலை நெல் சந்தைப்படுத்தும் சபை)
ஐயூப் முஹம்மது ஹாரிஸ் (மாணவன், தரம் 13, தட்டச்சு உதவி)
நாளிர் மிர்ஸான் (பட உதவி)
ஆதம்லெவ்வை தாஜுதீன் (தாஹிர்) வாகன உதவி
வி. மோனுஜன் ஆசிரியர் - அட்டைப்பட உதவி



தமிழ் பேசும் சிறுபாண்மையினர் தங்களது பூர்வீக நிலங்களையும் இருப்பையும் பாதுகாத்தல் என்ற கருத்தாக்கம் விரைவாக உணரப்படும் காலகட்டம் இதுவாகும். மொழி, கலாசாரம், பண்பாடு என்பவற்றின் மீதான ஒடுக்கங்கள் நம் சந்ததியினரின் எதிர்காலத்தைக் கேள்விக் குறியாக்கி விடுமோ? என்ற ஐயம் மீண்டும் தொடர்கிறது. இந்நிலையில் வேருக்குத் திரும்ப வேண்டியதன் அவசியம் குறித்த MLA. கையூமின் விரிசிந்தனை நெற்பிட்டிமுனை வரலாற்றையும் பண்பாட்டையும் நூலுருவில் புதுவரவாக்கி இருக்கின்றது. இந்நூல் நம் இளம் சந்ததியினரின் கைகளில் இருக்க வேண்டியதும் மனங்களில் மலர வேண்டியதுமான கட்டாயத்திற்குரியதாகும்.

நூலாசிரியர் கையூம், 1980களில் நன்முனைக் கவிஞர் என அறியப்பட்டவர். அக்காலகட்டத்திலேயே பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பட்டதாரியாக வெளியேறியவர் (1984/1985).

பேராதனையில் பேராசிரியர் சதாசிவம், பேராசிரியர் தில்லைநாதன், பேராசிரியர் அருணாசலம், பேராசிரியர் துரை மனோகரன் ஆகியோரிடம் தமிழைக் கற்றுக் கொண்வர்.

1992ல் "தவறிய தவறுகள்" என்ற கவிதைத் தொகுதியைத் தந்ததோடு நிற்காது கதை, கட்டுரை, நாடகம் எனத் தொடர்ந்து எழுதி வருபவர்.

தான் பெற்றுக் கொண்ட படிப்பின் டிப்ளோமா (PGDE) பட்டத்தைத் தொடர்ந்து, 2000ம் ஆண்டில் அதிபர் பதவியேற்று, கல்விப்பணியிலும், பொதுப்பணிகளிலும் அரும் சேவையாற்றியதால் "கல்வித்தீபம்", "தேசமானி", "தேசாபிமானி" என சான்றோரால் கௌரவிக்கப்பட்டவர்.

சது/வீரத்திடல் ஹிதாயா மகா வித்தியாலயத்தை A/L திடலாகத் தரமுயர்த்தி நவோதயத் திட்டத்தில் சேர்த்துவிட்டவர்.

வீரத்திடல் பிரதேசத்தின் கல்விச் சூழலையும், பௌதீகச் சூழலையும் அகலப்படுத்தி அடிநிலை மாணாக்கரின் அடைவுமட்ட உயர்ச்சிக்கும் திறன் தேடலுக்கும் வித்திட்டவர்.



தற்காலத்தில் நெற்பிட்டிமுனை அல்-அக்ஷா மகா வித்தியாலயத்தின் முதல்வராகப் பணியாற்றும் கையூம் நெற்பிட்டிமுனையின் வரலாற்றைப் பதிவாக்கியிருப்பது அவரது சமூக உணர்விற்கும் தேடலுக்கும் தக்க சான்றாகும்.

சிறந்த பேச்சாளனும் எனது வளாகத் தோழனுமாகிய MLA. கையூமின் பணி தொடர வாழ்த்துக்கள்.

கலாநிதி பிர்தௌஸ் சத்தார் **PhD (Sri Lanka)**
உதவிக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், கல்முனை.







ISLAMIC BOOK HOUSE
Tel:0112664851
Rs: 650
00020394-1
Netpittimunayin varalaru panpattiyalum
20.07.2017